2933

T.N.C. Debates

---

Official Report

Vol 102

24. April 1986

VR11,31 N86
N86.23.2
136478

வெளியீடு 30-12-1986] [Issued 30-12-1986

909/87
2933

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 24, 1986 - தொகுதி 23 எண் 2
Thursday, 24th April 1986 - Volume 23 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600009**

**விலை ரூ. 3-00]** **[Price Rs. 3-00**

சட்டமன்றப் பேரவை நூலகம் ... சென்னை-600 009.
136470

## உள்ளடக்கம்.

24-4-1986.

பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் 263—297

2. தகவல் கோரல் :

(அ) கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளது உண்ணாநோன்புப் போராட்டம் .. .. .. .. 298—299

(ஆ) மேலவை உறுப்பினர் நியமனம் குறித்து .. .. .. .. 299—307

(இ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை கீழவை உறுப்பினர்கள் என்று குறிப்பது .. .. .. 307—310

(ஈ) உறுப்பினர்கொடுத்துள்ள அறிவிக்கை .. 310

(உ) அட்டை (பாட்ஜ்) சொருகிக்கொண்டு உறுப்பினர்கள் பேரவைக்கு வருதல் .. 310—313

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

தென்காசி தாலுகா பாலூர்சத்திரம் காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டுள்ளது .. .. 313—323

4. கவன ஈர்ப்புகள் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மை நோய் பரவி வருவது .. .. 324—326

(ஆ) தமிழ்நாட்டில் இருந்து தேங்காய் மட்டைகளை அனுமதியின்றி கேரளத்திற்குக் கடத்துவது .. .. 326—330

[1986 ஏப்ரல்]

பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டங்கள்.

(*448—வினா எண். 4249) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவின் கூட்டங்கள் 1981 முதல் 1984 முடிய சென்னையில் எத்தனை முறைகள் நடந்தன ?

(ஆ) பல்கலைக் கழகத் தலைமையிடங்களில் நடைபெறாமல் சென்னையில் நடந்ததால் பல்கலைக் கழகத்திற்கு ஏற்பட்ட கூடுதல் செலவினம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பாரதியார் பல்கலைக் கழகம்—எட்டு (8) கூட்டங்கள். பாரதிதாசன் பல்கலைக்கழகம்—ஒன்பது (9) கூட்டங்கள்.

(ஆ) கூடுதல் செலவினம் ஏதுமில்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி மன்றக் குழுவின் கூட்டங்கள் சென்னையில் ஏன் இதுவரைக்கும் நடைபெறவில்லை. இக்கூட்டங்கள் வெளியிடங்களில் நடைபெறுகின்ற காரணத்தால் செலவு அதிகம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி, அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் கோவையில் நடைபெறுகிற வழக்கம் உள்ளது. ஆனால் சில சமயங்களில் சென்னையில் நடைபெறுகிறது. இந்த ஆட்சி மன்றக் குழுவிலே மொத்த உறுப்பினர்கள் 17 பேர்கள் ஆகும். இதிலே சென்னையைச் சேர்ந்தவர்க்ள் 6 பேர்கள். பிற மாவட்டங்காளச் சேர்ந்தவர்கள் 11 பேர்கள் ஆகும். இதனாலே கோவையிலே நடைபெறுகிற கூட்டத்தைச் சென்னையில் நாம் நடத்துவதனாலே ரூபாய் 5,072.80 சேமிப்பாகி இருக்கிறது.



986 ஏப்ரல் 24]

2933

சிற்பக் கல்லூரிகள்.

449—(*வினா எண். 5447)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிற்பக் கலைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் சிற்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் சிற்பக் கல்லூரிகளை அமைக்கின்ற அந்தப் பணி இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்போது இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய அந்த சிற்பக் கல்லூரியில்எத்தனை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது? எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள்?

மேலும் தொழில் பயிற்சி நிலையங்களில் சிற்ப ஆசிரியர்களை வைததுச் சொல்லித் தருகின்ற முறையைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக் கல்லூரியில் எவ்வளவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு தற்போது இல்லை. ஆனால் அந்தக் கல்லூரி முழு வளர்ச்சி இன்னும் அடையவில்லை என்றும் இந்த முழு வளர்ச்சிக்கு 80 இலட்ச ரூபாய்க்கு செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்போது டிப்ளமோ நிலையிலும் பட்டப் படிப்பு நிலையிலும் பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. இந்தக் கல்லூரி முழு வளர்ச்சி அடைந்ததற்குப் பிறகு, வேறு இடங்களில் தேவையானால், இதை ஆரம்பிக்க முயற்சிகள் செய்யலாம். ஆனால் இப்போது இருக்கும் நிலைமையில், இந்த ஒரு கல்லூரியும் முழுமையான வளர்ச்சி அடையாத நிலைமையில் இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்பக் கலை என்பது தமிழர்களின் பண்பாடு மற்றும் நாகரீகம் ஆகியவற்றைப் பாதுகாக்கின்ற ஒரு கலையாகும். "கல்லிலே கலைவண்ணம் கண்டான்" என்று சொல்லுகின்ற அளவில் இலக்கியத்தில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிக்கொண்டு இருக்கின்ற இந்தக் கலையினுடைய சிறந்த

கலைஞர்களை நாம் அரசுக் கலைஞர்கள் என்று பல துறைகளில் நியமிக்கிறோம்; எனவே இதுபோன்ற சிறந்த சிற்பக் கலைஞர்களை அரசுக் கலைஞர்களாக நியமிக்கின்ற செயற்குறிப்பு உள்ளதா? இல்லை என்றால், அப்படிப்பட்ட வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை. ஆனால் நம்முடைய சிற்பக் கல்லூரியின் முதல்வராக இருக்கின்ற கணபதி ஸ்தபதி அவர்கள் ஏறக்குறைய ஒரு அரசு தலைஞரைப் போலத்தான் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் எங்கு கோயில் கட்டினாலும் அவர்களுடைய யோசனையின்படியும் திட்டத்தின் அடிப்படையிலேயும் இன்றைக்குக் கோயில்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கணபதி ஸ்தபதி அவர்கள் மாமல்லபுர சிற்பக் கல்லூரியின் தலைவராக இருந்து திறம்பட நம்முடைய அரசின் சார்பில் சேவை செய்து வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய சிறப்பை உலகம் எங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிற கணபதி ஸ்தபதி அவர்கள் இருக்கிறார்கள்; சிற்பக் கலையிலே அவர்கள் நுட்பமான பல வியக்கத்தக்க காரியங்களை செய்துக் கொண்டிருக்கிறார்கள்; அதுவே போதுமானது என்கின்ற அளவிலே கருத்தை இங்கே தெரிவித்தார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது. புதிதாக 10 கோடி ரூபாய் செலவு செய்து ஒரு சிற்பக் கலை நுட்பம் அமைந்த ஒரு ஆலயத்தை கட்டுவதாக இருந்தாலும் தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருக்கக்கூடிய ராமேஸ்வரம் கோயிலிலே இருந்து, சுசீந்தரம், மதுரை வரைக்கும் 12-க்கு மேற்பட்ட ஆலயங்கள்தான் பழங்காலத்து நுட்பத்துக்கு உட்பட்டது என்றும், இப்போது இருக்கிற ஸ்தபதிகள், சிற்பிகள் அப்படிப்பட்ட நுட்பத்தை அறியாதவர்களாக இருக்கின்ற காரணத்தாலே இந்த 12 கோயில் நீங்கலாகத்தான் கட்டித் தரமுடியும் என்ற ஒரு கருத்தை தெரிவிக்கின்ற காரணத்தினாலே சிற்பக் கலை வளர்வதற்கு, அதற்கு ஒரு தனி சிறப்பு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்வாரா? இனியாவது அரசு அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்காக ஒரு சிற்பக் கல்லூரியை தொடங்க முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணபதி ஸ்தபதி இருக்கிறார் என்று சொன்ன காரணத்தினாலே வேறு யாரும் இருக்கக்கூடாது என்ற பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர் ஒருவர் இப்போது முக்கியமான நிலையிலே, ஒரு பெரும் சிற்பக் கலைஞராக இருந்துகொண்டு இருக்கிறார். அவராலும் பலபேர் இன்றைக்கு உருவாக்கப்பட்டு வருகிறார்கள். நிறையபேர் உருவாகுகிறார்கள். இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் ஒரு சாதாரண நிலையிலே இருந்த மாமல்லபுரம் சிற்ப பள்ளியானது சிற்பக் கல்லூரியாக பட்டப்படிப்பு தருகின்ற அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கே பட்டம் பெற்ற ராதாகிருஷ்ணன் என்ற மாணவர் கூட ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பேரில் சென்று வந்திருக்கின்றார். அதில் இப்போது, இன்னும் பலபேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நம்முடைய நோக்கம் நம்முடைய பழமையான சிற்பக் கலையைப் பாதுகாப்பது மட்டுமல்லாது அதை அடிப்படையாக வைத்து புதிய நவீன காலத்துக்கேற்ற சிற்பக்கலை வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டுமென்றும் நாம் கருதுகின்றோம். அந்த அடிப்படையிலே அதை கல்லூரியாகவும் ஒரு சிற்பக் கலை பற்றிய பல்கலைக்கழக அந்தஸ்துபெற்ற ஒரு நல்ல நிறுவனமாகவும் வளர்க்க வேண்டுமென்பதுதான் நம்முடைய ஆசை. அப்படி அந்தச் சிற்பக் கல்லூரி வளருவதற்கு புதிய ஒரு இடத்தை நாம் இப்போது வாங்கி இருக்கின்றோம். அதிலே புதிய கட்டிடம் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அதை, இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே நம்முடைய சிற்பக் கலைக்கு அது ஒன்றுதான் சிறந்த இடமாக இருக்கப் போகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகததிலேயே, தமிழகத்தில்தான் சிற்பக் கலை சிறந்தது என்று வல்லுநர்கள் எல்லாம் கூறியுள்ளார்கள். இந்த தமிழ்நாட்டினுடைய சிற்பக் கலையைப் பற்றி உலகத்தில் மற்ற நாடுகளுக்கு விளங்குகின்றவகையில் மற்ற மொழியிலே எடுத்து அவற்றை விளக்கி எழுதி வெளியிடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இப்போது வெளிநாட்டிலிருந்துகூட சிலபேர் வந்து மாமல்லபுர சிற்பக் கல்லூரியைப் பார்க்கவும் அங்கே இருக்கின்ற நிலைமைகளைத் தெரிந்து கொள்ளவும் ஒரு இடமாக இருந்து வருகிறது. மாமல்லபுரம் வெளிநாட்டுப் பயணிகளைக் கவருகின்ற ஒரு இடமாகவும் இருக்கிறது. அங்கே ஏற்கெனவே அந்தக் காலத்திலிருந்த நரசிம்ம பல்லவனால் கட்டப்பட்ட சிற்பக் கூடங்கள், சிற்பங்கள் எல்லாம் நிறைய

இருக்கின்றன. அதைப் பார்க்க நிறைய பேர் வருகிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே நம்முடைய சிற்பக் கலை பற்றி வெளிநாட்டவர் தெரிந்து கொள்கின்ற அளவிற்கு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

**பள்ளிக் கட்டிடங்களுக்கு சுழற் முயற்சி தன்னிறைவுத் திட்டம்.**

450—(*வினா எண். 8874)—திரு. த. பழனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கும், மாணவர்கள் அமருவதற்கு பெஞ்சுகள் பெறுவதற்கும் ஒரு சுழற்முயற்சி தன்னிறைவுத் திட்டத்தை அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசினர் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கும் மாணவர்கள் அமருவதற்கு பெஞ்சுகள் பெறுவதற்கும் '' சுழற்முயற்சி '' தன்னிறைவுத் திட்டம் ஏதும் கல்வித்துறையால் செயற்படுத்தப் படவில்லை.

(முற்பகல் 9-10)

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பலயிடங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு; மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி இல்லாமல், கூரை கட்டிடங்களில் பள்ளிகள் நடந்து வருகின்றன. ஆகவே உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு உலக வங்கியிடம் கடன் பெற்று ஒரு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரு சிறப்பு முயற்சி எடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடக்கப் பள்ளிகளுக்கான ஒரு சிறப்பு முயற்சியை ஏற்கனவே நாம் எடுத்து 3 ஆண்டுகளுக்கு திட்டமிட்டு இப்போது எந்த ஒரு பள்ளிக் கூடத்திற்கும் நிரந்தரக் கட்டிடம் இல்லை என்ற நிலைமையை நாம் போக்கியிருக்கிறோம். ஆனால் அதைப் போல உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் செய்வதற்கு அதிகமான அளவுக்கு பணம் தேவைப்படுகிற காரணத்தால் அந்த முயற்சியில் கொஞ்சம் தயக்கம் ஏற்படுகிறது. ஆனால் இப்போது கல்விக்கு ஒரு முக்கியத்துவம் தந்து இருப்பதால் மத்திய அரசு இந்த எல். ஐ. சி. நிறுவனம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம்





கடன் கொடுப்பதற்கு ஒரு முக்கியமான ஒரு துறையாக கல்வித் துறையை கல்வி வளர்ச்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் கேட்டு வருகிறோம். பல்வேறு துறைகளுக்கு கடன் தருகின்ற எல். ஐ. சி. மற்றும் தேசிய வங்கிகள் இதற்கு ஒரு பகுதியை ஒரு அளவுக்கு ஒரு சதவீதத் தொகையை கல்வித் துறைக்கு கடன் தரலாம் என்ற முடிவை எடுப்பார்களானால் இந்தப் பிரச்சினையை நாம் மிக எளிதில் தீர்த்து விட முடியும். ஆகவே அந்த முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். மத்திய அரசை கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அமைச்சர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தி வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும், கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளுடைய கட்டிடங்களை பராமரிப்புச் செய்யாமல் இருக்கிறது. அதையும் இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த '' சுழற்முயற்சி '' தன்னிறைவுத் திட்டம். என்றால் என்ன அர்த்தம் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு தன்னிறைவுத் திட்டம் ஏற்கெனவே போட்டு இந்த அரசு நிறைவேற்றியுள்ளது. அந்த அடிப்படையில் இப்போது எல்லா தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டிடம் கட்டியிருக்கிறோம். குறிப்பாக ஒரு கட்டிடமாவது ஒரு ஆரம்பப் பள்ளிக்கு நிச்சயமாக இருக்கும் என்ற நிலைமையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதேபோல் ஒரு தன்னிறைவுத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போடவேண்டும் என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட யோசனை இல்லை என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் கட்டிட வசதி, தளவாட வசதிகள் மிக குறைவாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் உறுதி சொன்னார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், உலகவங்கி இது போன்ற வங்கிகள் மூலம் நிதி ஆதாரம் பெற்று தனி கார்ப்பரேஷன் இதற்கு என்று அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கடன் கொடுப்பதற்கு தகுதி பெற்ற அந்த பட்டியலில் கல்வியை சேர்க்கவில்லை. கல்வியை ஒரு முதலீடாக அவர்கள் கருதவில்லை. ஆனால் கல்வியை ஒரு முதலீடாக அவர்கள் கருதவேண்டும் என்ற காரணம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் நாம் இதிலே முதலீடு செய்து. இந்த மனித சக்தியை வளர்ப்பதிலே முதலீடு செய்து, முதலிடம் பெறவேண்டும் என்ற கருத்து இப்போது மேலோங்கி நிற்கிறது. இதையும் நம் எதிர்காலத்தின் சிறந்த முதலீடாக கருதவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகிறோம். அதே அடிப்படையில் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள், எல். ஐ.சி. நிறுவனங்கள் அதை ஏற்றுக்கொண்டு கடன் தர முடிவு எடுப்பார்களானால் கார்ப்பரேஷன் தேவை என்றால் கார்ப்பரேஷனை அமைப்பதற்கு இன்றைக்கு கூட நாம் தயாராகத்தான் இருக்கின்றோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலை பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கும், மற்ற பொருட்கள் வாங்குவதற்கும் தேசிய வங்கிகளில் கடன் பெறுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஏற்படுகின்ற கால தாமதத்தை தவிர்ப்பதற்கு மற்ற துறைகளைப் போல வசதிப் படைத்த பொதுமக்களிடமிருந்து கடன் பத்திரங்கள் பெற்று நிதியைப் பெறுவதற்கு பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வங்கிகள், எல். ஐ. சி. நிறுவனங்களிடமிருந்து மிக சுலபமாக நாம் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு ஆகும். இப்போது அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். அது முடியாது என்ற நிலைமை ஏற்படுகிற போது மற்ற யோசனைப் பற்றி ஆராயலாம்.

மின்சாரம் திருடு போதல்.

520— (*வினா எண். 2400)—திரு. கு. சுப்பராயன், திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சாரத் திருட்டுக் குற்றத்திற்காக எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது ?



1986 ஏப்ரல் 24]

(ஆ) அவர்களில் பஞ்சாலை போன்ற பெருவிதத் தொழிலதிபர்கள் யாராவது உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1984-85 ஆம் ஆண்டு, 532 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டன.

(ஆ) உண்டு.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு சராசரியாக எத்தனை யூனிட்டுகள் மின்சாரம் களவாடப்படுகிறது? அவற்றின் ரூபாய் மதிப்பு என்ன என்பதோடு, பெரிய பெரிய பஞ்சாலை முதளாளிகள் கூட பல இடங்களில் திருடியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அப்படியானால் அவர்களால திருடப்பட்ட மின்சாரத்தின் மதிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எத்தனை யூனிட்டுகள் திருடினார்கள் என்கின்ற விவரம் இல்லை. 1985-86-ல் பிப்ரவரி முடிய மின் திருட்டு வழக்குகள 946. மால் ப்ராக்டீஸ் அதாவது முறைகேடுகள் 7,560. மேற்கூறப்பட்ட இரண்டிற்கும் சேர்ந்து எதிர்பார்க்கக்கூடிய வருமானம் ரூ. 202.21 இலட்சம். சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றால் அதற்கேற்றாற்போல், வருமானம் மாறலாம். பஞ்சாலைத் தொழிலாளர்களோ, (குறுக்கீடு) முதலாளிகளோ மின்சாரம் திருடுவதாகக் குறிப்பிட்டார்கள். பஞ்சாலை முதலாளிகள் என்பதல்ல, திருடுபவர்கள் சமுதாயத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, திருட்டு என்பது ஒரு சட்டப்படியான குற்றம். ஆனால் மின்சாரத் திருட்டைப் பொறுத்த வரையில், இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாக இதுவரை சட்டத்தில் இடம் பெறவில்லை. சட்டத்திலே அது இடம் பெறத் தக்க வகையில், சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், மத்திய எரிசக்தி அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே மின்சாரத் திருட்டைப் பொறுத்தவரையில், தண்டனைக்குரிய ஒரு குற்றமாக சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அளர்கவே இந்திய அரசே கொண்டுவர இருக்கிறது.

[1986 ஏப்ரல் 24

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டு பற்றிய வழக்குகளினுடைய விவரங்களை அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் அமைச்சரிடத்திலே இதன்மூலம் கேட்டுக் கொள்வது, எந்த வகைத் திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? மீட்டரைத் திருத்துவது, அல்லது மீட்டரை ஓடாமல் செய்வது போன்ற இந்த வகைத் திருட்டா? அல்லது மின் கம்பிகளிலிருந்து மின் ஒயர்களைப் போட்டு திருடுவதா? அந்தத் திருட்டினுடைய வகை பற்றியும், வழக்குகளினுடைய வகை பற்றியும் அமைச்சரவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வழிமுறைகள் எல்லாம் இதில் அடங்கும். அந்த வழிமுறைகளைப் பற்றி விரிவாக விவாதிக்காமல் இருப்பதே திருட்டைக் குறைப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பி மூலம் கொண்டு செல்லும் மின்சார இழப்பு எனப்படும் லைன் லாஸ் என்பதிலே இந்த திருட்டும் அடங்குமா? ஆம் எனில், அது எத்தனை சதவீதம்? கிராமங்களில் வயல் வெளிகளில் மின் கம்பத்திலிருந்து மின்சாரத்தை, காட்டு மிருகங்கள் உள்ளே நுழைந்து வயல்களையும், பயிர்களையும் அழிக்காமல் இருப்பதற்கு, வேலிகளில் மின்சாரம் பாய்ச்சி விடுகிறார்கள். அந்த வழியாக வயல்களுக்கு வருகிறவர்கள் அல்லது வேட்டையாட வருகிறவர்கள் மின்சாரம் தாக்கி இறந்துவிடுகிறார்கள். இதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மின் இழப்பு லைன் லாஸ் என்பதில் இந்தத் திருட்டும் அடங்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 18.36 சதவீதம் மின்இழப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் நீர் ஏற்றிகளில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள், அதைப் போன்று வேலிகளில் மின்சாரத்தை பாய்ச்சி [illegible] வைத்து [illegible]க்கும், பிராணிகளுக்கும் ஆளாகிறார்கள். இத்தகைய முறைகேடுகள் சட்டத்திற்குப் புறம்பானவை. அப்படி நடைபெறாமல் தடுப்பதற்கு மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் மின்சாரத் திருட்டுக்களைச் செய்கின்றவர்களை [illegible] நிலைமைகளிலிருந்து மீட்க முடியும்.

**திரு. கோ. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, இந்த மின்சாரத் திருட்டிற்கு மின்வாரியத்தினுடைய கடுமையான விதிமுறைகள் தான் காரணமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா?



1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, திருட்டிற்கும், கடுமையான விதிகளுக்கும் நிச்சயமாக சம்பந்தம் இல்லை. மின் மீட்டர்களைப் பொருத்தி, மின்சாரத்தைத் தருகிறோம். அதன்படி கட்டணத்தைச் செலுத்தி மின்சாரத்தை ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இருந்தாலும் திருடுவது என்பது சிலரிடத்தில் குணமாக அமைந்துவிடுகிறது.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டு சம்பந்தமாக மத்திய அமைச்சர் சட்டம் இயற்றப்போவதாக சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் கிராமங்களில் சாதாரணமாக ஒரு கல்யாணத்திற்கு மின்சாரத்தை எடுத்துவிட்டால்கூட, உடனே மின்வாரியத்தினுடைய அதிகாரிகள் வந்து கடுமையான நடவடிக்கை எடுத்து அபராதம் விதிக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பஞ்சாலை அதிபர்கள், பஞ்சாலை வைத்திருக்கக் கூடிய முதலாளிகள், அல்லது பெரிய அளவில் நீர்ப்பாசனம் செய்பவர்கள் எல்லாம் தான் மின்சாரத்தை திருடுகிறார்கள். அந்த அளவில் [illegible] இந்தத் திருட்டுப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மத்திய [illegible] சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது ஒரு பக்கத்திலே இருக்கட்டும். தமிழக அரசே சட்டத்திற்கு புறம்பாக மின் திருட்டு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு 7 ஆண்டு காலம் வரை கடுமையான தண்டனை கொடுக்கக்கூடிய [illegible] சட்டத்தைக் கொண்டு வர அமைச்சரவர்கள் முன்வருவார்களா; நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் குற்றத்தைப் பொறுத்தவரையில் ஏழை பணக்காரர் என்று பார்ப்பது இல்லை. பெரும் தொழில்கள் கூட இந்தக் குற்றத்திற்கு ஆளாகி மின் துண்டிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் அதுபற்றி வலியுறுத்தப்பட்டது. அதையொட்டி இந்திய அரசே ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாம் என்று இருக்கிறது. அப்படிக் கொண்டுவரப்படுகிறபோது அது எல்லோருக்கும் பயன்படும் என்பதில் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. சோலைராசு :** தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டினால் நட்டம் வந்து கொண்டிருக்கிற நிலைமை பற்றிய கேள்வியாக இது இருந்தாலும், அப்பாவி விவசாயிகள் தங்களுடைய விவசாய பகுதிகளிலே [illegible] அதற்குத் தண்ணீர் விடுகிறபோது அதற்கு என்று தனிக் கட்டணம் விதிக்கப்படுகிறதே, அப்படித் தனிக் [illegible] வசூலிக்கக் கூடாது என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பயிர் விளைவிக்கத்தான் இலவச மின்சாரமே தவிர வேறுகள் கடுவதற்கல்ல.

திரு. கைதை கா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தவறு செய்கிற நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைகள் மற்ற இடங்களிலும் அவர்கள் இப்படி ஒரு முறை தவறு செய்துவிட்டால் மீண்டும் அப்படிப் பட்டவர்களுக்கு மின் இணைப்பே கொடுக்கக் கூடாது என்ற முறையை நடைமுறைப்படுத்தினால், அத்தகைய தவறுகள் தடுக்கப்படும் என்பதால் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பினாமிகளுக்குத்தான் வழிவகுக்கும்.

திரு. கு. [illegible] : தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டின் காரணமாக தொடர்ந்து பல லட்சக்கணக்கான ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. மின்சாரத்தைத் திருடுவதற் கான நுட்பங்களைக் கண்டுபிடித்து அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக பொருத்தமான நிபுணர் குழுவை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்வாரியமே பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்து கிறது. நிபுணர் குழுவை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்படுமா என்பதைப்பற்றி மின் வாரியம் ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தெப்ட்டே இல்லை என்பதுதான் [illegible]. 'Theft' means appropriation of movable property. Electricity is not a movable property.

காப்புக்காட்டில் துணை மின் நிலையம்.

621—*வினா எண். [illegible] திரு. தே. [illegible] : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் காப்புக்காடு என்னுமிடத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.





திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்திலே காப்புக்காட்டிலே உப மின்நிலையம் அமைப்பதுபற்றி பரிசீலனையில் இல்லாவிட்டால் வேறு எங் காவது உப மின்நிலையம் அமைப்பதற்கு அந்த மாவட்டத்திலே இடம் செலக்ட் பண்ணப்பட்டு இருக்கிறதா ? பரளியாற்றிலே ஒரு உப மின் நிலையம் அமைப்பதற்கு சென்ட்ரல் கவர்ன் மென்டிற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது என்று இந்த அவையில் இரண்டுவருடங்களுக்கு முன்னாலே சொல்லப் பட்டது. அந்த உப மின்நிலையம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போதுள்ள 'Line, Taps Station' துணை மின்நிலையம் நிரந்தர 33/11 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றும் பணி 1986–87இல் முடிந்துவிடும். குழித் துறையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேர மங்கலத்தில் 33/11 கே.வி. துணை மின்நிலையம் அமைக்க கருத்துரு ஒன்று வந்துள்ளது. அதைப் பரிசீலனை செய்து நிலம் கையகப்படுத்தி மற்றப் பணிகள் முடிக்கப் பட்டு 1988–89இல் அந்த துணை மின் நிலையம் செயல் படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அப்போது மின் நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும்.

திரு. கே. உக்கி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அமைப்பதுபற்றி இந்தக் கேள்வி இருந்தாலும் அதுபோன்று துணை மின் நிலையங்கள் வேறு மாவட்டங்களிலே ஏற்படுத்த அரசு முன்வருமா ? குறிப்பாக நீலகிரி மாவட்டத் திலே கோத்தகிரியிலே ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆண்டு தோறும் துணை மின்நிலையங்கள் அமைக்கப் படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலும் உள்ளன. நீலகிரி மாவட்டத்திற்கு விவரங்கள் வேண்டுமென்றால் தனிக்கேள்வி போடவும்.

திரு. எ. எல். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, காப்புக்காடு என்ற இடத்தில் உபமின் நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரி வித்தார்கள். இந்தக் கேள்வியை ஒரு வேண்டுகோளாக ஏற்று அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு உபமின் நிலையத்தை நிறுவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, லைன் டாப்ஸ் ஸ்டேஷன் இன்று இருக்கிறது. இந்த லைன் டாப்ஸ் ஸ்டேஷனை ரெகுலர் 33/11 கே.வி. ஸ்டேஷனாக ஆக்கக்கூடிய திட்டம் அமலில் செயல்பட்டு வருகிறது. 1986–87ல் முடிந்து விடும் என்று பதிலளித்து கொண்டேன்.

காளப்பநாயக்கன்பட்டியில் துணை மின் நிலையம்.

522—(*வினா எண் 5230)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) பணியினை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராமச்சந்திரன் : (அ மற்றும் ஆ) துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1986–87-ம் ஆண்டு இத்துணை மின் நிலையம் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது? கொல்லிமலையில் இருக்கிற மக்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் இந்தத் துணை மின் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 27 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஊழியர்கள் வசிப்பதற்கு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. லைன் போடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. 1986–87ல் இந்தத் துணை மின் நிலையம் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் தனியார் துறையில் அனல் மின் உற்பத்தி.

523—(*வினா எண் 6505)—திரு. ரு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தனியார் துறையில் அனல் மின் சார உற்பத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறிய ஜப்பானிய நிபுணர்கள் செப்டம்பர் மாதத்தில் கோயம்புத்தூருக்கு வந்து ஆராய்ச்சி நடத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விபரம் என்ன ?

1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இது குறித்து தகவல் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவேகூட இந்தச் சட்டமன்றத்தில் தனியார் துறையில் அனல் மின் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் அல்லது கருத்துரு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோல் கோயம்புத்தூரில் தனியார் துறையில் அப்படி ஒரு முயற்சி நடைபெறுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களிடம் அதுபற்றி வேறு ஏதேனும் குறிப்பு இருக்கிறதா? ஜப்பானியரின் ஆலோசனை இல்லை என்றாலும் தமிழ்நாடு அரசின் சார்பில் தனியார் துறையில் மின் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையைப் பொறுத்தவரையில் மின் உற்பத்தி துவங்குவதற்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் என்று இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில்தான் அத்தகைய திட்டத்தை செய்ய முன்வந்திருக்கிறார்கள். கோவையிலிருந்து எந்தத் தொழில் அதிபர்களும் முன்வரவில்லை. ஆகவேதான் இல்லை என்று குறிப்பிட்டேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொழில் அதிபர்கள் அத்தகைய கருத்துக்களோடு முன்வருவார்களானால் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. தி. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பானிய நிறுவனங்கள் மூலம் மின் உற்பத்திக்காக சிறிய மின் நிலையங்களை அமைப்பதற்கு முயற்சி எடுத்ததாக செய்தி வந்ததே, அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது இருக்கிறதா? அதே நேரத்தில் மின் பற்றாக்குறையைப் போக்க வெளிநாட்டு நிறுவனங்கள் மின் உற்பத்தி செய்வதற்கு அனுமதி தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் உதவியோடு சிறிய மின் திட்டங்கள் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் ஏற்படுத்துவதற்கு அவர்கள் உதவி செய்யவும் முன்வந்திருக்கிறார்கள். அன்னிய நாட்டு மூலதனத்தை வைத்து மின்சார உற்பத்தி செய்யக்கூடிய கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

[1986 ஏப்ரல் 24

சேரன் மாதேவி, பாப்பாக்குடி ஒன்றியங்களில் மின்சக்தி வழங்கல்.

கு. கா. வி. எண். 5—(*வினா எண். 8967) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி ஒன்றியம் மேலச்சேவல் மற்றும் பாப்பாக்குடி ஒன்றியம் பாப்பாக்குடி, முக்கூடல், மருதம்புதூர் ஆகிய பகுதிகளில் மின்சார விநியோகத்தில் குறைவழுத்தம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சேரன்மாதேவி ஒன்றியத்திலுள்ள மேலச்சேவல் கிராமத்தில் குறைமின் அழுத்த மின் விநியோகத்தில் (L. T. Distribution) மின் அழுத்தம் திருப்திகரமாக உள்ளது. பாப்பாக்குடி ஒன்றியத்திலுள்ள பாப்பாக்குடி, முக்கூடல், மருதம்புதூர் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருந்தது.

(ஆ) குறை மின் அழுத்த விநியோகத்தை சீர்படுத்தத் தற்போதுள்ள மின் மாற்றிகளுக்குள் மின் பளுவை பகிர்மாற்றம் செய்யவும், அதிகப்படியான மின் மாற்றிகள் நிறுவவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூடல், மருதம்புதூர் ஆகிய பகுதிகளில் மின்சார குறைவழுத்தம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் விவசாயிகளும், பலரும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அங்கே இருப்பதை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்பு நடவடிக்கைகளை துறை எடுக்க இருக்கிறதா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூடலைப் பொறுத்தவரையிலே மேலும் ஒரு டிரான்ஸ்பார்மர் அனுமதிக்கப்பட்டு அந்த வேலை துவங்கப்பட இருக்கிறது. அதன் மூலம் அங்கே மின் அழுத்தத்தில் மிக திருப்திகரமான நிலை ஏற்படும். மருதம்புதூரைப் பொறுத்தவரையில் அதேபோல் மேலும் ஒரு மின் மாற்றி அமைக்கப்படவும் அங்கேயும் மின் அழுத்தத்தை உயர்த்துவதற்கும் மின் வாரியம் நடவடிக்கைகள் எடுத்து



1986 ஏப்ரல் 24]

வருகிறது. நம் பேரவைத் தலைவருக்காக பேரவைத் துணைத் தலைவர் மூலம் இந்தப் பரிந்துரை வரும்போது நிச்சயமாக அரசாங்கம் அதை ஏற்று செயல்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில் அனுமதி பெறாமல் திரைப்படக் காட்சிகள் நடத்தல்.

524—(*வினா எண். 2477)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் அனுமதி பெறாமல் திறந்த வெளியில் 16 எம்.எம். திரைப்படம் காண்பிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விடை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அனுமதி பெறாமல் 16 எம். எம். திரைப் படங்கள் கிராமங்களிலே சாதாரணமாக திருவிழாக்களில் அதிகமாகக் காட்டப்படுகின்றன. அதனால் முழுமையாக நாடகக் கலைஞர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டுமென்று நாடகத் துறையைச் சார்ந்த சங்கங்கள் மூலம் கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாடகக் கலைஞர்கள் இடத்திலிருந்து அப்படிப் பட்ட கோரிக்கை எதுவும் இதுவரை அரசிற்கு வரவில்லை. பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும் இப்படி அனுமதி பெறாமல் 16 எம். எம். திரைப்படங்கள் காட்டப்படுவதைக் குறித்து வேறு மாவட்டங்களிலே இருந்து புகார்கள் வரவில்லை. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில் மாத்திரம் ஒரிடத்திலே இப்படி திரையிடப்பட்டிருக்கிறது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

*457-ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி திறந்த வெளியில் திரைப்படங்கள் காட்டுவதால், நலிந்த நாடகக் கலைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், இன்றைக்கு வரி உயர்வினால் இருக்கின்ற திரையரங்குகள் கூட பாதிக்கப்படுகின்றன. திறந்த வெளியில் குறைந்த கட்டணத்தில் திரைப்படங்கள் காட்டப்படுவதால், இந்தப் படங்களைத் திரையரங்குகளில் பிறகு காட்டும்போது அவர்களுடைய வருமானம் குறைகின்றது என்று திரையரங்கு உரிமையாளர்கள் வருத்தப்படுகிறார்கள். இப்படி திறந்த வெளியில் திரைப்படங்கள் காட்டுவதை அறவே நிறுத்தும் பொருட்டு, காவல் துறைக்குச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதே கடுமையான அறிவிப்புகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனுமதி பெறாமல் அத்தகைய திரைப்படங்களைப் பொது இடங்களில் அதற்கென்று அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் காட்டக் கூடாது என்று கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்கள் திருவிழாக்களிலும், மற்ற நிகழ்ச்சிகளின் போதெல்லாம், குறிப்பாக சென்னை மாநகரில் தெருவிலே காட்டுவது வழக்கம். உரிமம் பெறவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உரிமம் யாரிடத்திலே பெற வேண்டும் காவல் துறையிடமா அல்லது திரைப்படங்களினுடைய உரிமையாளர்கள் இடமா? அனுமதி பெற்று திரைப்படங்களைத் தெருவிலே காட்டுவதற்கு கட்டாயம் அனுமதி வழங்கப்பட வேண்டும். அந்த அனுமதி வாங்க வேண்டுமென்றால், காவல் துறையிடமா அல்லது வேறு யாரிடம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு உறுப்பினர்கள் இப்படி திரைப்படங்கள் காட்டப்படுவதினால் நாடகக் கலைஞர்களின் தொழில், பிழைப்பு பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். சென்னை மாநகரத்தில் வாழ்கிறவர்களுக்கு இப்படிப்பட்ட நாடகங்களைப் பார்ப்பதற்கு அனுபவம் இல்லாத காரணத்தினால், சென்னையைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் இப்படிப்பட்ட திரைப்படங்கள் அனுமதி பெற்று காட்டப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சோலைராசு அவர்களுடைய



கேட்பது, வெளி மாவட்டங்களில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற சூழ்நிலை பற்றியது. ஆனால், சென்னை மாநகரில் இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. இந்த அனுமதி பெறுவது என்பது சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் காவல் துறை ஆணையாளரிடத்திலே பெற வேண்டும். மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற வேண்டும். எனவே, அனுமதி பெற்றுக்கூட இப்படிப்பட்ட திறந்த வெளி இடங்களில் பொதுவாக, இந்த திரைப்படங்களை அனுமதிப்பது பல சங்கடங்களை விளைவிக்கிறது. அரசின் வருமானத்தில் கூட இழப்பு ஏற்படுகிறது. பல தொல்லைகளின் காரணமாக, மிகுந்த எச்சரிக்கையோடு இன்றைய தினம் என்று கருதினால் மாத்திரமே, அதற்கு அனுமதி அவசியம் வழங்கப்படும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்த வெளி திரை அரங்குகள் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொடுத்தார்கள். திரைப்படங்கள் இன்றைக்கு சிகரத்தில் இருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், சுற்றிலும் மதிற் சுவர்கள் கட்டி அதை ஆடிட்டோரியமாக ஆக்கி, அதிலே படங்களைக் காட்டும் வசதியைச் செய்யலாம். அதற்கு டாக்ஸ் உண்டு. இது போன்ற திரைப்பட அரங்குகள் கிராமப்புற மக்களுக்கு அதிகமாகப் பயன்படும் வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்த வகையில் திறந்த வெளி திரைப்பட அரங்குகளை உருவாக்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? இல்லையெனில், இனிமேலாவது அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திறந்தவெளி திரையரங்குகள் என்பதைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஒரு இடத்தில் அனுமதி அளிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. குன்றத்தூர் ஒன்றியம் என்று கருதுகிறேன்—அதற்குட்பட்ட சோமங்கலம் என்ற இடத்தில் பரீட்சார்த்தமாக அப்படிப்பட்ட ஒரு திரையரங்கும் சில ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இதைவிட, இன்னொரு இடத்தில், மாமல்லபுரத்திற்குச் செல்லுகின்ற வழியில், சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில், இந்தியாவிலே குஜராத் மாநிலம், மகாராஷ்டிரா மாநிலம் ஆகிய மாநிலங்களில் இரண்டு தலைநகரங்களில் இருப்பதைப்போன்று மக்கள் கார்களில் உட்கார்ந்து கொண்டு திரைப்படம் பார்க்கின்ற வசதி மிக்க டிரைவ்-இன்-சினிமா-ஓபன் ஏர் டிரைவ்-இன்-சினிமா என்ற அப்படிப்பட்ட ஒரு புதிய திட்டத்திற்கு —அது மிகச் செலவிலான திட்டம், அந்தத் திட்டத்திற்கு—அனுமதி

வழங்கியிருக்கிறது. ஒன்று நடந்து கொண்டிருக்கிறது; இன்னொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மாநிலம் முழுவதும் கிராமப்புறங்களில் அத்தகைய திறந்த வெளி திரையரங்குகளை உருவாக்குவது என்பது, அனுமதிப்பது என்பது நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை. ஆகவே அதை அரசு ஊக்குவிக்கவில்லை.

பவானிசாகர் பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

525 (*வினா எண் 4310)—திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானிசாகர் பகுதியை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சத்தியமங்கலத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொழுது, பவானிசாகர் பகுதி சுற்றுலா மையமாக்கப்படும் என்று அறிவித்துவிட்டு வந்தார்கள். பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. ஆகவே, இந்த நிதியாண்டிலேயே அதை எடுத்துக் கொள்வதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட உலாத் தலங்கள் என்ற தலைப்பில் இரண்டு இடங்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் நடந்துகொண்டு வருகின்றன; பவானி கூடுதுறை, தாளவாடி ஆகவே, மூன்றாவது இடமாக, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற பவானி சாகர்—அந்த அணைக்கட்டு பகுதியையும் மாவட்ட உலாத்தலமாக மாற்றுவதுபற்றி அரசு இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றியதற்குப் பிறகு பரிசீலிக்கும்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பவானிசாகர் பகுதியை ஒட்டிய தெங்குமராடா என்ற இடத்தில் அன்னக்கிளி போன்ற சினிமாப் படங்களைத் தயாரிக்கிறார்கள். அன்னக்கிளி என்ற படம் வெற்றிகரமாக





ஓடியதற்கு அந்தத் தெங்குமராடாவும் ஒரு காரணம். இந்த ஆண்டே தெங்குமராடாவையும் இணைத்து பவானிசாகரை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு முயற்சி செய்கின்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டே நிறைவேற்ற முடியாது என்பதைத்தான் நான் முன்பே பதிலில் கூறியிருக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க அறப்பளீஸ்வரர் ஆலயம், ஆகாய கங்கை ஆகியவைகளைக் கொண்ட கொல்லி மலையை சுற்றுலா மையமாக்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? அதற்காக இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பற்றிய கேள்வி இது. நாளைக்கு இந்த மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற இருக்கிறது. அதிலே வேண்டுமானால் விளக்கங்களைப் பெற இயலும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவரவர்களே, சென்ற ஆண்டு காமராஜ் மாவட்டத்தைச் சார்ந்த பிளவக்கல் என்ற இடம் சுற்றுலா மையமாக ஆக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே இப்பொழுது என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன? பஸ்கள் விடப்படுகின்றனவா? எத்தனை பஸ்கள் விடப்படுகின்றன? அங்கு செய்யப்பட்ட வசதிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்னாலேயே நான் தெரிவித்திருக்கிறேன், இது பெரியார் மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. அந்தத் தகவல் தான் என்னிடத்திலே இருக்கிறது.

போடூர் சாலைக்கு வனப்பகுதி இடம்.

526—(*வினா எண் 5545)—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தாலுக்கா, பென்னாகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட போடூர் கிராமத்திற்கு செல்லும் பாதையில் வன இலாகாவிற்கு சொந்தமான $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் பாதையை யூனியனிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1986 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம் பேரூராட்சியின் எல்லைக்குள் இருக்கும் போடூர் கிராமத்திற்கு, பேவனூர் காப்புக்காட்டின் வழியாகச் செல்லும் சாலையினை, ஊராட்சி ஒன்றியம் விண்ணப்பம் அனுப்பினால், அவர்கள் பராமரிப்பதற்காக மட்டும் அனுமதி வழங்க வனத் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில், பென்னாகரம் பஞ்சாயத்து யூனியன் சார்பாக விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால் அந்தப் பாதையைச் சீர்படுத்துவதற்கான ஆணை இடப்படும் என்ற கருத்தைத்தெரிவித்தார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகி ஒன்றரை ஆண்டு காலமாக பஞ்சாயத்து யூனியனிடத்தில் பல கோரிக்கைகளைக் கொடுத்தும், பேரூராட்சியிடத்தில் கொடுத்தும் அதைப் பராமரிக்கின்ற நேரத்தில் வனத் துறையைச் சார்ந்தவர்கள் தடுக்கிறார்கள். மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்கள் தயவு செய்து அந்தப் பாதையைச் செப்பனிடுவதற்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அதற்குண்டான அறிக்கையையும் அறிவிப்பார்களா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, காப்புக்காட்டுப் பகுதியில் உள்ள எந்தப் பகுதியையும் வேறு யாரும் அனுபவிக்கவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்துவதற்கோ அனுமதியைப் பெற்றாக வேண்டும். இது வரை ஊராட்சி ஒன்றியத்திடத்திலேயிருந்து எந்தவிதமான விண்ணப்பமும் வந்ததாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுத்து, அந்த விண்ணப்பத்தை வனத் துறைக்கு அனுப்பினால் வனத்துறை உடனடியாகப் பரிசீலித்து அந்த அனுமதியை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனாலும் அந்தச் சாலையைப் பயன்படுத்தவும், அது இருக்கிற அளவிலே அதை பராமரிக்கவும்தான் அனுமதிகள் வழங்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதைப் பராமரிப்பதற்கு அனுமதி கொடுத்ததற்காக, பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரூராட்சியிலுள்ள 14-வது வார்டில் உள்ளது அந்தப் போரூர் கிராமம். அங்கு சிவில் சப்ளைஸ் கோ-டவுன் வாடகைக்கு எடுக்கப்பட்டு, அந்தக் கிராமம் வழியாகத் தான் சிவில் சப்ளைஸ் பொருள்களை லாரிகள் மூலமாக எடுத்துச் செல்கிறார்கள். அந்தப் பாதை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. அதைச் சீர்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைச் சீர்படுத்துவதற்காக செலவழிக்கப்பட வேண்டிய நிதியை, அந்தப் பாதையைப் பயன்படுத்துகிறவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட முயற்சியை அந்த சம்பந்தப்பட்ட துறை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திருக்கோயில்கள் திரைப்படம்.**

527—(*வினா எண். 5825)—திரு. க. சோலைராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத் திருக்கோயில்களின் பெருமையினை விளக்கும் திரைப்படம் எடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தமிழகத் திருக்கோயில்களின் பெருமையினை விளக்கும் திரைப்படம் ஒன்று ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர தற்பொழுது செய்தி மற்றும் சுற்றுலாத் துறை சார்பில் தமிழ்நாடு திரைப் படப் பிரிவின் மூலமாக திருக்கோயில்கள் பற்றியும், தமிழகத் திருக்கோயில்களில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளையும் கொண்ட சிறந்ததொரு கருத்து விளக்க திரைப்படம் எடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கலாச்சாரம், பண்பினுடைய நிலைக்களனாக இந்தத் திருக்கோயில்களுடைய பெருமையை விளக்குகிற வகையிலே, திரைப்படங்களை எடுத்து, வெளி மாநிலங்களில், வெளி நாடுகளில் எல்லாம் காட்டுகிற பொழுது, அந்த, அந்த நாட்டினுடைய புகழ் வாய்ந்த தலைவர்கள், நடிகர்கள், இவற்றை இங்கே பார்ப்பதைப் போல், திரைப்படம் எடுத்தால், கவர்ச்சியும் ஏற்படும். இங்கே அந்தக் கோயில்களுக்கு வருகிற பக்தர்களுடைய எண்ணிக்கையும் பெருகும் என்ற காரணத்தால், இந்த நாட்டுக்கு வருமானம் அதிகமாக வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, அது குறித்து அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆலயங்கள் என்பது ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக, என்றைக்கும் நிலைத்து நிற்கின்ற பெருமையை, சிறப்பைக் கொண்டது. ஆகவே, அவற்றை முறையாக எடுத்துக் காட்டினாலே, மற்றவர்களுடைய பாராட்டைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்புகளை எடுத்துச் சொல்கின்ற நேரத்திலே, தோன்றி மறைகின்ற அந்தப் புகழுக்குரியவர்களை வைத்துத்தான் அந்தச் சிறப்பை எடுத்துச்

சொல்ல வேண்டுமென்பதில்லை. ஆகவே, எப்படி எடுத்து மற்றவர்களுக்கு விளக்கினால், அந்தச் சிறப்பு மேலும் பெருகுமோ, அந்த வகையிலே இந்தத் திரைப்படம் விளக்கப்படும்.

டாக்டர் ச. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையான திருக்கோயில்களுடைய பெருமையை விளக்குகின்ற வகையில் கேசட்டுகளை வெளியிடும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய திருக்கோயில்கள், தொன்மையான திருக்கோயில்கள் சிலவற்றினுடைய வரலாற்றுச் சிறப்புக்களை, அதற்குரிய பாடல்களை, அதனுடைய வரலாறுகளை எல்லாம் நூல்களாகவும் இது போன்ற காசட்டுகளாகவும் வெளியிடுகின்ற செயற் குறிப்பு அறநிலையத் துறையிடத்திலே இருக்கிறது.

ஊரக விறகு வளர்ப்புத் திட்டம்.

528—(*வினா எண். 6634)—திரு. கே. உச்சி மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக விறகு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக இரண்டு கோட்டங்கள் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** (அ) ஆம் ;

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆணை வழங்கப்பட்டவுடன் செயல்படுத்தப்படும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு பகுதிகளில் குறிப்பாக நகரப் பகுதிகளில் ஏழை எளியவர்களுக்கு எரிபொருளாக உபயோகிக்கப்படும் விறகுக்குத் தட்டுப்பாடு அதிகமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால், அந்தத் தட்டுப்பாட்டைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விறகு தட்டுப்பாடுகள் இருப்பது என்பது ஓரளவுக்கு உண்மை. ஆனால், கிடைக்காமலே இருக்கிறது என்பது அல்ல. நீண்டகாலமாக, மலைகளிலே; ஓங்கி, உயர்ந்து



வளர்ந்து இருந்த காடுகளை எல்லாம் அழித்து, நாம் விறகாகப் பயன்படுத்தி, பழக்கப்பட்டு விட்ட காரணத்தால், சமீபகாலமாக, சென்ற இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கடுமையாக அப்படி மலைகளிலே காடுகளை, மரங்களை, விறகுகளாக வெட்டுவதை நிறுத்தியதற்குப் பிறகு கொஞ்சம் சங்கடங்கள் இருக்கின்றன. முயற்சி செய்தால் பல இடங்களில் விறகுகள் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் இன்றைக்கு விறகின் தேவை பெருகிக் கொண்டு வருகிறது. அந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக செங்கற்பட்டு, திருச்சி, மதுரை, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் 1980—81 முதற் கொண்டு நான்கு புதிய தனிக் கோட்டங்களை ஏற்படுத்தி, செயல் படுத்தி வருகிறோம். புதிதாக திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய இரண்டு தலைமை இடங்களை அமைத்துஅங்கே கோட்டங்களை அமைத்துச் செயல்படுத்த வனத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, பல்வேறு இடங்களில் கிடங்குகளை அமைக்க அரசு முன்வந்திருப்பதைப் பாராட்டினாலும் நீலகிரி மாவட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேல் காடுகள் இருந்தும் அங்கே உள்ள மரங்களுக்கு அதிகாரிகளுடைய பாதுகாப்பு இருந்தும் தனியார் காடுகளிலும் அரசுக்குச் சொந்தமான காடுகளிலும் மரங்கள் ஏராளமாக வெட்டப்படுகின்றன. அந்த மரங்கள் எப்படி, யாரால் வெட்டப்படுகின்றன ? அதைக் கண்டிக்க அல்லது தண்டிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி விறகுக்காக மரங்களை வளர்க்கும் திட்டம் இருக்கிறதா என்பது. அதற்கான விவரங்களைத்தான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதைத் தடுக்க தக்க நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகிறது. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, விறகுக்காக மரங்களை வெட்டுவது கிராமப் புறங்களில்தான் அதிகமாக இருக்கிறது. சின்ன சின்ன காடுகள், தனியார் காடுகள்கூட விறகுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. வாய்க்கால் ஓரங்களில் நிற்கும் மரங்களைக்கூட விட்டு வைக்கவில்லை. தைமரமாக இருந்தால்கூட வெட்டிவிடுகிறார்கள். அதைத் தடுக்க, நகரங்களில் பயன்படுத்துவதைப்போல, ''காஸ்' அடுப்பு, மின்சார அடுப்பு போன்ற நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்தால் கிராமப்புற மக்கள்

எரிபொருளுக்காக மரங்களை வெட்டும் வாய்ப்பு இருக்காது. ஆகவே கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்கள் பயன்படுத்துகின்ற எரிபொருள்களை வழங்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று விறகுக்காக பல்வேறு பொருள்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கரி, காஸ் போன்ற இப்படிப்பட்ட பொருள்களை நகரங்களில் வாழ்கின்ற மக்கள் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் மட்டும் பயன்படுத்துவதற்குக் காரணம் கொஞ்சம் விலை உயர்வு. ஆகவே, இந்த வகையிலே நமக்கு மரங்களின் தேவை குறைந்திருக்கிறது. அது பற்றி மகிழ்ச்சி அடையலாம். நகர மக்கள் விறகுக்காக மரங்களைப் பயன்படுத்துவதாக இருந்தால் கிராமப்புற மக்களுக்கு இன்னும் இதிலே சற்று சங்கடங்கள் இருக்கலாம். மேலும் கிராமப்புற மக்களுக்கும் கரி, காஸ் போன்ற எரிபொருள்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு நாம் ஏற்படுத்தித் தரலாம். ஆனால் கிராமப்புற மக்களைப் பொறுத்தவரையில் குறைந்த செலவில் கூட அல்ல, இலவசமாக கிடைக்கின்ற எரிபொருளைப் பயன்படுத்திப் பழக்கப்பட்டுவிட்டார்கள். அதனால் தெரிந்தோ தெரியாமலோ மரங்களை விறகுக்காக வெட்டிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் கிராமப்புற மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு காஸ், கரி போன்ற விலை உயர்ந்த எரிபொருள்களைப் பயன்படுத்துகின்ற வாய்ப்பினை இப்போது நடைமுறைப் படுத்த முடியாது. ஆனால் நாளடைவில் அங்கும் குறைந்த செலவில் இவற்றை வழங்கினால், இந்த வசதி வாய்ப்புகளைத் தந்தால், இந்த இயற்கைச் செல்வங்களை அழித்துத்தான் எரிக்க வேண்டுமென்ற சூழ்நிலையை நாம் மாற்ற முடியும்.

**நுகர் பொருள் வாணிபக் கழக பளு தூக்கும் தொழிலாளர்கள்.**

*454—(*வினா எண். 4629)*—**திரு. மு. ராமநாதன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரியும் பாரம் தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் 15—6—1985 அன்று வந்துள்ளதா ?





(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. மு. இராமநாதன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணியாற்றக்கூடிய பாரம் தூக்கும் தொழிலாளர்களுடைய ஜீவாதாரமான பிரச்சினை இது. ஆகவே, இந்தத் தொழிலாளர்களுடைய சிரமத்தை இந்த அரசு அறியுமா ? அவர்களுடைய வேலையை நிலைப்படுத்தி நிரந்தரமான சம்பளம் பெறுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே இருக்கிற கிடங்குகளிலும், சிவில் சப்ளை கிடங்குகளிலும், நவீன அரிசி ஆலைகளிலும் பணியாற்றக்கூடிய பாரம் தூக்கும் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிஸ் மூலமாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே அவர்களை எல்லாம், தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு இப்போது இல்லை.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாரம் தூக்கும் தொழிலாளர்கள் சில தனிப்பட்ட ஒப்பந்தக் காரர்களால் ஒப்பந்தக் கூலிகளாகத்தான் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்த வரையில் உழைக்கும் கரங்களுக்கு மதிப்புத் தந்து அவர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமென்று அக்கறை உள்ள அரசாக இருக்கிறது என்று பலமுறை இந்த மன்றத்தில் அமைச்சர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே கொஞ்சம் அதிகக் கவனம் எடுத்துக் கொண்டு அங்கே பணியாற்றக்கூடிய பாரம் தூக்கும் தொழிலாளர்களை நிரந்தர ஊழியர்களாக ஏற்று அரசே சம்பளம் தரக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யுமா என்பதைக் கேட்பதோடு இனியாவது அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் கரங்களைக் காக்கிற அரசுதான் புரட்சித் தலைவர் அரசு. பாரம் தூக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு அவர்களே இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது நல்லது. அரசுத் துறையிலே அவர்களை நிரந்தரமாக்குகிற திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உணவு சேமிப்புக் கூடங்கள்.**

455—(*வினா எண். 6160)—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுமார் ரூபாய் 35 கோடி செலவில் உணவு சேமிப்புக் கூடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் ரூ. 45.58 கோடி செலவில் 9,11,600 டன் கொள்ளளவு உள்ள உணவு சேமிப்புக் கூடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசுக்கு அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பெரியார் மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.**

529—(*வினா எண். 4011)—**டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி, திரு. யு. பி. மாதையன் :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து எவ்வளவு தொகை நிலுவையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பெரியார் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் 31-10-1985 அன்று ரூ. 59.04 இலட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது.





**டாக்டர் அ. பொன்னுசாமி :** பெருமை பெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு மற்றும் விற்பனைச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தரவேண்டிய நிலுவைத் தொகை மிக அதிகமாக இருப்பதன் காரணத்தால் அவை சரியான முறையில் இயங்கி நெசவாளர்கள் தொடர்ந்து தொழில் நடத்த உதவுகின்ற வகையில் அந்த நிலுவைத் தொகையை ஈடுகட்டி நூல் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவை அதிகம் என்று சொல்ல முடியாது. 31-7-1985 அன்று 172.60 இலட்சம் ஆகும். 31-8-1985 அன்று 153.72 இலட்சம் ஆகும். 31-10-1985 அன்று 59.4 இலட்சம் தான். மேலும் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சொன்ன கருத்துக்கேற்ப கோ-ஆப்-டெக்ஸ் எந்தெந்த சொசைட்டிகளுக்குப் பணம் பாக்கி வழங்க வேண்டி இருக்கிறதோ அந்தச் சங்கங்களுக்கு நூலைக் கடனாக வழங்க இப்போது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியார் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவிக்கொண்டு இருக்கிறது—விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் கூட நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால் கைத்தறித் துணியினுடைய உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. அதே நேரத்தில் விற்பனை மிகவும் குறைந்து இருக்கிறது. எனவே இப்போது சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் பல சங்கங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வரவேண்டிய ஏராளமான தொகை நிலுவையாக இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க தேங்கிக் கிடக்கிற துணிகளை கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் வாங்கிக் கொள்ளவும் அதே நேரத்தில் நிலுவையில் உள்ள தொகையை உடனடியாகக் கொடுக்கவும் அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தீபாவளி, பொங்கலுக்குப் பிற்பாடு கைத்தறித் துணியினுடைய விற்பனை கொஞ்சம் மந்தமாகத்தான் இருக்கும். தொடர்ந்து கோ-ஆப்-டெக்ஸ் துணிகளைக் கொள்முதல் செய்து வருகிறது துணி தேங்கி இருப்பதைப் போக்குவதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் இந்த மாதம் 27 ஆம் தேதியிலிருந்து 15 நாட்களுக்கு சென்னையிலே கண்காட்சி நடத்தி ரிபேட் கொடுக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. யு. பி. மாதையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய பாக்கிக்காக வழங்கப்படும் சர்ட்டிபிகேட்டுகளை வைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கடன் கொடுப்பதை நிறுத்தப் போவதாகத் தெரிகிறது. அப்படி தொடர்ந்து கடன் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கி பணம் கொடுக்க தயங்கினால் கோவாப்டெக்ஸ் கடனுக்கு நூல் வழங்க உத்தேசித்து இருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன். கோவாப்டெக்ஸ் மூலம் பெறவேண்டிய பாக்கிக்கு பதிலாக நூலை சம்பந்தப்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுத் துறையுயில் ஜமக்காளங்கள் தயாரிப்பு.

530—(*வினா எண். 5182)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், கெத்திகிரிபட்டி கிராமத்தில் ஜமக்காளத் தறிகள் கொண்ட தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் துவக்கப்படும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா/

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன/

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ மற்றும் ஆ) : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் கெத்திகிரிபட்டி கிராமத்தில் ஜமக்காளத் தறிகள் கொண்ட தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் துவங்கும் செயற் குறிப்பு இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையான முன் மொழிவு அரசுக்கு வராத காரணத்தால் கூட அரசு அது பற்றி பரிசீலிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது கைத்தறி உதவி இயக்குநரிடமிருந்து அது பற்றிய முன் மொழிவு முறையாக அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே அந்த முன் மொழிவு கிடைக்கப் பெற்றவுடன் கெத்திகிரிபட்டியிலே இப்படி ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு குறிப்பாக 100 தறிகள் கொண்ட ஒரு சங்கத்தை ஆரம்பிப்பதற்கு 4 லட்சம் ரூபாய் ஆகும். அது முன்பு. தற்போது அதனுடைய மூலதன செலவு அதிகமாக ஆகிவிட்டது. பொருள்களுடைய விலையும் அதிகமாக ஆகிவிட்டதனால் அதற்கு இப்போது 8 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. மைய அரசுக்கு மாநிலஅரசு எழுதி கடந்த ஒரு ஆண்டு காலமாக அதை 4 லட்சத்திலிருந்து 8 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநில அரசும் மைய அரசும் 50, 50 என்ற சம பங்கு வீதத்தில் அந்தச் சங்கத்தை நடத்துவதற்கு ஏற்பட்டாகிக் கொண்டிருக்கிறது. முன் மொழிவுகள் துணை இயக்குநரிடமிருந்து வரப் பெற்றால் அது பற்றி இந்த அரசு ஆராயும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் இப்படிப்பட்ட தொழில் இயல் கூட்டுறவுச் சங்கங்களை எத்தனை இடங்களில் ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலித்து வருகிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தமிழக அரசு அதற்காக 24 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. மைய அரசினுடைய பதில் வந்தவுடன் சம்பந்தப்பட்ட தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்தை துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திண்டுக்கல் தொகுதியில் புதிய நூற்பாலை.

531. (*வினா எண். 5945)—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் செயற் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : திண்டுக்கல் தொகுதியில் புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[1986 ஏப்ரல் 24

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்கக் கூடிய நூல் சுலபத்தில் அறுந்துவிடாமல் இருக்கக் கூடிய அளவிற்கு நல்ல துணிகளை நெய்யக்கூடிய திறமைமிக்க நெசவாளர்கள் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள் அதனால் 10-க்கும் மேற்பட்ட தனியார்கள் சங்கங்களை நடத்தி, அவைகள் நல்லமுறையில் லாபகரமாக நடத்தி வருகின்றனர். மேலும் அங்கே கிடைக்கக் கூடிய தொழிலாளர்கள் சீப் லேபர்ஸ் ஆக இருக்கிற காரணத்தால் இவற்றை எல்லாம் ஆராய்ந்து அங்கே கூட்டுறவு நூற்பாலையை உடனடியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, புதியதாக கூட்டுறவு நூற்பு ஆலை துவங்க அனுமதி வழங்குவது மைய அரசின் கையிலேதான் இருக்கிறது. அவர்கள் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அப்படி புதியதாக துவக்குவதற்கு உரிமை கொடுப்பதாக முடிவு எடுக்கவில்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே கூட திண்டுக்கல்லில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்திலே கூட திண்டுக்கல்லிலே ஒரு நூற்பு ஆலையை அமைக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு இதுவரை அனுமதி வழங்காத காரணத்தால், மைய அரசை வற்புறுத்தி, அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைப்பதை உறுதி செய்யக்கூடிய அளவிற்கு, தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுப்பப்பட்டிருக்கிற கருத்துரு இதுவரையில் வரவில்லை. வந்தால் அதுபற்றி ஆராயப்படும்.

சிப்பம் கட்டும் பொருட்களுக்கான விற்பனை வரி.

532. (*வினா எண். 2488)-திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொருட்களை கட்டி அனுப்பப் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு (பாக்கிங் மெட்டிரியல்ஸ்) விற்பனை வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் உள்ளதா?



1986 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் — விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10.00)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே பொதுவாக விலைவாசியைக் குறைக்க நமது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் வாங்கும் பொருள்களை விட கட்டியனுப்பப் பயன்படும் பொருள்கள் அதிகம் செலவாவதால் பொருள்களின் விலை ஏறுகிறது. இந்த விலையேற்றத்தைத் தடுக்க இந்தப் பொருள்களுக்கு விற்பனை வரியை அரசு நீக்குமா? அப்படி விற்பனை வரி விலக்கு அளிப்பதால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, நியாயமாக செலுத்த வேண்டிய வரியை ஏய்ப்பதன் மூலமாக புதிய வரிகளை போடுகிற சூழ்நிலை உருவாகும், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல இதை ரத்து செய்தால். அப்படி புதிய வரிகளைப் போட்டாலும் பொருள்களுடைய விலை ஏறும். வாங்கி உண்ணுகின்ற மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் அவ்வாறு வரி ஏய்ப்பை தடுக்கிற எண்ணத்தோடு இங்கே பொருள்கள் கட்டியனுப்ப பயன்படும் பொருள்களுக்கு 'பாகிங் மெட்டீரியல்ஸ்'—ஸீற்கு வரி விதிக்கிற முறையைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதை ரத்து செய்தால் வரி ஏய்ப்பு பெருமளவில் ஏற்படும். ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 58 லட்சம் ரூபாய் வரி ஏய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சில பொருள்களை வாங்கினால் மேலே அழகாக பெரிய பேப்பரைச் சுற்றி கட்டி விடுகிறார்கள். அதைப் பிரித்துப் பார்த்தால் கந்தல் துணி, வைக்கோல் நடுவே சிறியதாக பொருள் இருக்கிறது. இதைத் தடுக்க அந்தப் பொருளை வாங்குபவர்கள் எதிரிலேயே கட்டித் தர அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, இது ஒரு நடைமுறைச் சிக்கலை உருவாக்குகிற கேள்வியாகும். அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 24

வணிகவரித் துறையில் மக்கள் தொடர்புப் பணி.

533 (*வினா எண். 3630)—திரு. மு. தங்கமணி : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வணிகவரித் துறையில் மக்கள் நலன் கருதி மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொடர்புடைய வட்ட, மாவட்ட, மாநில அளவில் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : வணிகவரித் துறையில் மக்கள் நலன் கருதி மக்களுக்கும் அலுவலர்களுக்கும் தொடர்புடைய மாவட்ட மற்றும் மாநில அளவில் விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. வட்ட அளவில் இம்மாதிரி குழுக்கள் அமைக்கும் எண்ணம் இல்லை. தேவையும் இல்லை. மேற்குறித்த ஆலோசனைக் குழுக்களல்லாமல் வணிகர்களின்நல் வாழ்வுக்குழு ஒன்றும், மாநில அளவில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள். வணிக வரியில் மக்கள் நலம் கருதி மாநில அளவில் உள்ள குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். உதவி துணை ஆணையாளர் செயலாளராக இருக்கிறார்கள். 'நான்-அபிஷியல்ஸ் என்று சொல்லக்கூடிய அதிகார சார்பற்றவர்கள் 12 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

Two representatives of the Primary Agricultural Producers.
Two representatives of Industrial Manufacturers.
Two representatives of the traders and merchants.
One representatives of the Co-operative Organisation.
One representative of the Cottage Industries.
One representative of the Consumers.
Deputy Commissioner.
Assistant Commissioner (Enforcement).



1986 ஏப்ரல் 24]

Assistant Commissioners other than the Assistant Commissioners (Headquarters) Officials.

Members of the State-Level Sales Tax Advisory Committees of the concerned Districts-Co-opted Members.

இவர்கள் இந்தக் குழுவிலே மாவட்ட அளவில் செயல்படுகிறார்கள் மாநில அளவில் சட்டப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், அதற்கு மேலாக வணிகச் சங்கங்களை சேர்ந்த சேம்பர் ஆப் காமர்ஸ் என்பதில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்து செயல்படுகிறார்கள். துறையினுடைய அமைச்சர் அதற்கு தலைவராக இருக்கிறார்.

திரு. மு. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை கூடுகிறது? இந்தக் குழுவின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் ஆண்டுக்கு 3 முறை கூட வேண்டும். ஆனால் ஆண்டுக்கு 3 முறை கூட வைண்டும் என்று சொன்னாலும் கூட, சில சூழ்நிலைகளின் காரணமாக கூட்ட முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் இந்தக் குழுக்கள் ஆண்டுக்கு 3 முறை கூட வேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கே வணிக சங்கத்தைச் சேர்ந்தவர்கள், சாம்பர் ஆப் காமர்சிலே இருப்பவர்கள், மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து வாங்கி உண்ணக்கூடியவர்களும், வணிகர்களும் எல்லாம் எப்படிப் பட்ட முறையிலே அணுகினால் நலம் பயக்கும் என்பதை அவர்கள் ஆலோசனையாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு, இந்த அரசு பல்வேறு கால கட்டங்களில் இதை எல்லாம் கவனித்து, நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்

### (அ) கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளது உண்ணாநோன்புப் போராட்டம்

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகம் பூராவும் உள்ள கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் உண்ணாவிரதம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு நீங்கள் இதைப்பற்றி பேசிவிட்டீர்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பவேண்டுமானால் என்னுடைய முன் அனுமதியைப் பெற்று கேட்கலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) திடீரென்று இப்படி பலரும் எழுந்து நின்று பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால், எப்படி? ஏதாவது ஒரு முறையில் இதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர முன் அறிவிப்புக் கொடுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஏதாவது ஒரு முறையிலே கொண்டு வர தாங்கள் அனுமதித்தால், நாங்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடு). இதுபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவோ, அல்லது வேறு வகையிலோ கொண்டு வந்தால் பதில் சொல்லலாம். திடீரென்று கரும்பு என்ன ஆச்சு என்று கேட்டால், கரும்பு அப்படியே இருக்கிறது. இதைப்பற்றி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு). நிதியமைச்சர் என்ற வகையில் எனக்கு எந்தவிதமான குறிப்போ அல்லது இது சம்பந்தப்பட்ட பைலோ வரவில்லை. இதற்கு பதில் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றவேண்டும். திடீர் திடீரென்று எழுப்புவது முறையல்ல.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கரும்பு விலை பற்றி ஏற்கனவே இந்த அவையிலே கருத்துக்கள் எல்லாம் பேசப்பட்டு, முதலிலே நிர்ணயிக்கப்பட்ட 150 ரூபாய் என்பது போதாது, அதை அதிகப்படுத்தவேண்டும் என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி கரும்பு விவசாயிகள் சார்பில் எடுத்துச் சொல்லி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை 195 ரூபாய் என்று அவர்கள் அறிவித்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வளவு காலத்திற்குப்பிறகு மறுபடியும் அவர்கள் உண்ணாவிரதம் என்று இருக்கிறார்கள். நான் இங்கே தெரிவிக்க



விரும்புவது இரண்டு பக்கத்திலேயும் நான் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. (1) கரும்பு விவசாயி இல்லையென்றால், கரும்பு உற்பத்தி இல்லையென்றால், ஆலைகள் இயங்க முடியாது. உண்மைதான். அதே நேரத்திலே ஆலைகள் இல்லையென்றால் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கும் வாய்ப்பு இல்லை. ஆகவே இருக்கின்ற சூழ்நிலையை நான் ஏற்கனவே தெரிவித்தேன். அரசாங்கம் அதிகமாக விலையை அறிவித்து அந்த விலைக்கு கொடுக்கமுடியாது என்ற நிலையிலே நீதி மன்றத்திற்குப் போய், அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலமை கடந்த காலத்தில் இருந்திருக்கின்றது. ஆகவே எல்லா சூழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் 195 ரூபாய் என்று நாங்கள் அறிவித்திருக்கிறோம். அதை விவசாயப் பெருமக்கள் ஏற்று ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். தயவு செய்து ஒரு முறையைப் பின்பற்றுங்கள்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : நாங்கள் முறைப்படிதான் பேசுகிறோம். (கூச்சல். குழப்பம்)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

### (ஆ) மேலவை உறுப்பினர் நியமனம் குறித்து

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் ஆளுநருடைய நடவடிக்கைப்பற்றி பிரச்சனையை எழுப்புகிறார்கள். பொதுவாக கொள்கின்ற ஒன்று, ஆளுநரின் நடவடிக்கைபற்றி வினா எழுப்புவதோ விவாதிப்பதோ அவையில் கூடாது என்ற ஒரு மரபு இருக்கிறது. அதுபற்றி தாங்கள்தான் முடிவு செய்யவேண்டும், ஆக அந்தப் பிரச்சனையை விவாதிக்கலாமா கேள்வி கேட்கலாமா? அப்படி ஒரு மரபு இல்லை. ஆளுநரைப் பொறுத்தவரையில் விவாதிக்கக் கூடாது என்றுதான் இருக்கிறது. அதுபற்றி தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறுகிறேன். (கூச்சல், குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

MR. SPEAKER : Governor's act cannot be questioned here. Moteover the matter is subjudice. (கூச்சல், குழப்பம்).

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம் முன்னாலே இருக்கிற பிரச்சனை, கவர்னரைப்பற்றிய பிரச்னை அல்ல. Violation of the constitution, அதைத்தான் ரகுமான்கான் அவர்கள் எழுப்ப விரும்புகிறார்கள். தாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன், கோர்ட்டுக்கு போய் இருக்கிறார்கள். ஒரு முடிவுக்கு வந்தால் நல்லது. (கூச்சல், குழப்பம்). மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து ஒத்துழைக்கவேண்டும். காலை 8½ மணிக்குள்ளாக என் அவைக்கு வந்திருந்து கேட்டிருந்தால் அங்கேயே வழி சொல்லியிருப்பேன் (குறுக்கீடு). பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த நடவடிக்கை பொறுத்து வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கும் தொடுக்கப்பட்டு அதுபற்றிய தீர்ப்பும் வழங்கப்படாமல் இருக்கிறது. இந்த நிலையிலே அதை விவாதித்து இந்த அவை எந்த ஒரு முடிவும் செய்ய முடியாது. ஆகவேதான் அது சரியாக வராது (குறுக்கீடு).

MR. SPEAKER : The act of the Governor cannot be questioned at all and the matter is subjudice. The Hon. Minister for Law will explain.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்து வைக்கின்ற வாதத்திற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதுதான் நியாயமாக இருக்க முடியுமே தவிர அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அனுமதித்து விட்டு அதற்கு பிறகு........................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்த பிறகு எதைச் சொல்லக் கூடாது என்று நினைக்கிறோமோ அதைச் சொல்லி முடித்த பிறகு எந்தப் பதில் சொன்னாலும் சரியாகாது. முதன் முதலில் இதைப்பற்றி எடுக்கும் போதே ஆளுநர் அவர்களுடைய கூற்றைப் பற்றியும். அரசியல்



134478 சென்னை-600 00

நடவடிக்கைப் பற்றியும் சொன்னதன் காரணமாக நான் சொல்லுகிறேன். அதைப் பற்றி விவாதிக்கக் கூடாது என்று நான் சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவை தலைவர் அவர்களே, Conduct of the Governor should not be raised. என்பதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்லுகிறேன். நான் பேசிய பிறகு நீங்கள் தீர்ப்பு சொல்லுங்கள். தப்பு இருந்தால் உட்காருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தம் கருத்தைச் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்களுடைய நடவடிக்கையைப் பற்றி வினா எழுப்பவோ, விவாதிக்கவோ கூடாது என்று இந்த அவை பொதுவாகக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதைப் பொறுத்து பொதுவாக வேண்டுமென்றால் சொல்லட்டும்; ஆனால் அந்த சப்ஜெட்டுக்குள் போகாமல் இருக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்).

Mr. SPEAKER: "A member while speaking must not reflect upon the conduct of President or any Govornor.... This is the Ruie 92 sub-clause (vii).

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லிய அந்தக் கருத்தை முன்கூட்டியே நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விதி 92 ல் சொல்லப்பட்டிருப்பது A member, while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending என்று தான் இருக்கிறது.

Also "a member while speaking must not reflect upon the conduct of President or any Governor........"

Conduct of any Governor—என்பது வேறு. Exercising his routine work as Executive Head

என்பது வேறு. உதாரணம் சொல்ல விரும்புகிறேன், அரசியல் சட்டத்தினுடைய 171-வது பிரிவின் படி தாங்களும் படித்து இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நினைவூட்டுவதற்காக நான் சொல்லுகிறேன். துர்க்காதாஸ் பாஸ் அவர்கள் விளக்கம் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு இங்கே வந்திருக்கிறது. அதைப்பற்றி சொல்லுகிறபோது Article 171 does not state that in making nomination the Governor is to act in his discretion. So, it must be exercised on ministerial advice and in view of Sub-clause (3) of Article 163 it is presumed that in making the nomination the Governor had acted on the advice of the Council of Ministers. (குறுக்கீடு). நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அரசியல் சட்டத்தினுடைய விதியின்படி பல்வேறு உத்திரவுகள் கவர்னர் அவர்கள் பெயரால் பிறப்பிக்கப்படுகின்றன. நேரடியாக அது கவர்னருக்கு தொடர்பு இல்லை என்றாலும். இன்னும் சொல்லப்போனால் அரசாங்கம்தான் அந்த உத்தரவுகளை கவர்னருடைய பெயரால் போடலாம். அது அரசாங்கத்தினுடைய அடிப்படையில்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசலாம். ஆனால் the matter is sub-judice.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * *

(முற்பகல் 10–20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாகக் குறிப்பிட்டதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். Still it is pending before the Court. It cannot be raised. (குறுக்கீடுகள்).

THIRU A. RAHMANKHAN : It is stated that the matter is sub-judice. Now the matter is infructuous. * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் எந்த விதியின் கீழ் இது எழுப்பபட்டு பேசப்படுகிறது? அஜெண்டாவில் இது இருக்கிறதா? அல்லது அஜெண்டாவை மாற்றி இது பேசப்படுகிறதா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தாங்கள் தீர்ப்பை அளித்துவிட்டீர்கள். சப்ஜுடிஸ் என்று சொன்னீர்கள் பிறகு இதைப்பற்றி பேச அனுமதிப்பது உகந்ததல்ல. This is a matter pertaining to the scope of the Legislative Council, and not to the Legislative Assembly என்பதை நாம் கருத்தில் கொண்டு பேசவேண்டும். இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று நிலுவையில் இருக்கிற காரணத்தால், This is a matter subjudice ஆகவே இதுகுறித்து அவை விவாதிக்கக் கூடாது என்பது நடைமுறையில், இருந்து வருகிற மரபு, விதிக்கு உட்பட்டு என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இரண்டாவது, This is a matter pertaining to the scope of the Legislative Council and not to the scope of Legislative Assembly. அடுத்து ஆளுநர் அவர்களுடைய நடவடிக்கையைப் பற்றி விவாதிப்பது இல்லை என்பது நடைமுறையில் இருக்கின்ற ஒரு மரபு. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்goes into the hyper technical aspect of the provisions of Rule 92. The matter being subjudice.. அவை அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்).

Mr. SPEAKER : You have asked a Point of order. I have given an opportunity to express your views. The matter raised by you is pending in the Court. It is sub-judice. Act of the Governor cannot be questioned. His conduct cannot be discussed. என நான் ரூலிங் கொடுத்துவிட்டேன். அதேயேற்று அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : கவர்னர் ஆக்ட் பற்றி பேசக்கூடாது. அவர் காண்டக்ட் பற்றிப் பேசக்கூடாது. சரி, அமைச்சர் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்).

[1986 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய பேரவை விதிப்படி,

Number one—Act of the Governor cannot be questioned. Number two—It is subjudice.

Number three—The ruling of the Chair is final. There cannot be a debate after my ruling.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமையைப் பொறுத்து தீர்ப்பு அளித்துவிட்டீர்கள். . அதுபற்றி இங்கே வ்வாதிப்பதற்கு இல்லை என்று தாங்கள் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் இதைக் கொண்டுவர வேண்டுமென்றால் முறைப்படி வேறு ஏதாவது ஒரு வகையிலே கொண்டு வரலாம். முறைப்படி வந்தால் அனுமதிக்கலாமே தவிர, இப்போது அதுபற்றிப் பேசமுடியாது. இப்போது விதிப்படி கொண்டுவரப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டரில் இதற்கு மேல் விவாதிக்க முடியாது (கூச்சல், குழப்பம்).

**திரு. அ. ரகுமான்கான் :** * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே மேலும் விவாதிப்பதற்கு இடம் இல்லை (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரு. ரகுமான்கான் ஒன்றைச் சொன்னார்கள். * * என்று சொன்னார்கள். அது நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கவேண்டியது இல்லை. நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** நீக்குவது உங்கள் இஷ்டம், ஆனால் அதிலே என்ன தப்பு இருக்கிறது? (கூச்சல், குழப்பம்).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வார்த்தை அந்த காண்டக்ஸ்டில் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இது ஒழுங்குப்பிரச்சினையல்ல, ஆகவே எல்லாவற்றையும் நீக்குவதுதான் முறை. It is not a point of order. The entire thing must be expunged.

**திரு. அ. ரகுமான்கான் ;** * * (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது நீக்கப்படுகிறது. ** (குறுக்கீடு). திரு. குமரி அனந்தன் அவர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும். அவர் பேசட்டும். பிறகு உங்களை அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நான் ஒரு வார்த்தை சொன்னவுடனேயே இவ்வளவு சூடு ஏறுகிறதே, அப்படியென்றால் எனக்கு எப்படியிருக்கும்? இலக்கியம் தெரிந்தவரே இப்படிப் போகிறார். என்ன செய்வது ?

(முற்பகல் 10–30)

**திரு. செ. ஆறுமுகம் :** ஒரு உறுப்பினரைத் தனிப்பட்ட முறையில் தாக்கிச் சொல்வது சரியல்ல.

**திரு. குமரி அனந்தன் :** தலைவரவர்களே, இலக்கியம் தெரிந்தவரே இப்படிப் போகிறார் என்று கூறியது அவைக் குறிப்பில் இருக்கலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு நான் சொல்கிறேன். உங்கள் பெயரை அழைப்பதற்குப் பதிலாக வேறு ஒருவரின் பெயரை அழைத்திருக்கலாம். இப்படி தவறுவது இயற்கைதான். (குறுக்கீடு) அதை ஏன் தவறாகக் கருதுகிறீர்கள் ? (குறுக்கீடு) முதலில் அவர் பேசட்டும். நான் தங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை.

**திரு. இ. மனோகரன் :** பேரவைத் தலைவரவர்களே, இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கரும்பு விவசாயிகளின் பிரச்னையைப் பற்றிப் பேச முற்பட்ட நேரத்தில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 ஏப்ரல் 24

**திரு. கி. மனோகரன் :** கரும்பு விவசாயிகளின் பிரச்னை குறித்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும், காங்கிரஸ் கட்சி நண்பர்களும் பிரச்னைகளைக் கிளப்புகின்ற நேரத்தில் நீங்கள் அதை அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதிக்காத காரணத்தால், கரும்பு விவசாயிகளின் பிரச்னையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதிக்கவில்லை என்று சொல்லாதீர்கள். அனுமதித்து அமைச்சரும் பதில் சொன்னார் கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, கரும்பு விவசாயிகள் பிரச்னை குறித்து திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கேட்டு, நானும் பதில் சொல்லிவிட்டேன். அருமை அண்ணன் நாஞ்சிலார் அவர்கள் இதில் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு அச்சாரம் போடுவதாகத் தெரிகிறது. அவர் என்ன முடிவு செய்தாலும் சரி.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, அரசியல் ஆதா யம் தேடுவதற்கு என்று அமைச்சரவர்கள் சொல்லலாமா ?

**திரு. கி. மனோகரன் :** அந்தப் பிரச்னையில் அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இதில் நான் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறேன் என்று மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் காளிமுத்து அவர்கள் துணிச்சலாகத் தனது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அரசியல் ஆதாயம் தேடி எனக்குப் பழக்கமில்லை. அந்தப் பழக்கம் இருந்திருந்தால் நான் எங்கேயோ சென்றிருப்பேன். நான் இருந்த இடத்தில் நீங்கள் இருந்திருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களையெல்லாம் எனக்குத் தெரியும். ஆகவே இந்தப் பிரச்னையில் நாங்கள் முழுக் கருத்தை எடுத்திருப்பதால், கரும்பு விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று வலி யுறுத்திக் கூறுவதற்கு நீங்கள் வாய்ப்பு அளிக்காத காரணத்தால், இதைப் பயன்படுத்தி நாங்கள் வெளியேறுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் வாய்ப்பு அளிக்க வில்லை என்று சொல்லாதீர்கள். அதிகமாகவே வாய்ப்பு கொடுத்துள்ளேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வாய்ப்பை அவர்கள் எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதிலிருந்து இது தெரிகிறது. அரசியல் ஆதாயம் யார் தேடுகிறார்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. (கூச்சல், குழப்பம்.)



1986 ஏப்ரல் 24] [டாக்டர் கா. காளிமுத்து]

தலைவர் அவர்களே, அரசியல் ஆதாயம் தேடவில்லை என்பதை நிரூபிப்பதற்காக நாஞ்சிலார் அவர்கள் வெளி நடப்பு செய்யாது இருந்தால், நான் மகிழ்ச்சி அடைவேன். (கூச்சல், குழப்பம்.)

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, அரசியல் ஆதாயம் என்று சொன்னார்கள். நான் அதைச் சொல்லவில்லை. ஆளுங்கட்சிக்கு நன்மையைச் சொல்கிறோம். ஏற்கனவே, .... (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட ஆப் ஆர்டர் அல்ல. (கூச்சல், குழப்பம்).

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய் தனர்)

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு அடுத்த மாநிலத்தில் கொடுக்கக்கூடிய விலையைக்கூட இங்கு கொடுக்க மறுப்பதனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் வெளி நடப்பு செய்கிறோம். (கூச்சல், குழப்பம்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்) (கூச்சல், குழப்பம்.)

(முற்பகல் 10–40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் தங்களுடைய தீர்ப்புக்கு ஏற்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதோடு அந்தப் பிரச்சனை முடிந்துவிட்டது. ஆகவே, இதற்கு மேலும் அதுபற்றி சொல்லவேண்டியதில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். திரு. குமரி அனந்தன்.... (குறுக்கீடுகள்)

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களை கீழவை
உறுப்பினர்கள் என்று குறிப்பது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த சட்டப் பேரவையினுடைய பெருமைக்கு பங்கம் வருகின்ற வகையில் நடைபெற்றிருக்கிற ஒரு நிகழ்ச்சியினை உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 24

விரும்புகிறேன். இங்கே அமர்ந்திருக்கிற நமது நிதி அமைச்சர் மாண்புமிகு நெடுஞ்செழியனார் அவர்களே கலந்து கொண்ட தஞ்சை பல்கலைக் கழக நிகழ்ச்சி ஒன்றின் அழைப்பிதழில் அச்சிடப்பட்ட வார்த்தைகள்—சட்ட மேலவை உறுப்பினர், கீழவை உறுப்பினர் என்று அச்சிட்டிருக்கிறார்கள். (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குரல் எழுப்பிக்கொண்டே நின்றார்கள்) இந்த சட்டப் பேரவையில் இருக்கிற உறுப்பினர் களை கீழவை உறுப்பினர் என்று குறிப்பிட்டதன் மூலமாக இந்த சட்டப் பேரவையில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பினரின் மதிப்பையும் பங்கப்படுத்துவதாக இருக்கிறது. உலகம் முழுவதும் இருக்கின்ற மக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிற தஞ்சைப் பல்கலைக் கழகம் இந்தப் பேரவையை கீழவை என்று.... (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து உட்காருங்கள். இப்படி எல்லோரும் நின்றுகொண்டிருப்பது முறையலல. நான் நாஞ்சிலார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். ஆகவே, நடைமுறைகள் நன்றாகத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். திரு. குமரி அனந்தன் அவர்கள் கூறியதற்கு பதில் சொன்ன பின்னால் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். (கூச்சல்‘ குழப்பம்).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒரு கட்சியின் தலைவர். ஒரு கட்சித் தலைவர் பேசும்போது இன்னொரு கட்சியினர் கண்ணியம் இல்லாமல் சத்தம் போடுவது சரிதானா ?

**திரு. மு. இராமநாதன் :** நீதி கேட்பதில் தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதி கேட்பது தவறு இல்லை. நானும் நீதி வழங்கி இருக்கிறேன். 30 நிமிடங்களுக்கு மேல் இதற்காக அளித்துவிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கிற அத்தனை பேருக்கும் அவரவர்களுக்குரிய மரியாதை தரவேண்டியிருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று அவைத்தலைவர் சொல்லியிருக்கிற காரணத்தாலும், திரு. குமரி அனந்தனுக்கு வாய்ப்புத் தந்துவிட்டதன் காரணத்தாலும் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு இவர்கள் தனது பிரச்சினையை எழுப்பலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்.)



1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள அமரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திரு. குமரி அனந்தன் அவர்கள் தொடர்ந்து பேசுவார். (கூச்சல், குழப்பம்).

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அழைப்பிதழில் சட்ட மேலவை உறுப்பினர் என்றும், கீழவை உறுப்பினர் என்றும் போடப்பட்டு இருக்கிறது. இந்தப் பேரவை உறுப்பினர்களைப் பற்றி கீழவை உறுப்பினர் கள் என்று அச்சிட்டதன் மூலமாக இங்கே இருக்கிற உறுப்பினர்களுடைய, அவையினுடைய, சபாநாயகருடைய, இந்த மொத்த அமைப்பினுடைய மதிப்புக்கும், மரியாதைக்கும் பங்கம் வந்திருப்பதாக நான் கருதுகிறேன். (கூச்சல், குழப்பம்) உலகத்திற்கே பிழையற்ற தமிழை எழுதி வழி காட்டவேண்டிய தமிழ்ப் பல்கலைக் கழகம் அச்சிட்ட அழைப்பிதழில் இப்படி போடப்பட்டிருக்கிறது என்றால்........ (கூச்சல், குழப்பம்) இலக்கிய இதயம் அமர்கிறது.

**திரு. இ. மனோகரன் :** சபாநாயகர் அவர்களே, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வெளி நடப்புக்கு நாங்கள் ஆயத்தமான நேரத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் எழுந்து கண்டபடி, வாயில் வந்தபடி பேசியிருக்கிறார். அரசியல் ஆதாயம் பற்றி எல்லாம் நான் பதில் சொல்லவில்லை. ஆனால், வெளிநடப்பு செய்கிறபோது நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று தெரிந்ததற்குப் பிறகு அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்வது மரபல்ல. முறையல்ல; ஒழுங்கல்ல; பண்பல்ல ; யோக்கியதை அல்ல என்று சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டபடி, வாயில் வந்தபடி யார் பேசுகிறார்கள் என்பதை இந்த அவைக்கு அண்ணன் நாஞ்சிலார் அவர்கள் உணர்த்தியதற்கு மிகவும் நன்றி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பி இருக்கிறார்கள். என்னுடைய கவனத்துக்கு இப்போதுதான் வருகிறது. இதுபற்றி அந்தப் பல்கலைக் கழகத்திற்கு நாம் நிலைமைகளை விளக்கலாம்.

[டாக்டர்இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 24

(முற்பகல் 10–50)

ஆனால் இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்பதை இந்த அவையும் உணர்கிறது; நாமும் உணர்கிறோம். பொதுவாக அப்பர் ஹவுஸ் என்றும் லோயர் ஹவுஸ் என்றும் ஆங்கிலத்திலே சொல்லுவார்கள். அதை வைத்துக் கொண்டு அப்படிச் சொல்லியிருக்கலாம் என்று கருதுகிறேன். நாம் பேரவை, மேலவை என்றுதான் சொற்களை பயன்படுத்துகிறோம். அப்படி அதைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தலாம். இனிமேல் அப்படி திருத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்வதற்கு வேண்டுமானால் கூட வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்:** கரும்பு சாகுபடியாளருக்கு ஆதரவாக காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

**திரு. டி. ஆர். வெஙகடரமணன்:** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பலமுறை பேசுகின்ற வாய்ப்புகள் கிடைக்கின்ற போதெல்லாம் மக்களுடைய குறைகளை, இருக்கின்ற குறைபாடுகளை சொல்வதற்கான வாய்ப்புகள் அவை என்கிற எண்ணத்திலே மிகுந்த துடிப்போடும், ஆர்வத்தோடும் நான் பேசியிருக்கின்ற வாய்ப்புகள் பல இருக்கின்றன. (குறுக்கீடு) இன்னும் எங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை பற்றி பேசவே விடமாட்டேன் என்கிறீர்களே, இது நியாயமா? . , .

அட்டை (பாட்ஜ்) செருகிக்கொண்டு உறுப்பினர்கள் பேரவைக்கு வருதல்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எதற்காகவும் நான் குறுக்கிடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் பேசுகிறபோது ஒரு பேட்ஜை போட்டுக் கொண்டிருக்கிறார்களே, அது போன்று பேட்ஜ் போட்டுக் கொண்டு சட்டசபைக்கு வரலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்காகத்தான் குறுக்கிட்டேன்.



1986 ஏப்ரல் 24]

**MR. SPEAKER:** It is not in order for the Members to wear badges and signs in their dresses.

It was ruled in Lok Sabha in 1981 that members wearing badges regarding Kisan rally was not in order.

Display of badges by the Health Minister in Lok Sabha in............

(கூச்சல், குழப்பம்)

தயவு செய்து அமருங்கள். இப்படி ஒவ்வொருத்தர் பேசுவதற்கும் ஒவ்வொரு வார்த்தையாக அர்த்தம் பார்த்துக் கொண்டிருந்தால், இங்கே உட்கார்ந்து இருக்கவே முடியாது. மானம் மரியாதை எல்லாம் பார்த்தால் நடக்காது என்ற நிலைமை இருக்கிறது. (குறுக்கீடுகள்). (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லுகிறார்களோ அதையேதான் எல்லா உறுப்பினர்களும் செய்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். அதற்கு சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் களோ அல்லது மற்றக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களோ கூட, அப்படி சபாநாயகர் தீர்ப்பு அளித்துக் கொண்டிருக்கும் போது, இடையில் குறுக்கிட்டு கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எந்தக் குற்றச்சாட்டை சொல்லுகிறீர்களோ அதே குற்றச்சாட்டை தாங்களும் செய்யக் கூடாது. அந்த வகையிலே அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அந்த தன்மைக்கு மட்டும் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**MR. SPEAKER:** Display of badge by Health Minister in Lok Sabha in 1977 was not permitted.

In 1972, the Speaker, Lok Sabha refused to allow a member to speak till he removed the sign and symbol that he wore in his dress.

In 1977, in Bihar Legislative Assembly, some Members entered the Chamber with some badges. Objection was raised and then they removed it. According to the Parliamentary Practice and Procedure, wearing of badges or signs in the dress is not in accordance with the decorum to be followed by the Members.

[பேரவைத் தலைவா] [1986 ஏப்ரல் 24

நம்முடைய அவையில் கூட 1983—வது ஆண்டு அக்டோபர் 25—ஆம் தேதி இப்படி முறையற்ற பேட்ஜ்கள் மற்றவைகள் அணிவது தவறு, அவ்வாறு அணிவது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல என்பதை நான் ஏற்கெனவே அவையில் தெரிவித்திருக்கிறேன். எனவே அவ்வாறு அணிந்துக் கொண்டு இங்கே வந்திருந்தால், அவைகளை கழற்றிவிட்டு அவை நடவடிக்கைகளிலே பங்கு கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, நாங்கள் பேட்ஜ் அணிந்து வந்தது விவசாயிகளுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக, அது சட்ட விதிகளுக்கு புறம்பாக இருந்தால் நாங்கள் அதை எடுத்து விடுகிறோம். எதிர்ப்பு தெரிவிக்கின்ற முறையில் அவைகளை அணிந்து கொண்டு வந்தோ . நடைமுறைகளுக்கு மாறாக இருந்தால் எடுத்து விடுகிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, முன்பு கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு வந்தார்களே, அது சரியா தப்பா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தால், நான் எதற்கும் பதில் சொலவதாக இல்லை. ஒன்றுமே சொல்லக்கூடிய நிலையில் நான் இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்கள் தீர்ப்பை படிக்க ஆரம்பித்த பொழுதே நான் பேட்ஜை கழற்ற நினைத்தேன். சட்டத்திற்கு முறையாக பணிந்து நடக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது.....

மாணபுமிமு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தன்னுடைய சட்டையல் அணிந்திருக்கும் பாட்சை எடுத்து விட வேண்டும். அதை அணிந்திருப்பது பாராளுமன்ற நடைமுறைக்கு ஏற்றதல்ல.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, என்னுடைய வருத்தமெல்லாம் தாங்கள் தீர்ப்பு சொல்கிற போது, அதை நான் மதித்து நடக்கிற போது, ஆளும் கட்சித் தரப்பிலிருந்து * * *
என்று சொல்கிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொல்கிற போது நீங்களும் ஏதாவது சொல்கிறீர்கள். அவையை நடத்துவதில் இரண்டு தரப்பிலும் எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, * * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அந்த வார்த்தைகள் இருந்தால் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தென்காசி தாலுக்கா, பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், அ. ரகுமான்கான் ஆகியோர், ''12—4—1986 அன்று இரவு தென்காசி தாலுகா பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்று சின்னசாமி நாடார் என்பவரை போலீஸ்காரர்கள் அடித்து துன்புறுத்தி அதன் காரணமாக அவர் இறந்து விட, அதை மறைக்க காவல் நிலைய அதிகாரியும், ஏனைய போலீஸ்காரர்களும் இறந்தவரின் உடலின் கழுத்தில் வேஷ்டியால் சுருக்கு மாட்டி கொலையை தற்கொலையென்று மாற்றியதால் அந்தப் பகுதியில் உள்ள மக்களிடையே தோன்றியுள்ள அச்சம் குறித்து விவாதிக்க பேரவையின் இகூ அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்,'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாசக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் பேசுகிறபோது போலீஸ் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதால், போலீஸ்காரர்கள் தவறாக நடந்துக் கொள்கிற காரணத்தால், வேலியே பயிரை மேய்கிற சம்பவங்கள் இன்றைக்கு இந்த நாட்டிலே அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதால் தான் இதுபோன்ற துர்பாக்கியமான சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றனவென்று பேச வருகிறபோது ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் * * * என்று சொல்கிறார்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. . இராமச்சந்சரன் : தலைவர் அவர்களே, இதெல்லாம் அவைக் குறிப்பில் இருக்க வேண்டாமென்று முன்பே நீக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் மீண்டும் அதை ரெக்கார்டில் கொண்டு வர வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் கிராமப் புறங்களில் போலீஸ் நிலையங்களை எடுத்துக் கொண்டால் மாதக் கடைசியில், ஆண்டுக் கடைசியில் ஸ்டாட்டிஸ்டிக்சிற்காக சில கேஸ்களைப் போடுவார்கள். மாதம் முடிகிற போது போலீஸ்காரர்கள் ஊரில் போகிறவர்களை எல்லாம் பிடித்து கேஸ் போடுவார்கள். பாலூர் சத்திரம் காவல் நிலையத்தில் இருக்கிற அதிகாரி சித்திரகுப்தன் என்பவர் இதுபோன்ற பழைய ஸ்டாட்டிஸ்டிக்சை எடுத்துப் பார்த்திருக்க வேண்டும் போலிருக்கிறது. ஏற்கனவே பாலூர் சத்திரம் காவல் நிலையத்தில் சென்ற ஆண்டு ஒருவரை விசாரணைக்கென்று அழைத்து அடித்து அவர் மரணம் அடைந்த நிகழ்ச்சி அவர்களுடைய ரெக்கார்டிலே இருப்பதால், இந்த ஆண்டும் அதைப் போன்ற அந்த ஸ்டாட்டிஸ்டிக்சை சரி செய்ய வேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை. சந்தேக கேஸ் என்று ஒரு நபரை, கீழ்ப்பாலூர் சுடலாண்டி நாடார் மகன் சின்னச்சாமி நாடார் என்ற காய்கனி வியாபாரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார். காவல் நிலையத்தில் அவர் அடிக்கப்பட்டு படக்கூடாத இடத்தில் அடி பட்டு இறந்து விட்டார். இறந்தவுடன் விழித்துக் கொண்டது காவல் துறை. இறந்தவரின் வேட்டியை அவிழ்த்து கழுத்தில் சுருக்கை மாட்டி, அவர் அங்கே தற்கொலை செய்து கொண்டதாக ஒரு நாடகம் நடத்தப்பட்டது. நான் நாடகம் என்று சொல்வதற்கு காரணம் பின்னாலே நடந்திருக்கிற சம்பவங்களைப் பார்க்கிறபோது அது நாடகம் என்று நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று கருதியே சொல்கிறேன்.

சின்னச்சாமி நாடார் என்பவரின் தாயார் கொடுத்திருக்கிற மனுவை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நடந்த சம்பவங்களை பார்க்க வேண்டும். சந்தேகத்தின்பேரில் அழைத்து வரப்பட்ட நபர் இதற்கு முன்னாலே எந்த கேசிலும் ஈடுபட்டவர் அல்ல. எந்தவிதமான குற்றத்திலும் ஈடுபட்டவர் அல்ல. இதற்கு முன்னால் ஜெயிலுக்குப் போகாதவர். அவர் மீது முதல் தடவையாக ஒரு வழக்கு போடப்படுகிறது. இறந்த பிறகு 'Dead man tells no lies' என்று சொல்வார்களே, அதைப் போல இப்போது அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் ஒரு நாகர் சிலை, கல் சிலையை களவாடி வந்தார் என்று போலீஸ்காரர்கள் கே[illegible]பாடுகிறார்கள்.



(முற்பகல் 11-00)

ஆனால் நானே சென்று அந்தச் சிலையைப் பார்த்தேன். நாகர் சிலை என்பது தமிழகத்தில் மூக்குக்கு மூக்கு வீதிக்கு வீதி இருக்கிறது. சிலையைத் திருடுவதிலே கூட, யாராவது பிள்ளையார்ச் சிலையைத் திருடினார் என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால், இந்த நாகர் சிலையைத் திருடுவது என்று கிடையாது. எங்கோ கிடந்த ஒரு அனாதை நாகர் சிலையைக் கொண்டு வந்து, அவர் நாகர் சிலையைத் திருடினார் என்று சொல்லி, இன்றைக்கு ஒரு வழக்கைப் பதிவு செய்து இருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம் ஒரே ஒரு கேள்விதான். இறந்துபட்ட சின்னச்சாமி நாடார் என்பவருடைய உயரம் 5 அடி 8 அங்குலம். அவர்கள் இறந்ததாகச் சொல்லப்படுகிற அந்த கொண்டி இருக்கிறதே, சுவரோடு பதிக்கப்பெற்று, கதவுக்கான அந்த கொண்டி தரையிலேயிருந்து 4 அடி உயரத்திலே இருக்கிறது. நானே சென்று அளந்து பார்த்தேன். 4 அடி உயரத்திலே சுவரோடு ஒட்டியுள்ள கொண்டியிலே அவர்கள் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்ததாக இன்றைக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. என்னுடைய ஒரே ஒரு கேள்வி. 5 அடி 8 அங்குலம் உள்ள ஒரு நபர் 4 அடி மட்டுமே உயரம் உள்ள ஒரு கொண்டியிலே இருந்து கொண்டு கழுத்திலே தூக்குப் போட்டுக்கொண்டு இறக்க முடியுமா ? இது சாத்தியமா ? நடைமுறைக்கு ஏதுவானதுதானா ? இது இயற்கைக்கு விரோதமாக தோன்றவில்லையா ? இந்தக் கேள்வியைப் போலீசார் அழைத்து வந்த பஞ்சாயத்துக்காரர்கள் ஒருவரும் கேட்கவில்லை. அவர்கள் கூட்டி வந்த ஊரிலே இருக்கக்கூடிய போலீசை மட்டுமே நம்பி வாழக்கூடிய பெரிய மனிதர்கள் அன்றைக்கு அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. இறந்துபட்டவருடைய தாய், வேதனையின் காரணமாக அழுதுகொண்டு இருந்தாலும், அவர்கள் இன்றைக்கு அரசுக்கு ஒரு பெட்டிசனை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த அந்த மனுவிலே இருக்கிற ஒரு வாசகத்தை மட்டும் நான் இங்கே படிக்கிறேன். 'அவன் லாக்கப் ரூமிலே கொண்டியிலே தொங்கிக் கொண்டு இருந்ததாகவும் என்னிடத்திலே சொன்னார்கள். நான் பார்க்கும்போது, வேட்டியை கழுத்திலே கட்டி, பிணமாகத் தரையிலே மல்லாந்து கிடந்தான், கழுத்திலே சுருக்கு இருந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை. கொண்டியினுடைய உயரம் தரையிலேயிருந்து 4 அடி உயரம் தான். என் மகனுடைய உயரமோ, 5-3/4 அடி இருக்கும். இந்த உயரத்தில் கொண்டியிலேயிருந்து ஒரு ஆள் எப்படி தூக்கிலே தொங்க முடியும். அவனுடைய வேட்டியிலே ரத்தக் கறை இருந்தது. அவனுடைய ஆண்குறியிலே ரத்தம் கசிந்து இருந்தது. நான் பார்த்தேன். அவன் எப்போதும் அன்-டிராயர் அணிந்து இருக்கக்கூடியவன். ஆனால்

அன்றைக்கு அவனுடைய உடலிலே அன்-டிராயர் இல்லை.
ஆகவே, என்னுடைய மகனை அடித்துக் கொன்றுவிட்டார்கள்
என்று நான் உறுதியாக கூறுகிறேன் என்று படிப்பு அறிவு இல்லாத
அந்தத் தாயார், மகனை இழந்து விட்டு வேதனையாக உள்ள
அந்தச் சூழ்நிலையிலே கூட உண்மையான நிலையை நேரிலே
பார்த்ததன் காரணமாக அரசுக்கு ஒரு மனுவின் மூலமாக நேரடி
யாகத் தெரிவித்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒத்திவைப்புத் தீர்
மானம். இதிலே விளக்கமாகப் பேச முடியாது. இது எப்படி
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து
இரண்டு வார்த்தையிலே சொல்லி முடிக்க வேண்டும். அமைச்சர்
அவர்கள்தான் விளக்கமாக இதற்கு பதில் சொல்வார்கள். (குறுக்
கீடு). இதிலே விளக்கமாகப் பேசுவது என்பது இயலாது. இதில்
நீதிமன்றத்திற்குப் போகக்கூடிய பல பிரச்சினைகள் எல்லாம்
இருக்கின்றன. நீங்கள் ஒரு வழக்கறிஞர். உங்களுக்குத் தெரி
யும். இதிலே அதிகமாகப் பேச முடியாது. (குறுக்கீடு). சபை
யினுடைய நேரத்தை வீணாக்குவது யார்? நானா? I am not
responsible. (குறுக்கீடு). மேலும் அவையில் இல்லாத
ஒருவரைப் பற்றி பேசுவதை நான் அனுமதிக்கமாட்டேன். வெளி
யிலே இருப்பவரைப் பற்றி பேசக்கூடாது. தயவு செய்து உட்
காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடையத்
தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய இந்திரா காங்கிரஸ்
உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப்
போல, அவர்களுடைய ஊரான தென்காசிக்குப் பக்கத்திலே
உள்ள பாவூர் சத்திரத்திலே உள்ளவர், போலீஸ் காவல் நிலை
யத்தில் 12–4–1986 அன்று சிலையைத் திருடினார் என்ற குற்றம்
சுமத்தப்பட்டு, காவல் துறையைச் சேர்ந்தவர்களால், அழைத்து
வரப்பட்டு அவர்கள் திடீரென்று மர்மான முறையிலே மரணம்
அடைந்திருக்கிறார்கள். இந்த மரணம் கொலைதான், அடித்து
தான் கொன்றிருக்கிறார்கள் என்பதற்கு, அதை நம்புவதற்குப்
போதுமான ஆதாரங்கள் தெளிவாக இருக்கின்றன. ஆனால்,
அதே நேரத்தில் காவலில் இருந்த, போலீஸ் லாக்கப்பிலே இருந்த
அந்தச் சின்னச்சாமி என்ற சகோதரர், மரணம் அடைந்த நேரத்
திலே, கொல்லப்பட்ட நேரத்திலே, கொடுமைகளுக்கு உள்ளாக்கப்
பட்டு கடைசியில் அவர்கள் இறந்துவிடுகிற நிலையில் அவர்கள்
அந்தக் காவல் துறையிலே இருக்கக்கூடிய அந்த அறையிலே
தூக்கிலே தொங்கி தற்கொலை செய்து
கொண்டார் என்று வழக்கம் போல், காவல் துறையைச்
சேர்ந்தவர்கள் " இன்வென்டட் ரீசன் " வழக்கமாகச் சொல்
கிற அந்தக் காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் சொன்னதைப் போல



தொடர்ந்து போலீஸ் லாக்கப்பிலே சாகின்ற அத்தனை பேர்
களும் அது கிச்சிப்பாளையம் தெய்வயானையாக இருந்தாலும்,
திருவொற்றியூர் மணியாக இருந்தாலும், போலீஸ் தரப்பிலே
தற்கொலை செய்து கொண்டார்கள் என்று அவர்களை அடித்துக்
கொன்றுவிட்டு, காரணம் சொல்வது வழக்கமாக இருந்து வரு
கிறது. நஞ்சப்ப கமிஷனுடைய நீதி விசாரணையில் சொல்லி
யிருப்பதைப் போல, இந்தச் சம்பவத்தைப் பொறுத்தமட்டில்
தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னால், அது தவ
றானது, உண்மையிலேயே அடித்துக் கொன்றிருக்கிறார்கள், கற்
பழித்து இருக்கிறார்கள் என்று நஞ்சப்பனுடைய கமிஷன் ரிப்
போர்ட் சொல்லி இருக்கிறது. ஆகையினாலே, இது கொலை
தான், அடித்துத்தான் கொன்று இருக்கிறார்கள் என்பதை இந்த
நேரத்திலே உங்கள்மூலமாக அவையின்முன்னவர் அவர்களுடைய
கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்த போலீஸ் லாக்-
அப்பிலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியிலே தொடர்ந்து ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்டவர்கள்
கொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்ற கடுமையான குற்
றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். பீகாரிலே முதல
மைச்சராக இருந்த கர்பூரிதாகூர் அவர்கள், போலீஸ்காரர்கள்
இதுமாதிரி கொலை செய்வதற்கான, (குறுக்கீடு) --நான் என்ன
பேசுகிறேன் என்று ஹோமியோபதி டாக்டர் சமரசம் எனக்குச்
சொல்கிறார்—மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்
களே, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், இன்
றைக்கு போலீஸ் லாக்-அப்பிலே பலர் அடித்துக் கொல்லப்படுவது
தொடர்கதையாக, தொடரும் சம்பவமாக இருக்கிறது என்ப
தைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான், 200க்கும் மேற்பட்ட சம்
பவங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது என்பதைக் கோடிட்டு
காட்டுவதற்காகத்தான் சொல்கிறேன். தங்களுக்கே தெரியும்.
சட்டத்தை தங்கள் கையிலே போலீஸ்காரர்கள் எடுத்துக்கொள்
ளக் கூடாது. பில்லாவாக இருந்தாலும், ரெங்காவாக இருந்
தாலும், சமூக விரோதிகள், கொலைகாரர்கள் நீதிமன்றத்திலே
நிறுத்தப்பட்டு, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகுதான் தண்
டிக்கப்படுகிறார்கள். சோப்ராஜ்—மத்திய சிறைச்சாலையை
விட்டு ஓடினான். ஓடிவிட்டான் என்பதற்காக. அவனை போலீ
சார் துப்பாக்கி எடுத்து சுட்டுவிட முடியாது. காரணம் தண்
டனை கொடுக்கின்ற அதிகாரம் காவல்துறையினருக்குக் கிடை
யாது. முறைப்படி விசாரிக்கப்பட்டு நீதிமன்றம் அவர்கள் குற்ற
வாளிகளாக இருந்து, நிரூபிக்கப்பட்டால்தான் தண்டனை வழங்க
வேண்டும். எனவே, தண்டனை வழங்குகின்ற அதிகாரத்தை
காவல் துறை எடுத்துக்கொள்ளுமேயானால், நீதிமன்றமே தேவை
யில்லை. ஜுடிசியரி அவசியம் இல்லாமல் போய்விடும். இங்கே
இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் தங்களுக்கு யாரைப் பிடிக்க
வில்லையோ—அமைச்சரைக்கூட பிடிக்கவில்லை, ஏதாவது தப்பு
செய்து விட்டார் என்ற காரணத்தால் சுட்டுப் பொசுக்கிவிட்டுப்

போய் விடலாம், பாதுகாப்புக்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்ற தைரியம் வந்துவிடும். ஆகையால் நான் சொல்கிறேன், பீகார் முதலமைச்சர் கர்பூரிதாகூர் (குறுக்கீடு) ஒத்திவைப்பில் தலையிடக் கூடாது என்று விதி இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தலையிடக் கூடாது என்பதற்காக தகாத பதங்களையெல்லாம் சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கிட வேண்டிய பிரச்சனையோ அல்லது நிலையோ உருவானால் குறுக்கிடாமல் எப்படி இருக்க முடியும்? (குறுக்கீடு) அது பிரச்சனையைப் பொறுத்தது. (குறுக்கீடு) நீங்கள் விவாதங்கள் ஒவ்வொன்றிலும் குறுக்கிடவா?

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஆளும்கட்சியைச் சார்ந்தவர்கள் குறுக்கிடலாம், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் குறுக்கிடக்கூடாது. இது புது விதி. ஆகவே, சபாநாயகர் அவர்களே (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொன்றுக்கும் இப்படிச் சொன்னால் இதற்கு மேலே என்ன செய்ய முடியும். (கூச்சல், குழப்பம்).

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் என்ன விதிமுறைகள், இதிலே எல்லாவற்றையும் சொல்லலாமா? அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தில்......(குறுக்கீடு).

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேங்கடரமணன் அவர்கள், சின்னசாமி நாடார் என்று சொன்னார். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அவர் சின்னசாமி இல்லை; ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர் என்று சொல்லியிருக்கிறார் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் கொடுக்கப்பட்டதிலும் சின்னசாமி நாடார் என்றுதான் இருக்கிறது. யாரோ ஒரு தமிழன், அவ்வளவுதான்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அவர்களுடைய ஜாதியைப் பொறுத்தமட்டில் சப்ஜெக்ட் டு கரெக்ஷன்ஸ், ஜாதியை மட்டும் மாற்றிக்கொள்ளலாம். ஆக எந்த ஜாதியாக இருந்தாலும் மனித நீதி ஒன்றுதான். ஒரு நாயைக் கொல்லக்கூட இந்த நாட்டிலே யாருக்கும் அதிகாரம்



கிடையாது என்ற நிலைமை இருக்கிறபோது காவல்துறையைச் சார்ந்தவர்கள் இந்த மாதிரி காரியங்களில் ஈடுபட்டு காவல்துறையில், செல்லுக்குள்ளே இது மாதிரி சம்பவங்கள் நடைபெற்றிருப்பதை நம்புவதற்குப் போதுமான காரணம் இருக்கிறது. அதனால்தான் சொல்ல வருகிறேன். பீகாரினுடைய முதலமைச்சராக இருந்த கர்ப்பூரித் தாகூர் அவர்கள் தனி நபர் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டால் 302 செக்ஷன் போடலாம் ஆனால், போலீஸ்காரர்கள் இதுமாதிரி தப்பு செய்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. அவர்கள் மீதும் 302 போடலாம் என்று சொன்னால், கொலைக் குற்ற வழக்கு போட வேண்டும் என்று சொன்னால், கோர்ட்டிலே வேண்டுமென்றே அடித்துக் கொன்றுவிட்டார்கள்என்பது நிரூபணம் ஆகிவிட்டால் போலீஸ்காரர்கள் பயப்படுவார்கள். போலீஸ் அதிகாரிகளும், பயப்படுவார்கள். அவர்களும் தூக்கு மேடையை சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஏன், ராஜன் வழக்கில் இது மாதிரி வழக்கு போடப்பட்டிருக்கிறது. பருகூர் சிறையிலே, கைதிகளின் கண்களைக் குருடாக்கிய அதிகாரிகள் மீது போடப்பட்டிருக்கிறது. இந்த போலீஸ் லாக்-அப்பைப் பொறுத்தவரையில் அநியாயமான கொலை நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த அரசாங்க அதிகாரிகள் நியமிக்க இருக்கிற அறிக்கையின் அடிப்படையிலே கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார்கள். அது குறித்து ஒரு நீதி விசாரணை அவசியம் தேவை. காரணம் சாதாரணமாக அரசாங்கத்தினுடைய சார்பிலே, அரசாங்கத்திற்கு உட்பட்ட அதிகாரிகள் விசாரணை, அதாவது ஆர்.டி.ஓ., விசாரணை டி.ஆர்.ஓ. விசாரணை போட்டு விடுவார்களேயரனால் நியாயங்கள் சரியாக கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அரசாங்கத்தின் தயவை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ''இன்டிபென்டண்ட் ஜூடிசியரி''—ஒரு தன்னிச்சையான நீதிபதியைப் போட்டால்தான் சுதந்திரமாக, பால் கமிஷனைப்போல, நஞ்சப்பன் கமிஷன் இப்போது தீர்ப்பு கொடுத்திருப்பதைப் போல, இது மாதிரி, உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரச் செய்ய முடியும். இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா, அந்த கமிஷனுக்கு ஒரு கமிஷன் ரிப்போர்ட் வைக்கிறதா அல்லது நீதிக்கு தலை வணங்குகிறதா என்பதெல்லாம் வேறு விவகாரம்.

(முற்பகல் 11-10)

நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு ஒரு (independant J dicial enqu ry) அவசியமாக அமைக்கப்பட்டு ஆக வேண்டும். இன்னும் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு சபாநாயகர்

அவர்களே, இது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும் தயவு செய்து நீங்கள் தான் தீர்ப்புத் தரவேண்டும். இப்போது நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்து இருக்கக் கூடிய தகவலின்படி பதில் சொல்லப்போகிறார்கள். நாங்கள் ஆர்.டி.ஓ. விசாரணை ; ஏதோ ஒரு விசாரணை போட்டு இருக்கிறோம் என்று சொல்லப்போகிறார்கள். ஆனால் உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், இந்த Police lock-up death விசாரணை நடைபெற்று (குறுக்கீடு) நான் சப்ஜெக்ட்டில் தான் பேசுகிறேன். முடிவு வருகிறது. அரசுக்கு அறிக்கை தரப்படுகிறது. அந்த அறிக்கையின் மீது நடவடிக்கைகள் எடுப்பதும், எடுக்காததும் அரசினுடைய உரிமையாக இருக்கலாம். ஆனால் நியாயம் பேசுகிற ஒரு சர்க்கார் ; நீதி பேசுகிற ஒரு சர்க்கார் ; இன்றைக்கு இது போன்ற ரிப்போர்ட் வந்த பிறகும் கொலை தான் தற்கொலை அல்ல போலீசார்கள் தப்பு செய்து இருக்கிறார்கள் ; கற்பழித்து இருக்கிறார்கள் என்று நீதிபதி நஞ்சப்பன் கமிஷன் ரிப்போர்ட்டில் கொடுத்த பிறகும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நான் மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் ; * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடைசியில் பேசியவற்றை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே பாவூர்சத்திரத்திற்கு அருகில் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இருவர் கொண்டு வந்து அதைப்பற்றி பேசினார்கள். ஆகவே, காவல் நிலையத்தில் இருக்கிற கைதிகள் எல்லாம் கொல்லப்படுகிறார்கள் என்றும் ; அதையே இந்த அரசு தொடர்ந்து கொள்கையாக கொண்டிருக்கிறது என்றும், வழக்கம்போல மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் தங்களுடைய பாணிக்கு ஏற்ப எடுத்துச் சொன்னார்கள். ஆக யாரையும் கொல்ல வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கமும் அல்ல, யாரையும் எந்த அதிகாரியையும் காப்பற்ற வேண்டும் என்ற கடப்பாடும் இந்த அரசுக்கு இல்லை. ஆனால் சில பலயிடங்களில் எதிர்பாராத வகையில் நாம் விரும்பத்தகாத குற்றங்கள் நிகழ்ந்து விடுகின்றன. அதற்கு ஏற்ற தண்டனைகள் வழங்கப்படுகின்றன. சிறைச்சாலைகளில் இறந்துப்பட்டவர்கள் மாரடைப்பின் காரணமாக இறந்து பட்டு இருக்கிறார்கள்; தற்கொலை செய்து கொண்டும் இறந்து இருக்கிறார்கள். காவலர்களால் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டும் இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அப்படிப்பட்ட வகைகளில் பல காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். வேறு வாய்ப்பு ஏற்படுகிறபோது, காவல்துறை மானியம் வருகிறபோது அதைப்பற்றிய புள்ளிவிவரங்களை எல்லாம் யார் யார்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரங்களை எல்லாம் பின்னால் சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இங்கே அதிகாரிகள், மற்றவர்கள் அரசுத் துறையில் கொடுக்கின்ற இருக்கின்ற நிலைமைகளை இந்த அவைக்கு தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் அவர்களுக்குத் தந்த தகவலை வைத்துக்கொண்டு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே நாங்கள் 3 பேரும் ஐ விட்னஸ் கிடையாது. ஆகவே இருக்கின்ற தகவலை வைத்துக்கொண்டு தான் நாம் இருக்கின்ற நிலைமைகளை உணரவும் வேண்டும். ஆகவே இருக்கிற நிலைமை வந்து இருக்கிறது என்பதை மட்டும் எடுத்து தெரிவிக்க விரும்புகிறேன்.

**அருணாபேரி கிராமம் பாவூர்சத்திரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 12—4—1986 அன்று இரவு 8-30 மணிக்கு கீழப்பாவூர் சுடலையாண்டி நாடார் மகன் சின்னசாமி (வயது-28) அருணாபேரி கிராமத்தில் மேகம் திரண்ட சாஸ்தா கோவிலில் இருந்து சுமார் 200 ரூபாய் மதிப்புள்ள நாகர் கற்சிலையை திருடியுள்ளதாகவும், அச்சிலையை தன் சைக்கிள் கேரியரில் ஒரு கோணிப்பைக்குள் வைத்துச்செல்லும்போது அருணாபேரி கிராமத்தைச்சேர்ந்த சிவன் அணைந்த பெருமாள் நாடார், சுடலையாண்டி நாடார் ஆகியோர் சின்னச்சாமியை கையும் களவுமாக பிடித்து மேற்படி கோவில் தக்கார் ராமா நாடார் மற்றும் பொருளாளர் சின்னக்கனி நாடாருக்கும் தகவல் கொடுத்து அவர்களையும் அழைத்துக் கொண்டு பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு இரவு 9 மணியளவில் சென்று உதவி ஆய்வாளர் சித்திரைகுகன் முன்பு சின்னச்சாமியையும், களவாடப்பட்ட சிலையையும், இதர பொருட்களையும் ஆஜர்படுத்தி புகார் கொடுத்தனர் என்றும், அப்புகாரைப் பெற்று பாவூர்சத்திரம் காவல் நிலைய குற்ற எண். 77/86 பிரிவு 379 இ.பி.கோ. வழக்கு பதிவு செய்து, சின்னச்சாமியை கைது செய்து பரிசோதனைக்குப் பின் பாரா காவலர் 2535 கருப்பசாமியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாகவும் 13—4—1986 அன்று காலை 6 மணிக்கு மேற்படி காவலர் பார்க்கும்போது லாக்கப்பில் சின்னச்சாமி தன் கழுத்தில் வேட்டியால் சுருக்கு மாட்டி தற்கொலை செய்து தொங்கிய நிலையில் உள்ளதை பார்த்ததாகவும் அக்காவலர் கொடுத்த தகவலின் பேரில் பாவூர் சத்திரம் உதவி ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண். 78/86, பிரிவு 174 இ.பி.கோ. படி வழக்கு பதிவு செய்து**

துரித முதலறிக்கையை திருநெல்வேலி கோட்டாட்சியர் பொறுப்பில் இருக்கும் மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களுக்கு அனுப்பியதாகவும், திருநெல்வேலி (கிழக்கு) காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி உதவி ஆட்சியர் (பொறுப்பு) பாலூர்சத்திரம் காவல்நிலையம் சென்று தற்கொலை செய்து கொண்ட சின்னசாமியின் பிரேதத்தின் மேல் தென்காசி வட்டாட்சியர் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தினார். இறந்தவரின் உடலில் வெளிக் காயங்கள் ஏதுமில்லையென்றும் கழுத்தைச் சுற்றியுள்ள வேட்டியால் தூக்கிலிட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனவும் பஞ்சாயத்தார்கள் கருத்துத் தெரிவித்ததாக திருநெல்வேலி துணை ஆட்சியர் (பொறுப்பு) கூறியுள்ளார். பிரேதப் பரிசோதனை அறிக்கை மற்றும் இரசாயன பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர்தான் இறப்புக்கான சரியான காரணம் புலப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். பிரேத விசாரணைக்குப் பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக பிரேதம் அனுப்பி வைக்கப்பட்டது.

பிரேத விசாரணையின்போது திருமதி மாரியம்மாள் (இறந்து போன சின்னச்சாமியின் தாயார்) திருநெல்வேலி உதவி ஆட்சியரிடம் ஒரு புகார் மனு கொடுத்துள்ளார். அப்புகார் மனுவில், தன் மகன் காவலர்களால் அடித்து சாகடிக்கப்பட்டதாகவும், தூக்கிலிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ளவில்லை எனவும் கூறியுள்ளார். இதே புகாரை திரு. பொன்னுசாமி (சின்னசாமியின் சகோதரர்) யும் தன்னிடம் கூறியதாக உதவி ஆட்சியர் கூறியுள்ளார்.

பாலூர்சத்திரம் காவல் நிலைய லாக்கப்பில் உட்புறமாக 4 கீல்கள் சுவரில் பொருத்தப்பட்டுள்ளன. நிலையுடன் கதவினை இணைக்கும் மேல்புற கீல் தரையிலிருந்து 5 அடி உயரத்தில் இருப்பதாகவும், ஆனால் 5 அடி 8 அங்குல நீளமுள்ள இறந்துபோன சின்னச்சாமி என்பவர் மேற்கூறிய 5 அடி நீளமுள்ள கீலில் எவ்வாறு தூக்கிலிட்டுக்கொண்டு இறந்திருக்க இயலும் என்பது சந்தேகமாக இருக்கிறது என உதவி ஆட்சியர் கூறியுள்ளார். மேலும் கயிற்றிலிருந்து ஒரு சென்டிமீட்டர் கூட நீளமில்லாத கிளாம்பில் எவ்வாறு சுருக்கிட்டுக்கொண்டு வேட்டியை கட்ட முடியும் என்பது ஐயமாக இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

ஆக மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் கூறியதுபோன்று திட்டவட்டமாக தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அதிகாரிகள் கூறவில்லை; அந்த ரிப்போர்ட் அப்படி இருந்தாலுங்கூட, மாவட்ட உதவி ஆட்சியரும், மாவட்ட





ஆட்சியரும் கூறியிருப்பது சந்தேகத்திற்கு இடமிருக்கிறது என்று சொல்லி, அது விசாரணைக்குப் பிறகு முழுவதும் தெரியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முழு விவரங்களையும் உண்மைகளையும் தெரிவிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட உதவி ஆட்சியருக்கும் அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. முழு உண்மை வரவேண்டும். உண்மை வந்த பிறகு, யார் யார் அதற்குக் காரணமோ, அவர்கள் மீது கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும். கண் துடைக்க வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, உண்மையில் குற்றவாளிகள் இருக்கிறவர்களுக்கு தண்டனை அளித்தால்தான், நியாயம், நீதி சுமுகமாக நிலைநாட்டப்படமுடியும் என்று அரசு எண்ணுகிறது. ஆகவே அவர்களை தண்டிக்கக்கூடிய அளவிற்கு அவர்களை வேலையில்லாமல் வீட்டிற்கு அனுப்புவதோ அல்லது வேறு பலவிதமான தண்டனைகளை கொடுப்பதோ போன்ற அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று மாவட்ட உதவி ஆட்சியர், ஒரு பொறுப்பான அதிகாரி அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார்கள். அது போதாது என்று அதற்கு மேலாக நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அவர்கள் சொல்வது போன்று, பின்னர் அது பற்றி நாம் யோசிக்கலாம். இதுகுறித்து மாவட்ட உதவி ஆட்சியர் காவல் நிலைய ஆணை எண். 145-ன் கீழ் விசாரணை நடத்த பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப் பிறகு யாரையும் விட்டுவிடுவதாக இல்லை. அவர்கள் சொன்னமாதிரி சேலம் பஞ்சாயத்து அறிக்கையினுடைய விளைவு என்னவாயிற்று என்றும், எந்த நிலையில் இருக்கிறது என்றும் வேண்டுமானால் பின்னர் வாய்ப்பு வரும்போது அதுபற்றி சொல்கிறேன். அந்த அறிக்கை சொல்கின்ற அடிப்படையில் அவர்கள் குற்றம் செய்திருந்தால், அதற்கு யார் காரணமாக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது தான் இந்த அரசினுடைய நோக்கம். தண்டனை கொடுக்கப்படவேண்டுமென்பது அரசினுடைய எண்ணம். ஆகவே அது பற்றி முழு அறிக்கை வந்ததற்குப் பிறகு, உன்னிப்பாகவும், கவனிப்பாகவும் இருந்து, நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த அளவோடு இந்தக் கருத்தை தெரிவிக்கின்ற வகையிலே இந்த மருத்துவத்துறை அறிக்கை வந்த பிறகு, அந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மை நோய் பரவி வருவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(முற்பகல் 11-20)

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டத்தில், குறிப்பாக தஞ்சாவூர் நகரில் இளஞ்சிறார் முதல் பெரியோர் வரை பலருக்கு அம்மை நோய் கண்டு அவதிப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறிப்பாக தஞ்சாவூர் நகரில் இளஞ்சிறார் முதல் பெரியோர் வரை பலருக்கும் அம்மை நோய் கண்டு அவதிப்படுவதாக கூறுவது முற்றிலும் உண்மையல்ல. பெரியம்மை (small pox) நோய் இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டது என்று ஏற்கனெவே உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) அறிவித்துள்ளது. எனவே அந்த நோய் எவருக்கும் தோன்ற வாய்ப்பு இல்லை. தஞ்சாவூரில் மொத்தமாக 45 நபர்கள் மட்டும் சனவரி 1986 முதல் பிப்ரவரி 1986 வரை தட்டம்மை (Measles) நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இந்நோயினை குணப்படுத்த போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், இந்நோய் மேலும் பரவாமல் இருக்க எல்லா தடுப்பு நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் பொது சுகாதார மற்றும் தடுப்பு மருந்துவத்துறை இயக்குநர் அளித்துள்ள அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. தற்சமயம் தஞ்சாவூரில் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் இத்தட்டம்மை நோய் பரவுதலை தடுப்பதற்காக, 1986–87-ம் ஆண்டின் மைய அரசு உதவியுடன், ஒரு வயதுக்குட்பட்ட மொத்தம் பத்து இலட்சம் குழந்தைகளுக்கு



தட்டம்மை தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக 1–4–1986 முதல் தமிழ்நாட்டில், மாவட்டந்தோறும், தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்பட்டு அவைகள் மூலம், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பெரிய அம்மை பெருகவில்லை, தட்டம்மை 45 பேர்களுக்கு 1986 பிப்ரவரியில் ஏற்பட்டதாகவும் அதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்த கோடை காலத்திலே பெரிய அளவில் தஞ்சை நகர் மட்டுமல்ல, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் உள்ள எல்லா கிராமங்களிலும் குழந்தைகளும் பெரியவர்களும் தட்டம்மைக்கு ஆளாகி சிரமப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அறிக்கையிலே விவரமாகக் கூறியிருக்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 பேர்களுக்கும், பிப்ரவரி மாதத்தில் 27 பேர்களுக்கும் மார்ச் மாதத்தில் 49 பேர்களுக்கும் ஆக மொத்தம் 94 பேர்களுக்கு இந்த வியாதி வந்தது. அதிலே யாரும் இறந்து போகவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது நல்ல கருத்து. அதற்கான தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தட்டம்மைக்குத் தேவையான வேக்சின்களை மத்திய அரசிடம் நாம் வாங்கினோம். 1983–84 ஆம் ஆண்டிலே 6 லட்சம் குழந்தைகளுக்கு வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், ஆகிய மாவட்டங்களில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன. 1984–85 இல் 4 லட்சம் பேர்களுக்கு மதுரை மாவட்டத்திலே, 1.5 லட்சம், சேலம் மாவட்டத்திலே 1½ லட்சம், தென் ஆற்காடு மாவட்டத்திலே 1 லட்சம் குழந்தைகளுக்கு போடப்பட்டது. Measles vaccine களுக்காக International Rotary Club சங்கத்தினுடைய உதவி வாங்கப்பட்டது. அவர்கள் Measles vaccine நம்மிடம் கொடுத்தார்கள். நாம் மத்திய அரசிடமிருந்து Measles vaccine நிறைய கொடுக்க வேண்டுமென்று வாதிட்டுக் கொண்டிருக்கிறோம். முதலிலே 10 லட்சம் குழந்தைகளுக்கு all most covering the major portion of the State இந்த மாநிலம் முழுமைக்கும் ஓரளவுக்கு 75 சதவீதம் கிடைக்கும் என்ற வகையிலே கொடுத்தார்கள். ஆனால் உடனடியாக நான் நம்முடைய நல்வாழ்வுத் துறைச் செயலாளர் அவர்களை டெல்லிக்கு அனுப்பி நான்கு நாட்களுக்கு முன்பாக மத்திய அரசு அமைச்சர் அவர்கள் 13 லட்சம் குழந்தைகளுக்கு Measles vaccine தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். கூடுதலாக 2 லட்சம்

நமக்குத் தேவைப்படுகிறது. நாம் கேட்டதற்கு கொடுப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்சினையின் மூலமாக எனக்கு இதை விளக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 1986–87 ஆம் ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் என்ன விரும்புகிறாரோ அதுமாதிரியாக 13 லட்சம் குழந்தைகளுக்கு தமிழகத்திலே Measles vaccine தரப்படும். அந்த வகையிலே தஞ்சையிலே அத்தனை குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போடப்படும்.

**திரு. எம். செல்லமுத்து :** தலைவர் அவர்களே, இந்த அம்மை நோய் என்பதை கிராமத்திலே இருக்கிற பெரும்பாலோர் வியாதியாகக் கருதாமல் ஏதோ தெய்வச் செயலால் வருகிறது என்று நம்புகிறார்கள். அது நோய் என்பதை மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக ஊழியர்களை போட்டு அல்லது செய்திப் படங்களை ஏற்பாடு செய்வதற்கோ அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருப்பதுபோல் அதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அந்த அந்த இடத்திலே பிரச்சாரம் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் மூலமாக துண்டுப் பிரசுரங்களைப் போட்டு அதைச் சொல்லிக் கொண்டு வருகிறோம். தென் ஆற்காடு மாவட்டத்திலே இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு ஹெல்த் எஜிகேஷன் என்ற முறையிலே பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த முறையிலே விரிவாகப் பிரச்சாரம் செய்வது அவசியம். அந்த வகையிலே இந்த அரசு எல்லா நடவடிக்கையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) தமிழ்நாட்டில் இருந்து தேங்காய் மட்டைகளை அனுமதியின்றி கேரளத்திற்குக் கடத்துவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் மா. மணிமாறன், செ. செம்மலை, ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் சுமார் 150 டன் தேங்காய் நார் தினமும் கேரள மாநிலத்திற்கு தடையை மீறி கொண்டு செல்லப்படுவதால், நார் தட்டுப்பாட்டின் காரணமாக தமிழ்நாட்டில் கயிறு உற்பத்தித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதோடு அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு வருவதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

அரசாணை எண். 736, தொழில் நாள்: 20–7–78-ல் தேங்காய் மட்டைகள், அத்தியாவசியமான பொருள் என தீர்மானம் செய்து, தமிழ்நாடு அத்தியாவசிய பொருள்கள் கட்டுப்பாட்டு சட்டம் 1949-ன் கீழ் தேங்காய் மட்டைகளை திருநெல்வேலி மாவட்டத்தை விட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல மாவட்ட ஆட்சி தலைவரின் அதிகார வரம்பிற்குள் முறைப்படுத்தப்பட்டது. மேற்கண்ட ஆணையின் குறிக்கோள், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து, தேங்காய் மட்டைகளை அண்டை மாநிலமான கேரளா மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதை கட்டுப்படுத்தி தமிழ்நாட்டில் இயங்கிவரும் தொழில் நிறுவனங்களுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க வழி வகுப்பதாகும்.

இதன் விளைவாக குமரி மாவட்டத்தில் உண்மையிலேயே தேங்காய் மட்டைகளை உபயோகிப்போருக்கு அண்டை மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலிருந்து தேங்காய் மட்டைகளை குமரி மாவட்டத்திற்கு நெல்லை மாவட்டத்தின் வழியாக எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, தேங்காய் மட்டைகளை கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே, தேங்காய் மட்டைகளை நெல்லை மாவட்டத்திலிருந்து எடுத்துச்செல்லும் கட்டுப்பாட்டினை தளர்த்துவது சம்பந்தமாக அரசு ஆராய்ந்து கயிறு தொழில் திட்டமிட்டபடி முறையாக வளர தேங்காய் மட்டைகள் தமிழ்நாடு முழுவதும் நியாய விலைக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிற்குள் தேங்காய் மட்டைகளையும் நாரையும் எந்த தடங்களுமின்றி எடுத்துச் செல்வதற்கு ஆணையிட்டு வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகள் அரசு ஆணை எண். 461, தொழில் துறை, நாள்: 18–5–85-ல் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு தமிழ்நாட்டை விட்டு பிற மாநிலங்களுக்கு தேங்காய் மட்டைகளையும் நாரையும் எடுத்துச் செல்வதை வரையறை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசு இந்த ஆணை வெளியிட்ட பிறகு மாநிலத்திலுள்ள கயிறு தொழிற்சாலைகளுக்கு போதுமான அளவுக்கு தேங்காய் மட்டைகள் நார் கிடைக்கின்றன என்று தோன்றுகிறது. அதனால் கயிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, என்ற கருத்து ஏற்று கொள்ளத்தக்கதல்ல.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கயிறு உற்பத்தியாளர்கள் சங்கம் கோயம்புத்தூர் தேங்காய் நார் தொழில் சங்கம் மற்றும் சக்தி பைபர் புராடக்ட்ஸ், பொள்ளாச்சி தேங்காய் மட்டைகள் மீது கொண்டு வரப்பட்ட கட்டுப்பாட்டினை வரவேற்றுள்ளது. அதே நேரத்தில் தென்னை நாருக்கு தமிழ்நாட்டில் சந்தை வாய்ப்பு திருப்திகரமாக இல்லாததால் தேங்காய் நாரினை மட்டும் வெளி மாநிலங்களுக்கு எடுத்து செல்ல மேற்கண்ட ஆணையிலுள்ள கட்டுப்பாட்டினை நீக்க வேண்டியுள்ளன.

எவ்வாறிருப்பினும் மேற்சொன்ன அரசு ஆணையை அரசு கவனத்துடன் அமல்படுத்தி வருகிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் நாரை பொறுத்தவரையில் அது வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித் தருகின்ற பொருளாக இருந்துகொண்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள், கிராமப்புறங்களில்' உள்ள தேங்காய் நாரை வாங்கி வெளி மாநிலங்களுக்கு கள்ளத்தனமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத் தமிழ்நாட்டில் அதற்குத் தட்டுப்பாடு இருக்கிறது. தமிழ்நாட்டில் தென்னை வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு வளர்த்தால் இனிஎதிர்காலத்திலே வெளி நாட்டு செலாவணியை அதிகமாக ஈட்டி தருகின்ற பொருளாக தேங்காய் நார் இருக்கிறது. அந்தப் பொருளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதற்கு அனுமதி கொடுத்தால் இங்கே உள்ள தென்னை உற்பத்தியாளர்களுக்கு அது பயனைத் தரும். இப்பொழுது குடிசைதொழிலாகிய நாரைப் பயன்படுத்தி கயிறு திரிக்கும் வேலை கிடைப்பதில் தட்டுப்பாடாக இருக்கிறது. ஆகவே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்தால் தென்னை உற்பத்தியாளர்களுக்கு மிகுந்த பயனைத் தரும். இந்தத் தேங்காய் நாரைப் பொறுத்தவரையில் அரசே கொள்முதல் செய்து, கோட்டா பிரித்துக் கொடுத்துச் செய்தால் இந்த தொழிலை ஊக்குவிக்க முடியும். வெளிநாட்டுச் செலாவணியை நம் மாநிலத்தில் ஈட்டுவதற்கும் அது உதவியாக இருக்கும். அதற்கு நம்முடைய மாநிலத்தில் அக்கறை காட்டாத காரணத்தால், அண்டை மாநிலங்களில் உள்ளவர்கள் அக்கறை காட்டி அந்நியச் செலாவணியை ஈட்டி இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு இதில் அக்கறை காட்டி, தேங்காய் நாரிலிருந்து கயிறு திரிக்கின்ற தொழிலாளர்களுக்குப் பயன்கிடைக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக நெல்லை மாவட்டத்தில் உள்ள தேங்காய் நார் வெளி மாவட்டங்களுக்கு, கேரள மாநிலத்திற்குப் போகிறது, அதை தடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்காகத்தான் 1978ஆம் ஆண்டிலே அரசு





ஆணை போடப்பட்டு, வேறு எந்த மாவட்டத்திற்கும் கடத்தக் கூடாது என்ற தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு கன்னியாகுமரியிலுள்ள கயிறு உற்பத்தியாளர்கள், தேங்காய் நார் உற்பத்தியாளர்கள் எல்லாம் மீண்டும் அரசை வற்புறுத்தி ஒரு உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். அதன்மூலமாக எல்லா மாவட்டங்களுக்கும், எந்த நேரத்திலேயும் எடுத்துச் செல்லலாம்; ஆனால் மாநிலத்திற்கு வெளியிலே கேரளாவுக்கோ, ஏனைய மாநிலங்களுக்கோ கொண்டு செல்வதை தடுக்க வேண்டுமென்று அரசாணை எண் 461-இன்படி 1985ஆம் ஆண்டில் உத்தரவு இடப்பட்டது. எனவே இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் நாரை அடுத்த மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்ற வகையில் போடப்பட்ட அரசாணை கவனத்துடன் அமல் நடத்தப்படுகிறது என்று அமைச்சரவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும், இன்றைக்குள்ள நிலைமை என்னவென்றால், திருட்டுத்தனமாகக் கேரளா மாநிலத்தில் உள்ள நார்த் தட்டுப்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிருந்து அங்கு கொண்டு செல்லப்படுகிறது என்பதுதான். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், எல்லையோரப் பகுதிகளில் இருக்கின்ற செக்போஸ்டுகளைப் பலப்படுத்தி, மிகவும் கண்காணிப்போடு இருந்து அங்கே கொண்டு செல்வதைத் தடுத்து ஆகவேண்டும் என்பது ஒன்று. அடுத்து. இங்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். சில நிறுவனங்கள் இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமானால், அதனால் வருகின்ற ஆபத்து என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால், ஒரு சில நிறுவனங்கள் வேண்டுமானால் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு சென்று இலாபம் சம்பாதிக்கலாமே ஒழிய உள்ளபடியே கயிறு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இங்கே அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சொன்னதை போல, இங்கே உற்பத்தியாகின்ற கயிறுக்கு வெளிநாடுகளிலே நல்ல கிராக்கி இருக்கிறது; இந்த நார் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற முறையில் இருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் அந்த நாரை இங்கேயே பயன்படுத்தி, இங்கேயே கயிறு தயாரித்து, அந்தக் கயிற்றின் மூலம் அன்னியச் செலாவணியைப் பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தால் அந்தக் கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர முடியும். அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு வேளை தமிழ்நாட்டிலே இந்த நாரின் விலை குறைவாக போகுமேயானால்—ஏனென்றால்

[திரு. செ. செம்மலை] [1986 ஏப்ரல் 24

தமிழ்நாட்டில் உற்பத்தி அதிகமாக இருப்பதால் விலை குறைவாகப் போகுமேயானால்—அதற்கு நியாயமான விலையை நிர்ணயித்து, குறைந்த விலைக்கு கொண்டு செல்லாத அளவிற்குச் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. அனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் இரண்டு விவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். ஒன்று, தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுப்பது. மற்றொன்று, அந்தத் தேங்காய் நாரை வாங்கிக் கயிறு திரித்து, பல பொருள்களை செய்து, வெளியிலே விற்பது. இன்றைக்குத் தேங்காய் நாரைப் பொறுத்தமட்டில் எல்லா மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலே குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற பகுதிகளிலே, மிக அதிகமாகத் தேங்காய் நாரை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்திச் செய்கின்ற அந்தத் தேங்காய் நாருக்கு இப்போழுது போடப்பட்டிருக்கிற தடைச் சட்டத்தின் மூலமாக, விலை குறைந்துவிட்டதாக அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். இதிலே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயிறு உற்பத்தியாளர் சங்கம், கோவை மாவட்டத்திலுள்ள தேங்காய் நார் உற்பத்தியாளர் சங்கம் (Sakthi Fibre Products) பொள்ளாச்சி தேங்காய் நார் தொழில் சங்கம், இப்படிப் பல கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் உள்ள கயிறு உற்பத்தியாளர் சங்கங்கள் எல்லாம், தேங்காய் நார் விலை ரூ. $4\frac{1}{2}$, ரூ. $4\frac{3}{4}$, ஒரு கிலோ விற்றது, இன்றைக்குத் தடைச் சட்டம் போட்டபிறகு, ரூ. $1\frac{1}{4}$, ரூ. $1\frac{1}{2}$, கூட கிடைக்க வழியில்லாமல் நாங்கள் தயார் செய்கின்ற தேங்காய் நார் விலை போகாமல் இருக்கிறது என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தாலும், இப்பொழுது இருக்கிற சட்டத்தை ஒழுங்காக இந்த அரசு அமுல்படுத்தி வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைக்கு வழியில்லை என்று தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று சொன்னதை இந்த அரசு ஏற்கும்.



1986 ஏப்ரல் 24]

## 5. அறிக்கை அளித்தல்.

### சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்ட விதிகள் ஆய்வு குழுவின் மூன்றாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 221-வது விதியின் கீழ், 1986–87-ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 229-வது விதியின் கீழ், 1986–87-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 237-வது விதியின் கீழ், 1986–87-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 253-வது விதியின் கீழ், 1986–87-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

## 7. அறிவிப்பு

பேரவை குழுக்கள்—தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தக் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1986ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



வேட்புத் தாள்கள் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1986 ஆம் ஆண்டு மே திங்கள் 2 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

## 8. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 47,89,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் துறை மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க தேவையான நிதி வசதி கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 47,89,44,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும் ''.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாசரேத் நகர பஞ்சாயத்து வெள்ளரிக்காயூரணி ஆதி திராவிட காலனிக்கு பாதை வசதியில்லாததால் பாதையமைத்து சாலை போட்டு கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ். என். இராமசாமி] [1986 ஏப்ரல் 24

" மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 47,89,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வி. ஆர். ஆர். காலனி, சேத்துப்பட்டு 83ஆவது வட்டத்தில் ஆதி திராவிட நலத்துறைக்குச் சொந்தமான இடத்தை அங்கு வசிப்பவர்களுக்கு பட்டா செய்து கொடுத்து வீடுகள் கட்டித்தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 47,89,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்க பெறுகின்ற ரூ. 47,89,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரமலைக்கள்ளர் வகுப்பினர், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளபடியால் அவர்களை இப்பிரிவின் கீழ் கொண்டுவந்து மேம்படுத்துவது சமபந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 47,89,44,000-ல்' ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை, விளக்கக் குறிப்பு* ஒன்று அச்சடிக்கப்பட்டு, அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு இறுதியில் என்னுடைய பதிலை தெரிவிக்கிறேன்.

* 458—490 ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1986 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்குபெற 14 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மணி 11–40 ஆகி விட்டது. ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். முதலில் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் பேசுவார்கள்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் ஒருசிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நான் 1980 ஆம் ஆண்டிலிருந்து இந்த சட்டமன்றத்தில் சொல்லிவருகிறேன். அரிசன மக்களுக்கு ஏதாவது ஒரு கமிட்டி போட்டு, 'ஸ்டேட் அரிசன் வெல்ஃபேர் கமிட்டி' என்று போட்டு, அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லிவருகிறேன். இத்தனை ஆண்டுகள் ஆனபின்னாலும் ஏனோ கமிட்டி போடாமல் அப்படியே இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. பல பெரிய தலைவர்கள் அரிசன மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் ஆகியவர்களை அந்தக் கமிட்டியில் போட்டு, அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை எல்லாம் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுத்து, பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். நான் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலே இப்போது பாக்வர்டு கிளாசில் ஒரு கமிட்டி போட்டு, அவர்கள் ஊர் ஊராக சென்று பல விஷயங்களை அறிந்து வந்தார்கள். ஆகவே, அந்தக் கமிட்டியை இந்த ஆண்டிலாவது மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக இந்த 'சீட்ஸ்' ஒதுக்குவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தபால் வந்திருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே அமைச்சரவையின் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே 18 சதவிதம் சீட்டுகள் அரிசனங்களுக்கும் 15 சதவீதப் சீட்டுகள் பெண்களுக்கும் என்று ஒதுக்கப்பட்டது. பின்னாலே அந்த அளவுக்கு போட முடியாமல் கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கி, அரிசன மக்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்து விட்டார்கள். மீண்டும் வரக்கூடிய காலங்களிலாவது மறுபரிசீலனை செய்து, யார் எங்கே சென்றாலும், கோர்ட்டுக்கு சென்றாலும் அவர்களுக்கும் ரைட் இருக்கிறது

என்பதை நிரூபிக்க வேண்டும். எப்படி சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் அவர்களுக்கு ரைட் இருக்கிறதோ அதைப்போன்று பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்து யூனியன்களிலும் ரைட் உண்டு, உரிமை உண்டு என்பதை இந்த அரசு நிர்ணயம் செய்து, அந்த அடிப்படையில் சீட்டுகளை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அரிசன மக்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை உயர்த்துவதற்காக நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக 10 இலட்சம் குடும்பங்களுக்கு உயர்வு அளிக்கக்கூடிய நல்ல நிலைமையை இந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

பழங்குடியினர் நலன் பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. 1971 ஆம் ஆண்டு சென்சஸ் பிரகாரம் நான் ஏதோ ஒரு குறிப்பிலே பார்த்தேன்; அது எந்த அளவுக்கு உண்மை என்பதை என்னால் சொல்ல முடியவில்லை071 தான் அவர்களுடைய ஜனத்தொகை இருந்தது ஆனால் இன்றைக்கு 5 என்று சொல்லக்கூடிய வகையில் அதாவது 5-க்கு மேற்பட்டு இருக்கக்கூடிய வகையில் பழங்குடியினர் எவ்வளவு அதிகமாக உற்பத்தியாகி இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. நல்ல வசதி படைத்தவர்கள் எல்லாம் கூட இந்தச் சலுகைகளை அடைய வேண்டும் என்பதற்காக அதாவது நாயக்கர்கள் காட்டு நாயக்கன் என்றும், ரெட்டியார்கள் கொண்டாரெட்டி என்றும் போட்டுக்கொண்டு சர்ட்டிஃபிக்கேட் வாங்கி வைத்துக்கொண்டு இந்த மக்கள் அடைய வேண்டிய பலனையும், சலுகைகளையும் அடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமை குறிப்பாக தர்மபுரி, சேலம், திருச்சி போன்ற ஜில்லாக்களில் அதிகமாக இருப்பதன் காரணத்தால் பல அரிசன மக்கள், பல படித்த தலைவர்கள் இதைப்பற்றிச் சொல்லி வேதனைப் படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இதுபற்றி நன்கு பரிசீலனை செய்து உண்மையிலேயே மலைஜாதி மக்களாக இருக்கக்கூடியவர்களுக்கு இந்தச் சலுகையை அளிக்கக்கூடிய வகையில் நிலைமையை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் நாம் கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கி அவர்கள் படிப்பிலே முன்னுக்கு வரவேண்டும் என்ற நல்ல நிலைமையை உருவாக்கி இருக்கிறோம். 12-வது





வகுப்பு வரை படிக்கக்கூடிய அத்தனை மாணவ, மாணவியர்களுக்கும் பயனளிக்கின்ற வகையில் தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டுவந்த இலவசக் கல்வித்திட்டம் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரிசன வகுப்பைச் சேர்ந்த பழங்குடியினைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பட்டப் படிப்பினைப் பொறுத்தவரையில் எவ்வளவு படித்தாலும் அவர்களுக்குச் சம்பளம் இல்லை என்ற நிலைமையை உருவாக்கி இருக்கிறோம். அப்படி வரும்போது இன்ஜினியரிங் கல்லூரியில் படிக்கக்கூடியவர்களுக்குப் போதுமான அளவுக்குச் செலவுசெய்யக்கூடிய வகையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதில்லை. வெளி மாநிலங்களுக்குச் சென்றாலும் அவர்களுக்கு காலாகாலத்தில் ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. கொடுக்கக்கூடிய உதவிப் பணமும் போதாமல் இருப்பதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிவில் இன்ஜினியரிங் படிக்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணம் போதுமானதாக இருந்தாலும் கூட கலைத் துறையில் படிக்கக் கூடியவர்களுக்கு கொடுக்கக்கூடிய பணம் போதாமல் அவர்கள் இரண்டு மடங்கு செலவழிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் கடன் கேட்டால் அந்தக் கடனைக் கொடுக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் ஹாஸ்டல்களை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். அவ்வாறு ஹாஸ்டல்களை ஏற்படுத்தி பல மாணவ, மாணவியர்களை ஹாஸ்டல் மூலமாக நாம் படிக்க வைத்து நிர்வாகத்தை நடத்தி வருகிறோம். இப்படி வரும்போது ஆண்டுக்காண்டு 10 சதவீதம் இன்க்ரீஸ் செய்ய வேண்டியது சில இடங்களில் செய்யப்படாமல் இருக்கிறது. ஏனென்றால் போதிய இட வசதி ஹாஸ்டல்களில் இல்லை. உதாரணமாக பழனியிலே ஆண்டவர் ஹாஸ்டல் என்பது 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. அங்கே 75 குழந்தைகள்தான் இருக்கிறார்கள். எனவே ஆங்காங்கு இருக்கிற இப்படிப்பட்ட ஹாஸ்டல்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படாத சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஒரு ஆண்டில் யார், யார் படித்து வெளியே போகிறார்களோ அவர்களுக்குப் பதிலாகக் குழந்தைகளைச் சேர்க்க முடிகிறதே தவிர புதிதாக இன்க்ரீஸ் செய்ய முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் ஹாஸ்டலில் படித்தவள். ஹாஸ்டலில் வார்டனாக வேலை பார்த்ததற்குப் பிறகுதான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். எனவே அப்போது எனக்கு ஹாஸ்டல் பழக்கம்தான் தவிர வேறு பழக்கம் இல்லை. அந்தச் சூழ்நிலையில் நான் எம்.எல்.ஏ., ஆக வந்தவுடன் வத்தலகுண்டில் ஒரு பெண்கள் ஹாஸ்டலை

நிறுவினேன். இப்போது இருக்கும் நிலை என்ன என்றால் நீங்கள் ரூ. 50 கொடுங்கள், ரூ. 100 கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அப்போது எனக்கு யாரையும் தெரியாது. எனவே நானே 8,000 ரூபாய் சொந்தப் பணம் போட்டு ஹாஸ்டலை நடத்தினேன். இன்றைக்கும் அங்கே உரிய கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலைமையில் இருக்கக் கூடிய ஹாஸ்டல்கள் எங்கெங்கே இருக்கிறதோ அவற்றுக்கெல்லாம் உடனடியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகப் பணிவோடும், அன்போடும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஹாஸ்டல்களிலே, கறி, முட்டை எல்லாம் கொடுக்கிறோம். மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்ப்ரைஸ் விசிட் செய்யவேண்டும். கறி, முட்டை ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. அதற்காக நாம் நிறைய பணம் செலவழிக்கிறோம். நான் நேரிலே கூட சில வார்டன்களைக் கேட்பது உண்டு. கறி, முட்டை போடுகிறீர்களா என்று கேட்டால் போடுகிறேன் என்று சொல்கிறார்கள்; ஆனால் போடப்படுவதில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை யாரோ மிச்சம் செய்து கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அந்தக் குழந்தைகளுக்குச் சரியாகப் போடப்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதை எல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசி இந்தத் திட்டம் இருக்கலாமா வேண்டாமா என்பதை நிர்ணயம் செய்யவேண்டும். வெறும் முட்டை என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாம். கறி போடப்படுவதில்லை. அதை எல்லாம் நிறுத்துவதற்கான— நிறுத்துவது என்றால் நல்ல முறையில் நடப்பதற்கான ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து புத்தகம் கொடுக்கிறோம். புத்தகம் கொடுப்பது பற்றிக்கூட நம்முடைய செக்கரட்டரி அவர்களிடத்திலே நான் சொன்னேன். எந்த ஜில்லா என்று கேட்டார்கள். மதுரை ஜில்லா, சேலம் ஜில்லா, கோவை ஜில்லா போன்ற இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. புத்தகம் காலாகாலத்தில் கொடுக்கப்படவில்லை. கடைசியில், அதாவது ஆகஸ்ட் செப்டம்பர் மாதத்தில்தான் கொடுக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் ஏற்கனவே கடன் வாங்கி புத்தகத்தை வாங்கியிருக்கிறார்கள்.

அப்படி கடைசியிலே ஆகஸ்ட், செப்டம்பர் மாத வகையிலே புஸ்தகங்களைக் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கும்போது அந்தக் குழந்தைகள் முதலிலேயே கடன் பட்டு அந்தப் புஸ்தகங்களை வாங்குகிறார்கள். ஆனால் கொடுக்கக் கூடிய புஸ்தகங்கள் அந்தக் குழந்தைகளுக்கு உடனடியாக கிடைக்காத



சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால்தான் அரிசன இலாகாவிலிருந்து புஸ்தகங்கள் கொடுக்கப்படுமானால் ஜூன் 30ஆம் தேதிக்குள்ளாக கொடுத்துவிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

பிறகு துணிகளைக் கூட கொடுக்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்த துணிகளை கொடுப்பதிலே ஏதோ வயது வரம்புகள் எல்லாம் வைத்து 14 வயதுக்கு இவ்வளவு, 10 வயதிற்கு இவ்வளவு என்று வயது வரம்பு வைத்து, அளவு வைத்து, டெய்லரிடம் கொடுத்து தைத்து அப்படியே உடையாகவே கொடுத்து விடுகிறார்கள். ஆனால் சில குழந்தைகளுக்கு அவை பொருந்துவதில்லை. 10 வயது இருந்தாலும் கூட, 15 வயது வளர்ச்சி இருப்பார்கள் சிலர். அந்தப் பிள்ளைகளுக்கு துணி போதாமல் இருக்கிறது. ஆகவே துணிகளைக் கொடுப்பதில் நாம் செய்ய வேண்டிய காரியம், அந்த குழந்தைகளுக்கு, யாருக்கு கொடுக்கிறோமோ அவர்களுக்கே அளவு எடுத்து ஒழுங்காக தைத்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி அதைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு விவசாயத்திற்காக நாம் பணம் கொடுக்கிறோம். அதை நான் பாராட்டுகிறேன். கிணறுகள் வெட்டக் கூட 6 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறோம். அதைபோல மாடுகள் வாங்குவதற்கும் 3-லே ஒரு பங்கு மானியம் கொடுக்கிறோம். இப்படிக் கொடுப்பதிலே மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களுக்குத்தான் உதவ முடிகிறது. ஆகவே கிணறுகளுக்கு கடன் கொடுப்பதை பொறுத்தவரையில், எங்கேயெல்லாம் அரிசனங்களுக்கு நிலம் இருக்கிறதோ அந்த நிலங்களை எல்லாம் 20 ஏக்கர், 30 ஏக்கர் நிலம் என்ற அடிப்படையிலே ஒரு ராட்சசக் கிணறு என்று தோண்டி, அதிலே பம்ப் செட்டுகள் வைத்து அவர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச பாசன வசதியை நாம் கூட்டு பாசன அடிப்படையில் செய்துக் கொடுத்தோமானால், அந்தக் கிணற்றிற்காக கட்ட வேண்டிய தொகையையும், அவரவர்களுடைய நிலப்பரப்பிற்கு ஏற்றாற்போல 3 ஏக்கர் உள்ளவர்களுக்கு 3 பங்கு, 4 ஏக்கர் உள்ளவர்களுக்கு 4 பங்கு, 5 ஏக்கர் உள்ளவர்களுக்கு 5 பங்கு என்ற வீதத்தில் பணத்தை வசூல் செய்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமையும் உருவாகும். ஆகவே இதை பரீட்சார்த்தமாக செய்துக் கொடுப்போமேயானால் அந்த மக்களுக்கு நாம் செய்யக் கூடிய மிகப் பெரிய நன்மையாக அது இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1986 ஏப்ரல் 24

அடுத்து நிலக் குடியேற்றம். நிலக் குடியேற்றத்திற்கு லேண்ட் காலனிசேஷன் ஸ்கீம் என்ற அடிப்படையில், பல வருடங்களுக்கு முன்பு 1957 to 1967-க்கு முன் நான் எம்.எல்.ஏ. வாக இருந்த போதே எங்களுடைய நிலக்கோட்டை தொகுதியிலே செங்கட்டரம்பட்டி, சந்தையூர் என்ற இரண்டு ஊர்களிலே நிலக்குடியேற்றத்திற்காக 100 ஏக்கர் நிலம் தயார் செய்து, அந்த மக்களை எல்லாம் அங்கு அனுப்பி 6 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்து கிணறுகளை வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அதில் பாக்கி பணம் கொடுக்காத காரணத்தால் இதுவரையில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. அதில் நாம் செலவழித்த பணமும் வீணாகிவிட்டது. அவர்களுக்கு நாம் என்ன கிடைக்க வேண்டும் என்று நினைத்தோமோ அதுவும் நிறைவேறாத சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த நிலக் குடியேற்றத் திட்டத்தை நல்லபடியாகச் செயல்படுத்தும் வகையில் ஒரு நல்ல முயற்சியை மேற்கொள்ளவேண்டும். ஒரு நல்ல திட்டமாகக் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு நிறைய தொழிற் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். ஐ.டி.ஐ. களை நிறைய ஏற்படுத்த வேண்டும். அரிசன வகுப்பைச் சேர்ந்த பெண்கள், படித்தவர்கள் பி. ஏ., பி.எஸ்.ஸி., எம்.ஏ. என்று படித்தவர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. நானும் ஒரு பெண் என்ற முறையிலே அவர்களை தினசரி பார்த்து பேசிக் கொண்டிருக்கிறேன். அவர்களுடைய குறை எனக்குப் புரிகிறது. அவர்கள் தினமும் வந்து என்னிடம் அழுது கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த வேலையிலும் அவர்களைச் சேர்க்கவும் முடியவில்லை. ஆகவே ஐ.டி.ஐ. கல்வி நிறுவனங்களை ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று ஏற்படுத்தி அதில் பெண்களுக்கு நிறைய சலுகைகள் காட்டி, அதிலே அதிக அளவில் பெண்களைச் சேர்த்து, வாய்ப்பளிப்பதோடு சேர்க்கப்பட்டவர்களுக்கு தொலைக்காட்சி பெட்டிகளை தயார் செய்வது, எலக்ட்ரானிக் கூட்ஸ் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வது போன்ற நல்ல நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கு போக நாம் பயிற்சி கொடுக்கிறோம். அந்தப் பயிற்சியிலே எத்தனை பேர்கள் சேர வருகிறார்களோ அத்தனை பேர்களையும் சேர்த்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்ற வழி வகைகளைச்



1986 ஏப்ரல் 24] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

செய்ய வேண்டும். நாங்கள் சென்ற முறை சொன்ன பிரகாரம், சட்டப் படிப்பு படிக்கின்றவர்களுக்கு உதவும் வகையில், முன்சீப், டிஸ்டிரிக்ட் மேஜிஸ்ட்ரேட் போன்ற பதவிகளுக்கு போகும் வகையிலும் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். அதை இந்த ஆண்டு அமல் நடத்திய அமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு வேலை வாய்ப்பிலே 18 சதவீதம் கொடுக்கிறோம் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறோம். நான் தயவு செய்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த வேலை வாய்ப்பிலே உண்மையாகவே 18 சதவீதம் கொடுக்கிறீர்களா? இந்த சட்டமன்றத்திலே இருக்கின்ற பணியாளர்களிலும், மற்றும் உங்களுடைய அலுவலகத்திலே இருக்கக்கூடிய பணியாளர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் இந்த 18 சதவீத ஒதுக்கீடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா? இது சம்பந்தமாக ஒரு உயர்மட்ட அதிகார கண்காணிப்புக் குழு ஒன்று போடப்பட்டிருக்கிறது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும், மாண்புமிகு ஆதித்திராவிட நல அமைச்சர் அவர்களை உப தலைவரரகவும் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட அந்த ஒதுக்கீடு 18 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா என்றால், உண்மையிலேயே பல இடங்களில் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே கட்டாயமாக அப்படி அந்த 18 சதவீத ஒதுக்கீட்டை பூர்த்தி செய்யப்படக்கூடிய நிலைமையை உருவாக்கினால், நிச்சயமாக வேலை வாய்ப்பு பெருகி, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்கு குறைத்தோம் என்ற எண்ணத்தை அரிசன மக்கள் மத்தியிலே ஏற்படுத்த முடியும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்தாற்போல வீட்டு அடிமனை. இதற்காக நாம் நிறைய பணம் செலவழித்திருக்கிறோம். ஆனால் அப்படி செலவழித்தும் கூட அது காலாகாலத்திலே முடிவதில்லை. ஆகவே ஒரு தனி தாசில்தாரை இதற்காக நியமிக்கிறோம் என்றால், அவர் அந்த இடத்தைப் போய் பார்த்து அதற்காக சிபாரிசு செய்து. அவருக்கு மேல் உள்ளவர்களுக்கு பரிந்துரைத்து எழுதுகிறார். உடனே அவருக்கு மாறுதல் வந்து விடும். இன்னொரு தாசில்தார் வருவார். சட்டமன்ற உறுப்பினர் மூலம் மக்கள் அவரிடம் மீண்டும் ஒரு மனுவை கொடுப்பார்கள். அவரும் ஓராண்டிற்குப் பிறகு மாறுதல் ஆகிவிடுவார். ஆகவே நிலம் கையகப் படுத்துவதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு

3 ஆண்டுத் திட்டமென்று ஒரு திட்டம் போடலாம். எப்படி ஐந்தாண்டுத் திட்டம் வைத்து மக்களுக்கு காரியங்களை ஆற்றி வருகிறோமோ, அந்த வகையிலே அரிசன மக்களுக்கு மூன்று ஆண்டு திட்டமென்று ஒரு திட்டத்தைப் போட்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளாக வீட்டு மனை இல்லாதவனே இல்லையென்ற முறையிலே சூழ்நிலையை உருவாக்குவதற்கான வழிவகையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாம் வீடுகள் கொடுக்கிறோம். இது உண்மையிலேயே பாராட்டப்படக் கூடிய ஒன்றாகும். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 750 ரூபாயில் வீடு கட்டிக் கொடுத்தோம். இன்றைக்கு ஏறியிருக்கிற விலைவாசியில் ஆறாயிரம் ரூபாய் ஒதுக்கி ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டுவதாக நம்முடைய குறிப்பிலே இருக்கிறது. அதை நான் பலமுறை பாராட்டி இருக்கிறேன். இருந்தாலும் நடைமுறையில் அந்தப் பணம் போதாமல் இருக்கிறது. 2 லட்சம் வீடுகளை அரிசன மக்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டும். அதைப்போல பின் தங்கிய மக்களுக்கு 2 லட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இந்த வீடுகளுக்காக இப்போது ஒதுக்கப்படும் 6 ஆயிரம் ரூபாய் என்பது போதாமல் இருக்கிறது. காரணம் சிமெண்ட், செங்கல் போன்றவற்றின் விலையும், கொத்தனார், சித்தாள் கூலிகளும் அதிகமாக உயர்ந்திருக்கின்றன. இந்த நிலையில் வீடுகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டாவது இப்போது கொடுக்கிற 6 ஆயிரம் ரூபாயை 9 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போல மலைவாசி மக்களுக்கு 9 ஆயிரம் ரூபாய் என்பதை 12 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்டுகிற போது லைட் வசதி, தண்ணீர் வசதி, சாக்கடை வசதி ஆகிய அத்தனை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுக்க வகை செய்திருந்தும்கூட இலாக்காவினர் அதிலே சுணக்கம் காட்டுகிற நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் அங்கே சென்று பார்க்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தச் சமுதாயத்தில் பிறந்தவர்கள், அல்லது அந்தச் சமுதாய மக்கள் மீது இரக்கம் கொண்டவர்கள் போன்ற இவர்களிடம் சொல்லி அந்த வேலை முடித்து வைக்கப்படுகிறது. அதற்காக கண்டிப்பாக ஒரு உத்தரவைப் போட்டு அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து க்ளஸ்டர் புரகிராம். இந்த புரகிராமில் ஆண்டு தோறும் 13 வட்டாரங்கள் என்று நினைக்கிறேன். இது வரைக்கும் 45 வட்டாரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கிற அளவிற்கு நாம் 10 இடத்திலே 10 சிறிய மில்களை கட்டுகிறோம். ஒவ்வொரு மில்லிலும் 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். இந்த க்ளஸ்டர் புரகிராம் மூலமாக ஆண்டு ஒன்றிற்கு ஒரு ஜில்லாவிற்கு ஒரு யூனியன் என்று இருப்பதை ஒரு ஜில்லாவிற்கு ஒரு ஆண்டிற்கு ஐந்து யூனியன்கள் என்று மாற்ற வேண்டும். இதற்கு பணம் முழுமையும் மத்திய அரசால் கொடுக்கப்படுகிறது. ஆகவே மத்திய அரசிடம் பணத்தை வாங்குவதில் நல்ல முயற்சியை எடுத்து ஒரு ஜில்லாவில் ஐந்து யூனியனை இந்த க்ளஸ்டர் புரகிராமில் சேர்த்து 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கிற நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாட்கோ மூலமாக அந்த மில்லுக்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்து ஒரு மில்லை கட்டிக் கொடுப்பார்களானால் அந்த நூற்பு மில்லில் பல நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை பார்ப்பதற்கு நல்ல வாய்ப்பாக இருக்குமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு படித்திருக்கிற பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற வகையிலே கிரஷ்ஷை ஆரம்பிக்கவேண்டும். 3 முதல் 5 வயதுடைய குழந்தைகளை பராமரிக்க முடியாமல் இருக்கிறது. இன்றைக்கு பால்வாடிகள் இருந்தாலும் கூட நம்முடைய அரிசன நல இலாக்கா மூலமாக இந்த கிரஷ்ஷை ஏற்படுத்தி, எங்கேயெல்லாம் மாநிலத்தில் அரிசன மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்த இடங்களில் கிரஷ்ஷை ஆரம்பித்து அவற்றை துறையே நடத்த வேண்டும். அப்போது அந்தப் பெண்களுக்கு அதில் வேலை வாய்ப்பு கிடைக்கும். அதே போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக பல லட்சம் குழந்தைகளுக்கு சாப்பாடு போடப்படுகிறது. அவர்களுக்கு தரமான கல்வியும் கொடுக்கிற அளவிற்கு இந்த கிரஷ்களை ஆரம்பித்து அதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கினால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் இன்னொன்றையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், இப்போது நாம் மாடுகளைக் கொடுக்கிறோம். இந்த மாடுகள் கொடுப்பதிலே முன்பெல்லாம் ஒரு தொகுதிக்கு 200 ஜதை 300 ஜதை என்று கொடுத்தோம். ஆனால் இப்போது மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையில் மாடுகள்,

வழங்க ஏற்பாடுகள் இருக்கின்றது. அது எங்கோ அத்தி பூத்த மாதிரி ஒரு ஜதை கொடுக்கிறோம். இது சரியாக போதவில்லை. எனவே ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலுக்கா அல்லது வட்டாரம் என்று எடுத்துக்கொண்டு, அதிலே குறைந்த பட்சம் 200 பேர்களுக்காவது இந்த மாடுகளைக் கொடுக்கக்கூடிய நிலைமையை நாம் உருவாக்கிக் கொடுத்தால், அவர்கள் இதை வைத்து நல்ல முறையிலே பிழைப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும், வசதியாக இருக்கும். மாடுகளை வைத்து பிழைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அவர்களுக்கு சிறுதொழில் செய்வதற்கு நாம் உதவி செய்கிறோம் தாட்கோ மூலமாக. இப்படி தாட்கோ மூலமாக உதவி செய்தாலும் கூட, அவர்களுக்கு பாங்கிலே சரியான முறையிலே அந்தப் பணத்தைக் கொடுப்பதில்லை. எனவே அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அந்த பாங்க் அதிகாரிகளை வைத்து, இதற்கெல்லாம் நீங்கள் ஒரு கமிட்டி போட்டிருப்பீர்களேயானால் அந்தக் கமிட்டியிலே அவர்களை எல்லாம் அழைத்து வைத்துப் பேசி நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும். எனவே இந்த ஸ்டேட் ஹரிஜன் வெல்ப்பேர் கமிட்டியை இந்த சட்டமன்றக் கூட்டத்திற்குள்ளாவது அமைத்துக் கொடுத்து, அப்படி அமைத்துக் கொடுப்பதன் மூலமாக இந்த மக்களுக்கு சரியான முறையிலே பணம் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். இப்போது அவர்களுக்கு பணம் கிடைக்கவில்லை, கடன் கிடைக்கவில்லை, போதிய அளவிலே அவைகள் நடைபெறவில்லை. எனவே இதை நல்ல முறையில் நடத்துவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு மணியடிக்காமல், வெறும் கையை மட்டும் காட்டிக்கொண்டு இருந்தமைக்கு—நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய மானியக் கோரிக்கையின் மீது பேச விருப்பம் தெரிவித்து இருப்பதால், பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1-30 மணிக்கு முடிந்து, பேரவை மீண்டும் மாலை 4-00 மணிக்குக் கூடும்.

**திரு. செ. தங்கராசு :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகிய மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிட





நலத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஏறக்குறைய 88.81 லட்சம் பேர்களைக் கொண்ட இந்த சமுதாய மக்களை பல பெயர்களைக் கொண்டுஅழைத்து வந்ததை மாற்றி ஆதி திராவிடர் என்று பெயர் வைத்து, அழைக்க வேண்டும் என்று அரசு ஆணையைப் போட்ட, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத்திற்கும், பழங்குடியினர் நலத்திற்கும் சுமார் 47 கோடியே 89 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதிலும் குறிப்பாக, ஆதி திராவிட நலப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துவதற்காக 80.62 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முன்னால் இருந்த ஆட்சியாளர்கள், ஆதி திராவிடர்களுடைய சம்பந்தி என்று கூறி, அந்த இன மக்களை தங்களுடைய விளம்பரத்திற்காக பயன்படுத்திக் கொண்டார்களே ஒழிய, அந்த மக்களுக்காக எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை. குறிப்பாக ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி என்ற பெயரில் ரூபாய் 3,500 ஒதுக்கீடு செய்து, பல ஒப்பந்தக்கரார்களுக்கு வீடுகளைக் கட்ட உரிமம் வழங்கப்பட்டு உள்ளதால், அவர்கள் வீடுகளை சரிவரக் கட்டாத காரணத்தால், அத்தகைய வீடுகள் எல்லாம் இடிந்து தரை மட்டமாக வீழ்ந்து கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, அந்த மக்களே நேரடியாக பணத்தைப் பெற்று,அவர்களே வீடுகளைக் கட்டிக் கொள்ள வழிவகை செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இந்த மன்றத்திலே பேசிய சில மாற்றுக் கட்சி நண்பர்கள் தங்கள் கட்சிப் பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக் கொண்டு, இந்த அரசு மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி மக்கள் மத்தியிலே ஒரு மாயையை உண்டுபண்ணி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் ஆட்சியிலே நடந்த சில உண்மையான சம்பவங்களை இந்த மாமன்றத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உருவப் படத்தை இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்ட போது, அதை அவர்கள் ஆண்ட காலம் முழுவதும் நிராகரித்தார்கள். ஆனால்

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் இந்த மாமன்றத்திலே அவருடைய உருவப் படத்தை திறந்து வைத்தார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை, இந்த சமுதாயத்து மக்கள் நன்றியோடு வணங்குகிறார்கள்.

அடுத்து எந்த அரசியல் கட்சி அலுவலகத்திலேயும் இல்லாத டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய உருவப் படம் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை அலுவலகத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சைதாப்பேட்டையில் உள்ள எம். சி. ராஜா மாணவர் விடுதியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சிலையை திறப்பதற்கு வருகை தர இருந்த எங்கள் கழகத்தின் தற்போதைய அமைப்புச் செயலாளர், அன்றைய தினம் அமைச்சராக இருந்த திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை, சிலை திறப்பு விழாவிற்கு போக வேண்டாம் என்று அன்றைய முதல்வர் அவர்கள் கூறினார்கள். அந்தச் சிலையை எஸ். எம். துரைராஜ் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதோடு மட்டுமல்லாமல், வியாசர்பாடியிலே ஒரு நிகழ்ச்சியிலே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பேசியதை பெரிதாக எடுத்துக் கொண்டு, இரவோடு இரவாக அமைச்சர் பதவியிலேயிருந்து எடுத்தார்கள். அதோடு அம்மையார் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருந்த ''சுடர்'' மாளிகை என்ற அந்த வீட்டை உடனே காலி செய்ய வேண்டும் என்று கூறி, அவர்களுடைய வீட்டிற்கு தண்ணீர் இணைப்புக் கூட கொடுக்காமல், அன்றைய ஆட்சியாளர்கள் செய்ததை இந்த மாமன்றத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

மேலும் அவர்களுக்குச் சொந்தமான, கீழ்ப்பாக்கம் வீட்டில் ஒரு வியாபாரி குடி இருந்தார். அந்த வியாபாரியை வீட்டை விட்டு காலி செய்ய வேண்டுமென்று அன்றைய ஆட்சியாளர்கள் கூறினார்கள். இப்படி அம்மையார் அவர்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்தனர். அந்த அம்மையாரை அவர்கள் புறக்கணித்தும் கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அம்மையார் அவர்களை மத்திய அமைச்சர் ஆக்கினார்கள். இன்று கூட எங்கள் கழக அமைப்புச் செயலாளராக இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் தங்களுடைய சம்பந்தி என்று கூறியவர்கள்



என்ன செய்தார்கள் என்பதை இன்றைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த மறைந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய மகள் கல்லூரியில் படிக்கும் போது, வேறு இனத்தைச் சேர்ந்த திரைப்பட அதிபர் மகனை காதலித்து அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்த போது, தாழ்த்தப்பட்டவர்கள் எங்களது சம்பந்திகள் என்று கூறியவர்கள், சென்னையிலே எந்த திருமணப் பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்து விடாமல் செய்தனர். ஆனால் அன்றைய அமைச்சர் அவர்கள், அண்ணன் ராஜாங்கம் அவர்கள் இரவோடு இரவாக மணமக்களை அழைத்துக் கொண்டு கடலூரிலே பதிவு செய்து சொந்த செலவிலே சிறப்பாக திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மேலும் Educated-Agitate-Organise என்ற போராட்ட வாசகங்களை சென்னை எக்மோரிலே எழுதிய காரணத்திற்காக அன்றைய குடியரசுக் கட்சித் தலைவராக இருந்த சுந்தரராஜன் அவர்களை மூன்று மாதம் சிறையில் அடைத்தனர். அன்றைக்கு இப்படிப்பட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் இன்றைக்கு எங்களைப் பார்த்தும், இந்த அரசைப் பார்த்தும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்தும் குறை கூறுவது சரியல்ல. அன்றைக்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் நினைத்ததை இன்றைய தமிழக முதலமைச்சராக இருந்து பல நன்மைகளை இந்த இன மக்களுக்கு செய்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை அவர்கள் நன்றியோடு நினைக்கிறார்கள். குறிப்பாக கிராம அதிகாரிகளாக சுமார் 4 ஆயிரம் ஆதிதிராவிடர்களை நியமனம் செய்ததை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உயிருடன் இருந்தால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மனதாரப் பாராட்டி இருப்பார்கள்.

பல மாணவ விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில் இருந்ததை மாற்றி இன்றைக்கு நமது மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் அவைகளுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளார்கள். பல விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. என்.ஆர்.ஈ.பி. மூலமாகவும், ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாகவும் ''தாட்கோ'' மூலமாகவும் பல உதவிகளைச் செய்து வருகிற இந்த அரசை பாராட்டுகிறேன். ''தாட்கோ'' மூலமாக கட்டப்படும் வீடுகளுக்கு 6 ஆயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறார்கள். இந்த ரூபாயில், கட்டுமான கூலிகளின் விலையேற்றத்தால் தற்போது இந்தத் தொகையில் வீடு கட்ட முடியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து பேசி அந்தத் தொகையைப் 10 ஆயிரமாக மாற்றி, அதுவும் இந்த நிதி ஆண்டிலேயே கொடுக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட வீட்டுமனைப் பட்டா கொடுக்கின்ற நிலம் கையகப்படுத்தப்படுவ

[திரு. செ. தங்கராசு] [1986 ஏப்ரல் 24

சில அதிகாரிகள் ஒத்துழைப்போடு தடை வாங்கி விடுகிறார் கள். இப்படிப்பட்ட தடை வாங்குவதற்கு வழி இல்லாத வகை யில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகளிலும் மற்றும் கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர் களின் உதவித் தொகையை விலை உயர்வை முன்னிட்டு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் விடுதி களில் பணியாற்றுகின்ற சமையல்காரர்கள், சர்வர்கள், மற்றும் உதவியாளர்கள் சம்பளத்தை பல ஆண்டுகளாக உயர்த்தாமல் அந்த தொழிலாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அந்தத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, என்னுடைய தொகுதியில் பெண்ணாடம் மேல் நிலை பள்ளிக்கு ஒரு நல விடுதி திறக்க ஆவன செய்ய வேண்டு மாய் கேட்டுக் கொள்கிறேன். திட்டக்குடி ஆதி திராவிட நல விடுதி இடிந்துவிடும் அளவுக்கு வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய விடுதியைக் கட்டவும், அதுவும் இந்த நிதி ஆண்டிலேயே கட்டவும், அனுமதி வழங்கவும் மாண்பு மிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் மங்களூர் யூனியனைச் சேர்ந்த மாப்புடையூரில் 25 ஆண்டுகளாக நடுநிலைப்பள்ளியாக உள்ள அரசு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றி முன் மொழிபுகள் அரசுக்கு வந்துள்ளன. எனவே அதை உயர்நிலைப் பள்ளியாக மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அனுமதியோடு செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கீவளூர் ஆதி திராவிட நடு நிலைப் பள்ளியையும் உயர்நிலைப் பள்ளியாக மாற்றும்படி அன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

ஆதி திராவிட மாணவ விடுதிகளில் பணியாற்றும், விடுதி காப்பாளர்கள் 20 ஆண்டு காலமாக தொடர்ந்து பணியாற்று வதால் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. எனவே அவர்களை மாற்றி, மூன்று ஆண்டுகளுக்கு மேல் காப்பாளர்கள் ஒரு இடத்தில் பணியாற்றக் கூடாது என்ற கடுமையான உத்தரவினை அரசு இடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

'தாட்கோ' மூலமாகவும், வட்டாச்சியர் மூலமாகவும், மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரிகள் மூலமாகவும் பரிந்துரை செய்யப் பட்டு, பெட்டிக்கடை மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்ற வைகளுக்கு கடன் வாங்க வங்கிகளுக்குச் செல்லும்போது, வங்கி



1986 ஏப்ரல் 24] [திரு. செ. தங்கராசு]

களில் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். குறிப்பாக சென்னையில் சைதையில்கூட பலபேர் இப்படி காத்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக இந்த மக்களுக்கு கடன் வழங்க உத்திரவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த சமுதாய மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்து வருகின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மனதார பாரட்டுகிறேன். என்னுடைய தொகுதியிலே புகளூரிலே பெண்கள் விடுதியைசென்ற நிதி ஆண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். அந்த விடுதி இன்றைக்கு சிறப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்டு, செயல்பட்டு வரு கிறது.

அதேப்போல இந்த நிதியாண்டில் பெண்ணாடம் உயர் நிலைப்பள்ளிக்கு ஒரு பிற்பட்ட விடுதி இருக்கின்ற காரணத் தினால் அங்கே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரு விடுதி கட்ட அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் ஆதி திராவிட வீட்டு வசதி திட்டம் மூலமாக கொடுக்கின்ற வீடுகள் இந்த ஆண்டு சுமார் 2 ஆயிரமாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மானிய கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. வி. கே. இராசு: பெருமைக்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர் களால் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தங்களுக்கு மேலே உள்ள உண்மை என்றாலும் கடவுள் என்றாலும் இரண்டும் சம அந்தஸ்து உள்ளது என்று மகாத்மா அவர்கள் சொன்னார்கள். அந்த மகாத்மாவின் அருகில் தான், அவருக்கு கீழே தான் தாங்கள் உட்கார்ந்து இருக்கிறீர்கள். அவர் ஒருநாள் அரிசன பள்ளிக்கூடத்தைப் பார்வையிடுவதற்காகசென்று இருந்தார். படத்தில் உள்ளது போல் மேலே துண்டைப் போட்டுக்கொண்டு போகும் போது ஒரு சின்ன குழந்தை ஐயாவைப் பார்த்து தாத்தா தாத்தா உங்களுக்கு என்ன சொக் காவே இல்லையா தாத்தா; என் அம்மா நல்ல தையல் தைப் பார்கள், ஒரு சொக்கா தைத்து கொடுக்கட்டுமா என்று பிரியமாக வந்து கேட்டதாம். அந்தக் குழந்தையை தாத்தா தூக்கி தோளில்

வைத்துக்கொண்டு அப்பா உனக்கு சொன்னாலும் புரியாது; எனக்கு சொக்காய் இல்லை என்பதை நன்கு புரிந்து கொண்டாய், எனக்கு அளவுக்கு மீறிய சந்தோஷம். ஆனால் 30 லட்சம் ஜனங்கள் சொக்காய் இல்லாமல் இருக்கிறார்கள். அந்த மொத்த ஜனங்களுக்கும் சொக்கா போட்டால் தான் நான் சொக்கா போடுவேன்; அதனால் எல்லோருக்கும் உன்னால் சொக்காய் தைத்துக்கொடுக்க முடியுமா என்று அந்த குழந்தைக்கு புரியும்படி கேட்டார். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறியாத வயதுடையவர், நல்ல படித்தவர், சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர்கள்; அவர்கள் சொக்கா போட வேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை, நான் இருக்கிற சட்டமன்ற தொகுதியில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் அளவுக்கு மீறி உள்ள கிராமங்களுக்கு சென்று ஆதி திராவிடர்களை, தாழ்த்தப்பட்டவர்களை, பிற்பட்ட மக்களை 20 வருடமாக சந்தித்துக் கொண்டு வருகிறேன். தலைநகரில் டெல்லி மாநகரில் பலயிடங்களில் நான் சென்று பார்த்து இருக்கிறேன். வரப்பிரசாதமோ என்னமோ, விதி, விதி என்று ஒருசிலர் சொல்லுவார்களே அதைப் போல எங்கே போனாலும் எங்கள் ஜனங்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். அன்று ஒரு ரூபாய் கூலி சம்பாதித்த அரிசனன் இன்றைக்கு 25 ரூபாய் ஒரு நாளைக்கு சம்பாதித்தாலும் அன்றைக்கு இருந்த மன நிம்மதி, மன அமைதி இன்றைக்கு 25 ரூபாய் சம்பாதிக்கும் போது இல்லை. அது என்ன காரண காரியங்கள் தெரியவில்லை. நான் எல்லோரையும் அளவுக்கு மீறி பார்த்துக்கொண்டு தான் வருகிறேன், காங்கிரஸ் ஆண்டபோதும் பார்த்தேன்; கழக ஆட்சியின் போதும் பார்த்தேன்; புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலும் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். என் ஜனங்கள் அப்படியே தான் இருக்கிறார்களே தவிர ஒரு படிக்கு மேலே போனார்களா என்று பார்த்தால் குறைந்துதான் இருக்கிறது. 30 வருட காலமாக உன்னிப்பாக நான் கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். அதே குடிசைகளில்தான் அதே கிராமங்களில் தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே நான் மனம் வெம்பி மனம் நொந்து இருக்கிற உண்மைகளை சொல்லுகிறேன். எதிர் வரிசையில் இருக்கிற என் மீது அளவுக்கு மீறி பிரியம் வைத்துள்ள நண்பர்கள் இடையில் குறுக்கிடாமல் இருந்தால் எனக்கு நல்லதாக இருக்கும். இல்லை என்றால் தொக்கி நிற்கும். உங்களை மாதிரி அளவுக்கு மீறி வேளா வேளைக்கு இந்த சபையில் நேரம் காலம் எல்லாம் ஒதுக்கி பேசிய வாய்ப்பு எனக்கு தானில்லை. நான் எதிர் கட்சியாக இருந்தாலும் கூட எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவா. எதிரி கட்சியாக நீங்கள் பார்க்கிற போது ஏதோ ஒரு 10 நிமிடம் ஒதுக்கி— அதற்கு ஒரு 10 நிமிடம் என்று ஒருவரம்பு இப்போது இருக்கிறது— அதற்குள் என்னுடைய உணர்வுகளை கொட்டுவதற்கு; சபையில் சொல்லுவதற்கு நான் அளவுக்கு மீறி மதிக்கிற எங்களுடைய தானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அருமை





தம்பி விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்த்தாற்போல் இருக்கிறார்கள். என்னுடைய எண்ணம் எல்லாம், செயல் எல்லாம் நோக்கம் எல்லாம் மாண்புமிகு முன்னவர் அவர்கள் இருப்பார்களானால் அவர்கள் மத்தியில் பேசலாம் என்ற ஆசை பெரிய அவா கொண்டு இருந்தேன். அவர்கள் இல்லை; எழுந்து போய் விட்டார்கள். நான் பார்த்துக்கொண்டே இருந்தேன்; போவார்களா இருப்பார்களா என்று பார்த்துக்கொண்டே இருந்தேன், போய்விட்டார்கள்.

(பிற்பகல் 12–10)

இந்தச் சபையில் அவர் இல்லை. 24 அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள் என்ற நினைவோடு நான் பேசுகிறேன். நான் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ. அரிஜனப் பொதுமக்கள் 3 செண்ட்டிற்குக் குறைவாகக் கூட கிராமத்திலே வைத்திருக்கிறார்கள். 4, 5 பேர் பிறந்து அதே இடத்தில், அந்தத் தரையில் 4 தூலங்களை வைத்து, 2, 3 அண்ணன் தம்பிகள் இடையிலே மதிற்சுவர்களை வைத்து அந்தக் குடிசையிலே வாழ்கின்ற நிலைமையை இன்னும் பார்க்கிறோம். அமைச்சருக்கு இந்த நிலைமை இருக்காது என்று நினைக்கிறேன். அவரே போய் பார்க்கலாம். அவர் நேரே வந்து பார்த்தால், அங்கே இருக்கிற இடத்தில் முழு பட்டா போட்டுக்கொடுத்து, இல்லாத ஜனங்களுக்கு கொடுக்க முயற்சி எடுப்பார். அந்த நிலைமை இருக்கிறது. இப்போது 30 லட்சம் வீடுகளை கட்டப்போகிறீர்கள். மூன்று ஆண்டுகளில் ஒரு வருடத்திற்கு 10 லட்சம் வீடுகள் என்று வருகிறது. அந்த வீடுகளை கட்டிக் கொடுத்தால், அத்தனை அரிஜன மக்களும் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும், அளவிற்கு மீறி பாராட்டுவோம். முடிந்தால் நேரம் கிடைக்கும்போது, சிலை கூட வைப்பார்கள். ஆகவே அந்த வீடுகளை கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, உடனடியாக அந்த வீடுகளை கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பில் குறிப்புஉணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண் ?

என்கிற நிலையில் ....(குறுக்கீடு)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட ஒரு நாளில் என்னுடைய பகுதிக்கு வாருங்கள். அந்தப் பகுதியில் நிறைய கிராமங்களில் பார்க்கலாம். மூன்றாவது மைலில் அனந்தாபுரம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஜாதி இந்துக்கள் பெரிய அந்தஸ்தில் இருக்கிறார்கள். ஒரு சின்ன காலனி இருக்கிறது.

கடைசிக் கட்டத்தில் போகிறார்களே, நான்கு பேர்கள் தூக்கிக்கொண்டு செல்வார்களே, உரிமையோடு புதைப்பதற்கு ஒரு சாலையும் இல்லை. வேண்டுமென்ற இடம் இல்லை. இப்படி பல கிராமங்கள் இருக்கின்றன. ஓட்டு கேட்கும்போது நான் வந்தால் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று பெருமையோடு சொல்கிறோம். வந்தால் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அணுகுகின்றபோது, கேட்கின்றபோது அங்கே எத்தனையோ இடைஞ்சல்கள் இருக்கின்றன. முறையோடு அணுகி, குறிப்பறிந்து நேரம் காலங்கள் என்று அறிந்து, ஒரு பெரிய அந்தஸ்திலுள்ள தகுதியிலுள்ள பெரியவரை அணுகுவதற்கு, அதற்கென்று ஒரு வரம்பு, தகுதி நடைமுறை வைத்திருக்கிறேன். என்னாலேயே அது முடியவில்லை என்று சொல்கிற போது, சிலர் வேகமாக எடுத்துப்பேசுபவர்கள் எப்படி செய்யப் போகிறார்கள் என்று எனக்குப் பெரிய கஷ்டமா இருக்கிறது. வீட்டு மனைகளைப் பொறுத்த வரையில், தூக்கணாங் குருவி கூட அழகாக வீடு கட்டிக் கொள்கிறது. இப்போது கட்டிடம் கட்ட ரூ. 6,000 என்று தான் சொல்லியிருக்கிறோம். அது எங்கெங்கே, எந்தெந்த கிராமங்களில் எந்த நிலையில் இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும், மற்ற அங்கத்தினர்களுக்கும் தெரியும். ரூ. 6,000 என்கிறபோது, அது வாங்கப்படுவதிலே, அளவிற்கு மீறி எவ்வளவோ சிரமங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. கடைசியில் கழி போடும்போது பனந்துண்டு போடுகிறோம். அந்த பனந்துண்டு போடும்போது மேலே வைரம் ஏறினால்போல ஒரு பாவனை பண்ணுவதற்கு அதன் மேலே தாரை பூசுகிறோம். அப்படி கட்டும்போது அது இந்த வெய்யிலில் 10-வது நாளில் 10 கோணல்களாக முறுக்கிக்கொள்கிறது. நானும் வீடு கட்டினேன் என்று கட்டினால், அதற்கு அரசுகூட பொறுப்பில்லை. அமைச்சர் பெருமக்களும் பொறுப்பில்லை. ஆக கொடுக்கிற ஆளைப் பார்த்து கொடுக்கவேண்டும். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பார்வையில், அதே ஊரில் வசதியுள்ளவர்கள், தாங்களே அந்தப் பொருள்களை தேடிக்கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்திற்கு சொந்தக் காரர்களாக இல்லாமல் பார்த்துக்கொடுத்தால், அது அளவுக்கு மீறிய ஒரு கீர்த்தியாக இருக்கும்.

என்னுடைய தொகுதிக்கும், அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு சண்முகம் அவர்கள் ஊருக்கும் இடையே இரண்டு மைல் தான். நான் கலைஞர் காலத்தில் 65 வீடுகளைக் கட்டினேன் ரூ. 3,000-க்கு ஒரு வீடு. சிமெண்ட் போட்டு, நானே தண்ணீர் வாங்கி சுவற்றில் ஊற்றி அதற்கென்று 10 குழந்தைகளை வைத்து தண்ணீர் ஊற்றி,



இரண்டு தொட்டிகள் தண்ணீர் வைத்து, காலையிலும் சாயந்திரத்திலும் தண்ணீர் ஊற்றி அழகாக கட்டி வைத்திருக்கிறேன். இன்னும் 50 வருடங்கள் ஆனாலும்கூட, அந்த வீடுகளைத் தொட்டுப் பார்க்கமுடியாது. அங்கே 200 வீடுகள் இருக்கின்றன. மகாத்மா காந்தி அவர்கள் மற்ற ஜனங்கள் சொக்காய் போட்டால்தான் தானும் போடுவதாகச் சொல்லி உறுதி எடுத்தார்கள். எங்கள் காலனியில் உள்ள மக்கள் இன்னும் குடிசையிலேயே இருக்கிறார்கள். நானும் என் குடிசையை மாற்றுவதில்லை என்று இருக்கிறேன். அமைச்சர் அவர்கள்கூட வந்து பார்க்கலாம். எந்தக் கோணத்தில் வேண்டுமென்றாலும் பார்க்கலாம். ஆனால் எனக்கு அதைப் பற்றிய கவலையே இல்லை. அங்கே இருப்பது நானும், என்மனைவியும்தான். என் பையன் ஹாஸ்டலில் இருக்கிறான். அக நாங்கள் இரண்டு பேர் தான் அந்த குடிசையில் வாழ்கிறோம். நான் எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு இரவு 10 மணிக்கு போய், உறங்கி எழுந்து வருவதுதான் என்னுடைய வேலை. எல்லாக் குடிசைகளையும் கட்டி முடிக்கிற வரைக்கும் நான் இந்தக் குடிசையை மாற்றப்போவதில்லை என்ற சபதம் எடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் எல்லா கிராமங்களிலும் பட்டாக்களைக் கொடுத்து அந்த 30 லட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற வரைக்கும் வேளாவேளைக்குச் சாப்பிட்டு தேக ஆரோக்கியத்தோடு இருந்து செயல் படுவேன் என்று அவர்கள் முடிவு எடுத்துக்கொண்டால் போதுமானது, அவரைச் சொக்காய் போடவேண்டாம் என்று நான்சொல்லவில்லை.

1974ஆம் ஆண்டு ஒரு நாள் பாபுஜீ, கக்கன்ஜி வீட்டிற்கு போனேன். அவர் அரைப் பார்வையில் காலை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். மாம்பலத்திலே அவர் வீடு இருந்தது, அவர் இருந்த அந்த வீடு நடிகர் திலகம் சிவாஜி போட்ட பிச்சை. அவர் 150 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருந்த வீட்டிலே இவர் குடியிருந்தார். அவருடைய இளைய தம்பி விஸ்வநாதன் என்னுடைய நண்பர், ஐ.சி.எப். அலுவலத்திலே ஆடிட்டராக இருக்கிறார். நானும் அவரும் சேர்ந்து அருடைய விட்டிற்குப் போனோம். போனவுடன் நான் முழங்காலை தொட்டுக் கும்பிட்டேன். எங்கள் பள்ளிக்கு அவர் வந்திருக்கிறார். அவர் 3 தடவைகள் அமைச்சராக இருந்தார் என்பது இந்தச் சபைக்குத் தெரியும். என்னை அவருக்கு அறிமுகப் படுத்துகிறபோது இவர் இன்னார், ஊர் பிரசிடெண்ட், நம் இனத்தைச் சேர்ந்தவர், இனிமையாகப் பாடுவார் என்று கூறினார். நான் சொன்னேன், ஐயா, உங்களை நான் குருகுலத்திலே பார்த்திருக்கிறேன். நீங்கள் போட்ட பிச்சையிலே நான் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டேன். எங்களுடைய குருகுலத்திற்கு நீங்கள்தான் எல்லாவகையிலும்

[திரு. வி. கே. இராசு] [1986 ஏப்ரல் 24

காரணகர்த்தாவாக இருந்தீர்கள் என்று பெருமையாகப் பேசினேன். அப்போது அவருடைய மனைவி பக்கத்து அறையிலே குளித்துக் கொண்டிருந்தார்கள். யாரு விசுவா என்று அங்கே இருந்துகொண்டே மச்சினப்பிள்ளையைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு இவர் ஆமா நான் தான் வந்திருக்கிறேன் என்று சொன்னார். கண்ணா ஒரு ஐந்து நிமிடம் வெயிட் பண்ணு குளித்துக் கொண்டிருக்கிறேன், ராஜா ஓட்டமாக ஓடி வருகிறேன் என்று சொன்னார்கள் அவசரம் அவசரமாகத் தண்ணீரைத் தூக்கி ஊற்றிக்கொண்டு. அவசரம் அவசரமாக துணியைப் போர்த்திக்கொண்டு தலையிலே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு கண்ணா நீ தான் வந்தால் நிற்கமாட்டாயே, அவசரமாகப் போய் விடுவாயே நன்றாகக் குளிக்கக்கூட இல்லையே ஓட்டம் ஓட்டமாக ஓடிவந்தேன் எனக்கு ஒரு சிறிய ஹெல்ப் பண்ணுவியா என்று திருப்பித் திருப்பிக் கேட்டார்கள். அவரும் சொல்லுங்க அண்ணி, சொல்லுங்க அண்ணி என்று சொன்னார்கள். இல்லை ராஜா சொல்வதற்கு எனக்கு வெட்கமாக இருக்கிறது. அச்சமாக இருக்கிறது பார்ப்பதற்கு இவர் பிள்ளை மாதிரியும் அவர் தாய்மாதிரியும்தான் இருக்கிறார்கள், ஏனென்றால் இவர் கடைசி தம்பி. அந்த அம்மா சொன்னார்கள். கிருஸ்மஸ் பண்டிகை வந்து விடுகிறது. நாளை மறுநாள் மதுரைக்கு போகவேண்டும், பெரிய மருமகன் வருகிறேன் என்று சொல்லிவிட்டான், போய் வரவேற்கவேண்டும். மதுரைக்குபோக இரண்டு டிக்கெட் 30 ரூபாய் 35 ரூபாய் சார்ஜ் இருக்கும் வாங்கிக் கொடுப்பாயா என்று கேட்கிறார். 3 முறை அமைச்சராக இருந்த ஒருவருடைய மனைவி தன்னுடைய மச்சினப் பிள்ளையைப் பார்த்து 35 ரூபாய்க்கு டிக்கெட் வாங்கிகொடுக்க உனக்கு மனது இருக்குமா என்று கேட்கிறபோது என் மனத்திலே ரத்தக் கண்ணீர் வடிந்தது. அன்றிலிருந்து இன்றுவரை என்னுடைய பொதுத் தொண்டிலே என் பேனாவிற்கு இங்க் இல்லையென்றாலும் யாரிடமும் வாங்கக்கூடாது என்ற முறையிலே வாழ்கிறேன. 100 ரூபாய் கூட செலவிடாமல் நான் இந்த சட்டமன்றத்திற்கு மறுபடியும் வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட பெயருக்கு சொந்தக்காரராக நீங்கள் வரவேண்டும், உங்கள் பிள்ளை குட்டிகளுக்கு வாய்ப்பு வசதி செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. மூளை வேண்டும், மூளையை அந்த அந்த நேரத்திலே பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் தொண்டு செய்யவேண்டும். அப்படிச் செய்கிறபோது நம் இனத்திலே இருக்கிற அத்தனை ஏழை எளிய மக்களும் பயன் பெறுவார்கள். அந்த வகையிலே உங்கள் வீரியம் வீறு நடைபோடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றிகூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



1986 ஏப்ரல் 24]

*திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத் துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, கொண்டு வந்திருக்கிற பல திட்டங்களை நாம் நினைவு கூர்ந்தாக வேண்டும். 1986-87-ம் நிதியாண்டிற்கு 47,89,44,000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இருப்பினும் அந்தத் தொகையை இன்னும் 10 கோடி ரூபாய் அதிகமாக்கி ஒதுக்கியிருப்பார்கள் என்றால் அவர்கள் விசுவாசமாக இருப்பார்கள். மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காகப் பாடுபடுகின்ற முறையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிராம நிர்வாக அதிகாரிகளாகப் பணியேற்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–20)

இந்தக் கிராம நிர்வாக அதிகாரி பணி பரம்பரை பரம்பரையாக மிட்டா மிராசுதாரர்கள் ஆண்டு வந்த இந்தப் பதவியைப் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை ஆதிதிராவிட இன மக்கள் பிணையத் தொகை இன்றி பதவியேற்று அவர்கள் கிராமங்களிலே, ஜாதிப் பாகுபாடு நிரம்பிய கிராமங்களில் அவர்கள் பணியாற்றக் கூடிய வேளையில் சமூக உறவு உண்டாகிறது. அதாவது தீண்டாமை ஒழிக்கப்படுகிறது. அதைப் போல சத்துணவுக் கூடங்களிலே புரட்சித் தலைவரின் ஆணையினால் ஆதிதிராவிட வாலிபர்கள், விதவைத் தாய்மார்கள் அங்கே பணி புரிய வாய்ப்புகளைத் தந்நதன் காரணமாக அங்கேயும் தீண்டாமை ஒழிகிறது.

மேலும், புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சமூகத்திற்குச் செய்து வரக்கூடியபல திட்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே போகலாம் என்றாலும் கூட, மாநிலத்தில் உள்ள அனைத்துத் தனியார் பள்ளிகள் மற்றும் நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றுகிறார்களா என்ற விவரத்தை அறிவதற்காக ஒரு குழுவை அமைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அந்தக் குழுவானது தக்க முறையில் அந்தக் கோட்டாவை நிறைவேற்றாத நிறுவனங்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்கு முப்பது இலட்சம் ரூபாய் செலவு செய்து நிர்வகித்து வருகின்ற தமிழ்நாடு இலவச சட்ட உதவி கழகத்தில் ஆதிதிராவிடர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு இன்று வரையில் பின் பற்றப்படவில்லை என்று தெரிய வருகிறது. அந்த அதிகாரி மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அரசை அன்புடன்

[திரு. மு. ஆனந்தன்] [1986 ஏப்ரல் 24

கேட்டுக்கொள்கிறேன். இந்த இலவச சட்ட உதவிக் கழகத்தில் மாவட்ட அளவிலேயும், தாலுக்கா அளவிலேயும் ஆதிதிராவிட அதிகாரிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

தற்போது ஆதிதிராவிடர்கள் கல்விச் சலுகை பெறுவதற்காக வருமான வரம்பு 12,000 ரூபாய் என வைக்கப்பட்டுள்ளது. ஆனால், நான்காவது ஊதியக் குழுவில் அரசு அலுவலர்களுக்கு ஊதியம் உயர்ந்திருப்பதால் அநேக ஆதிதிராவிட மாணவர்களின் கல்வி இதனால் பாதிக்கப்படுகிறது. காரணம், தற்போதைய விலைவாசிக்கேற்ப நான்காவது சம்பள ஊதியக் குழு சம்பளத்தை உயர்த்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, ஆதிதிராவிடர்களுக்கான வருமானத்தை 12,000 ரூபாய் என்பதை மாற்றி 20,000 ரூபாயாக உயர்த்தி ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவர்களுக்கு 95 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால்தான் அரசின் உதவித் தொகை கிடைக்கும். இல்லையெனில் கிடைக்காது என்று இருந்த உத்தரவை மாற்றி, புரட்சித் தலைவரவர்கள் 75 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால் போதும் என்ற உத்தரவை அறிவித்த அவர்களுக்கு ஆதிதிராவிட மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் பஞ்சாயத்து தேர்தலில் உறுப்பினர்களாக வரக்கூடாது என்று சிலர் நீதி மன்றங்களில் தடை வாங்கிய நேரத்தில், மக்கள் தொகைக்கு ஏற்ப ஆதிதிராவிடர்களை பஞ்சாயத்துத் தலைவர்களாக நியமித்த புரட்சித் தலைவரின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்படுகின்றபோது குறிப்பிட்ட பணிக்கு ஆதிதிராவிடர்களில் தகுதியுடையோர் இல்லை என்று கூறி, அந்த இடத்தை மற்ற இனத்தவர்களுக்கு ஒதுக்குகின்ற நிலையை அடியோடு மாற்றி ஆதிதிராவிடர்களுக்கே அந்தப் பணி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு துறையிலும் பணிக்குத் தேர்வு செய்கின்ற தேர்வுக் குழுக்களில் கட்டாயம் ஆதி திராவிட அதிகாரி ஒருவரை நியமனம் செய்து, முறைப்படி ஆதிதிராவிடர்களுக்குச் சலுகை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசை வேண்டுகின்றேன்.



1986 ஏப்ரல் 24] [திரு. மு. ஆனந்தன்]

எனது தொகுதியில் 1985—86-ஆம் ஆண்டு கிளியூர் என்ற கிராமத்திற்கு அரசு உயர்நிலைப் பள்ளியை இந்த அரசு தந்திருக்கிறது. அதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி, தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதி. ஆகவே, அங்கே இருக்கின்ற மக்கள் பெங்களூர், பம்பாய், சென்னை போன்ற பெருநகரங்களுக்கு குடியேறி பிழைக்கின்ற அவலநிலை இன்றைக்கு இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்க புரட்சித் தலைவர் அரசு பிற்படுத்தப்பட்ட மக்கள் நலன் கருதி என்னுடைய தொகுதியிலே ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலையை நிறுவ வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அருகிலுள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே கிடைக்கும் கழிவுப் பொருள்களைக் கொண்டு காகிதத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமாய் புரட்சித் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள். அவர்களுக்கு இயற்கையின் சூழ்நிலையால் மழை பெய்தால் தான் பயிர் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிற காரணத்தால், அங்கே நீர்த் தேக்க அணை ஒன்று கட்டித் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கிணற்றின் மூலமும், ஏரியின் மூலமும் பயிர் செய்ய இயலாது. காரணம் என்னவென்றால், நெய்வேலியில். இரண்டாவது அனல் மின் நிலையம் செயல் படுவதால் பூமியில் உள்ள நீர்மட்டம் குறைந்து விட்டது. விவசாயத்தைநம்பி எந்தச் சூழ்நிலையிலும் வாழ முடியாது. இதை அரசு கருத்தில் கொண்டு நெய்வேலியில் அனல் மின் நிலையத்தில் ஏற்படும் வேலை வாய்ப்புகளில் ஏழை விவசாயிகளின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களின் வாழ்க்கையை வளமாக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வாய்ப்பை அதிகமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டிலும் சாலை இணைப்பு இல்லாமல் என் தொகுதியில் பல கிராமங்கள் இருக்கின்றன. வெள்ளையூரிலிருந்து ஏமம் என்ற கிராமத்திற்குச் செல்ல இயலாத நிலைமையும், கிளியூரிலிருந்து ரகுநாதபுரம் என்ற கிராமத்திற்குச் செல்ல முடியாத நிலைமையும் இருந்து வருகிறது. இந்தக் கிராமங்களுக்குச் சாலை அமைக்கப் பலமுறை அதிகாரிகளை அணுகியும் எவ்விதமான பலன்களும் ஏற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

கோவிந்தசாமிபுரத்திலிருந்து அந்தியூருக்குச் செல்ல சாலைப் போக்குவரத்து இல்லை. இவற்றைப் போக்க அரசு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. ஆனந்தன்] [1986 ஏப்ரல் 24

நல்லூர் ஒன்றியத்தில் சேப்பாக்கத்திலிருந்து காட்டு மைய லூர், காட்டுமையலூரிலிருந்து பெரிய நெசலூர், பெரிய நெச லூரிலிருந்து குறிச்சி, குறிச்சியிலிருந்து மாளிகைமேடு செல்லு வதற்கு ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். அதாவது, மையூரா நதியைக் கடந்து செல்லவேண்டும். இதுவரை இந்தக் கிராமங் களுக்குச் சாலை வசதிகள் கிடையாது. இதை அரசு கருத்தில் கொண்டு, அங்கே தரைப்பாலம் ஒன்று அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுமையலூர் அருகில் உள்ள குறிச்சி அணையிலிருந்து நீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி அணையிலிருந்து 3 பர்லாங் தொலைவில் உள்ள மையூரா நதியையும், குறிச்சி அணையிலிருந்து வருகின்ற தண்ணீரையும் இணைத்து அணை ஒன்று கட்டித் தந்தால் சுமார் 20 கிராமங்கள் பயன்பெற வசதியாக இருக்கும்.

நல்லூர், இலங்கையனூர், பிஞ்சனூர், இடைச்சத்தூர், கர்ணத்தம், மங்கலம்பேட்டை, உளுந்தூர்பேட்டை செல்லும் வரை ரோடுகள் சீர் செய்யப்பட்டுள்ளன. அதனால் நல்லூரி லிருந்து சாலைகளுக்குச் செல்ல இடையில் மையூரா மணிமுக்தா நதியும் கடக்க வேண்டியுள்ளதால் மேற்படி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்று கட்டித் தந்தால் மக்கள் விரைந்து செல் வதற்கு வசதியாக இருக்கும்.

நல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தின் நல்லூர் சார் பதிவாளர் புதிய அலுவலகம் ஒன்று திறக்க அரசு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேப்பாக்கம், அரசு ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளியை, டாக்டர் அம்பேத்கார் மேல்நிலைப் பள்ளியாகப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் சேப்பாக்கம் கிராமத்தில் தீ விபத்தினால் எரிந்த 178 வீடுகளைத் தாட்கோ மூலம் புதிதாகக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு ஞாபகார்த்தமாக, ஒரு பொறியியல் கல்லூரியை, இந்த அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கு படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் இன்னும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. எம்பிளாய் மெண்ட் அலுவலகத்திலே பதிந்து 10, 12 ஆண்டுகள் ஆகியும்



1986 ஏப்ரல் 24] [திரு. மு. ஆனந்தன்]

இன்னும் வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, எனது தொகுதியின் நிலையைக் கருதி, அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்கென்று எத்த னையோ சலுகைகளைச் செய்து உள்ளது. ஆயினும், உளுந் தூர்பேட்டை தொகுதி ஒரு பிற்பட்ட தொகுதி. தாழ்த்தப் பட்ட மக்கள் படிப்பிலும் சரி, பொருளாதாரத்திலும் சரி, முன்னேறவில்லை. ஆகவே, அங்குள்ள ஆதி திராவிடர் அதிகாரி கள், அந்தத் துறையில் எத்தனை பேர்கள் அங்கே வேலையில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

அங்கே 3 ஒன்றியங்கள் உள்ளன. நல்லூர் ஒன்றியம், தியாகூர்கம் ஒன்றியம், உளுந்தூர்பேட்டை ஒன்றியம் ஆகிய இந்த 3 ஒன்றியங்களிலும், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகளில்லை. தண்ணீர் வசதியில்லை. சாலை வசதியில்லை. இந்த நிலை களை அரசு கவனத்தில் கொண்டு, அவர்கள் மயானத்திற்குச் செல்வதற்குப் பாதை இல்லாத நிலையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எத்தனையோ தடவை அரசு அதிகாரிகளுக்கு நான் ஞாபகமூட்டியும் அவர்கள் மெத்தனமாக இருக்கிற சூழ்நிலையை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் சட்டமன்ற உறுப்பினர் இளைஞராக இருப்பதாலோ என்னவோ, அதிகாரிகளை அணுகினால் செய்கிறேன் என்று சொல்கிறார்கள். ஒன்றும் செய்வதில்லை. பலமுறை அணுகிச் சொல்கிறேன். செய்கிறேன், செய்கிறேன் என்று சொல்கிறார் களே தவிர எப்போது சொன்னாலும் செய்வதில்லை.

(பிற்பகல் 12-30)

அதைப் போன்று மனைப் பட்டா கேட்டு 4, 5 ஆண்டுகளா கள் மக்கள். நான் கடிதம் கொடுக்கிறேன். அதிகாரிகளிடம் னாலும் கொடுக்கவில்லை. என்னிடத்திலே வந்து கேட்கிறார் கொண்டு கொடுத்தால், வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகை தந்தால்தான் சங்கிலியே போட முடியும் என்று சொல்கிறார்கள். இந்த நிலை போக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிற வரையில் அரிசனங்களுக்கு சேவை செய்ய முடியாது.

இந்த இலாகாவுக்கு பணியாற்ற வருகின்ற அதிகாரிகள் ரெவின்யூ இலாகாவிலிருந்து டிபுடேஷனில் வருகிறார்கள். அவர் கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருந்து விட்டு போய்விடு கிறார்கள். அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் கல்லா கட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள். இந்த நிலையைப் போக்க

[திரு. மு. ஆனந்தன்] [1986 ஏப்ரல் 24

வேண்டுமென்றால் இந்த இலாகாவில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். கலெக்டர் கண்ட்ரோல் இல்லாமல், அமைச்சரே நேரடியாக தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரத்தை வழங்க வேண்டும். அப்படி இருந்தால்தான் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று கேட்டால் மரியாதை கொடுத்து, வேலை செய்வார்கள்.

மனைப்பட்டா கோரி மனுக்கள் வருகின்றன. அந்த மனுக்களை பரிந்துரை செய்தால் 'அலாட்மெண்ட்' இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். எந்த அலாட்மெண்டை இல்லை என்று சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. எந்த அதிகாரியும் சட்டமன்ற உறுப்பினர்களை இதுபற்றி கன்சிடர் செய்வதில்லை. நான் ஒவ்வொரு அதிகாரி வீட்டுக்கும் சென்று, அலுவலகத்திற்கும் சென்று கோரிக்கை வைப்பது தான் மிச்சம், முடிவு திருப்திகரமாக இல்லை. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆதி திராவிடர் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிற மக்களைக் கொண்டு ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து, ஆதி திராவிட மக்களையும் அதில் பங்கு பெறச் செய்ய வேண்டும். அந்தக் குழுவிற்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். மாநிலம் முழுவதிலும் அவர்கள் முகாம் இட்டு, ஆதி திராவிட மக்களின் கோரிக்கைகளைப் பெற்று, அவ்வப்போது அந்தக் கோரிக்கைகளை நிறை வேற்ற வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆதி திராவிட மக்கள் எத்தனையோ சலுகைகளைப் பெற்றாலும் அரசு அதிகாரிகள் அதற்கு தடையாக இருக்கிறார்கள். இப்படி தடையாக இருக்கிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் எந்த அதிகாரி வீட்டிற்குச் சென்றாலும் அவர்களைப் பார்க்க முடியவில்லை. ஏதாவது நல்ல காரியங்கள் நடைபெறுகின்ற போதும் அரசு அதிகாரிகள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசிப்பது கிடையாது. எங்கள் ஊரிலே ஒரு தறி அமைத்திருக்கிறார்கள். தாட்கோ மூலமாக அமைத்தார்களா அல்லது வேறு ஏதாவது ஏற்பாடா என்று தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள்தான் அந்தத் தொகுதி மக்களுடைய குறைகளை நேரடியாகத் தெரிந்து கொள்ளுகின்ற சூழ்நிலை இருக்கிறது; நேரடியாகக் கேட்கும் சூழ்நிலையும் இருக்கிறது. அவர்களுடைய கஷ்டங்களை நாங்கள்தான் நன்றாக அறிந்திருக்கிறோம். அந்தக் கஷ்டங்களை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினருடைய வயது குறைவாக இருந்தாலும், உருவம் சிறியதாக



1986 ஏப்ரல் 24] [திரு. மு. ஆனந்தன்]

இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அதைப்பற்றிப் பார்க்காமல் ஒன்றரை இலட்சம் மக்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளை நன்றாகத் தெரிந்தவர் அவர்களுக்காக. சொல்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையிலே அவர்கள் புரிந்து கொண்டு செயல் பட்டால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும்; ஆதி திராவிட மக்களும் நன்கு பயன் அடைவார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலம் ஒரு பொற் காலம். இதற்கு இந்த அதிகாரிகள் குந்தகம் இல்லாமல், ஆதி திராவிட மக்களுடைய நலன்களைக் காத்து, அரசு அதிகாரிகள் நேரடியாகச் சென்று அந்த மக்களுடையக் கோரிக்கைகளைச் சேகரித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள்' அந்தந்த தொகுதியில் முகாம் இடும்போது, டூர் போகும்போது அரசு அதிகாரிகளும் உடன் வந்தால்தான் அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தெரிந்து, தீர்வு காண முடியும். மேலும் பல கருத்துகளைச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சம் இருப்பதாகவும், அதில் 88.81 இலட்சம் பேர் ஆதி திராவிடர்கள் என்றும் இது மொத்த மக்கள் தொகையில் 18.35 சதவீதமாக இருக்கிறது என்றும்; 5.20 இலட்சம் பேர் பழங்குடியினர் என்றும், இது 1.07 சதவீதமாக இருக்கிறது என்றும் விவரம் கொடுத்திருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னால், கல்வி அறிவு பெற்றவர்கள் 46.76 சதவீதம் என்று இந்த அறிக்கை கூறுகிறது.

அதிலே ஆதி திராவிடர்கள் 29.67 விழுக்காடு என்றும், பழங்குடியினர் 20.45 விழுக்காடு என்றும் இந்த அறிக்கை கூறுகிறது. இவர்களுடைய சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்த அரசு பல்வேறு திட்டங்களின் மூலமாக நிறை வேற்றப் போவதாக குறிப்பிலே பல்வேறு விவரங்களைக் கூறி, இதற்காக 1986-87 ஆம் ஆண்டுக்கு 21 தலைப்புகளில் 128.5 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாக அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இப்படிச் செலவு செய்து வறுமையை ஒழிக்கவும், கல்வி அறிவை

உண்டாக்கவும், ஜாதீய கொடுமைகளை ஒழிக்கவும் ஏற்பாடு செய்வதாக பல்வேறு நிலைமைகளைக் கூறி இருந்தாலும் உண்மை நிலைமை என்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 39 வருட சுதந்திரத்திற்குப் பிறகும் கூட இன்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் கல்வி அறிவிலும் சரி, ஜாதீயக் கொடுமைகளிலும் சரி, குடி தண்ணீர் பெறுகிற நிலைமையிலும் சரி, குடிமனை பெறுவதிலும் சரி இப்படி பல்வேறு சமூகச் சூழ்நிலைகளிலும் அவர்கள் மிகப் பெரிய கஷ்டத்தில் உழல்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு இங்கே ஒதுக்கியிருக்கக்கூடிய பணம் மிக, மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிட மக்களின் கல்வி வசதிக்கான பல்வேறு திட்டங்கள் பற்றி இதிலே குறிப்பிட்டிருந்தாலும் அவர்களுடைய வளர்ச்சியை எண்ணும்போது கல்வித் துறையிலே இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கிற போது அரசு ஒதுக்குகிற பணம் மிக, மிகக் குறைவானது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக ஆதி திராவிடர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய பள்ளிகளில் வந்து படிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு இடவசதி அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆதி திராவிட நலத்துறையின் மூலம் 728 ஆதி திராவிடர் இல்லங்களையும் 22 பழங்குடியினர் இல்லங்களையும் நடத்துவதாக கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. இவற்றில் எல்லாம் 50, 50 என்று கணக்கிட்டு அதிலே சேர்க்கிறார்கள். எனவே இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய தேவைக்கும், இங்கே இருக்கக்கூடிய ஹாஸ்டலுக்கும் கணக்கிட்டுப் பார்க்கிற போது மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. எனவே ஆதி திராவிட மாணவர் இல்லங்களையும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களையும் அதிகப் படுத்த வேணடுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர்கள் மனுச் செய்தால் அவர்கள் அவ்வளவு பேரையும் இந்த ஆஸ்டல்களில் சேர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன. மனுச் செய்பவர்களில் 10 அல்லது 15 பேர்களைத்தான் சேர்க்கிறார்கள். மற்றவர்கள் சேர்க்கப்பட முடியாதசூழ்நிலையால் அவர்கள் எலலாம் படிப்பை விட்டுப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அவர்களுடைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக விட்டுப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே ஆதி திராவிடர்களுக்கும், பழங் குடியினர்களுக்கும் கட்டப்படுகிற ஹாஸ்டல் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக்காக 60 முதல் 95 ரூபாய் வரையில் தான் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கை நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இந்தத் தொகை போதுமானதாக இல்லை. இதனை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து ஹாஸ்டல்களிலே பணி புரியக்கூடிய ஊழியர்கள் சம்பளம் போதவில்லை என்று பல்வேறு குறைபாடுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே மன நிறைவோடு இந்த ஹாஸ்டல்களில் ஊழியர்கள் வேலை செய்ய அந்த ஊழியர்களுக்கெல்லாம் அதிக அளவிலான சம்பளங்களை ஒதுக்கித் தந்து அவர்கள் நல்ல நிலைமையோடு செயலாற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அவர்களுடைய மேம்பாட்டுக்காக ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் ஆண்டுக்கு 5 இலட்சம் வீடுகளும் மூன்று வருஷத்தில் 30 இலட்சம் வீடுகளும் கட்டப்படும் என்று நம்முடைய கவர்னர் உரையில் கூறப்பட்டது. இப்போதுள்ள நிலைமை என்னவென்றால் இன்று கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய குறிப்புக்கும் அந்த உரைக்கும் தொடர்பு இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்காக ஒதுக்கித் தந்திருக்கக்கூடிய அந்தத் தொகையை அதிக அளவில் ஒதுக்கி அதிக எண்ணிக்கையில் வீடு கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட நலத்துறை மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை எல்லாம் தயவு செய்து அதிகாரிகள் போய்ப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கட்டப்பட்ட மூன்று மாதத்திற்குள் அந்த வீடுகள் எல்லாம் இடிந்து விடுகின்றன. மூன்று மாதத்திற்குள் வெடிப்புகள் ஓடி அந்த வீடுகள் குடியிருக்க லாயக்கற்றதாக மாறுகின்றன. காண்ட்ராக்டர்கள் அவர்கள் இஷ்டப்படி செலவு செய்து கட்டுவதன் காரணத்தால் அந்த வீட்டிலே வெய்யில் காலத்திலும் குடியிருக்க முடியவில்லை. மழைக் காலத்திலும் குடியிருக்க முடியவில்லை. இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வீடுகளைக் கட்டுவதற்காகக் கொடுக்கப்படக் கூடிய தொகை போதுமானதாக இல்லை. அதனைப் பத்தாயிரமாக ஒதுக்கித் தந்து விரும்பினால் அவர்களே கட்டிக் கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் விரும்பினாலும் காண்ட்ராக்டர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு காரணமாக பல்வேறு வியாக்கியானங்களைச் சொல்லி அவர்கள் கட்டிக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாக்க மறுக்கிறார்கள்.

(பிற்பகல் 12–40)

எனவே, கொடுக்கக்கூடிய வீடுகளை அவர்களே கட்டி கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அடுத்தாற்போல...

[1986 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல பணத்தை அவர்களிடத்திலேயே கொடுத்து அவர்களே வீடுகளைக் கட்டிக் கொள்கிற வகையிலேதான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அது மாதிரி இல்லை என்பது போல கூறியிருக்கிறார்கள். தாட்கே நிறுவனம் அந்த வீடுகளை பயன்படுத்துகிறவருடைய கையிலேதான் 6 ஆயிரம் கொடுக்கிறது. அவர்கள் மூலமாகவேதான் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம், என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். செல்லமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு வேண்டுமானால் அது பிரயோஜனமாக இருக்குமே தவிர, உண்மையில் அப்படி நடைமுறையில் நடப்பது இல்லை ஆங்காங்கே கட்டி இருக்கிறார்கள்........

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல எங்கு அப்படி நடக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் குறிப்பிடுவது போல் பெனிபிஃஷியரி என்ற வகையில் யார் அதைப் பயன்படுத்துகிறார்களோ, அவர்களிடத்திலேதான் தாட்கோ மூலமாக 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அவர்களே, தான் சொந்தமாகக் கட்டிக்கொள்கிறார்கள். மானியமாகத்தான் அந்த 6 ஆயிரம் ரூபாயைத் தருகிறோம், அவர்களே வீடு கட்டிக் கொள்கிறார்கள்....

திரு. எம். செல்லமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, மானியமாக கொடுத்தாலும் கூட அங்கே இருக்கக்கூடிய நிலைமைகள் அப்படித்தான் இருக்கிறதே தவிர, யாராவது நேரிடையாக அவர்களே கட்டி இருக்கிறார்களா என்றால் இல்லை. தாட்கோ மூலம் யாரோ கான்டிராக்டர்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் கட்டிக் கொடுக்கக்கூடிய வீடுகளில்தான் போய் இருக்க வேண்டும். இல்லை என்றால், மானியம் கிடைக்காதோ என்ற நிலையில், அந்த கான்டிராக்டர்கள் மூலமாகத்தான் வீடுகளைக். கட்டிக் கொள்கிறார்கள். அந்த நிலைமை தான் இருக்கிறது அப்படிக் கட்டப்படுவதால்தான் வீடுகள் சீக்கிரமாக இடிகின்றன. என்னுடைய திருவாரூர் தொகுதியிலே அலிவலம் கிராமத்திலே ஆதித்திராவிட நலத்துறையால் கட்டப்பட்ட வீடுகளைப் போய் பாருங்கள். இன்னும் குடி கூட யாரும் போகவில்லை, அதற்குள் அந்த விடுகள் இடிந்து விட்டன.

அடுத்து வீட்டு மனை. வீட்டுமனை கொடுப்பதில் 3 சென்ட் கொடுக்கிறார்கள் அவர்கள் நீண்டகாலமாக குடியிருக்கக்கூடிய இடத்தையே அதிகாரிகளுக்கு மனு செய்து பட்டா கொடுக்கு



1986 ஏப்ரல் 24] [திரு. எம். செல்லமுத்து]

மாறு கேட்டால் அந்த நிலத்தில் 3 சென்ட் அளந்து கொடுத்துவிட்டு பாக்கியை எல்லாம் மிராஸ்தாரர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த 3 சென்ட் நிலத்திற்கு பக்கத்திலே கூட உருவாக்கியிருககூடிய பயிர் பச்சைகளையோ, மரங்களையோ கூட வெட்டிவிட்டு வீடு கட்டிக் கொள்ள முடியாத நிலைமை தான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் குடி இருக்கக் கூடிய இடங்களை, அவர்களுடைய அனுபவத்தில் இருக்கக்கூடிய இடத்தை அப்படியே பட்டா செய்துக் கொடுக்கும் வகையில் குறைந்தபட்சம் 10 சென்ட்டாவது கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக 1986–87 ஆம் ஆண்டிலே-25 ஆயிரம் வீட்டுமனை பட்டா கொடுக்கப்போவதாக சொல்லுகிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டிலே ஏறக்குறைய 12 ஆயிரம் பஞ்சாயத்துக்களுக்கு மேலாக இருக்கின்றன. அந்த கணக்கின்படி பார்த்தால் ஒரு பஞ்சாயத்துக்கு 2 வீட்டுமனை பட்டாக்கூட கொடுக்க முடியாத அளவுக்கு இருக்கிறது ஆகவே இவைகள் வாய்பட்டா போடுவதற்கு பொருத்தமாக இருக்குமே தவிர, உண்மையிலேயே ஆதித்திராவிட மக்களுக்கு பல்வேறு இடங்களில் வீட்டு மனைப்பட்டா கொடுக்கின்ற சூழ்நிலை இருக்காது.

அதுபோல ஒரு வருடத்திற்கு 25 ஆயிரம் (இருபத்தி ஐயாயிரம்) வீட்டு மனைகள் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். 25,000 மனைகளை கொடுக்க முடியாது. காரணம் அவர்கள் தனியார் நிலங்களிலே குடியிருக்கிறார்கள். கோயில் நிலங்களிலே குடியிருக்கிறார்கள். மந்தை நிலங்களிலே, மேய்ச்சல் நிலங்களிலே குடி இருக்கிறார்கள். நஞ்சை, புஞ்சை போன்ற இடங்களில் கூட குடியிருக்கிறார்கள். அவைகளில், அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதைப் பொறுத்த வரையில் நத்தம் புறம்போக்கு என்ற சொல்லப்படுகின்ற நிலங்கள் இருந்தால்தான் பட்டா செய்து கொடுக்கிறார்களே தவிர, மற்றபடி உள்ள நிலங்களுக்கு பட்டா கொடுப்பது கிடையாது. அவர்கள் குடியிருக்கக்கூடிய இடங்களிலே ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள்ளாகவே, அந்த மனைகளை பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதிலே கூட நஞ்சை நிலம் என்றும், வேறு சில கிளாஸ்-இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்கள் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்கிறபோது, அது அரசுக்கு போய் வர வேண்டும் என்றும் அவர்களாகவே பட்டா கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்றும் அங்கிருக்கிற அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, தாசில்தார் அளவிலேயே பட்டாக்களைக் கொடுப்பதற்கான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். வேண்டுமானால் கலெக்டரிடம்

அப்பீல் செய்வதற்கான வழி வகைகளை உருவாக்கலாம். அரசுக்கு வந்துதான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அந்தப் பணியை முடிக்கவே முடியாது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 43,748 மனுக்கள் பெண்டிங்கிலே இருக்கின்றன, 31—3—1985 வரை. ஆகவே, தாலுக்கா வரையான அதிகாரிகளிடத்திலே அதிகாரம் கொடுத்தால் நல்லது. பெண்டிங்காக இருக்கும் மனுக்களின் எண்ணிக்கை மிக அதிமாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் செய்து பட்டா கொடுக்கும் பணிகளை விரைவாக செய்வதன் மூலமாகத்தான், ஓரளவுக்கு அவர்களுக்கு பட்டா கிடைக்கக்கூடி சூழ்நிலை ஏற்படும். எனவே, அதை உடனடியாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் குடியிருக்கக்கூடிய இடங்களுக்கு குடி தண்ணீர் வசதி, சாலை வசதி, சமுதாய கூடங்கள் ஏற்படுத்தும் வசதி, கக்கூஸ் வசதிகள் போன்றவை எல்லாம் ஏற்படுத்தப் போவதாக இந்த அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்றால், மாநில ஜனநாயக மாதர் சங்கப் பொதுச் செயலாளர் திருமதி பாப்பா உமாநாத் அவர்களுடைய தலைமையிலே, ஆதிதிராவிட மக்களுக்கு, பெண்களுக்கு கக்கூஸ் வசதி செய்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி மறியல் செய்ததில் 150 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கட்டி இருக்கக்கூடிய அந்த கக்கூஸ்களுக்குக் கூட தண்ணீர் இல்லை. அவைகளில் எல்லாம் பன்றிகளை அடைக்கவும், ஆடுகளைப் போடவும், விறகு கட்டைகளை அடுக்கி வைக்கவும் தான் பயன்படுத்துகிறார்களே தவிர, கக்கூஸ் வசதி முறையாக இல்லை. உங்களுடைய குறிப்பிலே கூட கூறியிருக்கிறீர்கள். ஒரு ஆய்வின் மூலம் தமிழ்நாட்டில் இணைப்பு சாலை வசதிகள் கூட இல்லாத கிராமங்கள் 2,850 என்று குறிப்பிலேயே கூறியிருக்கிறீர்கள். இவைகளுக்கெல்லாம் எப்போது இணைப்புச் சாலைகளைத் தரப் போகிறீர்கள்? அதற்காக ஒதுக்கியிருக்கிற நிதி போதுமானதாக இருக்கிறதா? 2,850 குடியிருப்புகளுக்கு இணைப்பு தரவேண்டியுள்ளது. அவர்கள் தனியார் நிலத்தில் தான் குடியிருக்கிறார்கள். எனவே, அவைகளையெல்லாம் காலி செய்ய முடியவில்லையென்று சொல்கிறார்கள். எனவே, அவைகளையெல்லாம் மாற்றி எல்லா இடங்களுக்கும் சாலை வசதி செய்து கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்று சட்டமிருந்தாலும் அரசின் எல்லா துறைகளிலும் அந்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர்





அவர்கள் தன்னுடைய பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையில் இன்னும் 18 சதவீதம் நிரப்பப்படவில்லையென்றும், ஏறத்தாழ 8 அல்லது 9 சதவீதம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆகவே எல்லா துறைகளிலும் 18 சதவீதம் கொடுப்பதற்கான ஏற்பாட்டை கறாராகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் துறைகளில் இருப்பவர்கள்கூட இந்த 18 சதவீத ஒதுக்கீட்டை செய்து கொடுக்கும் சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜாதி ஒழிப்பு சம்பந்தமாக கொள்கைக் குறிப்பில் பல்வேறு விவரங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். ஜாதியை ஒழிப்பதற்காக குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தவும், அதனை தீவிரமாக அமல்படுத்தவும் 22 நடமாடும் காவல் படைப் பிரிவுகளும், நான்கு தனி நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டிருப்பதாக இதிலே சொல்லியிருக்கிறீர்கள். இது ஆய்வு செய்து 11,531 வழக்குகள் போடப்பட்டதாகவும், அவற்றில் 4,134 வழக்குகள் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மூன்றில் ஒரு பகுதிதான் முடிந்திருக்கிறது. பதிவு செய்த வழக்குகளில் இன்னும் இரண்டு பங்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. எனவே இந்த வழக்குகளை சீக்கிரம் முடிக்கவும், குற்றங்களை விசாரித்து நல்ல முறையில் சட்டத்தை அமல் நடத்துவதற்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம், தமிழகத்தில் ஜாதிக் கொடுமைகள் தலைவிரித்து ஆடுகிறது. என்னதான் காந்தியம் பேசினாலும், பகுத்தறிவு பேசினாலும், இன்றைக்கு ஜாதிக்கொரு சங்கமென்ற முறையில் ஜாதி துவேஷங்கள் உருவாக்கப்பட்டு மிகப் பெரிய சிக்கலை அவை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் கூட வலங்கைமான் தொகுதியில் ஒரு ஊராட்சியில் நாமினேஷன் போட்டார் என்ற காரணத்திற்காக அவருடைய தலையை எடுத்துவிடுவேன் என்று அங்கேயுள்ள மிராசுதாரர் மிரட்டி இன்றைக்கு தேர்தலுச்குப் பின்னாலும் கூட அரிசன மக்கள் அங்கே வேலை செய்ய முடியாத நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அது குறித்து அமைச்சர் அவர்களுச்குக்கூட ஒரு மனு வந்திருக்கிறது. நானே கூட மேலத் தஞ்சை மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளருக்கு மனுவில் பரிந்துரை செய்திருக்கிறேன். இன்றைக்கு ஜாதிக் கொடுமை என்பது மிகப் பெரிய அளவிற்கு தாண்டவமாடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் இது குறித்து மனு கொடுத்தாலும் அவைகள் பதிவு செய்யப்படுவதில்லை. அந்த மக்களுக்கு பாதுகாப்பைத் தராத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஜாதிக் கொடு

மைகளுக்கு எதிராக இந்தச் சட்டத்தை அமலாக்குவதற்குரிய கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஜாதிக் கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பொருளாதார நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்திலே இடுபொருள்களை வழங்குவதாகவும், வருமானத்தை உயர்த்த கோழி, ஆடு, கறவை மாடுகள் வழங்கவும், சிறு தொழில் நடத்த கடன்கள் தருவதாகவும், நிலத்தை சாகுபடி செய்ய 2,000 ரூபாய் வழங்குவதாகவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும், வியாபாரம் செய்வதற்கும் என்று இப்படி நீண்ட பட்டியலைப் போட்டிருக்கிறீர்கள். இவைகள் மூலமாக வறுமையை ஒழித்து விட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. இப்படி கொடுப்பதிலே கூட எவ்வளவு மோசடிகள் நடக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோழி, ஆடு, கறவை மாடுகள் வாங்க கொடுக்கும் மானியத்திலே மானியத்தைத் தான் வங்கிகள் தருகிறதே தவிர வேறல்ல. பீல்ட் ஆபீசர்களும், மற்ற அதிகாரிகளும் கலந்து பேசி மானியத்தை ரிலீஸ் பண்ணிவிட்டு அவர்களுக்கு கொடுக்கிற பணத்தை அப்படியே வங்கியிலே டெபாசிட்டாக செய்து கொண்டு, கடனை வசூல் செய்ய வேண்டியதில்லையென்ற நிலைமைக்கு வருகிறார்கள். மானியம் வழங்குவதில் கூட பல்வேறு நபர்களுக்கு பங்குகள் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக ஒரு குழு அமைத்து விரிவாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜாதியை ஒழிக்க, வறுமையை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தாலும் கிராமப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால் அவர்கள் உழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.

[பிற்பகல் 12-50]

உண்மையான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்ய வேண்டும்—ஏற்கனவே கூட ஒரு பினாமி நிலச் சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி, அது திரும்ப வரப் பெற்று, அது கூட நிறைவேற்றப்படாமல் கிடக்கிறது, நிலச் சீர்திருத்தச்சட்டத்தை கொண்டு வந்து ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் கொடுத்து, அவர்களை வேலை செய்ய வைத்து, அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையச் செய்வதற்காக உடனடி





யாக நடவடிக்கை எடுக்காமல், வறுமையை ஒழிப்போம், அல்லது ஜாதியை ஒழிப்போம் என்று மேம்போக்காக சொல்வது அர்த்தமற்ற கதையாகத்தான் இருக்கிறது என்பதை கடந்த 39 ஆண்டுக்கால அனுபவம் நமக்கு போதிக்கிறது. எனவே நாம் உடனடியாக ஒரு நில சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, உழுபவனுக்கே நிலத்தைக் கொடுக்கக்கூடிய காரியத்தைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் திருவாரூரிலே அரிசன நலத்துறையின் மூலமாக நடத்தப்படும் பெண்கள் ஹாஸ்டல் ஒன்று இருக்கிறது. அது தனியார் கட்டிடத்தில் இருக்கிறது. அங்கே போதுமான பெண்கள் சேர்க்கப்படுவதில்லை. எனவே அதற்கு சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் திருவாரூரில் உள்ள கலைக் கல்லூரிக்கான ஹாஸ்டலில் 150 மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான வசதிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே 65 முதல் 70 மாணவர்கள் வரை தான் தற்போது தங்கிப் படிக்கிறார்கள். எனவே அங்கே 150 மாணவர்களும் தங்கி படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சை மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் இருக்கின்ற அத்தனை இடங்களிலும், இந்த ஹாஸ்டல் வசதிகளை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, வலிவலம், புதூர், திருநெய்வேர், கண்கொடுத்த வணிரம் போன்ற இடங்களில் இந்த ஹாஸ்டல் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்துகாணி என்ற இடத்தில் உள்ள ஆதி திராவிட நலத்துறையால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். எனவே அதை உடனடியாக மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு அரிசன மக்களுக்கு கொடுக்கின்ற நிலத்தில் கூட அவர்கள் இறங்கி விவசாயம் செய்ய முடியாத அளவிற்கு உயர் சாதியைச் சேர்ந்தவர்கள், வசதி படைத்தவர்கள் தடுக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன். செஞ்சி தாலுக்காவில் செஞ்சி நாகசிங்கராயன்

பேட்டை என்ற கிராமத்தில் 25 ஆதி திராவிட குடும்பங்களுக்கு நிலம் எடுக்கப்பட்டு, பணம் கொடுக்கப்பட்டும் இன்றைக்கு, பெரிய பணக்காரர்கள் அதை எதிர்க்கிறார்கள் என்ற காரணத்தினாலே, அந்த நிலத்தை அவகளுக்கு எடுத்துக் கொடுக்காமல் இன்றைக்கு அவர்கள் எல்லாம் அமைச்சருக்கு மனுக்களை அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நிலங்கள் எல்லாம் உடனடியாக கிடைப்பதற்கு உண்டான சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மேஜை மீது மைய-மாநில அரசு உறவுகள் குறித்து, தமிழ்நாடு அரசின் கருத்துக்கள், மற்றும் நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழுவின் வினாப் பட்டியல்........

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் பேசியது சம்பந்தமாக ஏதாவது பாயிண்ட் ஆப் ஆர்டர் இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு). இந்த பேப்பர் காலையிலேயே பிளேஸ் பண்ணி விட்டார்கள். இதை முன்பே நீங்கள் பார்த்து இருக்க வேண்டும். (குறுக்கீடு). பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னீர்கள். உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் பேசிய பேச்சிலிருந்து ஏதாவது கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி இல்லை. சபையினுடைய நடவடிக்கை பற்றியது. சபையினுடைய டேபிளில் சர்க்காரியா கமிஷன் சம்பந்தப்பட்ட அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு). சர்க்காரியா அவர்களுடைய ஆணைக் குழுவினுடைய வினாப் பட்டியலுக்கான பதிலும், மைய-மாநில அரசினுடைய உறவுகள் குறித்து, தமிழ்நாடு அரசினுடைய கருத்துக்களும் இங்கே டேபிளிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டு இருக்கிறது. அப்படி' வைக்கப்படுகிறபோது, அதன் மீது இந்த அரசாங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்........

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பேசியதை நீங்கள் கேட்டு இருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே மேஜையின் மீது வைக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த சர்க்காரியா கமிஷனுடைய கருத்துக்கள், அதற்கு





இந்த அரசாங்கம் சொல்லி இருக்கக்கூடிய விளக்கங்கள், இவைகள் பற்றி மேஜையின் மீது வைக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த ரிப்போர்ட்டின் மீது உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் விவாதம் செய்து, அது குறித்து கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக அதை விவாதிப்பதற்கான வாய்ப்பை நீங்கள் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திடீரென்று நீங்கள் இப்படிக் கேட்கக் கூடாது. அதற்கு என்று நீங்கள் நோட்டீஸ் கொடுத்த பிறகு, அரசு தரப்பிலே சொல்லலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** அந்த மாதிரி இருந்தது என்றால் நான் ராஜினாமா செய்யத் தயார், நீங்கள் ராஜினாமா செய்யத்தயாரா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி எல்லாம் நீங்கள் சவால் விட்டுக்கொண்டு இருக்க முடியாது. (குறுக்கீடுகள்). அர்த்தமில்லாமல் பேசிக்கொண்டு இருந்தால் எப்படி ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத்தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் ஆத்திரப்படக்கூடாது. சர்க்காரியா கமிஷன் அறிக்கையை இந்த அவையிலே வைக்க வேண்டும் என்று நீங்கள் கோரிக்கை விடுத்து நீங்கள் அதைக் கேட்டு, வைக்கவில்லை. வைக்கவில்லை என்று சொல்லி இப்போது வைக்கப்பட்டு இருக்கிறது. வைத்ததற்குப் பிறகு நீங்கள் இதிலே ஆத்திரப்பட்டு பிரச்சினையைக் கிளப்புவது சரியல்ல. அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. இது தொடர்பாக விவாதம் வேண்டும் என்பது உங்களுடைய விருப்பம். அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே கட்சித் தலைவர்கள் பேசி முடிவு செய்த பிறகு, வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளலாம். அவ்வளவு தான் பிரச்சினை. இதிலே ஆத்திரப்படுவதற்குகோ, கோபப்படுவதற்கோ எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசுங்கள். நீங்கள் டிஸ்கஷன் வேண்டுமென்று கேளுங்கள். அலுவல் ஆய்வு குழுவிலே முடிவு செய்து, வைக்கிறோம். நீங்கள் இப்படி திடீரென்று கேட்டால் எப்படி சொல்ல முடியும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சபையின் விவாதங்களில் இருக்கிறது. நான் வேறு வேலைகளை யெல்லாம் விட்டுவிட்டு

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 24

இந்தச் சபையின் விதிகளையெல்லாம் 1 மணி நேரம் உட்கார்ந்து படித்துவிட்டு, இந்த டேபிளில் ஒரு ரிப்போர்ட் வைத்தால், அதில் துணைச் சபாநாயகர் அவர்களையோ அல்லது சபாநாயகர் அவர்களையோ அனுமதி கேட்டு இதில் ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்க உறுப்பினர்களுக்கு உரிமைகள் இருக்கிறது என்பதை, விதியை ஏதோ படித்துத் தொலைத்துவிட்ட காரணத்தினாலே, படித்து கேட்டதற்குப்பிறகு ஒழுங்குப் பிரச்சனை கேட்கவேண்டுமானால் 'நோட்டீஸ்' கொடுங்கள் ; அந்த விதியும் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லையென்று தெரிந்ததற்குப் பிறகு, அறிக்கை வைத்ததை ஆதரித்து, விவாதத்திற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறபோது அலுவல் ஆய்வு குழுவை கேட்கலாம், ஏற்பாடு பண்ணலாம் ; சொல்லிவிட்டால் பிரச்சினை ஏது ? நோட்டீஸ் கொடுங்கள், பாயிண்ட் ஆப் ஆர்டர்.....................
(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையுமே அவசர அவசரமாக இப்போதே படித்ததினால்தான் பிரச்சினை வருகிறது. நீங்கள் இந்த அறிக்கையை வைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக வலியுறுத்தினீர்கள். அவையில் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட சொன்னார்கள். அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. முதலிலே அதற்கு ஒரு பாராட்டை தெரிவித்துவிட்டு, எப்போது விவாதத்தை வைக்கலாம் என்று கேட்டால் கட்சித் தலைவரை கலந்து முடிவு செய்யலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஒரு கேரக்டரைச் சொல்வதினால் சொல்ல வேண்டும். அவசர அவசரமாக படித்துவிட்டதால் உறுப்பினருக்கு பேசுவதற்குச் சிக்கல் ஏற்படுகிறது என்கின்ற தப்பான தகவல்களைக் கொடுத்துவிட்டு திருத்துகின்ற அமைச்சர்கள் பட்டியல் இங்கே நாடறியும், ஊரறியும்.

மாண்புமிகு' டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, யார் அப்படிச் சொன்னார்களோ அதை திருத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல உறுப்பினர் தவறு செய்தாலும் திருத்துவதற்கான வாய்ப்பு எங்களுக்கு இருக்கிறது. அதிலும் நண்பர் என்ற முறையில் எனக்கு அதிகமாக இருக்கிறது என்று கருதுகிறேன்.

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 1986–87 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானிய கோரிக்கை எண். 31-ன் கீழ் எனது கருத்துககளை கூறுவதற்கு அனுமதி வழங்கியதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 24] [டாக்டர் க. நல்லமுத்து]

இங்கே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருடைய நலன் கருதி பல திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் மிகமிகச் சிறப்பு பொருந்திய, குறிப்பிடத்தக்க திட்டங்கள் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு, சவரப்பெட்டி வழங்குதல், சலவைப்பெட்டி வழங்குதல், தையல் மெஷின் வழங்குதல் போன்ற திட்டங்களை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டங்களை வைத்துக்கொண்டு இந்த ஆதிதிராவிட பழங்குடி மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தில் மிகவும் உயர்ந்து விடுவார்கள் என்பதை இங்கே நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். காரணம் என்னவென்றால், இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. இங்கே இன்னும் பல திட்டங்களையெல்லாம் பார்க்கின்றபோது 'தாட்கோ' மூலம் கடன் உதவி வழங்கும் திட்டம் : 'தாட்கோ' மூலம் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் ; நிலப்பட்டா வழங்கும் திட்டம் ; வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம், இந்தத் திட்டங்களையெல்லாம் பார்க்கின்றபோது உள்ளபடியே ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு புரட்சித் தலைவர் ஆட்சி, ஒரு பொற்கால ஆட்சிதான் என்பதை இங்கே அனைவரும் கூறியதைப்போல நானும் ஒத்துக்கொள்கிறேன். 'தாட்கோ' மூலம் கடன் உதவி வழங்கும் திட்டம் ; இந்தத் திட்டத்தை நாங்கள் கோருகின்ற நேரத்தில் இந்த திட்டங்களெல்லாம் இங்கே அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு அந்தக் கடனுக்கு உரிய மனுக்கள் எல்லாம் பெறப்பட்டு அந்த மனுக்கள் எல்லாம் வங்கிகளுக்கு அனுப்பிய போதுதான் அந்தத் திட்டம் எவ்வாறு வெற்றி பெறுகிறது ; அந்த மக்கள் பொருளாதாரத்தில் உயரப்போகிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'தாட்கோ' மூலம் கடலூரிலிருந்து அனுப்பப்பட்ட மனுக்களெல்லாம் இங்கே வங்கிகளால் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து தாட்கோ மூலம் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம். இந்தத் திட்டம் எந்த அடிப்படையில் ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு செயல்படுத்தப்படுகிறது என்பது எனக்குப் புரியாத ஒன்றாகத்தான் இருக்கிறது. எந்தெந்த அடிப்படையில் கட்டப்படுகிறது. யார் யாருக்கு முன்னுரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் அறிய விரும்புகிறேன். நிலப்பட்டா வழங்கும் திட்டம். விவசாயத்திற்கு நிலப்பட்டா வழங்கும் திட்டம் என்று கருதுகிறேன். இங்கே ஆதிதிராவிட பழங்குடி மக்களெல்லாம், காடு மலைகளையெல்லாம் வெட்டி நல்ல பண்பட்ட நிலமாக மாற்றி அவைகளைப் பயன்படுத்துகின்றபோது, அங்கே பட்டா மக்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு சிறந்த நடைமுறையை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[டாக்டர் க. நல்லமுத்து] [1986 ஏப்ரல 24

இங்கே வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம், அற்புதமானத் திட்டம். தமிழகத்திலுள்ள எல்லா ஆதிதிராவிட மக்களுக்கும் இந்த வீட்டுமனை பட்டாக்களெல்லாம் கையகப்படுத்தப்பட்டு அவைகள் எல்லாம் இன்று கோர்ட் தீர்ப்பிலே இருப்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

ஆகவே அவர்களுக்கு மனைப் பட்டா இல்லாமல் வீடு கட்டிக் கொடுப்பது என்பது சாத்தியம் இல்லை என்று இந்த அரசு கூறுகிறது. ஆனால் வீடு கட்டிக் கொடுப்பதற்கு உரிய மனையை கையகப்படுத்துவதற்கு அங்கே கோர்ட் குறுக்கே நிற்கிறது. இப்படி எல்லாம் இருக்கிறபோது இந்தத் திட்டங்களை எல்லாம் எப்படி நிறைவேற்றி அந்த மக்களை முன்னுக்கு கொண்டு வரப் போகிறீர்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

இந்த சவரப் பெட்டி, சலவைப்பட்டி திட்டங்கள் எல்லாம் இந்த தமிழக அரசால் வெற்றிகரமாக நடத்துகின்ற இந்த வேளையில் ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1978-ஆம் ஆண்டு ஆதிதிராவிட மக்களுக்கு இந்த பஸ் பர்மிட் எல்லாம் வழங்கினார்களே அந்த பஸ் பர்மிட்டை 18 சதவீதம் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் ஏன் 1986 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தவில்லை. அந்தத் திட்டத்தில் இன்று வரை ஒரே ஒரு ஆதி திராவிடருக்குத் தான் நறைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஒரே ஒருவரும் பஸ் பர்மிட்டைப் பெற்று அதை ஒரு பினாமி பெயரால் தான் நடத்தப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே அரசு அலுவலகத்தில் பணி புரியும் ஆதிதிராவிட மக்களுடைய அவலநிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே ஆதி திராவிட, பழங்குடி மக்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.ஏஸ்., நீதிபதிகள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் போன்ற பதவிகளில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் எல்லா தகுதியும் படைத்தவர்கள், நிர்வாக திறமை உடையவர்களுக்கு அந்த பதவியை வழங்கி அவர்களுக்கு அந்தப் பணியை அரசு அளித்து இருக்கிறது. அப்படி அளிக்கப்பட்ட பணியை செம்மையாக செயல்படுத்தியும், திறமையாக தங்களுடைய செயலாற்றத்தைக் காட்டி அரசினுடைய பாராட்டைப் பெறுகின்ற அளவுக்கு அவர்கள் தங்களின் பணியில் இருக்கிறபோது அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதிலும், அவர்களுடைய திறமைக்கு ஏற்ற ஒரு பொறுப்பினை வழங்காமல் இந்த அரசு ஏன் மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடத்து கொள்கிறது என்பதை நான் றிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 24] [டாக்டர் க. நல்லமுத்து]

இங்கே கல்லூரி பேராசிரியர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன. இந்த கல்லூரி பேராசிரியர்களை—எல்லா துறைகளிலும் 18 சதவீதம என்ற நிலை இருககும் போது—பதவி உயர்வில மட்டும் ஏன் அவர்களுக்கு அந்த 18 சதவீதம் வழங்கப் படவில்லை என்பதை இநத மன்றத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே கலவித் துறையில இப்போது இருக்கின்ற ஒரு நிலையை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறன். அந்த ஆதிதிராவிடர்களுக்கு இந்த 18 சத வீத சலுகையை இந்த அரசு செயல்படுத்தி இருக்கிறதா? இல்லையா என்பதற்கு ஒரு சின்ன உதாரணத்தை சொல்ல விருமபுகிறேன். இங்கே அரசு கல்லூரியில் பேராசிரியர் பணி புரிபவர்கள் 18 சதவீதம் வேலைக்கு அமர்த்தப்பட்டார்களா என்று பார்க்கிறபோது 5.6 சதவீதம் தான் பதவியில் அவர்களை அமர்த்தியிருக்கிறார்கள். தனியார் கல்லூரியில் பார்க்கும் போது 1.19 சதவீதம் தான் அவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கிறபோது தமிழக அரசின் மீது எனக்கு ஒரு பெரிய ஐயப்பாடு தோன்றுகிறது. இவர்கள் ஆதிதிராவிடர்கள் மீது அக்கறையோடு இருப்பவர்களாக இருக்கிறார்களா, இவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு பாதுகாப்பு உள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதை நான் இங்கே வினாவாக எழுப்ப என்னுடைய உள்ளம் எண்ணுகிறது.

இங்கே மாணவர்களுக்கு கல்வி உபகார சம்பளம் இவைகளை எல்லாம் பார்க்கிறபோது நமக்கு எல்லாம் தெரியும் இங்கே மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் சொல்லும் போது கல்வியை கொள்ள அடிக்கலாம்; அதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே ஆதி திராவிட மக்கள் பெற வேண்டிய கல்விச் சலுகையை இங்கே இடையில் கொண்டாரெட்டி என்பவர்கள் புகுந்து அதை கொள்ளை அடித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் வரவேற்கிறார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். இப்படி கல்விச் சலுகையில் மட்டும் அல்ல, வேலை வாய்ப்பிலும்..........................

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்ளை அடிக்க வேண்டும் என்பது இலக்கிய பதத்தில் சொல்லப்பட்டதே தவிர இடையிலே புகுந்து கொள்ளை அடிப்பதை யாரும் நியாயப்படுத்தி சொல்லமாட்டார்கள். அது சரி அல்ல; அது முறை அல்ல; அந்த கொள்ளையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

[1986 ஏப்ரல் 24

டாக்டர் க. நல்லமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுடைய குறைகளை வேதனைகளை அவர்களுடைய சமூக அநீதிகள் பற்றி சொல்லும்போது இங்கே இலக்கிய கண்ணோட்டத்தோடு அவர்கள் பேசியதை நான் கேட்க தவறி விட்டேன். மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இலக்கிய கண்ணோட்டம் தேவை இல்லை; சராசரி அறிவே போதும்.

டாக்டர் க. நல்லமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு சராசரி அறிவு இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக பொருள்படுத்திக் கொள்ளக் கூடாது. நான் அன்றைக்கு பேசியதைப் பற்றி அவர்கள் கேட்டதற்கு ஒரு விளக்கம் தான் சொன்னேனே தவிர அவர்கள் நல்ல அறிவார்ந்த தமிழில், ஆற்றல் மிகுந்த தமிழில் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன். அவர்களை தனிப்பட்ட முறையில் குறை சொல்லுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

டாக்டர் க. நல்லமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே குறைகளைக் கூற வேண்டுமென்று சொன்னால், நேரம் போதாது, அரிசன மாணவர் விடுதி, ஆதி திராவிட நலத்துறையால், திருச்சி மாவட்டத்தில் நடத்தப்படுகின்ற ஒரு சிறப்பு நிலையை எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கே ஆதி திராவிட மாணவர்கள் விடுதிக்கு அவர்கள் காய்கறிகளை சப்ளை செய்வதற்காக ஒரு காண்ட்ராக்ட் விடுகிறார்கள். எவ்வளவுக்கு காண்ட்ராக்ட் எடுக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களுடைய பொருளாதாரம் எப்படியிருக்கிறது. விலைவாசி எப்படியிருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு ஒரு நண்பர் காண்ட்ராக்ட் எடுக்கிறார். காண்ட்ராக்ட் எடுக்கின்றபோது 100 முருங்கைக்காய் ரூ. 3 என்றும், ஒரு கிலோ வெங்காயம் 5 பைசா என்றும் எடுக்கிறார்கள் என்றால், இந்த ஆதி திராவிடத் துறை எவ்வளவு சிறப்பாக, நேர்மையாக செறிப்பாக செயல்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அங்கே ஆதி திராவிட மாணவர்களை நான் சந்திக்கின்ற போதெல்லாம், அவர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளைப் பார்க்கின்ற போது, உள்ளபடியே ரத்தக் கண்ணீர் தான் வடிக்க வேண்டும். அந்த ஊருக்குச் சென்றாலே, மக்கள் எங்களுக்கு



1986 ஏப்ரல் 24] [டாக்டர் க. நல்லமுத்து]

காட்மற்குப் போவதற்கு வழி அமைத்துக் கொடுங்கள் என்று தான் கேட்கிறார்கள். இதை நாம் எண்ணிப் பார்க்கின்ற போது, ஓஹோ, இந்த நாட்டில் அவர்கள் வாழ்வதற்கு விருப்பவில்லை. இங்கே வாழ்வதைவிட ஒரு வேளை சுடுகாட்டிற்குச் செல்வதையே மிகவும் விரும்புகிறார்களோ என்ற நிலையை எண்ணிப் பார்க்கிற போது மிகவும் வேதனைப் படுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மயானப் பாதை என்பது ஒரு கிராமத்திற்குத் தேவையான இன்றியமையாத அடிப்படை பிரச்சினை. அதைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அதைக் கொஞ்சம் கொச்சைப் படுத்துவதுபோல், மயானத்திற்குப் போவதற்கு பாதை கேட்கிறார்கள் என்று அவர் சொல்வது சரியல்ல. இது ஒரு தேவையான பிரச்சினை. இதைத் தீர்க்க வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம. அந்த வகையிலே ஒரு கிராமத்திற்குத் தேவையான அதுவும் ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற பகுதிகளில் இருக்கக் கூடிய பிரச்சினைகளில் தேவையான ஒன்றாக இதை வைத்திருக்கிறோம். ஆகவே அதைக் கொச்சைப் படுத்துவது போல் அவர்கள் மயானத்துற்குப் போவதற்குப் பாதை கேட்கிறார்கள், என்று சொல்வது முறையல்ல.

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நானும் அவர்களுக்கு மயானத்திற்கு செல்வதற்குப் பாதைகள் போட்டு கொடுக்கவில்லை என்ற குறையின் அடிப்படையில் தான் மிகவும் வேதனையோடு இங்கே எடுத்துக் கூறுகிறேன். இங்கே பல ஊர்களில் மயானத்திற்குச் செல்வதற்குப் பாதைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சரிடமும், மற்றவர்களிடமும் பல முறை கோரிக்கைகள் கொடுத்திருக்கிறேன். அந்த மயானம் செல்வதற்கு பாதை அமைப்பது, மயானத்திற்கு அவர்களை போகாமல் தடுப்பதற்கோ என்னவோ. பல சால்ஜாப்புகள் டைவர்ஷன் கொடுத்து, அவர்களுக்கு சுடு காட்டிற்குப் பாதை அமைப்பதற்கு இங்கே காலதாமதப் படுத்துவதோடு மட்டுமல்லாமல், சுடுகாட்டிற்குப் பாதை இல்லாத ஒரு சிக்கலை உருவாக்கிக் கொண்டு வருவதை இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகத் தான் இந்தக் கருத்தை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு சில இடங்களில் இந்த சுடுகாட்டிற்குப் பாதை அமைப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. காண்ட்ராக்ட் எடுத்து வேலைகள் செய்ததாக கணக்குகள் இருக்கின்றன. ஆனால் அந்த சுடுகாட்டிற்குப் வழியே அமைக்கப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், நாரண மங்கலம் என்ற ஊரிலும், பெரணி என்ற ஊரிலும், அவர்களே நேரில் சென்று பார்த்தால்,

சுடுகாட்டிற்கு வழி அமைக்கப்படாமல், சுடுகாட்டிற்கு வழி அமைத்து இருப்பதாக கணக்கு இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார் என்று நம்புகிறேன்.

இங்கே நான் குறைகளை மட்டும் கூறுவதாக நீங்கள் எண்ண வேண்டாம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ தன்னுடைய தொகுதியில் குற்றச்சாட்டு நடந்ததுபோல் குறிப்பிடுகிறார்கள். அது மாதிரி ஒரு குற்றச்சாட்டு இதுவரை என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி நடந்திருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. நானே அந்த ஊருக்கு 2, 3 தடவை போயிருக்கிறேன். அந்தமக்களும் இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. ஏதோ அவர் இல்லாத ஒன்றை சொல்லியிருக்கிறார் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து** : துணைத் தலைவர் அவர்களே; என்னுடைய குற்றச்சாட்டிற்கு நானே பொறுப்பேற்கிறேன். நிருபிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாம் ஒரு சில மாணவர்கள் விடுதிகள் வந்திருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துச் சொன்னால், வாலி கண்டபுரத்திலும், நெற்குன்றத்திலும் உள்ள விடுதிகள், செம்மையாக செயல்படுகின்றன. நன்றாகப் படிக்கின்ற மாணவர்களாக இருக்கிறார்கள். மிகவும் ஏழை மாணவர்களாகவும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒரு பிரச்சினை. இந்தத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இன்று இருப்பதாகக் கருதுகிறேன். ஆனால் அந்தச் சட்டம் தமிழகத்தைப் பொறுத்தவரையில்,எந்த விதத்தில் செயல்படுத்தப்படுகிறது என்பதை அவர்களுடைய மனசாட்சியை எண்ணிப்பார்த்தால் நன்றாகத் தெரியும். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் என்பது இங்கே ஜாதி வெறி பிடித்தவர்களுக்கு இது ஒரு பாதுகாப்புச் சட்டமாக இருக்கிறது. இதை நான் எப்படிச் சொல்கிறேன் என்றால், ஜாதி வெறி பிடித்தவர்கள் இந்தத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தங்கள் கையில் பிடித்துக் கொண்டு,





(பிற்பகல் 1–10)

தன்னுடைய எதிரியைப் பழிவாங்குவதற்காக ஆதிதிராவிட மக்களைப் பயன்படுத்துகிறார்கள். அது நடந்திருக்கிற உண்மை. உண்மையில் தீண்டாமையால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு அரிசனும் தீண்டாமை ஒழிப்புக் கோர்ட்டிற்கோ போலீஸ் நிலையத்திற்கோ சென்று வழக்குத் தொடர்ந்து வெற்றிபெற்றதாக எனக்குத் தெரியவில்லை. இங்கே ஆதிதிராவிட மக்களுக்கு எந்த வகையில் தமிழக அரசு பாதுகாப்புக் கொடுக்கிறது என்பதற்கு நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே அரும்பாவூர் பேரூராட்சி இருக்கிறது. அங்கே அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே பல மாணவர்கள் படிந்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு அரிசன மாணவன் படித்துக்கொண்டு இருக்கிறான். அந்த மாணவன் அந்த வகுப்பிலேயே அதிக மதிப்பெண்கள் வாங்கும் ஒரு மாணவனாக இருக்கிறான்; அது அந்த உயர் சாதிக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. இதை மனதில் கொண்டு அவனை தேர்வு நேரத்தில் நன்கு படிக்கவிடாமல் செய்ய வேண்டுமென்பதற்காக அவன் உயர்சாதிப் பெண்ணைக் காதலித்தான், கையைப் பிடித்தான் என்று பொய் புகார்கள் கூறி அவனை தனி அறைக்கு இட்டுச் சென்று தலைமை ஆசிரியராலும் மற்றவர்களாலும் காலணிகளாலும் மூங்கில் கம்புகளாலும் அவன் நையப் புடைக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, 3 நாள் சித்திரவதைப் படுத்தி 3–வது நாள் அவன் சுடுகாட்டிற்குச் சென்றுவிட்டான். அந்தச் செய்தியை நான் போலீஸுக்கு செய்தி மூலம் அனுப்பி நேரிலேயும் சந்தித்து இதுபோன்ற அநியாயங்கள் நடந்திருக்கின்றன. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினேன். அந்த நேரத்திலே அங்கே துணை ஆய்வாளரும் இன்ஸ்பெக்டரும் இல்லை, அவர்கள் எங்கே சென்றிருக்கிறார்கள் என்று நான் கேட்டேன். அதற்கு அங்கே இருக்கிற கான்ஸ்டபிள் பதில் சொன்னார், அவர் சோப்ராஜை பிடிப்பதற்காக ஸ்பெஷலாக செலக்ட் பண்ணப்பட்டு அந்தப் பணிக்காக அவரை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அவர் வருவதற்கு ரொம்ப நாளாகும். என்றைக்கு சோப்ராஜை பிடிக்கிறாரோ அன்றைக்குத்தான் அவர் வருவார். அவர் வந்த பிறகு அந்த தமிழ்ச்செல்வன் சாவின் விவகாரம் விசாரிக்கச் சொல்கிறேன். என்று கூறினார்.

சரி, அங்கே நீதி கிடைக்கவில்லை * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்குக் கொடுத்த நோட்டீஸ், அதை ரிஜெக்ட் செய்தக் காரண காரியம் பற்றியெல்லாம் பேசக்கூடாது. அது நீக்கப்படுகிறது. சீக்கிரம் முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**டாக்டர் க. நல்லமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, குற்றம் கூறுகிறேன் என்பதற்காக நேரத்தைக் குறைத்து விடாதீர்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இங்கே காங்கிரஸ் கட்சியும் அ.இ.அ.தி.மு.க.வும் தோழமை கட்சிகளாக இருக்கின்றன. அந்த மாணவன் பள்ளியிலே அடித்துக் கொலை செய்யப்பட்டு இருக்கின்றான். நாங்கள் அந்த மக்களைச் சந்திக்கிறபோது உங்கள் ஆட்சியில் நடக்கிற தவறுக்கும் மக்களுடைய கூச்சலுக்கும் ஏசலுக்கும் ஆளாகவேண்டிய துர்பாக்கியமான நிலை இருக்கிறது. அந்த மாணவன் கொலையில் * * என்ற ஐயப்பாடு மக்கள் மனதிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஐயப்பாடு இருக்கிறது என்று நீங்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டால் * * என்று சொல்வார்கள். அது ரெக்கார்ட் ஆகும். ஆகவே அது நீக்கப்படுகிறது. வில்லங்கம் இல்லாமல் பேசிமுடியுங்கள்.

**டாக்டர் க. நல்லமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆதிதிராவிட மக்களுக்கு பல திட்டங்களையெல்லாம் போட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் செயலாக்குவதற்கு நல்ல மனம் வேண்டும். அந்த மனம் வேண்டுமென்றால் இந்த கம்யூனல் ஜி.ஓ. என்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே அதை ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அதை நல்ல முறையிலே நேர்மையான முறையிலே நேர்த்தியான மன நிலையிலே நிறைவேற்றினால் அதுவே ஆதிதிராவிட மக்களுக்குப் போதுமானது என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திருமதி இரா. சரோஜா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிலும் புரட்சி, என்றும் புரட்சி என்ற முறையிலே தமிழ் நாட்டு மக்களுக்கு எல்லா வகையிலும் புரட்சிகரமான நன்மை பயக்கும் பலவித முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றி, அதன் மூலம் தமிழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் என்றும் நீங்காத இடத்தைப் பிடித்து, நிறையான ஆட்சி நடத்தி வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தமைக்காகப் பெருமிதம் அடைகின்றேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மங்காத ஒளி விளக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

''ஹில் ஏரியா டெவலெப்மெண்ட் ப்ராஜக்ட் ''-இல் நீலகிரி மாவட்டம் மட்டும்தான் உள்ளது. இதைத் தமிழகத்திலுள்ள திருச்சி மாவட்டம் பச்சைமலை, சேலம் மாவட்டத்திலுள்ள பச்சைமலை, கல்ராயன் மலை, ஏற்காடு, கொல்லிமலை ஆகிய மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளையும் சேர்த்து செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களையும் வகைப்படுத்தப்பட்டு, குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதில் ஒரு குக்கிராமம் என்பது அங்குள்ள இந்துக்கள், தாழ்த்தப்பட்டோர், மலைஜாதியினர் ஆகியோர் வாழும் பகுதிகளும் அடங்குகின்றன. இருப்பினும் குடிநீர்த்திட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பெரும்பான்மையானவை இந்துக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே கட்டப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர் வசிக்கும் பகுதிகளுக்குப் பகிர்மானக் குழாய்களும் போதுமான அளவிற்குப் போடப்படுவது இல்லை. பல பகுதிகளுக்கு இவைகளும் போடப்படுவதும் இல்லை.

தாழ்த்தப்பட்டோர், மலைஜாதியினர் போன்றோரின் ஏற்றத் தாழ்வுகள் நீங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், சமூக நலக் கூடங்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவைகளை காலனிகள் பகுதியில் கட்ட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்காக நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்கள் கைப்பம்பு திட்டங்களாகவே உள்ளன. அவைகளும் குடிநீர் அமைப்புள்ள இடங்களில் போர் போட்டு நிறைவேற்றப்படும்போது அவைகள் மலைச் சரிவுகளின்கீழ் அமைந்து விடுகின்றன. மீண்டும் மக்கள் தாங்கள் ஏற்கனவே குடிநீர் எடுத்து வந்த இடங்களுக்கே சென்று நீரை எடுத்து, சரிவுகளின்மேல் ஏறிவருகின்ற சங்கடமான நிலைகள் ஏற்படுகின்றன. மேலும் விவசாயம், கூலி விவசாயம் போன்ற வேலைகளைச் செய்யும் ஏழை மக்கள் பணி முடிந்து இரவு நேரங்களில் அங்கு சென்று இருட்டு நேரங்களில் குடிநீர் எடுப்பது முடியாத காரியமாக ஆகிவிடுகின்றது. ஆகவே, கிராமங்களின் உள்ளேயே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர் வினியோகம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் முன்னேற்றத் திட்டங்களில் ஒன்றான வீடுகள் கட்டித்தரும் திட்டங்களில் கட்டப்படும் வீடுகள் சேற்றினால் கட்டப்படுவதால் அடிக்கடி இடிந்து விழுவதோடு நீண்ட நாட்களுக்கும் இருப்பதில்லை. ஆகவே மலைவாழ் மக்களுக்காகக் கட்டப்படும் அனைத்து வீடுகளும் சிமென்டினால் நல்லமுறையில் கட்டித்தரப்பட அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை, ஏற்காடு போன்ற மலைகளில் பல பழத் தோட்டங்கள் பழப் பண்ணைகள் செயல்படுவதால் அங்குள்ள மலைவாழ் மக்கள் தினமும் 100 பேர் வரை கூலி பெற்று பிழைக்க வழி தேடிக் கொள்கின்றார்கள். அதைப்போல பச்சை மலைக்கும் பழத் தோட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், மலை ஜாதியினர் வீடுகளுக்கு ''ஒரு விளக்கு மின் திட்டம்'' கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான வீடுகளுக்கு இந்த மின்னிணைப்புகள் கொடுக்கப்படவில்லை. இதனால் அந்த மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, இந்த மின் விளக்குத் திட்டத்தை எல்லா வீடுகளுக்கும் அல்லது எல்லா குடிசைப் பகுதிகளுக்கும் விரைவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பண ஒதுக்கீடுகள் செய்தும் சரியான வேலைகள் நடைபெறவில்லை. சாலைகள் சரியில்லாத காரணத்தினால் மீதமுள்ள முன்னேற்றப் பணிகள் நடைபெறுவது தடைபடுகின்றன.

பஸ் வசதிகளைப் பொறுத்தவரையில், பச்சை மலையில் விடுவதாக ஒரு வருட காலமாகச் சொல்லியும், ரோடுகள் செப்பனிடாத நிலையில் இருப்பதால் வாங்கப்பட்ட இரண்டு மினி பஸ்களும் ஓடாமல் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மலைவாழ் மக்களுக்காகக் கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டே அங்கே விரைவில் ரோடுகளைச் செப்பனிட்டு விரைவில் பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துறையூரிலிருந்து பச்சைமலை டாப்செங்காட்டுப்பட்டிக்கும், செம்புளிச்சாம்பட்டிக்கும் பஸ் வசதிகள் செய்யும்பொருட்டு சாலைகளை உடனடியாகச் செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலைப் பகுதியிலே உள்ள உறைவிடப்பள்ளி ஆசிரியர்கள் சரியாகப் பள்ளிகளுக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. ஆகையினால் பள்ளிகள் நன்முறையில் நடைபெறுவது இல்லை. ஆகவே இதன்மீது அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று





கேட்டுக்கொள்கிறேன். மேலும் பச்சைமலையிலுள்ள பள்ளிகளில் உணவுப் பொருள்களும் காய்கறிகளும் சரியான முறையி போடப்படுவது இல்லை. இதனை அரசு கவனித்து அமைச்சரவர்கள் இதனை உடனே தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

பச்சைமலைப் பகுதியிலே டாப் செங்காட்டுப்பட்டி உறைவிடப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக மாற்றியமைத்த இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், புரட்சி தலைவரின் அரசுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று துறையூர் ஒன்றியத்திலுள்ள செம்புளிச்சாம்பட்டி ஆரம்ப உறைவிடப் பள்ளியினையும் நடுநிலைப்பள்ளியாக இந்தக் கல்வி ஆண்டிலேயே மாற்ற அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வராயன் மலையிலுள்ள சேராம்பட்டு கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் உறைவிடப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றாமல், தனியார் பள்ளி கிருத்துவப் பள்ளி நடுநிலைப்பள்ளியாக மாற்றப்பட்டுள்ளது. அங்குள்ள மலை வாழ் மக்களின் உரிமைகளை காக்கும் பொருட்டு மேற்கூறிய ஆதி திராவிட. உறைவிடப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக்க அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மலைஜாதியினர் ஆகியோர் சமையல் வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால், அவர்கள் 8-வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் பிற்பட்டோர் நலத்துறை உறைவிடப் பள்ளியில், பிற்பட்டோர் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்று அரசாணை உள்ளது எனத் தெரிய வருகிறது. அதே போன்று ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சை மலையில் பல இடங்களில் செக் டேம்ஸ் கட்டி அங்குள்ள நஞ்சை நிலங்களில் அளவை அதிகப்படுத்தி, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு அந்தப் பகுதியின் நீர்வளத்தினையும் அதிகப்படுத்தித் தரலாம். இந்த வசதிகள் கம்பூர், இராமநாதபுரம், செம்புளிச்சாம்பட்டி, புதூர் மணலோடை போன்ற பகுதிகளிலும் இதர பகுதிகளிலும் உள்ளது. இருந்தும் இதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை

ஆகவே இதன் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுத்து தேவையான இடங்களில் செக் டேம்ஸ் பல கட்டி, ஏழை மலை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

பச்சைமலைப் பகுதியில் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைப்பதால் இந்த மலையில் சந்தன எண்ணெய், சந்தன. வாசனைத் திரவியங்கள், இன்னும் இது சம்பந்தப்பட்ட பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால், இங்குள்ள மலை வாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தொழிற்சாலையை எனது தொகுதியிலுள்ள பச்சைமலை பகுதியிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் பொன்னான ஆட்சியிலே, மலைவாழ் மக்களுக்காக, ஆடு மாடுகள், வண்டிகள் வாங்க மானியத்தின் அடிப்படையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. விவசாயி கடன் வாங்குவதற்கு முன்பே, விவசாயிகளிடமிருந்த மானியத் தொகையில் பாதியைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாங்கிக் கொள்கிறார்கள். கிணறு, பம்ப் செட் போன்றவைகளுக்கான கடன்கள் கொடுக்கப்படவில்லை. கிணறுகள், பம்பு செட்டுகள், இல்லாமல் மலைவாழ் மக்கள் மிகவும் வேதனைக்குள்ளாகிறார்கள்.

ஏழை மலைவாழ் மக்கள் அவர்களின் சொந்த இடங்களிலுள்ள மரம், கழிகள், போன்றவற்றை ஆடு, மாடுகள் கட்டும் கொட்டகைகள் போட வெட்டினால், காட்டிலாகாவினர் அவர்களை மிகவும் தொந்தரவு செய்கின்றார்கள். மலைவாழ் மக்கள் அவர்களின் சொந்த உபயோகத்திற்குச் சொந்த மரங்களை வெட்டிக் கொள்ளலாம் என்ற ஆணை இருந்தும் தொந்தரவு செய்கிறார்கள். இதனைத் தடுக்க அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடி மக்களின் குறைபாடுகளைப் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூற பாராளுமன்ற உறுப்பினர் எவரும் இல்லை. ஆகையினால், எங்களது இனத்தைச் சேர்ந்த உறுப்பினருக்குப் பாராளுமன்ற தொகுதி ஒன்றினை ஒதுக்கிக் கொடுத்து, பாராளுமன்றத்திற்குச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களிடம் உள்ள நிலங்களை மற்றவர்கள் வாங்கவும் கூடாது, விற்கவும் கூடாது என்ற அரசு ஆணைகள் இருந்தும் மற்ற இனத்தவர்கள் மலைவாழ் மக்களை ஏமாற்றி வாங்கி விடுகின்றார்கள். இதன்மீது அரசு கடும் நடவடிக்கையுடன் எடுத்து, தகுந்த தண்டனைகள் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.





பொதுவாக, மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் மொத்த தொகைகள் அனைத்தும் அந்த ஆண்டிலேயே செலவிட தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மலைவாழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைக் கவனிக்க தனி இயக்குநரகம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கைமீது நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று தமிழ்நாட்டிலே ஆதிதிராவிட மக்கள் நல்லமுறையிலே வாழவேண்டுமென்று நினைக்கின்ற அரசு முதல் முறையாக தீண்டாமைச் சட்டத்தின் மூலமாக இருக்கிற அந்த நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் கிராமங்களில் இருக்கிற தனிப்பட்ட ஒரு நல்லவரை, 'இவர் இன்னதைச் சொன்னார்' என்று அவர்மீது காழ்ப்பு உணர்ச்சி கொண்டிருக்கிற வேறு ஒருவர் அரிசன மக்களைப் பயன்படுத்தி அந்த நல்லவர்மீது கேஸ் போடுவதன் காரணமாக நல்லவர்கள் சிரமப்பட வேண்டியிருக்கிறது. ஒரு நல்லவரை போலீஸ் ஸ்டேஷன் முன்னால் கொண்டுபோய் நிறுத்தி, அதன் காரணமாக அவருக்கு 5,000 ரூபாய் 10,000 ரூபாய் செலவு வரக்கூடிய வகையிலே தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டுபோய் நிறுத்துகிறது.

கடந்த 15 ஆண்டு காலமாக கிராமங்களில் கிராம மக்கள் செயல்படுவதற்கு ஊராட்சி மன்றங்கள் இல்லாமல் இருந்த நேரத்திலே இந்தத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் தேவைப்படும் நிலைமை இருந்தது. ஆனால் இன்று கிராமப்புறங்களில் ஊராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்திருப்பதால், ஒரு தனிப்பட்ட நபர் அரிசன மக்களை ஏசினார் என்று சொன்னவுடன் அவர்மீது கேஸ் போடுவதற்குப் பதிலாக கிராமத்திற்கு 5 பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்கள் முடிவு செய்யலாம். தனிப்பட்ட ஒரு நபரை ஒருவர் திட்டினார் என்று சொன்னால் 5 பேர் கொண்ட குழு மூலம் விசாரித்து, அவர் சொல்வது சரிதான், நியாயம் தான் என்று தெரிந்தால், அதன் பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்கு எழுதுவதற்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும். அப்படி இல்லை என்றால்....

[1986 ஏப்ரல் 24

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஏதோ ஆதிதிராவிடர் மக்கள் காழ்ப்பு உணர்ச்சி கொண்டு, அதன் காரணமாக சில நல்லவர்கள்மேல் கேஸ் போட்டு 5,000 ரூபாய், 10,000 ரூபாய் செலவை ஏற்படுத்துகிறார்கள், தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்து சரியல்ல. ஆதிதிராவிட மக்கள் பயந்துகொண்டு தான் இன்னமும் வாழ்ந்துவருகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் எந்தவிதமான விவரமும் இல்லை. ஒரு தகவல் கூட இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் காரணமாக சில நல்லவர்கள்மீது அவர்களுக்கு வேண்டாத சிலர் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக காழ்ப்பு உணர்ச்சி கொண்டு, அரிசன மக்களைப் பயன்படுத்தி கேஸ் போடுகிறார்கள் என்பது இன்றைக்கு கிராமங்களில் இருக்கிறது. அதைத் தான் நான் சொல்கிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு இன்று இருக்கிற ஆதரவை துணையாக்கி, ஒரு முதலாளிமீது அல்லது ஒரு நல்லவர்மீது கேஸ் போட வேண்டுமென்றால் அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தின் மூலமாக இதை நிறைவு செய்வதற்கு ஒரு கமிட்டி அமைத்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிட மக்களுக்கு தற்போது தேவையாய் உள்ளது பொருளாதார முன்னேற்றம். தொழில் செய்வதற்கான கடன்கள் தேவையான அளவு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இல்லை என்றால் நஷ்டம் ஏற்பட்டு, கொடுத்த கடனை திரும்பக் கட்ட இயலாமல் போய்விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

தற்போது சாராயக் கடைகள் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் இடங்களை ஒட்டியே அமைந்துள்ளன. இது அவர்களின் முன்னேற்றத்திற்கு தடை போடக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, சாராயக் கடைகளை ஆதிதிராவிட மக்கள் இருக்கக் கூடிய பகுதிகளுக்கு அப்பால் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. கருங்குளம் ஊராட்சி ஒன்றியப்பகுதிகள், சாத்தாங்குளம் ஒன்றியப்பகுதிகள், ஆழ்வார் திருநகரி ஒன்றியப்பகுதிகள் ஆகியவற்றில் வாழும் ஆதிதிராவிட மக்களில் அநேகர் வீட்டுமனை இல்லாத ஏழைகள். அவர்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டும்.



1986 ஏப்ரல் 24] [திரு. எஸ். என். இராமசாமி]

பல கிராமங்களில் வீடுகள் இன்றி, அவர்கள் வானம் பார்த்த கூரைக்குக்கீழே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு மானியத்துடன் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று செந்நெல்பட்டி, பக்கபட்டி, தாதுக்குழி, தாதன்குளம், கருங்குளம், கால்வாய், ஆலங்கிணறு, வாலத்தூர், குளிப்பன்குளம், மூக்குப்பீரி, கல்லாம்பாறை, தென்திருப்பேரை புரையூர், ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிட ஏழை மக்களுக்கு மானியத்துடன் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதைவசதி இல்லாத நிலைமையில் பல ஆதிதிராவிட கிராமங்கள் உள்ளன. குறிப்பாக செந்நெல்பட்டி ஆதிதிராவிடர் காலனி, ஆழ்வார்திருநகரி ஒன்றியம், வாகைக்குளம், வெள்ளரிக்காயூரணி ஆதிதிராவிடர் காலனி பக்தவாசல் ஆகிய ஆதிதிராவிட கிராமங்கள் பாதை வசதியின்றி உள்ளன. அவைகளுக்குச் சாலை வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசூர் ஊராட்சி கலியன்விளையில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி பட்டா வழங்குகிறபோது அவர்கள் 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலத்திற்கு அந்த நிலத்தை விற்க முடியாத நிலைமையில் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசூர் ஊராட்சி பறையன்விளை மக்களுக்கு இடுகாடு இல்லை. ஊரை ஒட்டி திருச்செந்தூர் தேவஸ்தான புஞ்சை தரிசு நிலம் உள்ளது. இந்த நிலத்தில் ஒரு ஏக்கர் நிலம் இடுகாட்டுக்காக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியத்தில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களில் டிப்ளமோ படித்தவர்கள் பலர் பணிபுரிகின்றனர். இரண்டாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் இளநிலைப் பொறியாளராக ஆவதற்கு தகுதியுடையவர்கள். தற்போது தகுதி பெற்ற டிப்ளமோதாரர்கள் இளநிலைப் பொறியாளர்களாக ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தினால் ஆதிதிராவிட மக்கள் பயன்பெற மாவட்ட அளவில் ஓர் வழிகாட்டும் குழு அமைத்து ஆலோசனை கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழங்குடி மக்களுக்குக் கட்டித்தரப்படக்கூடிய வீடுகளை மிக நல்ல முறையில் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் விழுந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஹாஸ்டல்களில் பணிபுரிகிற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்து அங்கே தங்கிப் படிக்கிற மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்பான முறையில் உதவக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு ஹாஸ்டல்களில் தண்ணீர் வசதி, துப்புரவு வசதி போன்றவை இல்லாமல் இருக்கிறது. அவற்றை எல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்** : பேரவையில் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## வரவு—செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 31

### பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி.

**திரு. தமிழ்மணி** : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக்கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில உணர்வுகளைச் சொல்வதற்கு முன்னால் இன்றைய தினம் பாமரர்களுக்கும் ஏழைகளுக்கும் அருளுகிற பண்பாளராக இருக்கிற மக்கள் தலைவர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்து சில உணர்வுகளைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.





இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவையில் ஆதி திராவிட பெருங்குடி மக்கள் பல்வேறு நன்மைகளை அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதை யாரும் மறுப்பதற்கில்லை. பொதுவாக எனக்கு முன்னால் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களில் அவர்கள் உணர்வுகளை எல்லாம் எடுத்து வைத்தார்கள். அந்நிலையில் நான் மாறுபட்ட எனது உணர்வுகளை இங்கே சொல்வது சிறப்பாக இருக்கும் என்று கருதி அதற்கு என்னை நான் ஆட்படுத்திக் கொள்கிறேன்.

இன்றையதினம் கிராமப்புறங்களில் புரட்சித் தலைவர் அவர்கள் சீரிய திட்டமாக ஒரு விளக்குத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அத்திட்டத்தினால் ஏழை எளிய, நலிந்த மக்கள் நன்மை அடைகிற அதே நேரத்தில் ஆதி திராவிட பெருங்குடி மக்கள் பெரிதும் நன்மை அடைந்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. முதியோர் உதவித்தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை என்று இம்மாதிரித் திட்டங்களை எல்லாம் ஊதியம் பெற முடியாத அல்லது பணம் சம்பாதிக்க முடியாத வயது முதிர்ந்தவர்களுக்காக புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதில் பெரிதும் நன்மை அடையும் மக்கள் ஆதி திராவிட பெருங்குடி மக்களாகத்தான் இருக்க முடியும். இன்றையதினம் பள்ளிகளில் பயிலும் இளம் சிறார்களுக்கு சீருடை அணிய முடிகிறது என்று சொன்னால் அந்தச் சீருடை பெறும் மாணவர்கள் பெரும்பாலோர் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அத்தகைய திட்டங்களை இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்ததினால் ஆதி திராவிட பெருங்குடி மக்கள் பெரிதும் நன்மை அடைகிறார்கள்.

அது மட்டுமல்ல. இலவசப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் வாயிலாக அதிக நன்மை அடைகிற மக்கள் ஆதி திராவிட பெருங்குடி மக்களாகத்தான் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்றைய தினம் எங்கள் தானைத் தலைவர் சத்துணவு தந்த சத்திய சீலர், எங்கள் புரட்சித் தலைவர் அமைச்சரவையின் சார்பில் அறிவிக்கப்பட்டு நடந்து வரும் சத்துணவுத் திட்டத்தினால் கிராமப் புறத்திலுள்ள ஆதி திராவிட பெருங்குடி மக்கள் பெரிதும் நன்மை அடைகிறார்கள். இத்தகைய திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தியவர் மக்கள் தலைவராக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். அது மட்டுமல்ல. ஒரு ஏழை ஆதி திராவிடர் இறந்துவிட்டார் என்று சொன்னால், அடக்கம் செய்வதற்கு ரூ. 50 உதவித் தொகையாகக் கொடுக்கும் மனப் பக்குவத்தைப் பெற்ற அரசும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். அது மட்டுமல்ல. உரம் மற்றும் விதை போன்ற விவசாயப் பொருள்களை எல்லாம் அளிக்கிற அரசும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். அது மட்டுமல்ல,

கூட்டுறவு முறை மூலம் ஏழை எளிய ஆதி திராவிட பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்கிற வகையில் ஒரு திட்டத்தை செயல் படுத்தியிருக்கிற அரசும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். அது மட்டுமல்ல. கிராம அதிகாரிகளாக நிய மிக்கப்பட்ட 2000-க்கு மேற்பட்ட ஆதி திராவிட பெருங்குடி மக்கள் இன்றைய தினம் பணியாற்றுகிறார்கள் என்று சொன் னால் அது எங்கள் இனிய தலைவர் அமைச்சரவையின் முடிவால் ஏற்பட்டதுதான். இத்தகைய நன்மைகளை இன்றைய தினம் ஆதி திராவிட பெருங்குடி மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார் கள். இத்தகைய சிறப்பான ஆட்சியில், மக்கள் தலைவரின் அரசை, ஆதி திராவிட பெருங்குடி மக்கள் எல்லாம் இன்றைய தினம் பொற்கால அரசாக எண்ணுகிற இந்தத் தருணத்தில் அந்தச் சமுதாயத்தின் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற நான் சில உணர்வுகளைச் சொல்வது என் கடமை என்று சொல்லி சில உணர்வுகளைச் சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். இன்றைய தினம் க்ரூப் ஹௌசிங் என்று சொல்கிற காலனி வீடுகள், மின் விளக்குகள் இவற்றையெல்லாம் செய்து இருக்கிற இந்த அரசு, ஆதி திராவிட மக்களுக்கு பல நன்மை களைச் செய்திருக்கிற இந்த அரசு ஒரு சில நன்மைகளை இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டும் என்று கனிவாகவும் பணிவாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொண்டு அந்த சமுதாய மக்களுக்கு மேலும் நன்மைகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

குறிப்பாக இன்றையதினம் 18 சதவீதம் என்றிருக்கிற அந்த விகிதாச்சாரத்தை 25 சதவீதம் ஆக உயர்த்த வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். 25 சதவீதம் ஏன் உயர்த்த வேண்டுமென்றால், மக்கள் தொகைக்கு ஏற்ப அந்த விகிதாச்சாரம் இருக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் என்னுடைய எண்ண உணர்வுகளைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அது மட்டுமல்ல, வீடுகள் கட்டுவதற்கு ரூ. 6,000 போதாது என்று பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார் கள். அவசியம் ரூ. 10,000 என்ற உறுதியான முடிவினை அரசு எடுக்க வேண்டுமென்று என் எண்ணத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கப் படுகின்றது என்று சொல்லுகிறார்களே தவிர, அந்தப் பட்டாக் களைக் கொடுப்பதில் அதிகாரிகள் காலதாமதம் செய்வதால், அப்படிப்பட்ட சிறு சிறு தவறுகளினால் அரசுக்கு ஒரு களங்கம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த மாதிரியான களங்கம் ஏற் படாத வகையில் ஆதி திராவிட மக்களுக்கு உடனடியாக பட்டா கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை உடனுக்குடன் செய்து தர வேண்டுமென்று எங்கள் இனிய தலைவர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





இன்றைய தினம் ஒரு பதவி உயர்வு வருகிறது என்று சொன் னால், விகிதாச்சார அடிப்படையில், கம்யூனல் ஜீ.ஓ. என்று சொல்லப்படுகின்ற அந்த அடிப்படையில் பதவி உயர்வு கொடுக் கப்படுகின்றது என்றாலும், வட்டாட்சியர் அலுவலகத்தில் டெபுடி தாசில்தார் அளவுக்குத்தான் ஜாதியின் அடிப்படையில் பதவி உயர்வு தரப்படுகிறது. தாசில்தார் பதவி உயர்வுக்கு வருகின்ற போது, அது காமனாகப் போய்விடுகிறது. தாசில்தார் பதவி உயர்வு கொடுக்கின்ற நேரத்திலே ஜாதியின் அடிப்படையில் கொடுப்பதில்லை. எனவே, தாசில்தார் பதவி உயர்வையும் ஜாதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, எல்லா நிறுவனங்களிலும் 18 சதவீதம் சட்ட பூர்வமாக பதவிகள் நிறைவு செய்யப்படுகின்றதா என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், பல இடங்களில் 18 சதவீதம் நிறைவு செய்யப்படாமல் இருக்கிறது. அத்தகைய இடங்களில் அரசு உடனடியாக தலையிட்டு, 18 சதவீதம் உடனுக்குடன் பூர்த்தி செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

பொதுவாக, கிராமப் புறங்களிலுள்ள ஏழை எளிய ஆதி திராவிட மக்களுக்கும், மற்ற சமுதாயத்தினருக்கும் இடையே அடிக்கடி சண்டை வருகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் பொதுக் கிணறு, கோவில், பாதை, சுடுகாடு ஆகிய வற்றால்தான். அது போன்ற சில விஷயங்களைக் குறித்துதான் பிரச்சினைகள் எழுகின்றன. அத்துடன் அடிதடி சண்டையும் வருகிறது. அதையெல்லாம் போக்குவதற்கு ஏழை எளிய ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் பொதுக் கிணறு கள் வெட்டுவதும், சாலைகள் அமைப்பதும், சுடுகாடு போடு வதற்கு வேண்டிய பாதைகளை அமைப்பதும் போன்ற காரியங் களை அரசு உடனுக்குடன் செய்து தர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் என் இனிய தலைவர் அவர்களுக்கு அன்பு வேண்டுகோளாகச் சொல்கிறேன்.

இன்றைய தினம் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு அர சியல் கட்சித் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள் ஆகியோர் களுடைய பெயர்களை வைக்கின்றார்கள். ஆனால், தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரை அருள் கூர்ந்து சென்னையிலுள்ள லா காலேஜ் என்பதை மாற்றி, டாக்டர் அம்பேத்கார் லா காலேஜ் என்று பெயரிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்று சொன்னால், அவர் டாக்டர் மாத்திர மல்ல. சட்ட நிபுணரும், இந்திய அரசியல் சட்டத்தை உரு வாக்கிய மாமேதையும் ஆவார். அத்தகைய தானைத் தலைவர் அவர்கள்பெயரை மதராஸ் லா காலேஜுக்கு வைக்க வேண்டு

மென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லையென்று சொன்னாலும், தமிழ்நாடு முழுவதிலும் இருக்கிற லா காலேஜுகளை ஒன்றாகச் சேர்த்து லா யுனிவர்சிடி ஒன்றை ஏற்படுத்தி, அந்த லா யுனிவர்சிடிக்கு டாக்டர் அம்பேத்கார் யுனிவர்சிடி என்று பெயர் வைக்க வேண்டும் என்று எங்கள் இனிய தலைவர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச்சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு மாதம் ரூ. 500 சட்டப்படி உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. ஆனால், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு அப்படி ரூ. 500 கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்திலே இருக்கிறதே தவிர, இதுவரை நடைமுறையில் அமுல்படுத்தப்படவில்லை. ஆகவே, அருள்கூர்ந்து அந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கின்ற அருமை அமைச்சர் அவர்கள் உடனுக்குடன் அந்த ஆதி திராவிட வழக்கறிஞர்களுக்கும் ரூ. 500 கொடுக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தை, இதய பூர்வமான எண்ணத்தை எங்கள் இனிய தலைவர் பாதத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4-10)

அதுமட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது 8 மாவட்டங்களுக்கு மட்டும் ஒரு கமிட்டியை அமைத்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 8 மாவட்டங்களுக்கு மட்டும் என்று இன்றைக்கு இருக்கிற கமிட்டியை தமிழ்நாடு முழுவதும் அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நினைவுறுத்துவது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன். அது மட்டும் அல்ல. ஸ்டேட் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை ஆதி திராவிடர்களுக்கு என்று அமைப்பார்கள். அந்தக் கமிட்டியும் இது நாள் வரையில் அமைக்கப்படவில்லை. அதையும் உடனுக்குடன் அமைத்தால் சரியாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்வது என்னுடைய உரிமை என்றும், நியாயம் என்ற முறையிலும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, 1-1/2 கோடி மக்கள் கொண்ட ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு என்று அந்தத் துறை தனியாக இயங்கவில்லை. சமூக நலத்துறையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனே தனியாகப் பிரித்து ஆதி திராவிட நலனுக்கு என்று ஒரு தனித் துறையாக அமைக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். காரணம் 1-1/2 கோடி மக்களுக்கு மேல் வாழ்கின்ற அந்த சமுதாயத்திற்கு ஒரு விமோசனம் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால், அதற்கென்று தனியாக ஒரு நிர்வாகம்



இருக்க வேண்டும். தனியாக ஒரு அலுவலகம் இருந்தால்தான் அதை உடனுக்குடன் சீர்படுத்தி சரிப்படுத்த சரியாக இருக்கும் என்ற என்னுடைய எண்ணத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல. இன்றையதினம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாநில சர்க்கார் 9 ஆயிரம் ரூபாயை உதவித் தொகையாகக் கொடுக்கிறார்கள். கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையாகக் கொடுக்கிறார்கள். ஆனால் ஆதிதிராவிட மாணவர்களுக்கு மத்திய சர்க்கார் 6 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் கொடுக்கிறார்கள். அதிலும் வித்தியாசம் இருக்கிறது. எஸ்.சி. மாணவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், பி.சி. மாணவர்களுக்கு 9 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி இரு இனத்திற்கும் 9 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கூறி, அதை உடனுக்குடன் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மாற்றி அமைக்க வேண்டும் என்று என் கருத்தை இந்த நேரத்திலே அந்த மக்களின் சார்பாக கோரிக்கையாக வைக்கிறேன்.

அது மட்டும் அல்ல, ஒரு சாதாரண ஆதி திராவிட குடிமகன் இறந்து விட்டால், அவனுடைய சவ அடக்கத்திற்கு 50 ரூபாய்தான் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. அந்த 50 ரூபாயில் ஓலையும் மூங்கிலும் வாங்குவதற்கே போதாத நிலையில் அவனுடைய இறுதி ஊர்வலம் எப்படி நடக்கும்? ஆகவே இந்த அவை மூலமாக மாண்புமிகு அமைச்சருக்கு தாழ்வாகவும், பணிவாகவும் என்னுடைய வேண்டுகோளை விடுக்கிறேன். தயவு செய்து அதற்காக 200 ரூபாய் கொடுங்கள். அதற்கு, யாருடைய சிபாரிசும் தேவையில்லாது, அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் சொன்னாலே போதும் என்ற நிலையில் எளிதாக்கி உருவாக்கித் தந்து, ஆதிதிராவிட மக்கள் இறந்து விட்டால், அவர்களுக்கு உடனடியாக 200 ரூபாய் கிடைக்க வழி வகை செய்து தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, மரங்களில் ஏறுகிறவர்கள் தவறி விழுந்து இறந்து விட்டால், மீன் பிடிக்கச் சென்றவர்கள் தண்ணீரில் தவறி விழுந்து இறந்து விட்டால் என்று பல்வேறு தொழில்களைச் செய்கின்றவர்களும் இறந்து விட்டால், அவர்களுக்கெல்லாம் உதவித் தொகையை அளிக்கின்ற ஒரு சர்க்காராக இருந்து கொண்டிருக்கின்றது. அது போலவே சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், கைவண்டி இழுக்கின்ற தொழிலாளி, குதிரை வண்டி ஓட்டுகின்ற தொழிலாளி போன்றவர்கள் வெய்யிலிலே வண்டிகளை இழுத்துச் செல்லும்போது துள்ளி விழுந்து சாகின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே,

அவர்களுக்கும் உதவித் தொகை கொடுப்பதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதுமட்டும் அல்ல, டி.ஐ.ஐ.சி. போன்ற நிறுவனங்களில் சிறு தொழில்கள் செய்வதற்கு கடன் உதவி கொடுக்கின்ற நேரத்தில் ஒரு இலட்சம் ரூபாய் கடன் பெற வேண்டுமானால், 20 ஆயிரம் ரூபாயை அந்த ஆதி திராவிட குடிமகன் முன் பணமாக கட்ட வேண்டும் என்ற சூழ்நிலை இருப்பதைச் சொல்லுகிறார்கள். அந்த முன்பணத் தொகையை ஆதி திராவிட மக்களால் கட்டமுடியாததால், அரசு அளிக்கின்ற பல சலுகைகளையும் பெறமுடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க அந்த முன்தொகையை அரசே முன் வந்து அவர்களுக்காக கட்டி, அவர்களுக்கு தொழில் செய்வதற்கு வேண்டிய மற்ற உதவிகளையும் செய்து கொடுத்தால் அது அந்த இன மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, பாதாளச் சாக்கடையில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இதனால்பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த தொழிலாளிக்கு விமோசனம் ஏற்படுத்துகின்ற வகையிலே அந்தப் பணிக்கு வேண்டிய நவீன இயந்திரங்களை வாங்கிக் கொண்டு வந்து பயன்படுத்தி, அந்த பாதாள சாக்கடை வேலை செய்யும் தொழிலாளருக்கு ஒரு நிறைவு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று என்னுடைய தொகுதியிலே உள்ள ஆதி திராவிட மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய திருப்போரூர் தொகுதியிலே ஆதி திராவிட நலத்துறையின் சார்பிலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு ஹாஸ்டல் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றது. என்றைக்கு விழுந்துவிடுமோ என்ற அச்ச நிலையில் இருக்கிறது. அதை உடனுக்குடன் பழுதுபார்த்து, புதுப்பித்து, செப்பனிட்டு, சீர்படுத்திக் கொடுத்தால், அங்கிருக்கின்ற ஆதி திராவிட மாணவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆகவே, அதை அவசியம் செய்ய வேண்டும் என்று மிகவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கோரிக்கைகளை எல்லாம், நான் சொன்ன எண்ணங்களின் அடிப்படை உணர்வுகளை புரிந்து கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக கண்டிப்பாக செய்து கொடுத்து நிறைவேற்றி வைப்பார்கள் என்று நான் கண்டிப்பாக நம்புகிறேன். காரணம், அவர்களுடைய அரசுதான், இன்றையதினம் மிகவும் ஏழை எளியவனாக இருக்கும் என்னைப் போன்றவர்களை எல்லாம் சட்ட மன்ற உறுப்பினராக ஆக்கியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய





நலம் நிறைந்த பலம் நிறைந்த அரசாக இது இருக்கின்ற காரணத்தால், நான் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த சமுதாயத்தின் சார்பிலே கடைசியாக ஒரு வேண்டுகோளை விடுக்க எண்ணுகிறேன். சென்னையில் அமைந்திருக்கும் சட்டக் கல்லூரிக்கு, அதனுடைய பெயரை மாற்றி, அம்பேத்கார் சட்டக் கல்லூரி என்று பெயரிட வேண்டும் என்று அந்த மக்களின் சார்பாக வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றிகூறி, வணக்கத்தையும் கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு காலை முதல் நம்முடைய சட்டப் பேரவையில் இந்தத் துறை குறித்த விவாதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நான் கொஞ்சம் உன்னிப்பாக அவைகளை கவனித்துக் கொண்டிருந்தேன். பெரும் கட்சித் தலைவர்கள் எல்லாம் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர்களில் யாராவது ஆதி திராவிடர் நலம் குறித்து பேசுவார்கள் என்று காத்திருந்தேன். யார் யார் பேசுகிறார்கள் என்று உன்னிப்பாக கவனித்து வந்தேன். ஆனால், காலையிலிருந்து இந்த மானியத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகளில் மிகப் பெரிய தலைவர்களுக்கு அக்கறை இல்லையோ என்று நான் பயப்படுகின்ற அளவிற்கு இங்கே என்னுடைய வருத்தம் இருந்து கொண்டிருக்கிறது. மாலையில் நடக்கின்ற இந்த நிகழ்ச்சிக்கு எதிர்க்கட்சி முன் வரிசையில் பார்த்தால் யாருமே இல்லையே என்ற வருத்தமும் எனக்கு ஏற்படுகிறது. இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டிருப்பது மிகப் பெரிய சமுதாயத்தைப் பற்றிய பிரச்சனையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களை பேச வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் எஸ். என். இராமசாமி அவர்களும் மற்றவர்களும் காலையில் பேசியிருக்கிறார்கள்.

திரு. கு. தமிழரசன் : துணைத்தலைவர் அவர்களே, ஒரு வேளை இனிமேல் பேசுவதாக இருந்தால் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பில் 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும் என்றும், அதில் 90 இலட்சத்திற்கு மேற்பட்ட

தாழ்த்தப்பட்ட மலைவாழ் பழங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் 1981ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தை தான் அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். 1986ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின்படி ஒரு கோடியே 20 இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது இந்த மாநில மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும். நம்முடைய தமிழக அரசின் மொத்த பட்ஜெட் 3,260 கோடியாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, ஆதிதிராவிட நலத்துறை தந்திருக்கின்ற பட்ஜெட் 47 கோடி ரூபாய் தான். ஐந்தில் ஒரு பங்கு மக்கள் தொகையை கொண்டிருக்கின்ற இந்தச் சமுதாயத்திற்கு மொத்த பட்ஜெட்டான 3,260 கோடியில் ஒதுக்கியிருக்கின்ற தொகை 47 கோடி ரூபாய்தான். இது போதாது. இந்தச் சமுதாயத்திற்கு எப்போதுமே பட்ஜெட் தொகையில் ஐந்தில் ஒரு பங்கை ஒதுக்குகின்ற நிலைமை வருமானால் அது சிறப்புடையதாக இருக்கும்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல குறிப்பைத் தந்திருக்கின்றார்கள். 'தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக நிலையில் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள், எனவே, அவர்களுடைய மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வு காண இந்த அரசு விழைகின்றது' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இதை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் 39 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பிறகும் இன்னமும் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற நிலையை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த நிலையை நான் வரவேற்கிறேன். அந்த நிலைமை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் எல்லா மாநிலங்களிலும் இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

(மாலை 4–20)

நடைமுறையிலே ஏராளமான பிரச்சனைகள், நித்தம் நித்தம் கொடுமைகள் தினசரி வெளிவரக்கூடிய செய்திதாள்களைத் புரட்டிப் பார்த்தால், தொடர் கதை வருகிறதோ, இல்லையோ தாழ்த்தப்பட்ட மக்களின் சோகக் கதைகள் வந்து கொண்டு இருக்கின்றன. இந்த நிலையிலேதான் இன்றைக்கு நம்முடைய எட்டாவது சட்டமன்றத்தின் இரண்டாவது ஆண்டுக் கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் மானியக்கோரிக்கை விவாதிக்கப் பட்டுக் கொண்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப் பட்டு இருக்கின்றன. மகிழ்ச்சி, வரவேற்கிறேன். பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில் இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. ரெட்டியாக இருப்பவர்கள், கொண்டா ரெட்டி என்று சான்றிதழ் வாங்கினால், அவர்கள்



கொண்டா ரெட்டி என்று ஆகிவிடுகிறார்கள். நாய்க்கன்களாக இருப்பவர்கள், 'காட்டு' என்ற வார்த்தையை சேர்த்துக் சான்றிதழை வாங்கிவிட்டால், அவர்கள் 'காட்டு நாய்க்கன்' என்று ஆகிவிடுகிறார்கள். அதேபோல் வேளாளராக இருப்பவர்கள் 'வீர' என்ற வார்த்தையைச் சேர்த்து சான்றிதழ் வாங்கிவிட்டால் அவர்கள் 'வீர வேளாளர்கள்' என்று ஆகிவிடுகிறார்கள். பிறகு கொண்டா ரெட்டி, காட்டு நாய்க்கன், மற்றும் வீர வேளாளர்கள் என்று இவர்கள் எல்லாம் பழங்குடியினர் பட்டியலிலே வந்துவிடுகிறார்கள். இவர்கள் எல்லாம் உண்மையிலேயே பழங்குடி மக்கள்தானா ? என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. இந்த கொண்டா ரெட்டி என்ற சாதியினர் இவர்களுடைய பூர்வீக இடமாக இருக்கின்ற பக்கத்தில் உள்ள ஆந்திர மாநிலத்தில் கூட பழங்குடியினர் பட்டியலிலிருந்து எடுத்துவிட்டது ஆந்திர அரசு. ஆனால் நமது தமிழகத்திலே மட்டும் இந்த கொண்டா ரெட்டி என்ற அந்த சாதியை பழங்குடி மக்கள் பட்டியலிலே சேர்த்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதைத் தடுத்தாக வேண்டும். அதை எடுத்தாக வேண்டும். இப்படிப் பட்ட முறைகேடுகளின் மூலமாக போலிச்சான்றிதழ் பெறுவதற்கு இவைகள் உடந்தையாக இருப்பதால் இவைகளைத் தடுத்தாக வேண்டும்.

மேலும் சில நாட்களுக்கு முன்னால் நான் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். நரிக்குறவர்களையும் இந்த பட்டியலிலே சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று ஆதி திராவிட அமைச்சர் அவர்கள் நரிக்குறவர்கள் மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள். இது தேவைதானா ? அதுமட்டுமல்லாமல சட்டமன்றத்திலே கூட, சட்டமன்ற உறுப்பினர் கூடலூர் வேலு அவர்கள் ஒரு கேள்வி எழுப்பியபோது, 'குரும்பர்' சமுதாயத்தை, பழங்குடி சமுதாயத்திலே சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும், பரிந்துரை செய்யும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து கொண்டு இருக்கின்ற நாங்கள் இந்தக் குழப்பங்களை வேறு ஏற்றுக்கொள்ள வேண்டுமா ? அவர்களை எல்லாம் மேலும் மேலும் இந்தப் பட்டியலிலே சேர்ப்பதாலே எங்களுக்குள் போட்டிகளையும், பிரச்சனைகளையும் குழப்பங்களையும் அது உருவாக்காதா ? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஒரே ஒரு எழுத்தைத் மாற்றி விட்டால், அவர்கள் பழங்குடியினராக ஆகிவிடுகிறார்கள். 'குரும்பர்' என்று இருந்தால், அவர்கள் பிற்பட்டவர்கள். ஆனால், 'குரும்பன்ஸ்' என்று அதை ஆக்கிவிட்டால், அவர்கள் பழங்குடியினர். எனவே இப்படி எல்லாம் எதற்காக நாம் ஒரு அட்டவணையை வைத்து இருக்க வேண்டும். கேட்டால் எழுத்துத் தவறு என்றுசொல்கிறார்கள். சான்றாக ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன், [illegible]

வங்கியிலே கிருஷ்ணவேணி என்ற ஒரு பெண்மணி, அவர் குரும்பர் வகுப்பைச் சேர்ந்தவர். அவர்கள் ஒரு எழுத்தை மாற்றி, குரும்பன்ஸ் என்று போட்டுக் கொண்டார்கள். உடனே தாழ்த்தப்பட்ட பழங்குடி என்று சொல்லி வேலை பெற்று பணியாற்றிக் கொண்டு இருந்தார்கள். ஆர்.டி.ஓ. அவர்களிடம் சொல்லி, தக்க விசாரணை செய்யச் சொல்லி, நிலைமையைப் பரிசீலிக்கச் சொன்னோம். என்ன நடந்தது? நீதிபதி உடனே அதற்கு ஒரு தடையாணையை பிறப்பித்துவிட்டார்கள். என்ன துரதிருஷ்டமோ தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனை என்றால், எதற்கெடுத்தாலும் நீதிபதிகள் தடையாணை தந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரு காலத்திலே பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் சொன்ன அந்த வாசகம் எனக்கு நினைவுக்கு வருகிறது. 'நீதிபதிகளுக்கு நீதிப் போக்கை விட சாதிப்போக்கு மேலோங்கி இருக்கிறது'. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்றைக்கு நம்முடைய நீதிபதிகளிடம் இருந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய நீதிபதிகள் பிள்ளை பெறுவதற்கும், சாவதற்கும் தவிர, வேறு எதற்கு எடுத்தாலும் தடை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் இப்படித்தான் புறக்கணிக்கப்பட்டு கொண்டு இருக்கிறது. எனவேதான் நம்முடைய மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்கள் நீதிமன்றம் குறித்து எடுத்த ஒரு நிலையை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வரவேற்கிறேன். நீதிபதிகள் இப்படி சாதிப் போக்கிலே நடந்து கொள்கிறபோது, சட்டமன்றம் தலையிடுவதிலே தவறே இல்லை என்று கருதுகிறேன். ஏன் இதைச் சொல்ல வேண்டியதிருக்கிறது என்று சொன்னால், வருத்தத்தோடு சொல்கிறேன். கடந்த 10 நாட்களுக்கு முன்னால், இங்கே பேசுகிறபோது, கேசவன் என்கிற ஒருவர் போலிச் சான்றிதழ் பெற்று பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அடுத்த நாளே சமூகநலத்துறை நடவடிக்கை எடுத்தது. அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். ஆனால், மறுநாளே நீதிமன்றத்திற்குப் போனார். தடை பெற்றுக்கொண்டு வந்தார். அங்கே அதிகாரியாக இருந்து கொண்டு இருக்கிறார். இப்படியாக அவர், 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் என்று இந்த வழக்கு முடிகிற வரையில் அதிகாரியாக இருந்து கொண்டு, பதவி உயர்வு பெற்றுக்கொண்டு, அனுபவித்துக் கொண்டு இருப்பார்கள் என்று சொன்னால், எங்களுடைய சலுகைகளுக்கு என்ன பாதுகாப்பு? எங்களுடைய உரிமைகளுக்கு என்ன பாதுகாப்பு என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது கூட ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். கோவையிலே பவானி வட்டத்திலே. முராரி என்ற கிராமத்தில் சின்னதம்பி என்ற ஒருவர், அவர் கொண்டாரெட்டி. இல்லை என்பதற்கு தகுந்த ஆதாரம் இருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். அப்படி ஒரு சான்றிதழ் வாங்கி அவர்கள் இன்றைக்கு





தந்தித்துறையிலே சூப்பிரன்டென்டாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி பல்வேறு உதாரணங்களைச் சொல்லிக் கொண்டு இருக்கலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு நிலைமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன.

கல்வி வளர்ச்சிக்காக நம்முடைய கொள்கைத் திட்டத்திலே ஏராளமான குறிப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட நலத்துறை, கிராமப் புறங்களில் நடத்திக் கொண்டிருக்கிற பள்ளிகளுக்குப் போவோமானால், ஆசிரியர்களே உட்காருவதற்கு நாற்காலி இல்லை; மேசைகள் இல்லை. மாணவர்களுடைய நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. பல்வேறு கிராமங்களுக்கு நேரில் போய், தாழ்த்தப்பட்ட துறையின் சார்பாக நடந்துகொண்டிருக்கிற ஆரம்பப்பள்ளிகளிலே சென்று விசாரித்தால் அங்கே ஆசிரியர்களுக்குக்கூட மேசை இல்லை, நாற்காலி இல்லை. மரத்தடியிலே உட்கார்ந்துகொண்டு ஏதோ தட்டுமுட்டு சாமான்களை வைத்துக்கொண்டு அங்கே பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கிற அவலநிலையைப் பார்க்கவேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புஸ்தகம் தருகிறார்கள்; அது கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே தரப்படவேண்டும். ஆனால் நிலைமை என்ன? அடுத்த மாதம் தேர்வு என்றால் அப்போது புத்தகம் தருகிறார்கள். எப்படி அந்த மாணவன் படிப்பான்? எப்படி தேறுவான்? புரிந்து கொள்ள முடியவில்லை. நாம் தருகிற அந்தச் சலுகைகள் உரிய நேரத்திலே தக்க முறையிலே போய்ச் சேர்ந்தாக வேண்டும். அதுதான் சலுகையாக இருக்க முடியும். ஏதோ தருகிறோம். எப்படியோ தருகிறோம். வெறும் பெயரளவிற்குத் தருகிறோம் என்கின்ற நிலைமை இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதை மாற்றியமைத்தாக வேண்டும். சாதாரண பள்ளிக்கூடங்கள் இருக்கட்டும்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிக்கிறவர்களுக்கு பயிற்சி தருவதற்காக சென்னை சைதாப்பேட்டையிலே ஒரு நிலையம் இருக்கிறது. நம்முடைய ஆதிதிராவிட நலத்துறை நடத்திக்கொண்டிருக்கிற பயிற்சி நிலையம் அது. அங்கே போய்ப் பார்த்தால், ஏதோ ஒரு காட்டு பங்களா போல என்றைக்கு இடிந்து விழுமோ என்ற ஒரு அவல நிலையிலே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்பவர்கள் எப்படி படித்து தேறமுடியும்? எப்படி அவர்களெல்லாம் உருவாக முடியும். எந்த வசதியும் இல்லாமல் அங்கே ஒரு சிறைச்சாலைபோல அடைக்கப்பட்டு பயிற்சி தருகிறோம் என்று சொல்லிவிட்டால் அவர்கள் எப்படி முன்னுக்கு வரமுடியும்? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. கு. தமிழரசன்] [1986 ஏப்ரல் 24

உதவித் தொகை பெறுவதற்கு பிற்பட்டோர் வருமான வரம்பு 9 ஆயிரம். ஆனால் தாழ்த்தப்பட்டோருக்கு வருமான வரம்பு 6 ஆயிரம். பிற்பட்டவர்களைவிட தாழ்த்தப்பட்ட மக்கள் என்ன அவ்வளவு வசதியானவர்களா? எனக்குப் புரியவில்லை. ஆனால் அதே நேரத்திலே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மத்திய அரசு தந்திருக்கிற வருமான வரம்பு 12 ஆயிரம். பல்லாண்டு காலமாக அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக எழுந்து கொண்டிருக்கிற ஒரு சமுதாயத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் மிகச் சாதாரண விஷயம். 500 ரூபாய் மாத சம்பளம் வாங்குகிறவன் பெறுகிற விஷயம். எனவே தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் வருமான வரம்பை 12 ஆயிரமாக மாற்ற வேண்டும். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட விடுதி மாணவர்களுக்கு அரசு தந்து கொண்டிருக்கிற தொகை ஒரு மாதத்திற்கு 80 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை. இந்தத் தொகைபோதுமானதல்ல. 80 ரூபாய்க்கும், 120 ரூபாய்க்கும் ஒரு மாதத்திற்கு ஒரு கல்லூரி மாணவனுக்கு எப்படி சோறு போட முடியும்? மூன்று வேளைக்கு எப்படி அவர்களுக்கு உணவு தரமுடியும்? 10 ஆண்டுகளுக்கு முன்னால் வகுத்த அந்தப் பணத்தை இப்போது இருக்கும் விலைவாசி உயர்வை கொஞ்சமும் பொருட்படுத்தாமல், அரசு தந்து கொண்டிருக்கிறது. அது போதாமல் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றியமைத்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஏகப்பட்ட பாலிடெக்னிக்குகளும், என்ஜினியரிங் கல்லூரிகளும் தனியார் துறையினால் தொடங்கப்பட்டிருக்கின்றன. அங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் கொஞ்சமானதல்ல. தனி பயிற்சி கட்டணம், ஸ்பெஷல் டியூஷன் பீஸ் என்று பெருந்தொகை வாங்குகிறார்கள். கேட்டால் ஸ்பெஷல் பீஸ் என்று சொல்கிறார்கள். அந்தப் பணத்தையெல்லாம் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எப்படி கட்ட முடியும்? அங்கே 18 விழுக்காடு ஒழுங்காகத் தரப்படுவதில்லை. எனவே தனியார் நிறுவனங்களிலே அரசு முழு முயற்சியோடு ஒரு கடும் சட்டத்தைப் போட்டு அதை கவனித்தாக வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில் அறை செலவுக்கு 750 ரூபாய், அவர்களுடைய புத்தக செலவுக்கு 750 ரூபாய், ஆக 1,500 ரூபாயை தமிழக அரசு மான்யமாக தந்து கொண்டிருக்கிறது. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பிற்பட்ட துறை, மாதத்திற்கு 500 ரூபாய் தந்துகொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டத் துறை ஒட்டு மொத்தமாக 1,500 தருகிறது. தாழ்த்தப்பட்டத் துறையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாதத்திற்கு 500 ரூபாய் தருகிற ஒரு சட்டத்தை, நிலைமையை அரசு கொண்டுவர வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் 50 விழுக்காடுக்கு



1986 ஏப்ரல் 24] [திரு. கு. தமிழரசன்]

மேலே மதிப்பெண் பெற்றிருந்தால் மாதத்திற்கு 500 ரூபாய் தருகிறோம் என்று நேற்றுதான் சுப்ரீம் கோர்ட், மத்திய அரசு சார்பில் ஒரு ஆணையை பிறப்பித்துள்ளது. மாநில அரசு ஏனோ ஊமையாய் இருப்பது எனக்கு புரியவில்லை. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பொருளாதார மேம்பாட்டுக்காக, கறவை மாடு, உழவு மாடு, பாசனக் கிணறு, சிறு தொழில்கள் என்று ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் கடந்த ஓராண்டு காலமாக மழை, வெள்ளம், புயல், வறட்சி, இப்படி மாறிமாறி நிலைமைகள் நடந்துகொண்டிருக்கின்றன. எனவே நான் ஆதி திராவிடநலத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்வது, ஆயிரம் 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுத்திருக்கிற கடனையெல்லாம் தயவு செய்து ரத்து செய்யுங்கள். அந்த சிறிய கடன்களையெல்லாம் ரத்து செய்யுங்கள். அவர்கள் தரமுடியாத நிலையிலே தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஆயிரம், 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய்களை கடனாகப் பெறுவதற்கு அவர்கள் ஆயிரக்கணக்கிலே ஆரம்பத்திலே செலவுசெய்திருக்கிற ஒரு நிலை வேறு இருக்கிறது. இவைகளெல்லாம் மாறவேண்டும். பேரறிஞர் அம்பேத்கார், உண்மையான பொருளாதார மேம்பாடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வரவேண்டுமானால் ஒரு 'செப்பரேட் செட்டில்மென்ட்'—அமைப்பை இந்திய மண்ணிலே உருவாக்கவேண்டும் என்று விரும்பினார். செப்பரேட் செட்டில்மெண்ட் என்று சொன்னால், ஒரு இரண்டாயிரம், 3 ஆயிரம் ஏக்கர்களை பிடித்து ஒரு தனி வாழ்விடத்தை அமைத்து அங்கே தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தனி தொழிற்சாலைகள், தனி விவசாயக் கூட்டுப் பண்ணைகள், தனி பள்ளிகள், தனி கல்லூரிகள், இப்படிப்பட்ட ஒரு தனி வாழ்விடத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உருவாக்கினால் அங்கே ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்படும் என்று பேரறிஞர் அம்பேத்கார் கருதினார்; வலியுறுத்தினார். அந்த வகையில் நம்முடைய தமிழக அரசு இந்தியா முழுமைக்கும் ஒரு முன் மாதிரியாக இருந்து ஒரு செப்பரேட் செட்டில்மெண்ட் அமைப்பை இங்கே நடைமுறைப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓரளவுக்கு பொருளாதார வளர்ச்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்று சொன்னால், இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு தனி தொழில் முதலீட்டுக் கழகத்தை தொடங்கி, அதன் வழியாக அந்த மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4—30)

நரிக் குறவர்களை நாங்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அவர்களை பழங்குடியினர் இனத்தில் சேர்க்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கொள்கை குறிப்பில் நரிக் [illegible]

களுக்கும் இந்த வீடுகள் ஒதுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இது எந்த வகையில் நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. நாங்கள் நரிக்குறவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு பரிந்துரை செய்வோம் என்று சொல்லுகிறார். ஆனால் கொள்கை குறிப்பில் அவர்களுக்கும் வீடுகள் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார். எனவே அது சரியான முறை அல்ல அதை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனைப் பிரச்சினை இருக்கிறதே, அது இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக என்னுடைய தொகுதியில் உள்ள தேவலாபுரம் என்ற கிராமத்திலே 50 வீடுகள் இருக்கின்றன அதிலே 500 குடும்பங்கள் இருக்கின்றன. அவைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். அங்கே மிக வேடிக்கையான சம்பவம் நடைபெறுகிறது. அதைச் சொல்லுவதற்கே வெட்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அங்கே ஒரு இரவில், முன் இரவை மருமகனும் மகளும் கழிக்கவேண்டும். பின் இரவை மகனும் மருமகளும் கழிக்கவேண்டும், அதற்குப் பின்னால் விடியற்காலை பொழுதை தாயும் தந்தையும் கழிக்கவேண்டும் என்ற நிலையில் ஷிஃப்ட் முறையில் அங்கே வீட்டில் குடும்பத்தை நடத்துகிறார்கள். இந்த நிலையில் அந்த கிராமம் இருக்கிறது. ஆனால் அவர்களின் வீட்டுமனைப் பிரச்சனையோ வழக்கு மன்றத்திலே இருக்கிறது. நான் அதைப் பார்த்து கண்ணீர் சிந்துவதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் தான் நமக்கு ஒரு சட்டமே கூட ஒரு முன் மரபாக இருந்தும் கூட, தாழ்த்தப்பட்ட மக்களின் இடங்களை எடுக்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்களின் இடங்களை எடுக்கக்கூடாது என்று சட்டம் இருந்தும் கூட, முன் உதாரணங்கள் இருந்தும் கூட, தாழ்த்தப்பட்டவர்களின் நிலங்களை பலயிடங்களில் அரசு எடுத்து இருக்கிறது. எடுத்துக் காட்டாக காஞ்சிபுரத்தில் உள்ள ஊத்துக்காடு என்ற கிராமத்தில் குப்புசாமி, சரோஜா, வீராசாமி, ராதாகிருஷ்ணன், சரஸ்வதி, முனியம்மாள் ஆகியோர் தாழ்த்தப்பட்டவர்கள். அவர்கள் 25 சென்ட் நிலம் வைத்து இருந்தார்கள். அந்த 25 சென்ட் நிலத்தைக் கூட எடுத்துக் கொள்ளுகிற நிலைமை வருமானால், ஒரு மரபு இருக்கும் போது, சட்டம் இருக்கும் போது அதையும் மீறி இவற்றை எல்லாம் அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றால், என்ன சொல்வது? பன்னெடுங்காலமாக தீண்டாமை இருந்து கொண்டிருக்கிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு ஒரு சட்டம் இருந்து கொண்டு இருக்கிறது. இது சம்பந்தமாக பிரச்சாரம் படம் எல்லாம் காட்டுகிற இந்த நேரத்தில் தான் இன்றைக்குக்கூட பகிரங்கமாக** கிராமத்தில் தான் தண்டனை கொடுக்கின்ற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



நிலைமை இருக்கிறது. பிரச்சார கூட்டங்கள் மூலம் இவைகளை எல்லாம் தடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பிரச்சாரக் கூட்டம் எங்கே நடைபெறுகிறது? தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற இடங்களில்தான் அந்தக் கூட்டங்களை அரசு நடத்துகிறது. தீண்டாமை பற்றி பிரச்சாரப் படங்களையும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இடங்களில்தான் அரசு போட்டுக் காட்டுகிறது. ஜாதி வெறி பிடித்தவர்கள் இருக்கிற இடங்களிலும், அந்த உணர்வுள்ளவர்கள் இருக்கிற இடங்களிலும், மேட்டுக் குடியினர் வசிக்கின்ற இடங்களிலும் சென்று அரசு அங்கே தீண்டாமை ஒழிப்பு பிரச்சார கூட்டங்களையும், தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரப் படங்களையும் போட்டுக் காட்டவேண்டும். அப்படி காட்டாமல் அதற்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இடங்களில் சேரிப் பகுதிகளில் அந்தப் படம் காட்டுகிறார்கள். அந்தப் பிரச்சாரக் கூட்டங்களைப் போடுகிறார்கள். ஆகவே அதை மாற்றி அதில் முன்னேற்றம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தீண்டாமை ஒழிப்பு குற்றங்களால் வரக்கூடிய வழக்குகள் 11,531, இதில் 4,134 வழக்குகளில் முடிவு எடுக்கப்பட்டு "இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 4,134 வழக்குகளில் எவ்வளவு பேர் தண்டனை பெற்று இருக்கிறார்கள் என்ற கணக்கை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. பல்வேறு பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாக, அன்பாக, அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு வேண்டுகோளை வைக்கவிரும்புகிறேன். இன்றைக்குக் கூட பத்திரிகையிலே போடுகிறார்கள். ஜாதி அடிப்படையிலே இட ஒதுக்கீடு தேவையில்லை என்ற அறிக்கை தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை இந்த 'அன்டச்சபிலிட்டி ஆக்ட்டின்' குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின்' கீழ் கைது செய்தால்தான் நிலைமைகள் மாறும். அவைகளைத் தடுத்து நடவடிக்கை எடுக்க இந்த சட்டம் முயலவேண்டும். அரசு அதிகாரிகளின் மூலம்தான் நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சட்டப் பாதுகாப்பை வழங்கமுடியும், உரிய பாதுகாப்பை வழங்க முடியும். ஆனால் நிலைமை என்ன ?

தமிழகத்தில் 19 மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த 19 மாவட்டங்களில் ஒரேயொருவர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து நியமிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பாது

காப்பு கிடைக்கும்? ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவராக, அல்லது மாவட்ட நீதிபதியாக, அல்லது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக, ஆக இந்த மூன்றிலே ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருக்கவேண்டும் என்ற மரபை ஏற்படுத்தினால், அங்கே ஒரு விழிப்புணர்ச்சியும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாது காப்பும் கிடைக்கும். அதைக்கொண்டு வரவேண்டும். (குறுக்கீடு). இன்றைக்கு ஆதித் திராவிடர் நலத்துறை இருக்கிறது. அது ஏனோ தானோ என்று செயல்படும் துறையாயிருக்கிறது. மூன்று வட்டங்களுக்கு ஒரு தாசில்தார் . தனித் தாசில்தார் என்று நியமிக்கிறோம். அவர்களுக்கு ஒரு ஜீப் வசதியும் கிடையாது. அவர்களுக்கு ஒரு ஃபோன் வசதியும்கூட கிடையாது. அவர்கள் எப்படி பணியாற்றமுடியும்? மாவட்ட அளவில் இருக்கிற ஆதி திராவிடநலத்துறை அலுவலகத்தில் இஞ்சினியர்கள் இருக்கிறார் கள். அவர்கள் ரூ. 5,000-க்கு மேல் எந்தவிதமான எஸ்டி மேட்டும் போட முடியாது. அப்படிப் போடவேண்டுமென்றால், நெடுஞ்சாலைத்துறை பொறியாளரிடம் ஒப்புதல் வாங்க வேண்டும். மாவட்ட ஆதி திராவிட நலத்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி வாங்கவேண்டும். இப்படி அதிகாரமே இல்லாமல், தாசில்தார்கள், பொறியாளர் கள், மாவட்ட ஆதி திராவிட நலத்துறையில் இருந்து என்ன பயன்? எனவே நாங்கள் நீண்டநாட்களாக வலியுறுத்தி வரு கிறோம். இந்தத் துறையைத் தனித் துறையாகப் பிரித்து, சமூகநலத்துறை, வருவாய்த் துறையிடமிருந்து தனியாகப் பிரித்து இந்த 1½ கோடி மக்களுக்காக தனித் துறையாக மாற்ற வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலில் 18 விழுக்காடு வேண்டுமென்று கேட்டு வந்தோம். அது இல்லாததால் அந்தக் கொடுமைகளை இன்றைக்கு அனு பவித்து வருகிறோம். கிராமங்களிலே போட்டியிட்டவர்கள், வெற்றி பெற்றவர்கள் எல்லாம் இன்றைக்கு தாக்கப்படுகிறார் கள். பஞ்சாயத்துத் தலைவராக வந்தும் கூட, அவர்கள் ஒரு பாதுகாப்போடு, சமூக அந்தஸ்தோடு இருக்கமுடியவில்லை. எடுத் துக்காட்டாகச்சொல்கிறேன். செங்கற்பட்டு வட்டம் கொளத்தூரில் சுப்பிரமணியன்என்பவர் பஞ்சாயத்துத்தலைவராகவந்துவிட்டார். எப்படி அவரைத் தேர்ந்தெடுக்கலாம்? எப்படித் தாழ்த்தப்பட்ட அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். என்று அந்த ஊரே சூறையாடப் பட்டது. வெளியிலே யாரும் போக முடியவில்லை. இட ஒதுக்கீடு தந்திருந்தால் இந்தக் கொடுமைகள் இருந்திருக்காது.

பல்வேறு மாவட்டங்களில் போட்டி இட்டவர்கள், வெற்றி பெற்றவர்கள், இன்று அஞ்சி வாழக்கூடிய நிலைமையிருக்கிறது. அதிகாரிகளுடைய மனப்போக்கு மாறியாகவேண்டும். அதிகாரப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் தங்கள் நிலையை





மாற்றிக்கொண்டு, ஒரு சமதர்ம சமுதாயக் கண்ணோட்டத் தோடு செயல்களில் ஈடுபட்டால்தான் தாழ்தப்பட்ட மக்கள் முன்னேறமுடியும். எப்படி அதிகாரிகள் நடக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றைச் சொல்கிறேன். கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில், அங்கே ஒரு தலைமை மருத்துவர் இருக்கிறார். அவர் மிகப் பெரிய ஜாதி விரோத போக்கோடு நடந்துகொண்டிருக் கிறார். ஒரு காரணமும் இல்லாமல், யாரோ கோபால் என்பவ ருக்கு ஓய்வு தருவதற்குப் பதில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கோபால் என்பவருக்கு கட்டாய ஓய்வு தந்துவிட்டார். உடனே அவர் நீதிமன்றத்திற்குப் போய், வழக்குத் தொடுத்து, வெற்றிபெற்றிருக்கிறார். இன்னமும் அவர் தொடர்ந்து பழி வாங்கப்படுகிறார். ஆர்.எம்.ஓ. ஆக இருக்கிற ஒருவரை கட்டாய மாக ஒரு அதிகாரமும் இல்லாமல், அந்த சூப்பிரிண்டெண்டண்டு வைத்திருக்கிறார். இன்னும் பல்வேறு சான்றுகளை என்னால் சொல்லமுடியும். (குறுக்கீடுகள்)

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

அது எப்படி அவைக் குறிப்பிலே இருக்க முடியும்? அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது சப்ஜுடிஸ். அது இருந்தால் நீக்கிவிடலாம்.

(மாலை 4-40)

***திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை மூலமாகக் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக் கைகள் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில் 47,89,44,000 ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பழங்குடி மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டு உள்ளதாக இந்த விளக்கக் குறிப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப் புணர்ச்சி பெறுவதற்கும், மற்ற சமுதாய மக்களோடு சமமாக வாழ்வதற்கும் கல்வி ஒன்றுதான் முக்கியமானது என்றும், நம் முடைய முன்னோர்கள், குறிப்பாக அண்ணல் காந்தியடிகள் முதல் அன்னை இந்திராகாந்தி, வரையில் சொல்லி தாழ்ந்தப்பட்ட மக்களுக்காகவும் பழங்குடி மக்களுக்காகவும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

குறிப்பாக தமிழகத்திலே உள்ள நலத் துறைப் பள்ளிகள் சிறப்பாக இயங்குகின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை என்றே கூறலாம். தமிழகத்திலே உள்ள பல பள்ளிகளிலே சரியான முறையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவே இல்லை. என் தொகுதியிலேகூட 2, 3 பள்ளிகளிலே குறிப்பாக வன்னியூர் நடுநிலைப் பள்ளியிலே ஐந்தே ஐந்து ஆசிரியர்கள்தான் பணிபுரிகிறார்கள். அதேபோல் தென் ஆற்காடு மாவட்டத்திலே, பண்ருட்டி தாலுகாவிலே, அவியலூர் கிராமத்திலே உள்ள ஆரம்பப் பள்ளியிலே 300 மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலே ஒரே ஒரு ஆசிரியர் ராஜமாணிக்கம் என்பவர்தான் பணிபுரிகிறார். அது மட்டுமல்லாமல் தமிழகத்தில் உள்ள பாதிக்கு மேற்பட்ட பள்ளிகளிலே எல்லாம் பணிபுரிகிற ஆசிரியர்கள் தொடர்ந்து பல வருடமாக ஒரே இடத்தில் பணிபுரிகிறார்கள். 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 19 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்ற முறையிலே ஒரே பள்ளியிலே தொடர்ந்து பணிபுரிகிறார்கள். அதற்கு ஒரு வரையறை வைத்து மற்றத் துறைகளிலே எப்படி 3 வருடங்கள் ஒரே இடத்தில் பணிபுரிந்தால், புகார்கள் வந்தால் மாற்றிவிடுகிறார்களோ, அதைப்போன்ற ஒரு வரையறையை நல இலாகாவும் எடுத்து குறிப்பிட்ட வருடங்கள் ஒரே பள்ளியில் பணிபுரிந்தால் அவர்களை மாற்றம் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நலத் துறைப் பள்ளிகளிலே, பல இடங்களிலே குடியரசு தினமோ, சுதந்திர தினமோ கொண்டாடுவது கிடையாது. சுதந்திர தினமும், குடியரசு தினமும் மற்றப் பள்ளிகளிலே கொண்டாடப்படுகின்றன. ஆனால் நலத் துறைப் பள்ளிகளில் 50 சதவீதத்திற்கு மேலாக அந்த விழாக்கள் கொண்டாடப் படுவதில்லை. இப்படி நிலை இருந்தால் எப்படி தேசிய ஒருமைப்பாட்டை நாம் காக்கமுடியும்? எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் ஒரு கடுமையான உத்திரவைப் போட்டு, சுதந்திர தினத்தையும், குடியரசு தினத்தையும் நலத் துறைப் பள்ளிகள் கட்டாயம் கொண்டாட வேண்டுமென்று உத்தரவிட முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கிறபோது ஏ குரூப் என்று சொல்கிறபோது மெடிக்கல் மற்றும் எஞ்சினியரிங் மற்றும் பி.எஸ்.ஸி.அக்ரி. மற்றும் பி.வி.எஸ்.ஸி. படிக்கிறார்கள். என்றால் மாணவர்களின் பெற்றோர்களுடைய வருட வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பி., சி, டி, இ., இந்தக் குரூப்களில் படிக்கிறபோது பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்ஸி. ஆகியவற்றில் படிக்கிற மாணவர்களுடைய பெற்றோர்களுடைய வருட வருமானம் 9 ஆயிரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது





சம்பளக் கமிஷன் அறிக்கையில் சம்பளம், பஞ்சப்படி ஆகியவற்றைச் சேர்த்துத்தான் பேசிக் அமைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய வருமான வரம்பு உயர்த்தப்படுவதால், இப்பொழுது 'ஏ' பிரிவுக்கு 12,000 ரூபாய் என்றும், பி, சி, டி, இ, என்ற பிரிவுகளுக்கு 9,000 ரூபாய் என்றும் இருக்கின்ற நிலைமையை மாற்றி, 'ஏ' பிரிவுக்கு 20,000 ரூபாய் என்றும், பி, சி, டி, இ, பிரிவுகளுக்கு 16,000 ரூபாய் என்றும் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில், அதாவது 75-ஆம் ஆண்டு வரையில் அல்லது 78-ஆம் ஆண்டு வரையில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு 'ஈ' கார்டு என்று வழங்கி வந்தது இந்த அரசாங்கம். இப்பொழுது அந்த 'ஈ' கார்டு வழங்குகின்ற சிஸ்டத்தை மாற்றி, அந்த சர்டிபிகேட்டைத் தான் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதனால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த அரசு, மாணவர்களுக்கு 'ஈ' கார்டு கொடுக்கின்ற முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் அப்படிக் கொண்டு வருகின்றபொழுது மூன்று வருடங்களுக்கு அந்த 'ஈ'கார்டை மாற்றுகின்ற முறையை ஏற்படுத்தவேண்டாம். அதை வாங்குகின்ற சமயத்திலேயே ஒரே சமயத்தில், எந்தக் குறையிருந்தாலும் அதை நிவர்த்தி செய்து, முறையான கார்டை வழங்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நந்தனார் உயர்நிலைப்பள்ளி என்று இருக்கிறது. அங்கே ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் ஆகியவைகளைக் கொண்டு வர வேண்டும் என்று அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், பொதுமக்கள் ஆகியவர்கள் மனுபோட்டு, அரசு பரிசீலனை செய்து, இரண்டு மூன்று முறை ப்ரப்போசலையும் அளித்ததே தவிர, பிறகு அது இப்பொழுது என்ன ஆனது என்றே தெரியவில்லை. தமிழக அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தயவு செய்து நந்தனார் மேல்நிலைப் பள்ளி என்று சிதம்பரத்திலே இருப்பது மிகவும் பிரசித்தி பெற்ற பள்ளியாக இப்பொழுது இயங்கிக்கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அங்கே படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் ஆகிய இரண்டில் ஒன்றையோ அல்லது இரண்டுமோ தொடங்கிவிட்டால் அந்தப் பகுதியில் உள்ள ஆதிதிராவிட மக்கள் மட்டுமின்றி, அந்தப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கும் அது ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அங்கே ஐ.டி.ஐ., மற்றும் பாலிடெக்னிக்கைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1986 ஏப்ரல் 24

நலத்துறை விடுதிகள் இருக்கின்றன. அவைகளில், நான்காவது முதல் 12-வது வகுப்பு வரையிலும் படிக்கின்ற மாணவர்களுக்கு, ஒருவருக்கு மாதம் 60 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். பல விடுதிகளில் நான் பார்வையிட்டபொழுது சரியான முறையிலே அங்கே சாப்பாடு வழங்கப்படுவதில்லை என்பது தெரிந்தது. காலையிலே கஞ்சி ஊற்றுகிறார்கள். குறிப்பாக நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்—என்னுடைய தொகுதியைச் சார்ந்தது; அந்தப் பள்ளிக்கு மாண்புமிகு அமைச்சரவர்களைக் கூட அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறேன்—காலையிலே கஞ்சி; மதியத்திலே கொஞ்சம் ரசம், இரவிலே கஞ்சி என்று ஊற்றுகிறார்கள். அவர்களைக் கேட்டால், ஒரு மாணவனுக்கு இரண்டு ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; நாங்கள் என்ன செய்வது; மாதம் அறுபது ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அந்த இரண்டு ரூபாய்க்குள்ளே போட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதிலேயும் தவறு இல்லை. ஆகவே, அந்தத் தொகையை அதிகபட்சமாக உயர்த்தித் தர வேண்டும். இரண்டு ரூபாயை ஒரு மாணவனுக்கு வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? வாரத்திற்கு இரண்டு முறை கறி போட வேண்டும்; வாரத்தில் முட்டை கொடுக்க வேண்டும்; ஆனால் இவைகளெல்லாம் அங்கே வழங்கப்படுவதில்லை. ஆகவே, ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதற்குப் பதிலாக, மூன்று ரூபாய்க்கு மேல், நான்கு ரூபாய்க்குமேல் ஒதுக்கிச் செய்தால் மாணவர்களின் உடல் நிலை நல்ல திடகாத்திரமாக இருப்பதற்கான வழிவகை ஏற்படும் என்பதால் அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-50)

நந்தனார் மேல்நிலைப் பள்ளியிலே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கிறார்கள். இரவு நேரங்களில் அந்த மாணவர்கள் எவ்வளவு பயத்தோடு தங்கிப் படிக்கிறார்கள் தெரியுமா? அந்த விடுதியைத் திறந்து பார்த்தால் இடதுபுறத்தில் மயானம் இருக்கிறது; இரவிலே பிணம் எரியும்பொழுது மாணவர்கள் பார்த்து விட்டு பயப்படுகிறார்கள்; அவர்கள் தனித் தனியாகப் படுக்காமல், உதாரணமாக, நான்கு அறைகளில் தங்க வேண்டியவர்கள் ஒரே அறையில், ஒருவருக்கு ஒருவர் துணையாகத் தங்குகிறார்கள். அதற்குப் பயம்தான் காரணம். அங்கே கதவு கிடையாது; மின்சார வசதி கிடையாது; தண்ணீர் வசதி கிடையாது; குறிப்பாக சுகாதார வசதி அறவே கிடையாது. இதனால் மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சரியான முறையிலே அங்கே நிர்வகிக்கப்படவில்லை.



1986 ஏப்ரல் 24] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

அது மட்டுமல்லாமல் அந்த நந்தனார் உயர்நிலைப் பள்ளியிலே பணி புரிகின்ற தலைமை ஆசிரியரும், விடுதிக் காப்பாளரும் ஒருவராகவே இருக்கிறார். மற்ற இடங்களில் இல்லாத மிகப் பெரிய தவறு என்று நினைக்கிறேன். பள்ளியிலே தலைமை ஆசிரியராக இருப்பவர், விடுதியைக் கவனித்தால், எப்படி அதைச் சரியான முறையிலே நிர்வகிக்க முடியும்? ஆகவே, தயவு செய்து, தமிழக அரசு மேல் நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியரைத் தனியாகவும், விடுதிக்குக் காப்பாளரைத் தனியாகவும் நியமிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், திருவொற்றியூர் தொகுதி, அருமை நண்பர் திரு. ஜே. பாரதி அவர்களது தொகுதி. அந்தத் தொகுதியிலே வடகரை என்ற ஊரிலே ஒரு மாணவியர் விடுதி உள்ளது. அந்த மாணவியர் விடுதியிலே, குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் இல்லை. அதனாலே, அந்த மாணவிகள் 3, 4 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் குளிக்க வேண்டிய அவல நிலையிருக்கிறது. குளிப்பதற்காக, ஆதி திராவிட மாணவியர்கள் தனியாகச் செல்வதால், பல வகையிலே தொந்தரவு ஏற்படுகிறது. அப்படிப் பலமுறை தொந்தரவுகள் அந்த வடகரை மாணவியர் விடுதியிலே ஏற்பட்டுள்ளது. ஆகவே, உடனடியாக, நீர்த் தேக்கத் தொட்டி மிகவும் அவசியம். குடிப்பதற்கும், குளிப்பதற்கும் வசதி செய்து கொடுத்தால், இந்த அரசுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம் என்ற அமைப்பை, தவத்திரு சுவாமி சகஜானந்தா அவர்கள், சேவை உணர்வோடு, அந்தச் சமுதாயம், அந்தச் சமுதாயத்திலே உள்ள ஏழை, எளிய மக்கள், தொழில் ரீதியில் வளம் பெறவும், கல்வியிலே சிறப்பான முறையிலே முன்னேற வேண்டும், கற்க வேண்டுமென்ற நோக்கத்தில் நிறுவினார்கள். அதோடு, நந்தனார் மடம் என்ற பெயராலும் ஒரு நிறுவனத்தை நிறுவினார்கள். அதற்கு 100 ஏக்கருக்கு மேல் நஞ்சை நிலம், புஞ்சை நிலம் உள்ளது. 1975 ஆம் ஆண்டிலே கூட, அரசாங்கம், அமைச்சரவை ஒட்டுமொத்த முடிவு எடுத்து, அதிலே தவறுகள் அதிகமாக நடக்கின்றன. அதை நிர்வகிப்பதற்காக தனி கமிட்டிகள் போட வேண்டுமென்று கூறினார்கள். அது என்ன ஆனது என்று தெரியவில்லை. 1975-லே கூட ரூ. 1 இலட்சம் கையாடல் செய்ததாக அறிக்கையிலே கூறப்பட்டது. இப்பொழுது 1986, 11 வருடங்கள் தாண்டிவிட்டன. இப்பொழுது நிலவரம் என்ன என்பது தெரியவில்லை. அந்த மடத்திலே உள்ளவர்கள், கோர்ட்டுக்குப் போய், கோர்ட்டும் நிராகரித்து விட்டது. ஆகவே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. சா. ஜெயசந்திரன்] [1986 ஏப்ரல் 24

இந்த நந்தனார் கல்விக் கழகத்தை, மடத்தை உள்ளடக்கி, நிர்வகிக்க, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும். அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவில் இடம் பெற வழி வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே, நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாகவும், வீட்டுமனைப் பட்டா வழங்குவது சம்பந்தமாகவும் கூறி இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழகத்திலே, பல கிராமங்களிலே மயானப் பாதைகள், பாதிக்கு மேற்பட்ட கிராமங்களிலே இல்லை. அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்பிலே, 2,880 கிராமங்களில் இணைப்புச் சாலையும், மயான இணைப்புச் சாலையும் போடுவதற்கு சுமார் 20.45 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதை என்.ஆர்.இ.பி. யிலும், ஆர்.எல்.இ.ஜி.பி.யிலும் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 2,880 கிராமங்களுக்கு இந்த ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு 10சதவீதம் ஒதுக்கீடு என்றுதான் கூற முடியும். அமைச்சர் அவர்களே, 2,880 கிராமங்களுக்கு மயான வசதி இணைப்புச் சாலை இல்லை என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ரூ. 20 இலட்சம் எப்படிப் போதும் என்று தெரியவில்லை. ஆகவே, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்து கிராமங்களுக்கும், அல்லது குறிப்பாக, பாதி கிராமங்களுக்காவது, இந்த வசதிகளைச் செய்து தரவேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் செய்து வருவதாகக் குறிப்பிட்டார்கள். அந்த வேலைகள் ஆதி திராவிடர்கள் அல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் வேலைகளைச் செய்யாமல் விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். அதிலே அவர்களுக்கு லாபம் கூட கிட்டாமல் போகலாம்.

ஆகவே, ஆதி திராவிட மக்களுடைய கிராமங்களுக்கு இணைப்புச் சாலைப் போடுவதாக இருந்தாலும் மயானச்சாலை போடுவதாக இருந்றாலும் அந்தப் பகுதி ஆதி திராவிட மக்கள் அந்த வேலைகளை எடுத்துச் செய்ய இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மயானப் பாதை அமைக்க நில ஆர்ஜிதம் செய்வதாக இருந்தாலும், வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்வதாக இருந்தாலும், நஞ்சை நிலமாக இருந்தால் மாநில அளவில் செக்ரெட்டேரியேட்டுக்கு வருகிறது.



1986 ஏப்ரல் 24] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

முதலமைச்சர் கையெழுத்து போட்டால்தான் நஞ்சை நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியும்; இல்லை என்றால் நில ஆர்ஜிதம் செய்ய முடியாது. 10, 12 ஆண்டுகளாக அனுப்பப்பட்ட ப்ரொப்போசல்ஸ் கையெழுத்தாகாமல் இருக்கின்றன .குறிப்பாக என்னுடைய தொகுதியில் சுமார் 15 கிராமங்களிலிருந்து 10, 12 ப்ரொப்போசல்ஸ் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி பார்வையிட்டு, அவர்களுடைய பொறுப்பிலேயே நில ஆர்ஜிதம் செய்ய உத்தரவு போடுகின்ற முறையில், ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று மாணவர்களுக்கு இந்த அரசு ஒரு சலுகை செய்திருக்கிறது. அதாவது, 1983–84, 1984-85, 1985–86 ஆகிய மூன்றுஆண்டுகளில் மாணவர்களின் வருகை 90 சதவீதம், 75 சதவீதம் இருந்தாலும், மாணவர்கள் இந்த மூன்று ஆண்டுகளில் எத்தனைநாட்கள் வந்திருந்தாலும் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் உண்டு, பரீட்சை எழுதலாம் என்ற சலுகையை அளித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த நல இலாகா பள்ளிகளுக்கு தனியாக ஒரு கமிட்டி போட வேண்டும். அப்படிப் போட்டால்தான் பிரச்சினைகளுக்கு விரைவிலே தீர்வு காண முடியும். பல ஆண்டுகளுக்கு முன்னால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை ஒழிப்பு கமிட்டி போட்டதாகச் சொன்னார்கள். இப்போது அந்த கமிட்டி எப்படி செயல்படுகிறது என்று தெரியவில்லை. (மணியடிக்கப் பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த இலாகா மூலம் செலவிடுகிற பணத்தைக் கண்காணிக்கவும், நல்ல ஆலோசனைகளைச் சொல்லவும் அந்தப் பகுதியிலுள்ள ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்த முறையில் குழு அமைத்தால் சிறப்பான முறையில் செயல்பட்டு, அதிகாரிகள் தவறு செய்தால் சுட்டிக் காட்ட முடியும்.

(திரு. சா. ஜெயச்சந்திரன்) [1986 ஏப்ரல் 24

இப்போது தென்னாற்காடு மாவட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரி ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். நான் பலமுறை சென்று பார்த்திருக்கிறேன். அலுவலகத்திற்குப் போயிருக்கிறேன். அவரைப்பற்றிச் சொல்வதற்கே வேதனையாக இருக்கிறது. நாம் என்ன பேசுகிறோம் என்பதை புரிந்துகொள்ளும் தன்மையிலே அவர் இல்லை. நாம் என்ன சொன்னோம் என்பதை அவரால் திருப்பிச்சொல்ல முடியாது. இப்படிப்பட்ட ஒரு அதிகாரி மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரியாக இருக்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே அவர் இருக்கிறார். இப்படிப்பட்ட அதிகாரிகளை இந்தத் துறைக்குப் போடாமல் நல்ல அதிகாரிகளாகப் பார்த்து போடவேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு நல்ல அதிகாரியை நியமிக்க வேண்டும்.

மாவட்டந்தோறும் ஆதிதிராவிட நல இலாகாவிற்கு மாவட்ட அதிகாரிகளைப் போடும்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை போட வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டால்தான் நல்ல முறையில் பணியாற்றுவார்கள், அவரிடம் வருகின்றவர்களிடம் நல்லமுறையிலே பதில் சொல்வார்கள். அப்படி இருந்தால்தான் மக்களுடைய பிரச்சனை தீரும். ஆதிதிராவிட நலத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள், அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்க முடியும், சிறப்பான முறையில் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கே. பி. கே.சேகர்: : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக ரூபாய் 47,89,44,000 ஒதுக்குவதற்காக கொண்டுவரப்படும் மானியக் கோரிக்கை எண் 31-ஐ வரவேற்று பேசுவதற்காகவும் எனது உணர்வுகளை வெளிப்படுத்தவும் வாய்ப்பளித்த மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களின் நலிந்த நிலையை மாற்றிட ஆதிதிராவிடர்களுக்காக வகுக்கப்பட்ட சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினருக்காக பழங்குடியினர் நல துணைத் திட்டம் ஆகியவற்றைத் துவக்கி வறுமை பள்ளத்தாக்கிலே வீழ்ந்துவிட்டுள்ள இச்சமூக மக்களை பொருளாதார சமவெளிக்குக் கொண்டுவந்து அவர்களின் மேம்பாட்டிற்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் நிரந்தர தீர்வு காண விழையும் இவ்வரசைப் பாராட்டுகிறேன்.



1986 ஏப்ரல் 24]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(மாலை 5—00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் பேசியபோது ** பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். அது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தால் அதைப்பற்றிய பகுதிகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்பதை மட்டும் நீக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தால் அந்தப் பகுதி நீக்கப்பட்டுவிட்டது. அத்துடன் அவையில் இல்லாதவர் என்ற பிரச்சினையும் சேர்ந்து இருப்பதன் காரணத்தால்தான் அவ்வாறு நீக்கப்படுகிறது.

திரு. கே. பி. கே. சேகர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த புரட்சித் திட்டமான சத்துணவுத் திட்டத்தின் மூலம் பள்ளியில் படிக்கும் ஆதிதிராவிட, பழங்குடி சமூக குழந்தைகள் கல்வியில் நாட்டம் கொண்டுள்ளனர். இந்தச் சத்துணவுத் திட்டத்தால் குறிப்பாக இச்சமூகத்தின் குழந்தைகளே அதிக நன்மை பெற்றுள்ளனர்.

தமிழகத்தின் தலை நாயகர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நெடுநாட்களாக இருந்து வந்த பெரும் குறையான பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப் படத்தை இம்மாமன்றத்தில் வைத்து டாக்டர் அம்பேத்கார் பிறந்த தின விழாவை அரசு சார்பில் கொண்டாடி வருகிறார்கள். அதே நேரத்தில் தமிழக அரசின் சார்பாக டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு சிலை ஒன்றை நிறுவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தைத் தீட்டிய டாக்டர் அம்பேத்கார் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் தனித் தொகுதி முறையைக் கொண்டு வந்ததைப்போல இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த முதலமைச்சர்களும் கொண்டுவராத புரட்சித் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்று ஒன்றியப் பெருந்தலைவர்களாக, பேரூராட்சி மன்றத் தலைவர்களாக, நகரமன்றத் தலைவர்களாக வரும் வகையில் அருமையான சட்டத்தை புரட்சித் தலைவர்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்றதாலே பழைய முறையில் இப்போது தேர்தல் நடந்து முடிந்து இருந்தாலும் எதிர்காலத்திலாவது புரட்சித்தலைவர் கொண்டு வந்த இட ஒதுக்கீடு முறையை ஊராட்சித் தேர்தலுக்குக் கொண்டு வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவர்களுக்கு எப்படியாவது உதவி செய்யவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இப்போது ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களை ஊராட்சி மன்றங்களில் நியமன உறுப்பினர்களாக நியமித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களை நான் பாராட்டுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வமாக, தமிழகத்தின் நடமாடும் அம்பேத்காராகத் திகழ்பவர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள்தான். ஒரு காலத்தில் கிராம அதிகாரிகளாக குட்டி ராஜாக்களைப் போல ஒருசில சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தர்பார் நடத்தி வந்தனர்.

கிராம கர்ணம், முன்சீப்களின் தர்பாரை அடக்கி, படித்த இளைஞர்களுக்கு வி.ஏ.ஓ. என்ற அந்தஸ்தைக் கொடுத்து வேலைவாய்ப்பு கொடுத்ததில் 100-க்கு 18 பேர் ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். அந்த வகையில் 4,000 பேர் பணியில் அமர்த்தப்பட்டனர். அதுபோல சத்துணவு அமைப்பாளர்கள் பணியிலும் 18 சதவீத அடிப்படையில் ஆதிதிராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும், பி.ஏ., பி.எஸ்.ஸி., மாணவர்களுக்கும் தற்போது வழங்கப்படும் கல்வி உதவித் தொகை போதாது. அதை உயர்த்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம்., மாணவர்களுக்கும் உதவித்தொகை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலனுக்கென மாவட்ட ஆலோசனைக் குழு, மாநில ஆலோசனைக்குழு ஆகியவற்றை நியமிக்காமல் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அவற்றை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய, மாநில, அரசுகள் வேலைவாய்ப்பில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு வேலைவாய்ப்பும் பதவி உயர்வும் அளிக்க வேண்டும் என உள்ளதுபோல தனியார் நிறுவனங்களும் 18 சதவீதம் பேர்களுக்கு வேலைவாய்ப்பும், பதவி உயர்வும் கட்டாயம் அளிக்க வேண்டும் என சட்டம் இயற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





ஆர். எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ ஆகியவற்றின் மூலம் கட்டப்படும் வீடுகளுக்கு 6,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது.

சிமெண்ட், ஓடுகள், மரச்சாமான்கள் விலை அதிகரித்து விட்டதால் 6,000 ரூபாயை 10,000 ரூபாயாக உயர்த்தித்தர வேண்டும். முதியோர் உதவித் தொகை ரூபாய் 35 அளிக்கப்பட்டதை ரூபாய் 50 ஆகவும், இறந்து போனால் ஈமக்கடனுக்காக வழங்கப்படும் ரூபாய் 50-ஐ 100-ஆக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஓலை மண் குடிசைகளாக இருந்தால் புரட்சித்தலைவரின் இலவச ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அதில் ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ ஆகியவற்றின் மூலம் கட்டப்படுகிற வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கிடைக்கின்றன. இவ்வீடுகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் தாட்கோ மூலம் கல் வீடுகள் கட்டுவதற்குக் குடிமனைப்பட்டா இல்லாததால் காலம், காலமாக யுகம், யுகமாக புறம்போக்கு நிலங்களில் ஜாரி, நத்தம் புறம்போக்குகளில் வீடுகள் கட்டி இருந்தும் பட்டா இல்லாததால் வீடுகள் கட்டுவதற்கு சிக்கல் இருக்கிறது.

அச்சிக்கலை மாற்றி புறம்போக்கு நிலங்களில் உள்ளவர்களுக்கும் அத்தகைய திட்டங்களின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிலமற்ற ஏழைகள், விவசாய தினக் கூலிகள் வீடுகள் இல்லாமல் சத்தி முற்றப் புலவன் பாடியது போல "கையது கொண்டு மெய்யது போர்த்தி, காலது கொண்டு மேலது தழுவி பேழையுள் இருக்கும் பாம்பென" பெரிதும் கஷ்டப்படுகிற ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனை வழங்கி கல்வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முயன்று நிலம் படைத்த தனியார்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்து இச்சமூக மக்களுக்கு வழங்கிட அரசு ஆணை பிறப்பித்தால், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கிவிடுகிறார்கள். இதனால் ஏழைகளுக்கு உதவிட உதவிக்கரம் நீட்டும் அரசின் திட்டங்களின் வேகம் தடைபட்டுபோகிறது. அதனால் அப்படி தடையுத்தரவு வழங்க முடியாதபடிக்கு அரசு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும்.

தமிழ்நாடு குழாய் கிணறு வாரியம் என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிட புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். கடந்த ஆண்டு அதன் மூலமாக சுமார் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு விவசாயம் செய்ய அது முழுக்க முழுக்க பயன்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 190 குழாய் கிணறுகளை அமைத்தார்கள். அதில் 30 கிணறுகளில் மோட்

[திரு. கே.பி.கே. சேகர்] [1986 ஏப்ரல் 24

டார் பொருத்தப்பட்டு ஆதிதிராவிட சமூகத்தினர் பயன்பெற்று வருகின்றனர். இப்படி கிணறுகளில் மோட்டார் பொருத்தும் திட்டம் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையை முன்னேற்றம் பயன் உள்ள திட்டமாகும். ஆகவே மீதம் உள்ள குழாய் கிணறுகளுக்கும் மோட்டார்களைப் பொருத்தி அம் மக்கள் முன்னேற வழி வகை செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 10 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்ற குறியீடு இருக்கிறது. அதை 5 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்ற நிலைக்கு உருவாக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறுமையால் வாடிய முன்னாள் அமைச்சர் மாண்புமிகு கக்கன்ஜி அவர்களின் குடும்பம் அல்லல்பட்டபோது, இதற்கு முன் ஆண்டவர்கள் யாரும் அந்தக் குடும்பத்திற்கு உதவிட முன்வரவில்லை. ஆனால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்தது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். முந்தைய ஆட்சிக் காலங்களில் காலனிகளுக்காக கட்டப்பட்ட கல் வீடுகள் எல்லாம் பழுதடைந்த நிலையில், ஓட்டையும், உடைசலுமாக உள்ளன. மழைக்காலங்களில் ஒழுகும் நிலையில் உள்ளது. அதுபோன்று என்னுடைய தொகுதியில் மீஞ்சூருக்கு அருகில் கொண்டகரையிலும், பொன்னேரிக்குப் பக்கத்தில் ஆரணியிலும் அனேக வீடுகள் உள்ளன. அமைச்சர் அவர்கள் அதையும், தமிழகம் முழுவதும் உள்ள மற்ற வீடுகளையும் நேரில் பார்வையிட்டு, சரிப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் பொன்னேரியில் பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்கள் பழுதடைந்த ஒரு வாடகை வீட்டில் எவ்வித வசதியும் இல்லாது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தாட்கோ மூலம் ஒரு மாணவர் விடுதியை அவசியம் நடப்பு ஆண்டில் கட்டித்தருவதற்கு அரசு முன் வர வேண்டும்.

அதைப்போலவே பொன்னேரி அரசு மேல்நிலைப்பள்ளி ஆதிதிராவிடர் மாணவர் விடுதியும் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. அது இப்போது மிகவும் பழுதடைந்து விட்டது. அதை பழுது பார்த்தோ, அல்லது புதிய கட்டிடமாகவோ கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீஞ்சூர், சோழவரம் பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களின் விடுதிகள், வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றன. அவற்றிற்கு சொந்தமாக கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று கோருகிறேன். அடுத்தாற்போல பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் அவசியம் சமூகக் கூடங்களை



1986 ஏப்ரல் 24] [திரு. கே. கே. சேகர்]

கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் சமூகக் கூடம் எனப்படும் திருமண சத்திரங்கள் இல்லாததால், அந்த மக்கள் தனியார் திருமணக் கூடங்களை நாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சாதியின் காரணமாக அந்த மக்களுக்கு திருமணக் கூடங்கள் அச்சமயங்களில் கிடைப்பது இல்லை. ஆகவே அந்த நிலையை மாற்றுவதற்காவது நம்முடைய அரசு மீஞ்சூரிலும், பொன்னேரியிலும் சமூகக் கூடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ அரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்ததன் காரணமாக, பழவேற்காடு, தோணிரேவு காலனியைச் சார்ந்த ஆதிதிராவிட மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, பழவேற்காடு கோட்டை குப்பம் கிராமத்திற்கும் பழவேற்காடு ஏரிக்கும் இடையில் உள்ள இடத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்த குடியிருப்புகளுக்கும், பழவேற்காடு ஊராட்சியைச் சார்ந்த இடமணி காலனி, கள்ளூர், சேலியம்பேடு, கரிமணல், ஒன்பாக்கம், ஆலூர் காலனி, ஆகிய பகுதிகளுக்கும் உடனடியாக நடப்பு ஆண்டில் கல்வீடுகள் கட்டிக் கொடுத்திட வேண்டும் என்று வேண்டுகிறேன்.

மீஞ்சூர் ஒன்றியத்தில் வள்ளூர், காட்டூர், மீஞ்சூர், பொன்னேரி ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிட நலப்பள்ளிகளுக்கு மேசை, நாற்காலி, கரும்பலகை போன்றவைகள் இல்லாமல் இருக்கின்றன. அந்த மாணவர்கள் உட்காரக்கூட பெஞ்சு இல்லாமல் தரையில் உட்கார்ந்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணி படிக்கப்பெற்றது). கடைசியாக மன்னார்குடி தொகுதியிலே பெருக வாழ்ந்தானில் ஒரு மாணவர் விடுதி கட்டித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(மாலை 5-10)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் என்ற தலைப்பின்கீழ் 1986–87 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைக்கு 47 கோடியே 89 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். இதிலே விவசாயிகள் 7 இலட்சத்து 40 ஆயிரம் பேர்கள், மீதி

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 24

81 இலட்சத்து 41 ஆயிரம் பேர்கள் எந்தவிதமான சொத்து சுகமும் இல்லாமல் கையையும், காலையும் நம்பி வாழக்கூடிய, வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அப்படியானால் தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியாகும். இவர்களுக்கு நம்முடைய விளக்கக் குறிப்பில் இணைப்பு-2-ல் 21 அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்போல இணைப்பு 3-ல் 17 அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அம்சங்களைப் பார்க்கிற போது ஒதுக்கியிருக்கும் இந்தத் தொகை கடலில் பெருங்காயம் கரைத்ததைப் போல ஆகி விடும் நிலை இருக்கிறது. இது எப்படி வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற 81 இலட்சம் மக்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கு போதுமானதாக இருக்குமென்பதை அமைச்சர் அவர்கள் ஆழமாக பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

3,260 கோடி ரூபாய்க்கு மேல் மானியங்களுக்கு நிதி ஒதுக்குகிறபோது இந்தத் துறைக்கு குறைந்தபட்சம் 100 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும். நிதித்துறையில் எப்போதும் எந்தத் துறைக்கு அதிகமாக ஒதுக்கினாலும் ஆதிதிராவிடர் துறைக்குக் கொடுக்கிற போது, நானும் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் தொடர்ந்து பார்த்து வருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சம் நிதியைக் காண்பிக்கிறார்களே தவிர, அந்தப் பகுதி மக்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு போதுமான அளவிற்கு ஒதுக்குவதில்லை. எனவே வருகிற ஆண்டிலாவது அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆடு, மாடு, வீட்டு மனை போன்றவைகளை கொடுப்பதன் மூலமாக அவர்களின் அடிப்படை பிரச்னைகளைத் தீர்க்க முடியுமா என்றால் ஓரளவிற்குத்தான் முடியும். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் கூட பார்லிமெண்டில் ஒரு விவரம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது இந்தியா முழுவதிலும் அரிசன மக்களுக்காக போடப்பட்டிருக்கிற வழக்குகள் பற்றி. அதிலே பெரும் பகுதி வழக்குகள் நிலப் பிரச்னை பற்றி வந்திருக்கின்றன. இந்தியாவில் இருக்கிற மொத்த நிலங்கள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், பாபநாசம் தாலுக்காக்களில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பினாமியாக வைத்திருக்கிறார்கள். அதுவும் இந்திய அரசியலில் ஒரு பெரிய பிரமுகர், இந்த நாட்டிலே சோசலிசத்தைக் கொண்டு வரக்கூடிய பிரச்சாரம் பண்ணக் கூடியவர்கள் எல்லாம். இந்தச் சட்டமன்றத்திலே பினாமி எதிர்ப்புச் சட்டம் கொண்டு வந்தோம். பினாமி நிலங்களை எடுத்து வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். அந்தச் சட்டம் பார்லிமெண்டிற்கு ஜனாதிபதியின் கையெழுத்திற்குப்



1986 ஏப்ரல் 24] (திரு. பொ. உத்திராபதி)

போனது. இப்போது அது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே தமிழகத்தில் மறைத்து வைத்திருக்கிற அந்த நிலங்களை எடுத்து நிலமற்ற அரிசன விவசாயிகளுக்குத் தந்து, அரசு உதவி அளித்தால், ஓரளவிற்கு அவர்களுடைய பிரச்னையைத் தீர்க்க முடியும். அதல்லாமல் அவர்கள் வளம்பெற ஆயிரம் தான் சட்டம் போட்டாலும் அது பயனளிக்காது. டிசம்பர் 1985 முடிய 11,531 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் முடிந்திருப்பது 4,134 வழக்குகள். இதற்கு 4 தனி நீதிமன்றங்கள். இதிலே தவறு இருக்கிறதா என்றால் இருக்கிறது. இது பூராவும் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டு வந்த வழக்குகள் என்று சொல்ல முடியாது. ஆனால் பெரும் பகுதி வழக்குகள் அப்படிப்பட்ட வழக்குகளாக இருக்கின்றன. பெரிய வசதி படைத்தவர்கள்கூட அவர்களுக்கு சாதகமாக இன்னொரு வசதி படைத்தவரை பணிய வைக்க தன்னிடத்திலே வேலை செய்கிற இவர்களை ஆதி திராவிடரைப் பிடித்து தன்னை வாங்கிப் போட்டு, ''என்னை அந்த ஆள் இப்படி பேசினான்'' என்று சொல்லி வழக்குப் போட்டு எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, பிரமுகர்கள் இந்தச் சட்டத்தை அவர்களுடைய போட்டிக்கு பயன்படுத்துகிற நிலைமை இருக்கிறது இதெல்லாம் எதிர் காலத்தில் இருக்காமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், காவல் துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் நியாயமான வழக்குகளை பைசல் செய்ய முடியுமென்று சொல்ல விரும்புகிறேன்

வேதாரண்யம் பகுதியில் கருப்பன்பள்ளம் என்ற ஊரில் இப்போது நடந்த பஞ்சாயத்து தேர்தலில் எங்கள் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக சோழியர் என்ற அரிசனங்களில் ரொம்ப பின் தங்கியவர்கள் வேலை செய்தார்கள். கருப்பன் பள்ளத்தில் இது வரையில் எதிர் வேட்பு மனு கொடுத்ததாக வரலாறே கிடையாது. இந்த தடவை தான் கொடுக்கப்பட்டது. வேலை செய்ததற்கு அந்தக் குடும்பத்தைப் போய் பிடித்து அடித்து வழக்கே இல்லை. நானே டி.எஸ்.பி. அவர்களிடம் கொடுக்கிறேன். இப்படி அரிசன மக்கள் தாக்கப்படுகிறார்களே என்று சொன்ன போது அவர் என்ன சொல்கிறார் என்றால் அந்த ஊரிலே யாரும் சாட்சி சொல்ல வரமாட்டார்கள் என்று சொல்கிறார். நான் சொன்னேன், சாட்சியே வேண்டாம், நீதிமன்றத்திற்கு போகட்டும் என்று. நீங்கள் நியாயமாக வழக்கு போடுங்கள் என்று சொன்னேன். அதற்காக என்ன போட்டிருக்கிறார்கள் என்றால், ஒரு 45 குழி, 15 சென்ட் சவுக்கு மரம், ஒரு வருஷம் முன்னாடி போட்டது, பூராவும் வெட்டி ஆகிவிட்டது. இப்படி இன்றைக்கு நடக்கிறது. அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள். சாட்சிகள் இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள். சாட்சி சொல்ல சில இடங்களில் வரமாட்டார்கள். இந்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டு இருக்கிறது. சமூக ஒடுக்குமுறை.

இதே மாதிரி சீர்காழியிலே ஒருவர் வழக்கிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார். பெயர் வலியமூர்த்தி, தான் வழக்கினுள் போகவில்லை. அது தப்பாகவும் இருக்கலாம், ரைட்டாகவும் இருக்கலாம். அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை அடித்து, அங்கே இருக்கக்கூடிய தஞ்சை மருத்துவமனைக்குக் கொண்டு போய், செத்து விட்டார்கள். அவருடைய அப்பன் போன போது, அவரைப் பிடித்து வைத்து, அவரே செத்துவிட்டதாக எழுதி வாங்கி வைத்து, பின்னாலே போஸ்ட் மார்ட்டம் எல்லாம் செய்து, பிணத்தை எரித்தாகிவிட்டது. அங்கே உள்ள ஜனங்கள் எல்லாம் திரண்டு கூடி இருக்கிறார்கள். அதற்குப் பதிலாக இன்னொருவரை பிடித்து விட்டார்கள். இப்படி அரிசனக் கொடுமை என்பது இன்னும் தலை தூக்கிக் கொண்டு இருக்கிறது. இதன் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதே போல் ஆதி திராவிடர் காலனியில் குடியிருப்பவர்களுக்கு என்று நிறைய வீடுகள் கட்டப்படுகின்றன. ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் காலத்திலே கட்டியிருக்கிறார்கள், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கட்டியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய காலத்திலேயும் கட்டிக் கொடுத்து இருக்கிறோம். ஆனால் இந்த இயற்கையால் பாதிப்பு, அதாவது வெள்ளம், புயல், போன்ற காலங்களில் இந்த வீடுகளில் வசிக்கின்றவர்களுக்கு, இந்த அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவை கொடுப்பது இல்லை. மற்றவர்களுக்கு எல்லாம் கொடுக்கிறார்கள். இந்த வீடுகளில் இருப்பவர்களுக்கு மட்டும் அந்தச் சலுகை கிடைப்பது இல்லை. இதற்கு என்ன காரணம்? சர்க்காரிலே வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். புயல் அடித்தால் இவர்களுக்கும் சேதம் ஏற்படுகிறது. இது வரையிலும் ஏதாவது கொடுத்தார்களா என்று பார்த்தால் இல்லை. எனவே எதிர் காலத்திலாவது, நாம் கட்டிக் கொடுத்த அந்த வீடுகளில் இருக்கிறார்களே என்ற அந்த பாவத்திற்காகவாவது நீங்கள் கொடுக்க வேண்டும். எனவே அரிசி, மண்ணெண்ணெய் கொடுப்பதில் அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜனவரி 20 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் என்று எங்கே பார்த்தாலும் கொண்டாடுகிறார்கள். இதைப் பற்றி யாருக்குமே தெரிவதில்லை. ஏதோ ஒரு இடத்திலே மைக்கைக் கட்டுகிறார்கள், 4, 5 நோட்டீஸ் போடுகிறார்கள். சம்பந்தம் இல்லாதவர்கள் சில பேர்கள் வருகிறார்கள். நம்முடைய நாட்டிலே சுதந்திர தினம் கொண்டாடுகிற மாதிரி, ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி கொடி கட்டி, பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுப்பது மாதிரி இந்த வாரத்தைக் கொண்டாடுவதற்காக செலவு செய்கிறார்களே தவிர, இந்த





தீண்டாமை ஒழிப்பு வாரம் என்பது ஒரு பெரும் பகுதி மக்கள் வந்து அதிலே கலந்து கொள்கிற ஒரு விழாவாகக் கொண்டு வந்து, நம்முடைய காரியங்களைச் சொன்னால் தான் அந்த மக்களுக்குத் தெரியும்.

அதே போல் ராமநாதபுரம் மாவட்டம், காமராஜ் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் 104 கிராமங்களில் இந்த தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் பண்ணியதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது, சமூக நலத் துறையின் மூலமாக, இதை எப்படித்தான் பிரச்சாரம் செய்தாலும், இன்னமும் அந்த கேணியிலே அவர்கள் தண்ணீர் எடுக்க முடியவில்லை, இன்னமும் தெரு வழியாக நடக்கமுடியவில்லை. இப்படி ஒரு சமூக ஒடுக்குமுறை என்பது இந்தியாவிலேயும் இருக்கிறது, அது தமிழகத்திலேயும் இருக்கிறது, எவ்வளவுதான் இந்த நாட்டினுடைய சுதந்திரத்தை பற்றி பேசினாலும், இதைப் போக்குவதற்கு பிரச்சாரம் மூலமாகத்தான் செய்ய வேண்டும். இதற்கு சர்வ கட்சி பிரதிநிதிகளைப் போட வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் சர்வ கட்சிப் பிரதிநிதிகளைப் போட்டு, இந்த மாதிரி காரியங்களை நாம் சீர் செய்தால்தான், இது நல்லமுறையில் வரும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

அதேபோன்று திருத்துறைப்பூண்டி, என் தொகுதியிலே உள்ள கீரைக்குடி பஞ்சாயத்திலே உள்ள அங்காடி கிராமம், அங்கே சுடுகாட்டுக்குப் போக பாதை எடுத்தாகிவிட்டது. கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் தூரம். ஆதி திராவிடர்கள் பணம் கொடுத்தாகிவிட்டது. ஒரு 5 பேர்கள் பணம் வாங்கி விட்டார்கள். 2 பேர்கள் பணம் வாங்கவில்லை. பேங்கிலே டெபாசிட் பண்ணியாகிவிட்டது. போன வருடம் ஆயிரம் பேர்கள் திரண்டு வந்து ரோடு போட்டாகிவிட்டது. ஆனால் நம்முடைய அகில இந்திய அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த ஒருவர் இங்கே வந்து—சர்க்காரிலே வேலையிலே உள்ளார். அவர் எப்படியோ இங்கே இருந்த டைரக்டரைப் பிடித்து, அதை இரண்டு வருடமாக வேலை செய்யாமல் முடமாக்கிவிட்டார்கள். சாவதானமாக செய்த அந்த வேலையைக் கூட, இப்போது அவர்கள் ஆக்ரமித்து, இன்றைக்கு வெட்டிவிட்டு அங்கே வேறு நட்டு இருக்கிறார்கள். இப்படி அதிகாரிகள்கூட இன்றைக்கு நம்முடைய சர்க்கார் பணத்தை கொடுத்து சர்வதானமாக வேலை செய்தும்கூட சரியான நடவடிக்கை எடுக்கிற இந்த நேரத்தில் இப்படி சில அதிகாரிகள் ஒதுங்கி இருப்பது என்பது, அது மேலும் தவறுக்கு இடம் கொடுப்பதாக ஆகிவிடும். எனவே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 24

அதேபோல் ஆதி திராவிட மாணவர்கள், மாணவியர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்குகிறோம். இப்படிக் கொடுப்பதிலே ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஜூன் மாதம் முதல் வாரத்தில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. ஜூலை மாதம் முதல் வாரத்தில் கொடுத்தால் நல்லதாக இருக்கும். ஆனால் டிசம்பர் மாதம் வரைக்கும் புத்தகங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. எங்கள் ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திலே கடைசி நேரத்திலே பல புத்தகங்கள் இல்லாமல், ஒவ்வொரு புத்தகமாக தேடி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் பற்றிக்கூட நான் சட்ட சபையிலே சொல்லியிருக்கிறேன். இந்த நிலையைப் போக்க வேண்டும். ஏன் என்றால் கிராமத்திலே இருக்கிற பிள்ளைகள் படிப்பது என்பது மிகவும் சிரமம். அந்தப் பிள்ளைகள் எல்லாம் சோறு தின்பதற்குப் போய்விடுகிறார்கள். அப்படிப் போகிற இடத்திலே புத்தகத்தைக் கொடுக்கவில்லை என்றால், எப்படி படிப்பு வரும்? எனவே அந்த ஒரு மாதக் காலத்திற்குள் புத்தகங்களைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-20)

அதேமாதிரி பிள்ளைகளுக்கு உடைகள் கொடுக்கிறோம். இது நல்ல திட்டம். நாம் எல்லோரும் வரவேற்கிறோம். ஆனால் இதை எப்படிக் கொடுக்கிறார்கள் என்றால், 10 வயது உள்ள பிள்ளைகளுக்கு 16 வயது உள்ள பிள்ளை போடுகின்ற உடையைக் கொடுத்தால், அந்த பிள்ளைகள் அதைப் போட்டுக் கொண்டு, "தொங்கா தொங்கா' என்று போட்டுக் கொண்டு போகின்றது. அதேபோல் 8 வயது பிள்ளைகளுக்குப் போய் 6 வயது பிள்ளைகளுடைய சட்டை கொடுக்கப்படுகிறது. இப்படிக் கொடுப்பதால், அந்தப் பிள்ளைகள் இந்த உடைகளை நாகரிகமாக போடுவதற்கான நிலைமைகள் இல்லை. எனவே இவ்வளவு செலவு செய்கிற நாம், ஒவ்வொரு டிவிசனுக்கும் ஒரு தையல் கடை வைத்து—இப்போது சமூக நலத்துறையால் தையல் வேலை செய்கிறார்கள்—பிள்ளைகளுடைய துணியினுடைய அளவை எடுத்து அதைத் தைத்துக் கொடுத்தால், அந்த பிள்ளைகள் நன்றாக அதைப் போட்டுக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். இப்படி தொங்கா, தொங்கா என்று போட்டுக் கொண்டு போவதிலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. எதிர்காலத்திலே இந்தக் குறைபாடுகளையெல்லாம் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

அதைப்போல மாணவர் விடுதிகள்; விடுதிகளைக் கட்டித் தருகிறோம். 1 வருடம் ஆகிறது; இரண்டு வருடம் ஆகிறது. அவைகளை மறுபடியும் பராமரிப்பதே கிடையாது.



1986 ஏப்ரல் 24]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீருடை தைக்கின்ற பணியை, அந்தந்த வயது குழந்தைகளுக்கு, அதாவது 5 வயது 6 வயது, 7 வயது என்று கணக்கிட்டு அந்த வயதுக்கு ஏற்றவாறு தான் இன்றைக்கு தைத்து கொடுக்கப்படுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், மாணவர்களுக்கு அந்த சீருடைகள் தொள தொளவென்று இருக்கிறது என்று. மாணவர்கள் ஒல்லியாக இருந்தால் என்ன செய்வது ?

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை குற்றமாகச் சொல்லவில்லை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் 15 வயது, 10 வயது என்று அளவு எடுத்து தைக்கிறார்கள். பிள்ளையைப் பார்த்து தைப்பது கிடையாது. 10 வயது, 15 வயது என்று தையல் கடைக்கு அளவு கொடுத்தால் அவர்கள் தைத்து மொத்த மொத்தமாக கொடுத்து விடுகிறார்கள். அதை வாங்கிக் கொண்டு வந்து பள்ளிகளில் கொடுக்கும்போது பார்த்தீர்கள் என்றால் வயதுக்கும், கொடுப்பதற்கும் சம்பந்தம் இல்லாமல் கொடுக்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளை நீக்கி குழந்தைகள் போட்டால் அந்த உடைகள் சரியாக இருக்கக்கூடிய அளவுக்கு, அந்த உடைகளைப் பொறுக்கியெடுத்து கொடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

அதைப்போல மாணவ விடுதிக்ளைக் கட்டிக் கொடுக்கிறோம், 2 வருடமானாலும், 5 வருடமானாலும் கட்டி முடித்ததோடு சரி. அப்புறம் அதற்கு வெள்ளை அடிப்பது கிடையாது. ஒரு பலகை தெரிச்சுப் போச்சுனால், பாதுகாப்பு கிடையாது. அதுவுமில்லாமல் அசிங்கமாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டு விடுமுறையிலும், ரொம்ப வாங்கவேண்டாம் நான்கு மரக்கால் சுண்ணாம்பு வாங்கினால் போதும் ; 10 ரூபாய் அடிக்கிறதுக்கு கூலி கொடுத்தால் போதும். அதை சுத்தமாக வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான், ஆதி திராவிட மாணவ விடுதி, என்னுடைய தொகுதியிலே, ஆனத்தம்பாடியிலே மேல் நிலைப் பள்ளி இருக்கிறது. அது பெரும்பாலும் ஆதி திராவிட மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளி. அதைப்போல முத்துப்பேட்டை. அந்தப் பகுதியிலிருந்தும் ஆதி திராவிட மாணவர்கள் கொஞ்சம் அதிகமாக வருகிறார்கள், மன்னார்குடி தொகுதியிலே, சித்தமல்லி, நொச்சியூர் போன்ற பகுதிகளிலிருந்தெல்லாம் மாணவர்கள் வருகிறார்கள்'. இந்த இரண்டு இடத்திலும் ஆதி திராவிட மாணவ விடுதிகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 24

அதைப்போல மாணவர்களுக்கு நீங்கள் கொடுக்கிற தொகை பத்தாது. ஒருகாலத்திலே கொடுத்தார்கள், 60 ரூபாய் 95 ரூபாய். இப்போதும் அதையே கொடுத்தீர்கள் என்றால் அது பத்தாது. எல்லா விலையும் அதிகமாக ஏறிவிட்டது. குறைந்த பட்சமாக 120 ரூபாய் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். 'தாட்கோ' மூலமாக வீடு கட்டித் தரப்படுகிறது. இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் 'கான்ட்ராக்ட்' கிடையாது என்று. யாருக்கும் தனிப் பட்ட முறையிலே கிடையாது. என்னுடைய யூனியனிலே, மேட்டுப்பாளையத்திலே ஒரு ஊரில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். திருத்தங்கூடியில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிச் சீமையிலே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'கான்ட்ராக்ட்' எல்லாம் கொடுக்கிறார்கள், கட்டுகிறார்கள். ஆனால் மழைக் காலங்களில் உள்ளே குடியிருக்க முடியவில்லை. அதனாலே நல்ல . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அவர்களுடைய தொகுதியிலே 'கான்ட்ராக்ட்' மூலமாக கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆர்.எல்.ஈ.ஜி. பி. என். ஆர். ஈ. பி., திட்டங்கள், 'கான்ட்ராக்ட்' மூலம் கட்டிக் கொடுக்கலாம். 'தாட்கோ' நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பயனடைகின்றவர்கள் அவர்களுடைய கையிலே கொடுத்துதான் கட்டிக் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** நான் அமைச்சர் சொல்வதை வரவேற்கிறேன். இருந்தாலும் அந்த அம்சங்களிலேதான் எல்லா அமைப்புகளிலும் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்களே தவிர யார் சம்பந்தப்பட்டவர்களோ, அவரிடம் நேரடியாக பணம் கொடுத்து கட்டப்படுகிறது என்பது, எனக்குத் தெரிந்து இல்லை. இருந்தாலும் நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, இந்த 6 ஆயிரம் ரூபாய் என்பதெல்லாம் பத்தாது. அதனாலே 10 ஆயிரம் என்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்டுவதற்கு 74-லிலே 2,400 ; அப்புறம் 6 ஆயிரம் ; மலைப் பகுதியில் 9 ஆயிரம். ஆகவே எதிர்காலத்திலே இதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

அதேபோல 5 லட்சம் வீடு கட்டுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது ஆதி திராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர்களுக்கு என்று; இந்த 5 லட்சம் வீடுகளுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. ஆகவே அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டு மனைக்கு 3 சென்ட் என்று இருக்கிறது. அது பத்தாது. அதை எதிர் காலத்தில் 5 சென்ட்டாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டுமனைப் பட்டா கொடுப்பது என்பதை ஒரு மூன்று ஆண்டு திட்டத்திற்குள் தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆதி திராவிடர் அனைவருக்கும் கொடுத்தாகிவிட்டது என்ற ஒரு கோடு வகுக்கப்பட வேண்டுமே தவிர, வருஷத்திற்கு வருஷம் 50, 100 என்று ஒரு குறிப்பிட்ட அளவிலே முடிக்க வேண்டும்.



1986 ஏப்ரல் 24] [திரு. பொ. உத்திராபதி]

அதைப்போல தாலுக்கா தாசில்தார்கள் எப்படியோ ஆதி திராவிடர்களுக்கு பள்ளத்திலே வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். இப்போதும் அப்படித்தான் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தாசில்தார் அலுவலக வாடகை வீட்டை பார்த்தீர்களென்றால், நல்ல நாற்காலி கிடையாது . நல்ல கட்டிடம் கிடையாது. வாகனம் கிடையாது ; ஒரு போன் கிடையாது. இரண்டு தாலுக்காக்களுக்கு ஒரே சைக்கிளிலே போக வேண்டும். எப்படி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். எதிர் காலத்தில் இந்த அதிகாரிகள் தீவிரமாகப் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். படிப்படியாக தாலுக்கா அலுவலகத்துக்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும். காரணம் இந்த மக்கள் அதிகமான அளவில் அந்தப் பகுதிகளில் இருக்கிறார்கள்.

அதே மாதிரி தேர்தலில் 18 சதவீதம் அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டது. ஏதோ ஒரு காரணத்தால் கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கியதால் எப்படியும் தேர்தல் நடத்தவேண்டும் என்று நாம் எல்லாம் வற்புறுத்தியதன் அடிப்படையில் அரசும் தேர்தலை நடத்தி முடிந்தது. ஆனால் இந்த ஆதி திராவிடர்கள் தமிழகதில் 6 ஊராட்சி ஒன்றியங்களில் தான் ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களா வந்து இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிகிறது, அதிகமாக வந்து இருக்கலாம். தஞ்சை மாவட்டத்தில்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 6 ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களில் 3 பெருந் தலைவர்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அடுத்த தேர்தல் நடக்கிறபோது இந்தப் பிரச்சினையைத் தீர்த்து ஆதி திராவிட மக்களுக்கும், பெண்களுக்கும் அந்த சதவீத அடிப்படையில் தேர்தல் நடத்துவ்தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 24

கடைசியாக, இன்றைக்கு ஜாதி எங்கே இருந்து உருவாகிறது. சட்டமன்ற விடுதியின் எதிரில் பாருங்கள், எத்தனை விதமான போஸ்டர்கள். ஆதி திராவிடர்களுக்கு என்றும், வன்னியர் களுக்கு என்றும், முக்குளத்தோருக்கு என்றும், பிற்பட்டவர் களுக்கு என்றும் பல போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருக்கின்றன. இப்படி ஜாதிக்கு ஒரு போஸ்டர் ஒட்டப்பட்டு இருக்கின்றது.. எங்கள் வர்க்கத்தைப் பற்றி சட்டமன்றத்தில் பேசாத எம்.எல். ஏ.வே. ராஜினாமா செய்ய என்று இப்படி ஜாதியின் பெயரால் போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. இந்த அளவுக்கு போஸ்டர் கள் ஒட்டப்படுகின்றன. ஜாதி மாநாடுகளில் எல்லாம், ஜாதி இயக்கங்களில் எல்லாம் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப் பினர்களும் பங்கு கொள்ளக்கூடாது என்ற முடிவுக்கு வர வேண்டும். அதேநேரத்தில் ஜாதியின் பெயரால் அமைப்பு களை உருவாக்கினால் தடைசெய்யவேண்டும். ஜாதியின் பெயரால் போஸ்டர்கள்ளை எங்கு பார்த்தாலும் ஒட்டி ஒரு ஜாதி கல வரத்தை தூண்டக்கூடிய அளவுக்கு வாசகங்கள் இருக்கின்றன. எனக்குகூட ஒரு லெட்டர் வந்திருக்கிறது நீ ஒரு அரிசனஎல்.ஏல்.ஏ. வா, நீ அந்த 18 சதவீதத்திற்கு. ஏன் போராடவில்லை? ஆகவே உனக்கு மானம், சூடு, சொரணை இருந்தால் ராஜினமா செய் என்று வந்திருக்கிறது. இப்படி எல்லாம் வருகிறது பாருங்கள். ஒவ் வொரு ஜாதியினரும் இப்படி போஸ்டர்களைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு ஜாதி கல வரத்தை, ஜாதி இன கலவரத்தை தூண்டக்கூடிய அளவுக்கு ஏதோ ஒரு பின்னணி தமிழகத்தில் உருவாகிக் கொண்டு இருக்கிறது. தமிழக அரசு எதிர்காலத்தில் அதை நிச்சயமாக தடுக்கவேண்டும். அனேகமாக மற்ற இடங்களில் ஏற்படக்கூடிய ஜாதிக் கலவரங்கள் தமிழகத்திலும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதற்கு எல்லாம் இடம் கொடுக்காமல், இடம் கொடுத்தால் பொதுவாக இந்தியா வில், தமிழகத்தில் பாதிக்கப்படகூடியவர்கள் பெரும்பான்மை யான மக்கள் ஆதி திராவிடர்களாகத் தான் அமைகிறார்கள். ஆகவே இந்த ஆதி திராவிடர்களின் நலனை பாதுகாக்கவேண்டும் என்றால் இந்த ஜாதியின் பெயரால் வரக்கூடிய, அது எந்த வகையில் வந்தாலும் அதை அரசு தடை செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியின் சார்பாக பழங்குடி மக்கள், ஆதி திராவிடர்கள் நலன் பற்றிய மானிய கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கிற



1986 ஏப்ரல் 24] [திரு. வை. பாலச்சந்திரன்]

இந்து முன்னணியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல் வதற்கு வாய்ப்பு தந்து இருக்கிறீர்கள், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் அதிகமாக இல்லாமல் இருப்பதால் நான் வெகு நேரம் எடுத்துக்கொள்ள தயாராக இல்லை. ஒரு சிலவற்றை மட்டும் எடுத்து வைத்து விட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். 'ஜாதிகள் இல்லையடி பாப்பா, குல உயர்ச்சி தாழ்ச்சி சொல்லல் பாவம், என்று பாரதியார் கருத்தை கொள்கையின் மைய கருத்தாக கொண்டுள்ள இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக நான் ஆதி திராவிடர் நல மானிய கோரிக்கையின் மீது பேசுகிறபோது அதற்கு ஒரு தனி காரணம் உண்டு, சமுதாயத்தில் யாராக இருந்தாலும், அவர்கள் ஒரு சில சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக ஒதுக்கப்பட்டவர் களாக இருந்தாலும், புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு குரல் கொடுத்து, கை கொடுத்து அவர்களை மேலே கொண்டு வர வேண்டும் என்ற கொள்கையில் இந்து முன்னணி இயக்கம் மிகவும் ஆர்வத்தோடு இருப்பதால் இன்றைக்கு சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக, காலத்தின் கொடுமையின் காரணமாக சமூக பொரு ளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவர்களாக ஆதி திராவிட சகோதரர்களாக இருந்து கொண்டு இருப்பதால் அவர்கள் முன் னேற வேண்டும் என்ற அடிப்படையில் சமூக நீதியும், சமூக சமத்துவமும் பெறவேண்டும் என்ற அடிப்படை யில், இந்து முன்னணி சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லு வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாலை 5–30)

ஒரு காலத்தில் காடுகளாக இருந்தவைகளை எல்லாம் நல்ல கழனிகளாக மாற்றி பயிர் செய்யக்கூடிய நிலங்களாக மாற்றிய கைகளுக்குச் சொந்தக்காரர்கள் நம்முடைய ஆதி திராவிடர்கள் தான். ஒரு காலத்தில் புஞ்சை நிலங்களாக இருந்தவைகளை நஞ்சை நிலங்களாக மாற்றியவர்களும் நம்முடைய ஆதி திரா விடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். அப்படி காடு களையும், மேடுகளையும் செம்மையாக, நல்ல விளைநிலங்களாக மாற்றித் தந்து இந்திய நாட்டின் பொருளாதாரத்தை செம் மைப் படுத்தியவர்களும் அந்த ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்கள் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சொல்லப்படுவதே, இன்றைக்கு மனித சமுதாயத்திற்கு இருக்கிற ஒரு அவமான மாகும். இப்படி உழைத்தவர்கள்; உழைக்கின்றவர்கள், நம் முடைய சமுதாயத்தின் பொருளாதாரத்தினுடைய அச்சாணியாக

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 ஏப்ரல் 24

நாடி நரம்பாக, அடித்தளமாக இருப்பவர்கள், இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டு, ஒரு களங்கம் உருவாக்கப்பட்டு, அதன்காரணமாக, கிராமங்களில் இந்தச் சமுதாயம் தலைகுனிய வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அவர்கள் தீண்டத்தகாதவர்களாக, அவர்கள் இந்தெந்த தெருகளுக்கு வரக்கூடாது என்ற நிலைமையில் அவர்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு அநீதிகள் இழைக்கப்பட்டு, இன்றைக்கு அந்த நிலை மாறிப்போனாலும்கூட ஒரு சில ஊர்களில், ஒரு சில இடங்களில் இன்றைக்கும் அந்த அநீதிகள் இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இந்த சமூக அநீதிகளை மாற்றுவதற்கு, அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்த சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு நம்முடைய அரசால்தான் முடியும் என்று இந்து முன்னணிப் பேரியக்கம் நம்பத்தயாராக இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமூக நீதி வழங்கப்பட வேண்டுமானால், அவர்களுக்குப் பொருளாதார மேம்பாட்டு வழிவகைகளை உண்டாக்கி, அவர்களை சிறப்பாக நடத்தி, அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு அரசாங்கமும், அரசாங்கத்தோடு, சேர்ந்து வேறு சமுதாய இயக்கங்களைச் சார்ந்தவர்களும் இணைந்து உழைத்தால்தான் அந்தக் குறைபாடுகளை நாம் எளிதில் களையமுடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு மனித குலத்தை பல்வேறு ஜாதிகளின் பெயரால் பிரிக்கக்கூடாது என்றும் அப்படி பிரிப்பது பாவம் என்று சொல்லப்பட்டாலும், நீண்ட நாட்களாக ஒரு சிலர் ஜாதியின் பெயரால் பிரிக்கப்பட்டு, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் நிலைமை அங்கொன்றும் இங்கொன்றுமாக சில இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் அவர்களை மேலே கொண்டுவரவேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டுமென்று திட்டமிட்டு அரசு செயல்பட வேண்டுமென இந்த அரசாங்கத்திடம் வேண்டுகோளாக வைக்க ஆசைப்படுகிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு மகத்தான திட்டத்தைக் கொண்டுவந்து, அதன் காரணமாக கிராமங்களில் ஒரு முன்னேற்றத்தைக் காண முடிந்தது. ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒரு வளத்தைக் காண முடிந்தது. ஆகவே தன்னிறைவுத் திட்டம் எந்த அளவிற்கு சிறப்பான பலனை நாட்டிற்குக் தந்ததோ, அதுபோன்று ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில், வீடு இல்லாதவர்களுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும், வீட்டு மனைப் பட்டா வழங்க தனியாக ஒரு திட்டத்தைக்கொண்டு வந்து, ஓராண்டு இரண்டாண்டு என்று காலக்கெடு வைத்து, அந்த ஒரு ஆண்டு இரண்டாண்டுகால கெடுவிற்குள் நிலம் இல்லாத, வீடு இல்லாத



1986 ஏப்ரல் 24] [திரு. வை. பாலச்சந்திரன்]

எல்லா ஆதிதிராவிடர்களுக்கும் பட்டா கொடுத்தாக வேண்டும் என்ற திட்டத்தை நம்முடைய அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியாக கோப்பு போட்டு முதலமைச்சருக்கு அனுப்பினால், அனுமதி கிடைக்கும் என்று இந்து முன்னனி பேரியக்கம் நம்பிக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு பட்டா வழங்கப்படும்போது, அவைகளை எதிர்த்து, வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பெருமளவில் தேங்கிக் கிடக்கின்றன. அவர்களுக்கு நிலம் கொடுக்கின்ற நிலைமையை ஏற்படுத்தும் பல்வேறு ஆணைகள் எதிர்க்கப்பட்டு வழக்குகள் முடிவு பெறாத நிலையில் தேங்கிக் கிடக்கின்றன. இந்த வழக்குகள் தீர்க்கப்பட்டு, முடிவிற்கு வரவேண்டுமென்றால், ஆதிதிராவிட மக்களுக்குக் பட்டா விரைவில் கொடுக்கப்பட வேண்டுமென்றால், இந்த வழக்குகளை தனியாக விசாரிப்பதற்கென்று, தனியாக ஒரு டிரிப்யூனல் அமைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க ஆசைப்படுகிறேன். ஆக இதற்கென்று ஒரு டிரிப்யூனல் போட்டு, பட்டா சம்பந்தமாக வழக்குகளை ஓரிரு மாதங்களுக்குள் முடித்தாக வேண்டுமென்று நம்முடைய அரசு ஆணை பிறப்பிக்குமானால், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த பயனடைவார்கள்.

இன்றைக்கு அரிசன வெல்ஃபெர் டிபார்ட்மெண்டில் பணி புரிகின்ற தாசில்தார்கள், அங்கே பணியாற்றுகின்றபோது, அந்தப் பணிக்காலத்தில், அவர்கள் ப்ரமோஷனுக்காக ஒரு டிரையினிங் பீரியட், பயிற்சிக்காலமாக கணக்கெடுக்கப்படாத காரணத்தால் அவர்கள் அந்தப்பதவிக்கு வருவதற்கு தயங்குகிறார்கள். அப்படி வந்துவிட்டாலும்கூட, ஒரு மாதமு இரண்டு மாதங்கள் இருந்துவிட்டு, எப்படியாவது பதவி மாற்றத்தை வாங்கி, வேறு இடங்களுக்குச் சென்று விடுவிடுகிறார்கள். பின்னர் பதவி இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே நாட்டு மக்களுக்கு பலனைக் கொடுப்பதற்கு அந்தத்திட்டம் இன்றைக்கு செயல்பட முடியாத அளவிற்குக் கிடப்பிலே இருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அரிஜன் வெல்ஃபெர் டிபார்ட்மெண்ட் தாசில்தார்களுடைய காலக்கட்டத்தை, டிரையினிங் பீரியடாக எடுத்துக்கொள்வதற்கு முன்வரவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாவட்டங்களிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் வேறு பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வாய்க்கால் கரைகள் அங்கே இருக்கின்றன. குளங்கள் இருக்கின்றன. வயற்காடுகள் அங்கே இருக்கின்றன. அங்கேயுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், வாய்க்கால் கரைகளிலும், குளங்களின் கரைகளிலும், வாய்க்கால் கரை ஓரங்களிலும் வாழ்கின்ற நிலைமையில் இருக்கின்றார்கள். அந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சார வசதி இல்லை. பாதை வசதி இல்லாத பகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் வாழும் பகுதி குடிநீர் வசதி இல்லாத பகுதியாக இருந்துகொண்டு இருக்கிறது. அவர்கள் ஒதுக்கப்பட்ட மக்கள் என்ற மன உணர்வோடு, ஒதுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதை அரசாங்கம் கடமையாகக் கொண்டு மின்சார வசதி, பாதை வசதி செய்து கொடுக்கவேண்டும்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் 80 சதவீதத்தினர் தொடக்கக் கல்வி நிலையங்களில் சேர்ந்து படிக்கிறார்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான நிலை என்னவென்று பார்த்தால், அந்த மாணவர்கள் காலையிலே கழனிகளில் வேலை செய்கிற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் சரியாக இருக்க முடியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அத்தகைய புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கீழே இருக்கிற சமுதாயத்தைத் தூக்கிவிடுகிற திட்டங்களைப் போடுவது பயன்படாது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமுதாய நீதிக்காக, சமுதாயத்தின் சமத்துவத்திற்கு மிகச்சிறப்பாகப் பணியாற்றுகிற இந்தத்துறையில் இங்கொன்றும், அங்கொன்றுமாக சில குறைபாடுகள் இருப்பதாகச் சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதைப் பற்றிப் பேசுவதற்கு நான் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இருப்பினும், இத்தகைய சமூக நீதிக்காகப் பாடுபடுகிற அதிகாரிகள், உழைக்கின்ற ஊழியர்கள் தவறு செய்வது ஆண்டவனுக்கு இழைக்கும் அநீதியாக, கொடுமையாக நினைக்க வேண்டுமென்று கூறி, இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.





**திரு. அ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவையின் வருங்காலத் தலைவர் அவர்களே,....................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

**திரு. அ. ஆறுமுகம் :** தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நல அமைச்சர் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு அருணாசலனார் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்தினைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த இலாகாவினை மிகச் சிறப்போடு அவர்கள் ஏற்று நல்ல முறையில் நடத்தி, மிக உற்சாகத்தோடும், வேகத்தோடும், அவர்கள் பணியாற்றி வருகின்றார்கள் என்பதை நான் அறிந்து, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக, இலாகா செயலாளர் அவர்களும் அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்குகின்ற அதிகாரிகளும் நல்ல முறையிலே பணியாற்றுவதைப் பார்த்து அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய தேசத்திலே ஏறக்குறைய 70 கோடி மக்கள் இருக்கிறார்கள். இதில் 4-ல் 1 பகுதியாக விளங்குகின்ற தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களின் பிரச்னை, அவர்களுடைய பொருளாதார, கல்வி, சமூகப் பிரச்சினைகள் இந்த நாட்டிலே தீராமல், அது ஒரு தேசிய காரியமாக, செயலாக, பணியாக இருந்துகொண்டு வருகிறது. இதை நாம் அறிவோம்; இந்த நாடு அறியும்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், ஏறக்குறைய 1 கோடியே 25 லட்சம் பேர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நம்முடைய அமைச்சரவையிலே எங்களுக்கு ஒரு பெயரை கொடுத்து இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே,

We were called Scheduled Castes and Scheduled Tribes in this country. But Mahatmaji had given a very great name, that is, the sons of Lord Krishua–Harilans. Now, Sir, we are called as Adi Dravidars. Sir, take the list of Castes under Tamil Nadu Code. No. 1 Adi Andhras No. 2 Adi Dravidas. We the Adi Dravidas are one among the many sections which are included in this Community ist.

[திரு. அ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 24

ஆகவே, இந்த இலாகாவிற்கு ஆதி திராவிட இலாகா என்று இருப்பதை மாற்றி 'தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நல இலாகா' என்று வைக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்காருக்கு ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-40)

என்னிடத்திலே பல பேர்கள் சொல்கிறார்கள். ஆதி திராவிடர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டிலே வாழ்வது, பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சொல்வதற்கு என் நா கூசுகிறது. ஆகவே உங்களுக்கே அதை விட்டு விடுகிறேன். எல்லோரும் இது தங்களுடைய இலாகா என்று ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு இந்த இலாகாவின் பெயரை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையேற்று நடத்துகிற இந்த சர்க்கார் உண்மையிலேயே ஒரு புரட்சியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் எத்தனை லட்சம் மக்கள், எத்தனை கோடி மக்கள் கூரை வீடுகளிலே, ஓலை வீடுகளிலே, தென்னைக் கீற்று வீடுகளிலே வாழ்கிறார்கள் என்று கணக்கிட வேண்டும். அப்படி எத்தனை என்று கணக்கிட்ட பிறகு 5 ஆண்டுத் திட்டம் போன்ற ஒரு திட்டத்தைப் போட்டு ஒரு கூரை வீடு கூட தமிழகத்திலே இருக்கக் கூடாது. ஒவ்வொரு கடைசி குடி மகன் கூட காரை வீட்டிலே, சாதாரண வீட்டிலேயாவது வாழ வேண்டும். அதற்கு இந்த சர்க்கார் திட்டமிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Whether the Harijans live in huts or whether the Brahmins live in huts it is quite immaterial. யாராய் இருந்தாலும் கவலை கிடையாது. எல்லோருக்கும் அந்த நிலை இருக்க வேண்டும். தீப்பிடித்து பல வீடுகள் நாசமாகி பல உயிர்கள் போய் பணம் இலட்சக்கணக்காக சர்க்காருக்கு நட்டம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 30 இலட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 50 இலட்சம் வீடுகள் கட்ட வேண்டுமென்று நான் தாராளமாகவே கேட்டேன். நீங்கள் செய்து கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால் அந்த 50 இலட்சம் வீடுகளுக்கு மனைக்கட்டு எங்கே தேடப் போகிறோம், அதைப் பார்க்க வேண்டாமா? அதற்காக நிலங்களைக் கையகப் படுத்த வேண்டாமா? அதற்கு சட்டம் இருக்கிறதா? இருக்கிற சட்டத்திலேயும் ஓட்டைகள் இருப்பதால் பெரிய பணக்காரர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் ஹைகோர்ட்டிற்கும், சுப்ரீம் கோர்ட்



1986 ஏப்ரல் 24] [திரு. அ. ஆறுமுகம்]

டிற்கும் போய் ஏழை எளிய மக்களுக்கு வீடு மனைகள் சேராத அளவிற்கு குந்தகம் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உடனடியாக முதலமைச்சர் அவர்களுடன் பேசி கலெக்டர் அளவிலேயே நிலத்தை வாங்கிப் பட்டா அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலமாக 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அடுத்தபடியாக விடுதிகள், கல்லூரிகளிலே படிக்கின்ற பிள்ளைகளை பார்க்கிற போது—நான் அமைச்சர் அவர்களோடு கோடம்பாக்கத்திலே நடந்த ஒருவிழாவிற்குப்போகிற வாய்ப்புக் கிடைத்தது—அப்போது ஒரு பிள்ளையை என்ன தம்பி படிக்கிறாய் என்று கேட்ட போது, I am doing M.A., என்றும், when I asked another, "What are you doing" என்று கேட்ட போது I am doing M.Sc., என்றும் சொல்கிறான். ஆகவே அந்தப் பிள்ளைகள் கீழே தரையிலே உட்கார்ந்து படிக்கிற நிலை இருக்கிறது. நாற்காலி இல்லை, மேசை இல்லை என்ற அவர்களுடைய நிலையைப் பார்க்கிற போது, ஆகா, தாழ்த்தப்பட்ட மகனாகப் பிறந்துவிட்ட காரணத்தினால் அல்லவா இப்படி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். பெரிய பணக்காரன் வீட்டிலே பிறந்திருந்தால் இப்படி கஷ்டப்பட வேண்டாமே என்று கண்ணீர் விடுகிற நிலையைப் பார்க்கிறோம். இந்த மானியத்திலே 44 கோடி, சொச்ச ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. 100 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

You go and meet the Chief Minister. We will come and we will tell him that the sum of Rs. 47 crores is not at all sufficient and please give us Rs. 100 crores. கேட்டு வாங்க வேண்டும். அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

I am addressing the Press. In each and every University.......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : பிரஸ்ஸைப் பார்த்து பேசக்கூடாது.

[1986 ஏப்ரல் 24

திரு. அ. ஆறுமுகம் : பல்கலைக் கழகங்களிலே சென்னைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. கோயம்புத் தூர் பல்கலைக் கழகம் இருக்கிறது. காமராஜர் பல்கலைக் கழகம் இருக்கிறது. இந்த கவர்ன்மெண்டில் தயவு செய்து நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

Not even a Harijan was appointed as a Member of the Syndicate in any University in Tamil Nadu I am the only Syndicate Member of the University of Madras. Before me there was none. There are thousands of scholars available and please conside their case and appoint atleast one person to each and every University as Syndicate Membe in Tamil Nadu.

தமிழகத்திலே இருக்கிற பல பல்கலைக் கழகங்களிலே இருக்கிற ஆட்சிக் குழு எதிலேயும் ஒரு தாழ்த்தப்பட்ட மகனைக் கூடப் போடவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

My Learned Sister Tmt. Ponnammal referred to the State Harijan Advisory Committee for Scheduled Castes.

எனன கொடுமை இது, 1957 ஆம் ஆண்டிலேயிருந்து 1967 ஆம் ஆண்டு வரைக்கும் 'State Harijan Advisory Committee, இருந்ததே; பிறகு அந்தக் கமிட்டி மெம்பர்களைக் காணோமே. என்ன பிரயோஜனம்? அமைச்சரவர்களே எல்லாவற்றையும் பார்த்து விட முடியுமா? 'State Harijan Advisory Committee, சம்பந்தப்பட்ட அந்த ஃபைல் முதலமைச்சர் டேபிளில் ஏறக் குறைய இரண்டு மூன்று வருடங்களாகத் தூங்கிக் கொண்டிருக் கிறது என்று யாரோகூட குறை சொல்கிறார்கள்.

It is lying in the C.M.,'s Office. Please pursue and pass orders as early as possible—

அடுத்து, தீண்டாமை ஒழிப்பு பற்றி எடுத்துக் கொண்டால், தீண்டாமை இல்லை என்று சொல்கிறார்கள். எங்கே இல்லை தீண்டாமை? யாருடைய உள்ளத்திலே இல்லை தீண்டாமை: கீழே இருப்பவர்களிலேயிருந்து மேலே பதவியிலே உள்ளவர்கள் வரையில் தீண்டாமை இருந்துக் கொண்டுதான் இருக்கிறது. இதன் கொடுமை யாருக்கும் தெரியாது; என்னைப் போன்றவர்களுக்குத்தான் அது தெரியும்.





Only the wearer of the shoes knows where it pricks.

ஷூ போட்டுக் கொண்டிருப்பவனுக்குத்தான் கடிப்பது தெரியும் என்பார்கள். ஆகவே, கஷ்டப்படுகின்ற எங்களுக்குத்தான் அந்த நிலைமைகள் தெரியும். தீண்டாமை காரணமாகப் பலப் பல காரியங்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக ஒரு தாழ்த் தப்பட்ட அதிகாரி இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அவர் நல்ல கெட்டிக்காரர் என்றும் வைத்துக் கொள்ளுங்கள்; அந்த அதிகாரியை அழித்து ஒழித்து அவருக்குப் புரமோஷன் இல்லாமல் எப்படிச் செய்யலாம் என்பதற்கு புள்ளி வைத்த மாதிரி காரியங்களைச் செய்கிறார்கள். அதேமாதிரி தமிழ் நாட்டிலேகூட பெரிய அதிகாரிக்குப் பதவி உயர்வு கொடுக்காத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது; இந்தியாவிலேயும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் மறைக்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sir, I come to my Constituency now.

என்னுடைய வந்தவாசித் தொகுதியில் உள்ள கீழ் கொடுங் காலூர் என்ற இடத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக் கிறது. அதிலே மிகவும் ஏழை மக்கள் பல ஊர்களிலேயிருந்து வந்து படிக்கிறார்கள்; பெண் பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர் கள் தங்கி, உணவு அருந்தி படிப்பதற்கு கீழ் கொடுங்காலூர் என்ற ஊரிலே பெண்கள் விடுதி ஒன்றைத் திறக்க வேண்டுமென்று நான் சர்க்காரை, அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

தெள்ளாறு என்ற இடத்தில்—வந்தவாசி தொகுதியைச் சார்ந்தது—ஏற்கனவே பெண்கள் விடுதி இருக்கிறது. அங்கே ஆணகள் விடுதியைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய அமைச்சரவர்களின் மேலான கவனத் திற்குக் கொண்டுவர விரும்புவது. வடாற்காடு மாவட்டத் திலே, வடக்கு பகுதியிலே உள்ள அரக்கோணம், வாலாஜா, வேலூர், வாணியம்பாடி, குடியாத்தம், திருப்பத்தூர் ஆகிய இந்தத் தாலுக்காக்கள் வளமான தாலுக்காக்கள். வந்தவாசி, செய்யார், ஆரணி, போளூர், திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இவையெல்லாம் பின்தங்கிய தாலுக்காக்கள். அங்கே உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இலாக்காவின் மூலமாக நான் கைந்து உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தி நடத்திக்கொண்டு வருகிறார்கள் சர்க்காரிலே. ஆனால் என் பகுதியில் ஆறு தாலுக்காக்களில் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூட இல்லை என்ப தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்பால் அன்பும், மரியா தையும் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்தவாசியில், ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றையும்

[திரு. அ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 24

பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றையும் கொண்டு வந்து.
அதிலே ஆயிரக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும்
படிப்பதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தரும்படியாக இந்த
நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நம்மு
டைய இலாக்காவின் மூலமாகவும் மாடல் ஸ்கூல் என்று நடத்த
வேண்டும். கிறிஸ்டியன்ஸ் மாடல் ஸ்கூல் என்று கட்டுகிறார்கள்.
கல்வி இலாக்கா மூலமாக நடத்துவதாகத் தெரிகிறது. எனவே,
நம்முடைய இலாக்காவின் மூலமாகவும் இரண்டு கல்லூரிகளை
ஓப்பன் செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். Sir, May I request your goodselves
to take initiative and steps in order to open pucca Government
College for Boys and Girls under the suspices of our department.

முதலமைச்சரவர்கள் இங்கே இருந்திருந்தால் நான் இன்
னும் பல பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லியிருப்பேன். அவரி
டத்திலே சொன்னாலாவது தீரும் என்று நினைத்தேன். ஆனா
லும் இந்தப் பேச்சு அவர்களுக்குப் போகும் என்று நினைக்கிறேன்.
ஆகவே, மாண்புமிகு அமைச்சர் திரு. அருணாசலம் அவர்களை
இந்த இலாக்காவில் போட்டது நூற்றுக்கு நூறு பொருத்தம்
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். He is very
young, enthusiastic, energetic and effective Minister.
I wish him all success and get promotion as a big Minister.
Thank you.

[மாலை 5-50]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை
புகழ்கிறமாதிரி புகழ்ந்து, முதலிலே ஒரு கருத்தைச் சொன்னார்.
மாண்புமிகு முதல் அமைச்சர் டேபிளிலே, 3 ஆண்டுகளாக
வெல்பேர் கமிட்டி பைல் இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்
கள். அப்படி ஒன்றும் இல்லை, 8 மாதத்திற்கு முன்னாலே
போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி ஏதாவது சொல்லி,
தவறுகளிலே சிக்க விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

திரு. அ. ஆறுமுகம் : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.
தாங்கள் பதில் அளிக்கும்போது அருள்கூர்ந்து அந்த கமிட்டி
ஏற்கனவே நியமிக்கப்பட்டு விட்டது என்ற அருமையான, சத்
தான செய்தியைச் சொன்னீர்களா ?



1986 ஏப்ரல் 24]

திரு. க. நரசிம்ம பல்லவன் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்
குடியினர் நலத்துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்
பளித்தமைக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்
கொள்கிறேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
இன்றைக்குச் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையிலும் —
அவர்களுடைய நிலை வேற்றுமைப்படுத்தக்கூடிய அளவி
லும்தான் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு
தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய
சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை இன்றும் என்றும் நிலை
நிறுத்தி, இந்தச் சீர்திருத்தம் வழியாக, சமுதாயத்திலே நல்லபல
கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இந்த நிலைமைகளை எல்லாம்
மாற்றித்தர வேண்டுமென்று தமிழக அரசை நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் கல்வி
அறிவும் பொருளாதார வளமும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்
களுக்குக் கிடைக்குமானால், அவர்கள் நிச்சயமாக, இந்தச் சமுதா
யத்தில் உயர்த்தப்பட்டு, உயர்ந்த நிலையைப் பெறுவதற்கான
வாய்ப்பு கிடைக்கும். அந்த வகையிலே, புரட்சித் தலைவர்
அவர்கள் உழைக்கின்ற வர்க்கம், குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட
ஆதி திராவிட மக்கள் நலன் பெற வேண்டித்தான் பல நல்ல
திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள். எதிர்க்கட்சிகள் எல்
லாம், முதலிலே சத்துணவுத் திட்டத்தை பிச்சைக்காரர்கள்
திட்டம் என்று கேலி செய்தார்கள். அப்படி அவர்கள் எள்ளி
நகையாடியதைப் பொருட்படுத்தாமல், ஆதி திராவிட மக்கள்
வளம் பெறவும், நலம் பெறவும், பின்தங்கிய நிலையிலே இருக்கிற
ஆதி திராவிட மக்கள் மேலோங்கி வரவும், கொண்டுவரப்பட்ட
சத்துணவுத் திட்டம் இன்றைய தினம் சத்தான திட்டமாக,
வளமான திட்டமாக அமைந்துள்ளது.

சீருடை திட்டம் அவர்களுக்குச் சீர்திருத்தமாக அமைந்
துள்ளது. இலவசப் பாடப் புத்தகத் திட்டமும், மற்ற உதவித்
திட்டங்களும் கொண்டு வந்தமைக்காக, தமிழக அரசை நான்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈமச் சடங்குகளுக்காகக் கொடுக்கின்ற ரூ. 50-ஐ, மேலும்
நல்ல முறையில் பயன்படுகின்ற வகையில், உயர்த்திக் கொடுக்க
வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்
கிறேன்.

இன்றைய தினம் தமிழகம் முழுவதும், குறிப்பாக, கிராமப்
புறங்களும் குடிசைப் பகுதிகளும், நல்ல வளம் பெரும் அளவுக்குத்
தன்னிறைவு பெரும் அளவுக்குத் தன்னிறைவுத் திட்டம் பிரச்னை
களைத் தீர்த்து வைத்திருக்கிறது. அப்படித் தீர்த்து வைத்திருந்
தாலும்கூட இன்றையதினம், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள்
வாழ்கின்ற பகுதிகளில் இன்னும் குடிதண்ணீர் தட்டுப்பாடு

நிறைய இருந்து கொண்டு தானிருக்கிறது. அந்தத் தட்டுப்பாடுகள் எல்லாம் நீங்குகின்ற வகையிலே, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, உடனடியாகத் தண்ணீர் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் பெருநகர், களியாம்பூண்டி போன்ற ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளுக்குத் தண்ணீர் வசதி செய்யப்படுவதற்காக திட்டங்களைத் தீட்டி, அங்கே குடிநீர் வழங்கப்பட்டாலும் கூட, அது கிராமப்புற பகுதிகளுக்கு மட்டும்தான் கிடைக்கிறது. ஆனால், அந்தக் காலனிப் பகுதிக்குக் கிடைக்கவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நல்ல அறிவு வளர்ச்சியையும் சமுதாய நலனையும் எண்ணி, ஆதிதிராவிட மக்களுக்கு பலனளிக்கக்கூடிய வகையில், அவர்கள் அறிவுக்கூர்மை பெருகின்ற வகையில், உலகின் விஞ்ஞான வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ளுகின்ற வகையில், உலகத்தின் மற்ற செய்திகளையும் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் ஆதிதிராவிட குடியிருப்பு இருக்கிற பகுதிகளில் தொலைக்காட்சி (டி.வி. செட்) பெட்டி அமைக்க நிச்சயமாக இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காற்று, மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நிலவொளியைப் பார்த்து வாழ்ந்து கொண்டுவருகிறவர்கள் ஆதிதிராவிட மக்கள். அந்த மக்களுடைய இன்னல்களை நீக்கி, அவர்கள் இன்பமாக வாழ இலவச வீடுகள் கட்டித்தரப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் குடிசைகளுக்கு மின்விளக்கு ஏற்றி வைத்ததைப் போன்று இலவசமாகக் கட்டித்தரப்படும் இந்த தட்டோடு போட்ட வீடுகளுக்கும் இலவச மின்விளக்கு வசதியை செய்துதர உத்திரவிட்டிருப்பதை நான் போற்றி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய நிதி உதவியோடு ஆதிதிராவிடர் தொகுப்பு வளர்ச்சித் திட்டம் தமிழ்நாட்டில் செம்மையாகச் செயல்படுகிறது. என்னுடைய தொகுதி தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய தொகுதி. மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதிக்கு அளிக்கப்படுகின்ற சலுகை 'யானைப் பசிக்கு சோளப்பொரி போடுவது' போல இருக்கிறது. ஆகவே, என்னுடைய உத்திரமேரூர் தொகுதியை அவசியம் இந்த தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதி ஆதி திராவிட மக்கள் நலம்பெற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஆதி திராவிட மக்கள் ஊக்கத்தோடு உழைத்து, உயர்வு பெற தன்னுடைய சம்பாதனையைக் கொண்டு சில இடங்களில் அவர்கள் வீட்டுமனை வாங்குகிறார்கள். அப்படி உழைத்து, சம்பாதித்து, அதிலிருந்து வீட்டுமனை வாங்கியவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர வாய்ப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. பாடுபட்டு, பணம் கொடுத்து வீட்டுமனை வாங்குவதால் இலவச வீடு கட்டிக்கொடுக்கும் வாய்ப்பு இல்லை என்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. அதை மாற்றி, உழைத்து அவர்களுடைய சம்பாதனையிலிருந்து வீடு கட்டுவதற்காக 2 சென்ட், 3 சென்ட் நிலம் வாங்கியிருந்தாலும் அப்படி வாங்கியிருக்கிற மக்களுக்கு கண்டிப்பாக இலவச வீடு கட்டித்தர மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நிலப்பட்டா வழங்க அரசு கையகப்படுத்திய நிலங்கள் பல்லாண்டு காலமாக நீதிமன்றத்தில் தடைபெற்று, அந்த நிலங்கள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்து, ஆதிதிராவிட மக்களுக்காக கையகப்படுத்தும் நிலத்திற்கு தடை ஆணைப்பெற நீதிமன்றத்திற்கு செல்ல முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் பேசும்போது காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் ஊத்துக்காடு என்ற இடத்தில் ஆதிதிராவிடர் நிலத்தையே ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது என்னுடைய தொகுதியைச் சேர்ந்திருக்கிற காரணத்தால் அதை விளக்க விரும்புகிறேன். அந்த ஊத்துக்காடு என்ற கிராமத்தில் வாழுகின்ற ஆதிதிராவிட மக்கள் அந்த ஆதிதிராவிடர் நிலம் தான் எங்களுக்கு வசதியாக இருக்கிறது, சிறந்ததாக இருக்கிறது, அதை எங்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். குடியிருப்புக்கு வசதியாக இருக்கும் என்று வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் அந்த நிலத்தை அரசு கையகப்படுத்த முனைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக குடியிருக்கின்ற பெருநகரம், கரும்பாக்கம், பலேஸ்வரம் போன்ற கிராமங்களில் ஆதிதிராவிட நல பள்ளிகளை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சாலவாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளியும் அரசு உயர்நிலைப் பள்ளியும் இருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் இரட்டைமங்கலம் என்ற இடத்தில் நடுநிலைப் பள்ளி இருக்கிறது. ஆகவே அங்கே ஆதிதிராவிட விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டு.

மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இரட்டை மங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஆதிதிராவிட மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டும், வளம்பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கிக்கொண்டு வருகிறது. சில விவரம் தெரிந்தவர்கள், புரிந்துகொள்பவர்கள் அரசு கொடுக்கின்றச் சலுகைகளைப் பயன்படுத்தி வளர்ச்சி பெறுகிறார்கள். ஆனால், அப்பாவி மக்கள், அன்றாடம் உழைத்து வாழுகின்ற ஆதிதிராவிட மக்கள் இந்த அரசின் சலுகைகளை அறியாமல், நல்ல பல திட்டங்களைத் தெரியாமல் இருக்கிறார்கள். என்னென்ன திட்டங்களை அரசு போட்டிருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அப்பாவி மக்கள் நலம் பெறத்தக்க வகையில் அரசு போடுகின்ற திட்டங்களை, கடன் கொடுக்கின்ற திட்டங்கள், மானியம் கொடுக்கின்ற திட்டங்கள் போன்ற திட்டங்களை அவர்கள் புரிந்துகொள்ளுகின்ற வகையில் விளம்பரம் செய்ய வேண்டும்.

(மாலை 6-00)

குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகளுக்கு நோட்டீஸ் மூலமாகவும், வேறு வகையிலேயும் விளம்பரப்படுத்தி தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆதிதிராவிட நல விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படுகிற பராமரிப்பு நிதி ஓரளவுக்குக் குறைவாகத்தான் இருப்பதாக அனைவரும் கருதுகிறார்கள். எனவே, அந்த நிதியினை உயர்த்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளில் பணம் இல்லாத நிலைமையில் அப்படிப்பட்ட பேரூராட்சிகளில் வாழும் ஆதிதிராவிட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு உரிய நன்மைகளைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த





மானியக் கோரிக்கையில் 47,89,44,000 ரூபாய் நிதி கோரப்பட்டிருக்கிறது. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக 128 கோடி ரூபாயினை ஒதுக்கி இணைப்பு இரண்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமாக பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிவிட்டார்கள். குறிப்பாக நாங்கள் யார், ஏன் ஒதுக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் பற்றி எல்லாம் சொல்வதற்கு நான் பெரிய சரித்திர ஆராய்ச்சியாளன் அல்ல. இருந்தாலும் சிலவற்றைப் படித்திருக்கிறேன். சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அனுபவித்தும் இருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக, தீண்டப்படாதவர்களாக கடந்த 2,000 ஆண்டுகளாக நாங்கள் இருந்து கொண்டு வந்திருக்கிறோம். பல பெரியவர்கள் முயற்சி எடுத்தும் முடியவில்லை. ஆன்மீகத் துறையில் ராமானுஜர், தயானந்த சரஸ்வதி ஆகியவர்கள் முயற்சி செய்தனர். அதன் பின்னர், மகாத்மா காந்தி அவர்களின் சகாப்தம் ஆரம்பித்ததற்குப் பிறகு ஓரளவுக்கு வெற்றி பெற்று நாங்கள் மனிதர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம். ஆகிக் கொண்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சியோடும், நன்றியோடும், தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குப் பெயர் வைக்கப்பட்டதே திருச்செந்தூரில்தான் ஆலயத்திற்கு உள்ளே வைத்து அல்ல; ஆலயத்திற்கு வெளியே வைத்துத்தான். எனக்கு 25 வயது இருக்கும்போது அந்த ஆலயத்திற்குள் மகாத்மாவின் உதவியால் முதலாவதாகச் சென்றேன். திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். அப்படி அழைத்துச் செல்லப்பட்டு, வெளியே வந்தவுடன், பல இலட்சம் மக்கள் வெளியே காத்திருந்தவர்கள் நான் மேடையில் ஏறியவுடன் என்னைப் பார்த்து கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். அப்படி உற்சாகமாக ஒரு பெரிய மன மாறுதலை இந்த நாட்டிலே ஏற்படுத்தி ஒரு புரட்சியைச் செய்தவர், மாற்றத்தை ஏற்படுத்தியவர் மகாத்மா காந்தி அடிகள்தான். மகாத்மா அவர்களுடைய சகாப்தத்தில் ஆரம்பித்து இப்போது இந்த நிலைமைக்கு நாங்கள் வந்திருக்கிறோம். இப்போது எனக்கு 70 வயது ஆகப்போகிறது இன்னும் கூட கிராமங்களில் நீதி கிடைக்கவில்லை. கிராம ஆலயங்களுக்குள்ளே செல்ல முடியவில்லை. வாடகைக்கு வீடு கிடைக்கவில்லை. ஜாதியை மறைத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல. இதனால்தான் சில மத மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதை இப்போது நாங்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். மனமாற்றம் ஓரளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இராஜாஜி மற்றும் பல பெரியவர்கள் எல்லாம் இதற்காகத் தொண்டாற்றி இருக்கிறார்கள். இப்போது கொஞ்சம் குறைந்திருக்

கிறது. அந்தக் குறையை நிறைவு செய்ய இந்தச் சபையின் மூலமாக பத்திரிகையாளர்களையும், பெரியோர்களையும், மற்றும் இங்கே இருக்கும் அமைச்சர் பெருமக்களையும், நலிந்தவர்களின் சார்பாக பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், வேற்றுமையை மறந்து, இந்த நாட்டில் தீண்டாமை ஒரு களங்கமாக இருக்கிறதே, அதைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று என்னுடைய முதல் வேண்டுகோளாக இந்த பேரவையிலே தெரிவித்துக் கொண்டு, 5-ல் ஒரு பகுதியாக நாங்கள் இருக்கிறோம். பஞ்ச பூதங்களில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஐந்து பூதங்களில் ஒன்றை விட்டு விட்டு இந்த நாட்டிலே எதையும் செய்ய முடியாது. என்பதை சிறப்பான பாணியிலே பெரும் தலைவர் காமராசர் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னால் சொல்வார். அதுபோல் நீங்களும் எங்கள் எல்லோருக்கும் அன்பு கூர்ந்து வேண்டியதைச் செய்து தாருங்கள் என்று முதற் கண் கேட்டுக்கொண்டு, ஏறத்தாழ 48 கோடி ரூபாயை இந்த மானியத்திற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். ஓரளவுக்கு நற்பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கல்வியிலே நல்ல பல திட்டங்கள் மூலமாக சிறிது சிறிதாக செய்யப்பட்டு வருகிறது. 29 சதவீத பிள்ளைகள் பள்ளிகளுக்குச் செல்லுகிறார்கள். 47 சதவீதத்திலே அது குறைவு தான். இன்னும் கொஞ்சம் அந்த விகிதாச்சாரத்தை அதிகப்படுத்தினால் நல்லது. சத்துணவு கொடுத்தும், மொத்தம் கல்வியறிவு பெற்ற மக்கள் தொகையில், 47 சதவீதத்திலே 29 சதவீதம் தான் பள்ளிக்குச் செல்லுகிறார்கள். அதை சற்று அதிமாக்க முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்து பெற்றோர் வருட வருமான வரம்பு அளவு. கடந்த ஆண்டும் இது பற்றி தெரிவித்தேன். பெற்றோர்களுக்கு வருட வருமானம் மத்திய சர்க்கார் கொள்கைப் படி 12 ஆயிரம் என்று வைத்திருக்கிறார்கள். இங்கே 6 ஆயிரம்போதும் என்று வைத்திருக்கிறீர்கள், ஏன் ? நான் இந்த மன்றத்திலேயே அது குறித்து கேள்வியும் கேட்டேன். 12 ஆயிரம் என்பது பெரிய வருமானமா ஏன் அந்த வருமான வரம்பை உயர்த்தக் கூடாது ? இந்த அறிக்கையில் கூட அது பற்றி எதாவது சொல்லியிருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள பார்த்தேன். 12 ஆயிரம் ரூ. மத்திய அரசுக்கு என்றும் 6 ஆயிரம் ரூ. மாநில அரசுக்கும் இருக்க வேண்டும் என்றுதான் போட்டிருக்கிறார்கள். ஆகவே, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே இருந்து வந்தவர்கள். கஷ்டத்தை அனுபவத்திலே தெரிந்தவர்கள் மத்திய அரசு அதை வைத்திருக்கிறதை நீங்களும் ஏற்றுக் கொண்டு அந்த வருமானத்தையே 12 ஆயிரமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்து தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து அனாதை இல்லங்களிலே கூட சாப்பாட்டிற்கு மாதம் 60 ரூ. ஒருவருக்கு கொடுப்பது போதாது என்று இந்த அவையிலேயே பலர் வாதாடியிருக்கிறார்கள். அந்த நிலையில் ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு 60 ரூ. கொடுக்கிறீர்களே அந்தப் பிள்ளை அதில் சாப்பிட முடியுமா? அதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறீர்களா ? அது சரிதானா என்பதை உங்கள் மனத்திற்கே விடையாக விட்டு விடுகிறேன். ஒரு நாளைக்கு 2 ரூபாயில் சாப்பிட முடியுமா ? நாங்கள் இப்போது சட்டமன்ற விடுதியில் இருக்கிறோம். சைவ சாப்பாட்டை சாப்பிட ஒரு வேளைக்கே 5 ரூபாய் ஆகிறது. வடக்கு பக்கத்திற்குச் சென்று விட்டால், அதிகமாகி விடுகிறது, அந்த அளவுக்கு விலைவாசி நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் ஒரு நாளைக்கே 2 ரூபாய் என்று வைத்து 60 ரூபாயில் ஒரு பையன் ஒரு மாதத்திற்குச் சாப்பிட கொடுப்பது தவறு. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, அந்த 60 ரூபாய் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, கல்லூரி திறந்த உடனேயே, அவர்களின் மாணவர் விடுதியையும் ஏன் திறந்து விடக் கூடாது? பிள்ளைகள் எல்லாம் போய் காத்துக்கிடக்கிறார்கள். பாவம் நடுத் தெருவிலே இடம் இல்லாமல் அலைகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கல்லூரியை திறந்த உடனேயே மாணவர் விடுதியையும் திறந்து விடுவதுதான் நல்லது. உடனடியாக உத்தரவு போடுங்கள் எல்லாக் கல்லூரிகளும், பள்ளிகளும் திறந்த உடனேயே மாணவர் விடுதிகளையும் திறக்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லுங்கள். பள்ளிக்கூடங்களை திறந்து விடுகிறார்கள், கல்லூரியை திறந்து விடுகிறார்கள். ஆனால் 3 மாதம் கழித்து தான் புஸ்தகங்களைக் கொடுக்கிறார்கள். எனவே, பழைய புத்தகங்கள் எதையாவது அவர்கள் அதற்குள் வாங்கிவிடுகிறார்கள். அதேபோல 3 மாதம் கழித்து சீருடை கொடுக்கிறீர்கள். நல்ல காரியங்களையச் செய்கிறீர்கள், ஆனால் காலா காலத்தில் செய்வது இல்லை, அவற்றை காலகாலத்தில் செய்வதுதான் உங்களுக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது என்று மிகப் பணிவோடு இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6–10)

பள்ளிக் கட்டடங்கள் நன்றாக இருக்க வேண்டும். வீட்டில் தான் பையன் ஓலை வீட்டில் வசிக்கிறான். பள்ளிக்கூடத்திற்குச் சென்று பையன் வீட்டிற்கு வரும்போது சட்டை அழுக்காகவா திரும்ப வேண்டும் ? ஆகவே, அந்த நிலைமை இல்லாமல் நல்ல கட்டிடங்களாக ஆதி திராவிடப் பள்ளிகளுக்கு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 24

மாணவர் விடுதிகளைப் பொறுத்த வரையில் நல்ல விடுதிகளாக வைத்திருக்கிறீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் சில நல்ல மாணவர் விடுதிகளை வைத்திருக்கிறீர்கள். இன்னும் பல விடுதிகள் பழைய கட்டடங்களில் பழுதடைந்த வாடகை கட்டடங்களில இருக்கின்றன. அந்த நிலையை மாற்றி நல்ல கட்டடங்களாகக் கட்டித் தர வேண்டும். வீட்டில் படுக்கிற போது பயத்தோடு தூங்குகிறான். அந்த மாணவர் போகிற இடத்திலாவது நல்ல நிலையில் இருக்கும் வகையில், அந்த மாணவர் இல்லங்களுக்கு நல்ல கட்டடங்களாக கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீட்டு வசதி. ஒதுக்கிய பணம் காணாது என்று சென்ற தடவை சொன்னேன். இப்போதும் வாக்களித்து இருக்கிறீர்கள். என்ன நடக்குமோ தெரியவில்லை. இதற்கு, எங்கேயிருந்து பணம் கொடுப்பீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அமைச்சர் அவர்களை நான் நம்புகிறேன். அவர்களும் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்கள். எப்படியாவது இந்த ஆண்டு 5 இலட்சம் வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை மக்களுக்கு கட்டிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சென்ற தடவை என்னைப் பார்த்து, பெரியவரே, ஏதாவது வீடு கட்டலாமா என்று கேட்டவர்களுக்கு, தமிழக முதல்வர் செய்வதாக வாக்களித்து இருக்கிறார் என்று சொன்னேன். இந்த ஆண்டு வீடுகள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏழைகள் அதிகமாக வாழ்கிற இடத்தில் முக்கியத்துவம் கொடுத்து இந்தத் திட்டத்தைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனை வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதை நான் பாராட்டுகிறேன். ஆனால் வீட்டு மனைகளை எங்கோ வாங்குகிறீர்கள். அவர்கள் தொழில் செய்கிற இடத்திற்கும் நான்கு மைல்களுக்கு அப்பால் இருந்தால் அவன் தொழில் பார்க்க முடியாது. பெருந் தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் பக்கத்தில் இருப்பது நஞ்சை நிலமாக இருந்தாலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்த இடத்தையும் வாங்கிக் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் நீங்கள் நிலங்களை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது போல் சமூகக் கூடமும் கட்ட வேண்டும் கடந்த முறையே சொன்னேன். சமூகக் கூடங்கள் கட்டி அதிலே கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாமென்று சொன்னேன். இப்போது மாட்டுத் தொழுவத்தில் நிகழ்ச்சி நடக்கிறது அன்றைக்கு மட்டும் மாடுகளை வெளியே நிறுத்தி விட்டு,



1986 ஏப்ரல் 24] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

சாணம் போன்றவற்றை எடுத்து விட்டு அங்கேயே பந்தி போட்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று மழை பெய்தால் சாப்பாட்டு நேரத்தில் அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே, சமூகக் கூடங்கள் கட்டினால் அவை அந்த மக்களுக்கு வரப் பிரசாதமாக இருக்கும். பெரிய கிராமங்களில் 200, 300 வீடுகள் இருக்கிற இடங்களில் இதனை முதலில் கட்டலாம். கடந்த முறையும் சொல்லியிருக்கிறேன். அக்கநாயக்கன் பட்டி, ராஜாபுதுக்குடி, கரடிக்குளம் போன்ற இடங்களையும் முதலில் குறிப்பிட்டேன். இதற்கான தேவை எல்லா இடங்களிலும் இருக்கிறது. தேவைப்படும் அந்த சமூகக் கூடங்களை மக்களுக்குக் கட்டிக் கொடுத்து, என்ன மழை பெய்தாலும், இனிமேல் எங்களை ஒன்றும் செய்யாது, தடையில்லாமல் நிகழ்ச்சிகளையும், திருமண வைபவங்களையும் நடத்துவோம் என்று அந்த மக்கள் நிம்மதியாக இருக்கிற அளவிற்கு அவைகளை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அலுவலகங்களில் அரிசன மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு கிடைக்கிறதா என்று ஆராய்வதற்கு ஒரு உயர்மட்டக் கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டதே தவிர அந்தக் கமிட்டியின் அறிக்கையை இதுவரையிலும் நான் பார்க்கவில்லை. அந்த அறிக்கை வருவதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. பல சண்டைகளும் வந்தது. சண்டைகளால் பல கஷ்டங்களும் வந்தன, தொல்லைகளும் வந்தன. அடிதடி ஏற்பட்டு போலீஸ் வந்து அதனால் இம்சையும் வந்தது. இப்போது கூட தந்தி வந்திருக்கிறது. இராஜபாளையத்தில் அரிசன மக்கள் போலீசிற்குப் போனார்களாம். போலீஸ் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டர் அவர்களை ஜாதியைச் சொல்லி திட்டிவிட்டாராம். ஜாதிப் பெயரைச் சொல்லி, திட்டி, சப்-இன்ஸ்பெக்டர் வெளியே போகச் சொன்னால், யாரிடம் போவது? இந்த மாதிரி பாக்கி இடத்திலே நடந்திருக்கிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறையினரை, அரிசனங்களுக்கு காவல் புரிய வையுங்கள், பல இடங்களில் அவர்கள் பாதகமாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். ஏழைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு காவல் துறையினருக்கு இல்லையா? வேறு யார் அவர்களைப் பாதுகாக்கப் போகிறார்கள்? பெரிய பணக்காரர்களைப் பாதுகாக்கப் போகிறார்களா? இதற்கு போலீஸ் துறை வேண்டுமா? அவர்களிடம் படை இருக்கிறது, ஆகவே, ஏழைகளைப் பாதுகாக்கின்ற வகையில், இந்த போலீஸ் துறையை வைத்துக் கொள்ளுங்கள் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை அரிசனங்கள் வீடுகளை சேதம் செய்வதை போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டுமா என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

பொருளாதார முன்னேற்றம் வந்தாலொழிய தாழ்த்தப்பட்ட மக்கள் நாட்டிலே முன்னேற்றம் அடைய முடியாது. உழவு மாடு கொடுக்கிறோம், கோழி வளர்க்க ஊக்கம் தருகிறோம் என்று சொல்கிறீர்கள். கோழி வளர்த்தால் முட்டையிடும் முட்டை வந்தால் பெரிய பணக்காரர்களாக ஆகிவிடுவார்கள் என்று சொன்னால் எப்படி? மன்னித்துக்கொள்ளுங்கள், இப்படி கீழே இறக்கி பேசுவதற்காக அல்ல. இந்த நாட்டிலே பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னுக்கு வர வேண்டாமா? அதற்கு உரிய தொழில் செய்ய வேண்டாமா? உங்களுக்கு அதை எப்படிச் செய்யலாம் என்பது தெரியாதா? கொடுக்கப்படுகின்ற லைசன்ஸ்களிலே அவர்களுக்கு முன்னுரிமை தனிச் சலுகை வழங்கக்கூடாதா? மத்திய அரசிலே மோட்டார் பெர்மிட் வழங்குகிறபோது தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதல் உரிமை வழங்கவேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றினார்களே, அதை நீங்கள் விஸ்தரிக்கக்கூடாதா? இன்னும் ஏதாவது சலுகை வழங்குகிறபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதல் உரிமை வழங்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரக் கூடாதா? கேட்டால் அரிசனங்கள் விற்று விடுவார்கள் என்று சொல்கிறார்கள். ஏன் அரிசன மக்கள் மட்டும் தான் கெட்டவர்களா? அரிசனங்கள்தான் தவறு பண்ணுவார்களா? இவர்களிலே நல்லவர்கள் இல்லையா? பாக்கி அத்தனை பேர்களும் நல்லவர்களா? இவர்களிலே கெட்டவர்களும் இருப்பார்கள், நல்லவர்களும் இருப்பார்கள். ஆகவே யாரோ ஒருவர் தவறு செய்திருக்கிறார்கள் என்பதற்காக, அதைக் காரணம் காட்டி சொல்வது என்பது நல்லதல்ல என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய காலத்திலே 10 பேர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தோம், பெர்மிட் கொடுத்தோம், தொழிற்சாலைகளை உண்டாக்கினோம், அதை வைத்து அவர்கள் பெரிய பணக்காரர்களாக ஆனார்கள் என்று சொல்கிற அளவுக்கு நீங்கள் ஏதாவது செய்யுங்கள். நான் பெருமைப்படுகிறேன்; நான் சந்தோஷப்படுகிறேன். எந்த அளவிற்கு முன்னேறி விட்டோம் என்று நாங்கள் பெருமையோடு சொல்வோம். யாரும் செய்யாததை நீங்களாவது செய்து அந்தப் பெருமையை தட்டிக் கொண்டு போங்களேன் என தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பம்புசெட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் போது, முன்னுரிமை கொடுத்து, செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்கள் என்னைப் பார்க்கிறபடியால், நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பெயரில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. அவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். அவர் மிகவும் நல்லவர், தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கறை உள்ளவர் மீது இந்தக் காரியங்களை எல்லாம் நிவர்த்தி பண்ணுவார்கள் என்ற நம்பிக்கையை வைத்து, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மற்றும் பழங்குடி நலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், மிகச் சிறப்பாகவும், இந்தத் துறை எப்படி இயங்க வேண்டும் என்பதைப் பற்றியும் நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். இருந்தாலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், திருமதி. பொன்னம்மாள் அவர்களும், திருமதி சரோஜா அவர்களும், திருவாளர்கள் தங்கராசு அவர்களும், வி. கே. இராசு அவர்களும், ஆனந்தன் அவர்களும், செல்லமுத்து அவர்களும், நல்லமுத்து அவர்களும், எஸ். என். இராமசாமி அவர்களும், தமிழ்மணி அவர்களும், தமிழரசன் அவர்களும், ஜெயச்சந்திரன் அவர்களும்......(குறுக்கீடு).

(மாலை 6-20)

**திரு. ஆ. நடராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி சார்பில் என்னைப் பேச அழைப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னை பேச அனுமதிக்காததால், சபையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. ஆ. நடராசன் வெளிநடப்புச் செய்தார்.)

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு குலசேகரன் அவர்களும், மாண்புமிகு உத்திராபதி அவர்களும், திருவாளர்கள் பாலச்சந்திரன் அவர்களும், ஆறுமுகம் அவர்களும், நரசிம்ம பல்லவன் அவர்களும், குறிப்பாக கடைசியாகப் பேசிய பெரியவர் ஆர். எஸ். ஆறுமுகம் அவர்களும் இந்த ஆதிதிராவிட நலத்தைப்பற்றி, எப்படி இயங்க வேண்டுமென்பதைப் பற்றி சிறப்பாக எடுத்துக் கூறியமைக்கு இந்தத் துறையின் சார்பில் நன்றிகலந்த வணக்கத்தைச் சொல்லிக்கொண்டு குறிப்பாக இந்தத் துறை நல்லமுறையில் இயங்க வேண்டுமென்று, சில உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல இந்தத் துறை எப்படிச் செயல்பட வேண்டுமென்றும், எப்படி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் ஆதிதிராவிடர் நலத்தில் பொற்கால அரசாக செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதிதிராவிடர் நலம், அந்த மக்களுடைய படிப்பின் கல்வித் தரத்திலேதான் ; அதற்காகத்தான் ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகள், அதைப்போல

பழங்குடியினர் துறை நடத்தும் பள்ளிகளும் கிட்டத்தட்ட தமிழ
கத்தைப் பொறுத்தவரையில் 1,131 பள்ளிகளில், அங்கே பயன
டைகின்ற மாணவர்கள் 2 லட்சத்து 36 ஆயிரத்து 795 பேர்கள்
என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அதைப்போன்று படிக்கின்ற மாணவர்கள், விடுதியிலே தங்கிப்
படிப்பதற்கு 728 விடுதிகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன.
அதன்மூலமாக 51 ஆயிரத்து 924 பேர்கள் தங்கிப் படிக்கிறார்கள்
என்பதை இந்த நேரத்திலே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.
அதைப்போல அந்த மக்களுடைய நலமே கல்வியில்தான் இருக்
கும் என்பதை நினைத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களுடைய ஆட்சியில் இந்தப் பொது மானியத்தைப் பொறுத்த
வரையில் கல்விக்காக 50 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ப
தையும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் ஆதிதிராவிட மக்களும்,
பழங்குடி மக்களும் பொருளாதாரத்திலே முன்னுக்கு வர
வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதன் காரணமாகத்தான்
பாசன கிணறு வெட்டுவதற்கும், உழவு மாடுகள் வாங்குவதற்கும்
நடப்பு ஆண்டிலே 10 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவிடப்
பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போல தொழில் தொடங்குவதற்கு நடப்பு ஆண்டிலே
35 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட இருக்கிறது
அதைப்போல இங்கே வீட்டு மனைகள் பற்றி அதிகமாக மாண்பு
மிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறிப்பிட்டார்கள். தமிழ
கத்தைப் பொறுத்தவரையில் வீடு இல்லாதவர்களுக்கும், வீட்டு
மனை இல்லாதவர்களுக்கும் இந்த அரசு முக்கியத்துவம் அளித்து
அதற்காக கடந்த ஆண்டுகளில் எல்லாம் மொத்தமாக, குறிப்
பிட்டு சொல்லவேண்டுமென்றால் 10 இலட்சம் வீட்டு மனைகள்
பல திட்டங்களின்கீழ் முன்னாலே கொடுக்கப்பட்டிருக்கின்றன.
இந்த ஆண்டு 1 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரம் வீட்டுமனை
பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன.

அதைப்போல ஆதிதிராவிட குடியிருப்பு சாலை வசதிக்காக
இந்த ஆண்டு 20 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட
விருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

மனை கொடுக்கிறோம்; அதுவும்கூட் கோடுத்த மனைக்கு
வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம், பல திட்டங்கள் மூலம்செயல்
பட்டாலும் '' தாட்கோ '' நிறுவனம் மூலமாக இதுவரைக்கும்
57,884 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.



அதைப்போல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் நல்ல ஒரு திட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்
கிறார்கள். அதன் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கும் நலிந்த
பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் 5 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற
திட்டமும் இங்கே இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு
கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகம்பேர் பேசுகின்ற
போதெல்லாம் குறிப்பிட்டார்கள், இந்த 6 ஆயிரம் ரூபாய்
போதவில்லை என்று. இந்த 6 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரம்
ரூபாயாக ஆக்குவதற்கு, அரசு பரிசீலனையில் இருக்கிறது
என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதைப்போல தொழில் தொடங்குவதற்கு ஆதிதிராவிட
மக்களுக்கு மொத்தமாக 25 விழுக்காடு செலவிலும், அதைப்
போல 4 சதவீதம் வட்டியிலும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.
அதன்மூலமாக 1 லட்சத்து 276 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.
இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் 'தாட்கோ' நிறுவனம்
மூலமாக இந்தத் தொழில் தொடங்குவதற்கு 2 கோடி ரூபாய்
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய அத்தனைபேரும்
தாளடியைப் பொறுத்தவரையில் அங்கே வசிக்கின்ற
மக்களுக்கு குடியிருக்கின்ற இடத்திற்கு குடிநீர் வசதி வேண்டு
மென்று இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பொறுத்தவரை
யில் அவர்களுக்கு 19 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் செலவிட
இருக்கிறோம். அதுவும் அல்லாமல் 2 சமுதாயக் கூடங்கள் அந்த
காலனியில் வாழ்கின்ற மக்களுக்கு—அங்கே ஒரு சமுதாய
கூடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில்—இரண்டு சமுதாய
கூடங்கள் நடப்பு ஆண்டில் கட்டப்பட இருக்கின்றன.

தீண்டாமைபற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
அத்தனை பேரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே அதிக
மான வழக்குகள் இருந்தாலும் குறிப்பிட்ட வழக்குகளில் மட்டும்
தான் தீர்ப்பு கூறப்பட்டு இருக்கிறது என்பதைச் சொன்னார்கள்.
ஆனால் சமுதாயத்தில் நடைமுறையைப் பார்க்கும் அளவில்
இந்த வழக்குகளைப் போடுகின்ற நேரத்தில் ஒரு மனத்தாங்கலில்
போட்டுவிடுகிறார்கள். திரும்ப இரண்டுபேரும் சமாதானமாக
பீஸ் கமிட்டி என்ற முறையில் காம்பரமைஸ் மூலமாக 2 பேரும்
ஒத்துப் போகின்ற நேரத்தில் சில வழக்குகள் முடிந்துவிடுகின்ற
சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில்தான் சில
வழக்குகள் குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எ. அருணாசலம்] [1986 ஏப்ரல் 24

'தீர்த்த யாத்திரை' என்ற படத்தை நேற்று இரவு போட்டுக் காட்டினேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையபேர் வந்திருந்தார்கள். பல உறுப்பினர்கள் வரவும் இல்லை. இருந்தாலும் வந்தவர்கள், வராதவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீண்டாமையை ஒழிப்பதில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் தீண்டாமையை மன அளவில் ஒழித்தால் ஒழிய அதற்கு ஒருசட்டத்தால் தீர்வு காண முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தைப்பொறுத்தவரையில் 1986–87 ஆம் ஆண்டில் பல துறைகள் மூலமாக 128 கோடியே 4 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் பல திட்டங்கள் மூலமாக 50 சதவீத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை வறுமைக் கோட்டை கடக்கச் செய்தல், மற்றும் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகளை செய்து தருகின்ற திட்டமும் இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பழங்குடியின மக்கள் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டு நல்ல பல திட்டங்களை செயல் ஆற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் அவர்கள் நலத்திற்காக மேம்பாடு திட்டம் என்ற ஒரு நல்ல திட்டத்தை கொண்டுவந்து செயலாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் அந்த பழங்குடியின மக்கள் நலத்திற்காக 9 கோடியே 46 இலட்ச ரூபாய் செலவிட இருக்கிறது. அது கீழ்க்கண்ட இடங்களில் செலயாற்ற இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை (சேலம்), பச்சை மலை (சேலம்), அருளுத்து மலை, ஜவ்வாது மலை, கல்ராயன் மலை (தென் ஆற்காடு) சித்தேரி மலை, பச்சை மலை (திருச்சிராப்பள்ளி) போன்ற 9 இடங்களைத் தேர்ந்து எடுத்து அங்கே இந்தத் திட்டங்களை செயலாற்ற இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு அவர்களுக்கு தோட்டக்கலை, கிராமத் தொழில்கள், கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, சிறு பாசனம் வீட்டு வசதி போன்ற பல்வேறு திட்டங்களை செயலாற்ற இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஆதி திராவிடர்களுடைய நலத்தில் அக்கறை கொண்டு அந்த வெல்பேர் கமிட்டியை அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள் சொல்லும் போது அந்த கமிட்டியினுடைய பைல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் டேபிளில் 3 ஆண்டுக் காலம் தேங்கியிருந்தது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை



1986 ஏப்ரல் 24] [திரு. எ. அருணாசலம்]

இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது தவறான கருத்து என்பதை சொல்ல விரும்புகிறேன். நாங்கள் போட்டு அனுப்பிய கோப்புகளை எல்லாம்—மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 5 மாவட்டங்களுக்கு கமிட்டியை போடுகின்ற அந்த பைலில்—கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலிருந்து அது சம்பந்தப்பட்ட கோப்புகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வருகின்றபோது அதையும் நாங்கள் அனுப்பி கூடிய விரைவில் இந்த கமிட்டிகளை போடுவதிலே ஆவன செய்வோம் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இங்கே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக சில அறிவிப்புகளை அறிவிக்க இருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை ஏற்ற பிறகு தான் ஆதி திராவிடர்களுக்கு ஈமச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த 50 ரூபாய் விலைவாசியின் காரணமாக போதாது என்ற நிலைமையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த 50 ரூபாயை இப்போது 100 ரூபாயாக உயர்த்தித் தந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

(மாலை 6—30)

அதைப்போல ஆதி திராவிட மாணவ மாணவியர் விடுதிகள் புதியதாக 15-ம், அதைப்போல பழங்குடி மக்களுக்கு உறைவிடப் பள்ளிகள் 13-ம் இந்த விடுதிகளைத் திறப்பதற்கும், பராமரிப்பு செலவிற்கும், ரூ. 5,74,94,000 செலவிடப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே விடுதிகள் இருக்கின்றன. கட்டிடம் தேவை என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கட்டிடத்தைப் பொறுத்த வரையில், இந்த நடப்பு ஆண்டில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 1.60 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, ஆதி திராவிட நலப் பள்ளிகள், அதைப் போலவே பழங்குடி நலப் பள்ளிகள், இவைகளைப் பொறுத்த வரையில் நாம் உபகரணங்கள், ஆய்வு உபகரணங்கள், கல்வி

[திரு. எ. அருணாசலம்] [1986 ஏப்ரல் 24

மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ. 50 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே 17 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படும். 6 உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படும். 20 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 45 பி.டி. ஆசிரியர்கள் புதியதாக நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் பேசியதெல்லாம் பிற்பட்ட நலத்துறையின் மூலமாக சட்டப் படிப்பு பயில்பவர்களுக்கு ரூ. 500 கொடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். இங்கே ஒரு அறிவிப்பு கூட வருகின்ற ஆண்டிலிருந்து செயல்பட இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட பட்டதாரிகள் 20 பேர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு 4 ஆண்டு பயிற்சி அளிப்பதற்காக, மாதத்திற்கு ஒருவருக்கு ரூ. 500 வீதம் அவர்களுக்குப் பயிற்சி காலத்தில் அளிக்கப்படும். அதைப்போலவே அந்தப் பயிற்சியை சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு ரூ. 5,000 கௌரவ ஊதியமாக கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நல்ல பல திட்டங்களை இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்த மக்களுடைய நலத்திற்காக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய உறுப்பினர்களுக்கெல்லாம் நான் திரும்பவும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சில இடங்களில் சிலகுறைபாடுகள் இருந்தாலும், அந்தக் குறைபாடுகள் என்னுடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்தில், குறிப்பாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றும், அதைப்போலவே குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அதை உடனடியாக இங்கே தெரிவிக்கின்ற நேரத்தில், நான் அதன் மீது நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரி பெருமக்கள் ஒழுங்காக செயல்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நாம் என்னதான் செய்தாலும், கண்காணிப்பாக இருந்து பார்த்தாலும், அவர்களுடைய மனசாட்சியின்படி, கீழ் மட்ட மக்களுடைய நலத்திற்காகப் பாடுபட வேண்டுமென்ற உணர்வு வந்தால் தான், நல்ல எண்ணம் இருந்தால்தான் செய்வார்களே தவிர, என்னதான் சட்டம் போட்டாலும், இப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் குறிப்பிட்டுச் சொன்னாலும்கூட பிரயோசனம் இல்லை. சில இடங்களில் நல்ல மனம் படைத்த அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக எல்லோரும் அப்படிச் செய்யவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 ஏப்ரல் 24] [திரு. எ. அருணாசலம்]

சிதம்பரத்தைப் பொறுத்தவரையில், அங்கே ஆதி திராவிட அதிகாரி அவர்கள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஜெயச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருடைய பணியைப் பார்க்கின்ற நேரத்தில் அவர் அதிகமாகப் பேசுவதில்லை என்றாலும், இந்த ஆண்டைப் பொறுத்த வரையில், 'லேண்ட் அக்வசிஷனில்' அதிக டார்கெட்டை அவர் தான் அடைந்திருக்கிறார். சிலர் இருக்கலாம். பழகுவதற்கு இனிமையாகவும் இருக்கலாம். அவருடைய பணியில் சிறப்பாகச் செயல்படாமல் இருக்கலாம். எந்தெந்தப் பிரச்சினைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்தப் பணியில் தீவிரமாகச் செயல்படுவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள் என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வாழ்த்திப் பேசியவர்களுக்கும் சிறப்பாகப் பேசியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் ஒரு ஆதி திராவிட மாணவன் என்னை ஜாதிப் பெயரைச் சொல்லித் திட்டினான் என்று இன்னொரு மாணவன் மீது புகார் கொடுத்தால் நிர்வாகம் விசாரணை செய்ததாகச் சொல்லி அந்த மாணவனை சஸ்பெண்ட் செய்து விடுகிறது. மாணவர்களுக்குள் நடக்கும் பேச்சுக்களை வைத்து, இப்படி சஸ்பெண்ட் செய்தால், அந்த மாணவனின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. இதைத் தடைசெய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் :** எந்தக் கல்லூரியில் சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தைக் கொடுத்தால் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கூறும்போது, 8 மாவட்டங்களுக்கு வெல்பேர் கமிட்டி அமைப்பதாகச் சொன்னார்கள். அந்த 8 மாவட்டங்கள், எந்தெந்த மாவட்டங்கள் என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி என்ற ஒன்று கடந்த 5 வருடங்களுக்கு முன்னதாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போடப்பட்டது. மீண்டும் அந்த தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி போடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கட்டாயம் தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி போடப்படும். அந்த 8 மாவட்டங்கள் என்னென்ன என்பது பின்னாலே அறிவிக்கப்படும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு கன்வென்ஷன் இருக்கிறது, டிபெட்டிலே பார்ட்டிசிபேட் பண்ணியவர்கள் மட்டும் கிளாரிபிகேஷன் கேட்கலாம் என்று. அது இல்லையென்றால் 200 பேரும் கிளாரிபிகேஷன் கேட்பார்கள். நீங்கள் கை தூக்கியதால், திரு மணிமாறனும் கை தூக்கிவிட்டார். முறை வைத்தால்தான் நன்றாக இருக்கும். இது கடந்த காலத்தில் பல முறை ஸ்பீக்கர்கள் கொடுத்த ரூலிங் தான்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்பு கேள்வி நேரத்தின் போது, திருவில்லிபுத்தூர் நகரில் பெண்கள் தங்கும் விடுதி வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அதை நிரந்தரக் கட்டிடம் ஆக்க வேண்டும் என்று ஒரு கேள்வி எழுப்பியபோது, 33 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டு அந்தத் திட்டம் வருகிறது என்று சொன்னார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன சொல்ல இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனுடைய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி கேட்டால், தனியாகவே கேள்வி கேட்கின்ற நேரத்தில் அதற்குப் பதில் அளிக்க இயலும்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையில் கட்டப்படும் வீடுகளுக்கு கடன் ரூ. 10 ஆயிரமாக ஆக்கப்படும் என்று ஜனவரி மாதத்திலிருந்து சொல்லிக் கொண்டு இருக்கிறோம். மார்ச் முடிந்து அடுத்த ஆண்டு திட்டம் தொடங்க இருக்கிற காரணத்தினால், பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டு அறிவித்தால்தான் கொடுக்க இருக்கின்ற கடன்களை ரூ. 10 ஆயிரமாக ஆக்க முடியும். எனவே, காலம் தள்ளிச் சென்ற காரணத்தினால் இந்த ஆண்டு முடியாத நிலை இருக்கிறது. உடனடியாக அதைப் பரிசீலித்துச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புவதோடு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பல பேர் அதிகாரிகளாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பிலே, அப்பாயின்ட்மென்டிலே ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால் பிரமோஷனில் ஒதுக்கீடு இல்லை. எனவே, அது ஆராயப்படும் என்று துறையிலே முன்னாலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது ஆராயப்பட்டதா? ஆதி திராவிட அலுவலர்களுக்கு பிரமோஷன் ஒதுக்கிக் கொடுக்க அரசு



1986 ஏப்ரல் 24] [திரு. மா. மணிமாறன்]

பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புவதோடு, ஆதி திராவிட நலத் துறையிலே கல்வித் பிரிவிலே ஏறத்தாழ வெகுவாக, அதிகமான பணம் செலவழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

அந்தச் செலவை கல்விப் பட்டியலிலே சேர்த்து, பொதுவாக கல்வி என்பது எல்லோருக்கும் சமம் என்ற அளவில் அளிக்கின்ற காரணத்தால் இந்த ஆதி திராவிடர் நலத் துறையில் உள்ள கல்விப் பிரிவை, பொதுக் கல்வித்துறையிலே இணைத்து அந்தச் செலவைக் குறைத்து, அதனை தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக செலவழிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து அப்படி ஒரு முடிவு எடுக்கும்.

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்வதில் மிகுந்த சிக்கல் இருப்பதை எடுத்துச் சொன்னோம். ஆதி திராவிடர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வது, சர்க்காருக்கு வந்து தான் ஆர்ஜிதம் செய்ய வேண்டும். அதாவது கிளாஸ் மாற்ற வேண்டும் என்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கே அந்த அதிகாரத்தைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், அதற்கு சட்டத்தில் சிக்கல் இருக்கிறது. அதனை சட்டத்துறையோடு கலந்து ஆராய்ந்து, அதை எப்படி நடத்தலாம் என்பதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, எஸ். என். இராமசாமி, பி. கே. எம். முத்துராமலிங்கம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் சு. பாலன், எ. எஸ். ஏ. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 31 - பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 47,89,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25-4-1986, காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை மாலை 6—39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

68. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் எனைய தாள்கள்.

125. கோரிக்கை எண் 31 - ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87, (தமிழ், ஆங்கிலம்).

126. 1986-87 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

127. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) 1986-87 (ஆங்கிலம்).

128. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

129. மைய-மாநில அரசு உறவுகள் குறித்து தமிழ்நாடு அரசின் கருத்துக்கள் மற்றும் நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழுவின் வினாப் பட்டியலுக்கான பதில்கள், 1985 (தமிழ், ஆங்கிலம்).

130. மைய-மாநில உறவுகள் குறித்த நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழு கோரியுள்ள சில குறிப்புகள் பற்றான பதில், 1986 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I.

[279ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 524 (2477)க்கான விடையைக் காண்க.]

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) சட்டப் பிரிவு 3-ன்படி எந்த ஒரு நபரும் படக் காட்சி கருவி மூலம் இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற இடத்தைத் தவிர வேறெங்கும் திரைப் படங்களை காண்பிக்கக் கூடாது அல்லது மற்றபடி அந்த உரிமப்படி உள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு ஒத்திருத்தல் வேண்டும். ஆகவே, எந்த் ஒரு நபரும், எந்தவிதப் படத்தையும், எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உரிமம் இன்றி காண்பிக்கக் கூடாது. மேலும், 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப் படுத்தல்) விதி 119-ன் படி உரிமம் வழங்கும் அதிகாரி பொழுது போக்கு படங்களை ( Feature Films ) தெருக்களிலும், பொது இடங்களிலும் காண்பிக்க அனுமதிக்கக் கூடாது. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு, திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் உரிமம் பெறாமல் பொது இடங்களில் பொழுது போக்குப் படங்களை ( Feature Films ) காண்பிப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு II.

[334-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றம்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்" என்ற தலைப்பின் கீழ் 1986—87 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண். 31-இல் நாற்பத்தேழு கோடியே எண்பத்தொன்பது லட்சத்து நாற்பத்து நான்காயிரம் ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்டமன்ற பேரவையினை வேண்டுகிறேன்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானிய கோரிக்கையின் மீது அரசின் கொள்கை விளக்கத்தை இப் பேரவையில் நான் எடுத்து கூறும் முன், அவர்களுக்காக பல்வேறு துறைகள் மூலம் அரசு எடுத்த சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றி கூற விழைகிறேன்.

3. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையில் 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் 1.07 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும், பழங்குடியினரில் 20.45 விழுக்காடும் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

4. இவ்வரசு ஆதிதிராவிடர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அவர்களுடைய நலிவுற்ற பொருளாதார நிலையின் காரணமாக, சமூக நிலையில் தாழ்வுற்று இருக்கிறார்கள். அதனால், அவர்கள் சமூக நிலையில் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுடைய மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வு காண இந்த அரசு விழைகிறது.

5. நெடுங்காலமாக தமிழக அரசு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

6. ஆதிதிராவிடர்களுக்காக வகுக்கப்பட்ட சிறப்பு உள்ளடக்க திட்டம் மற்றும் பழங்குடியினருக்காக பழங்குடியினர் நல துணைத் திட்டம் ஆகியவற்றை துவக்கியதின் மூலம் அவர்களுடைய முன்னேற்றம் மேலும் வலுப்பட்டுள்ளது. இவ்விரண்டு திட்டங்களும், அவர்களுடைய வாழ்க்கைக்கு புது நம்பிக்கையினை தோற்றுவித்துள்ளன. ஆதிதிராவிடர்



கள் நலனுக்காக சிறப்பு உள்ளடக்க திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வளர்ச்சித் துறையிலும் குறிப்பிட்ட பணியில் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் மூலம் உண்டான திட்டங்களினால் இருமுனைக் குறிக்கோள்களாகிய (1) வறுமை கோட்டிற்கு கீழே உள்ள 50 விழிக்காடு ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து விடுவித்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் (2) ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் ஆதிதிராவிடர் காலனியில் அடிப்படைத் தேவைகளையும் மற்றும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க வகை செய்தல் ஆகியவை நிறைவேற்றப்படுகிறது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களினால் ஆறாவது ஐந்தாண்டு கால திட்டத்தின் குறியீடான 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்திற்கான குறியீடு 10 இலட்சம் குடும்பங்களாகும். இதில் 1986—87 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 2 இலட்சம் குடும்பங்கள். பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் சிறப்பு உள்ளடக்க திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் காலனிகளில் அடிப்படை வசதிகளை ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செய்து கொடுப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளது. 1986—87 இல் இத் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் துறைகளின் மூலம் 128.05 கோடி செலவிடப்படும். இது குறித்த விரிவான விவரங்கள் இணைப்பு (II)-ல் உள்ளது.

7. பழங்குடியினர் மக்கள் தொகை குறைவாக இருந்தபோதிலும் அவர்கள் பிரச்சினைகள் தனித்தன்மை வாய்ந்ததாகவும் சிக்கலானதாகவும், உள்ளன. பழங்குடியினர் மிகுந்து காணப்படும் சேலம், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் வடாற்காடு மாவட்டங்களில் 9 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டமானது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பழங்குடியினர் குடும்பங்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் தீவிரத் திட்டமாகும். தமிழ்நாட்டில் மேற்கண்ட 9 குறியிடப்பட்ட இடங்களில் சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் வாழ்கிறார்கள். இத் திட்டத்தின் கீழ் பொருளாதார முன்னேற்றப் பணிகளும் அவர்கள் வசிக்கும் பகுதி மேம்பாடு அடையவும் குடிநீர் வசதி, சாலை அமைத்தல், மின்வசதி அளித்தல, பள்ளி வசதி, சுகாதார வசதி, போன்ற அனைத்து முன்னேற்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தின்படி 1986—87 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் மூலம் பழங்குடியினர் நலனுக்காக ரூ. 945.77 இலட்சம் செலவு செய்யப்படும். இதன் விவரங்கள் கீழே இணைப்பு (III)-ல் உள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன்பெறுவர் என்று

**மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு :**

11. முதுநிலை பட்டப் படிப்பு வரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மாணவர்களால் செலுத்தப்படும் தனிக் கட்டணம் மற்றும் இதர அனைத்து செலவுகளும் உதவித் தொகையில் அடங்கும். விடுதியில் தங்கிப் படிப்பவர்களை பொறுத்த வரையில் மேற்கண்ட சலுகைகளும், புத்தகத்திற்காகும் செலவு மற்றும் உண்டி உறைவிடச் செலவும் சேர்த்து படிப்புதவித் தொகையாக வழங்கப்படும். மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு உதவித் தொகை திட்டத்தின் கீழ் மாநில அரசு படிப்பு உதவித் திட்டம் மற்றும் மத்திய அரசின் படிப்பு உதவித் திட்டம் என இரண்டு திட்டங்கள் உள்ளன. (இதற்காக் செலவிடப்பட்ட ரூ. 550 இலட்சங்களில் ரூ. 16 இலட்சங்களை மத்திய அரசு ஏற்றது.) மத்திய மற்றும் மாநில அரசு படிப்பு உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவரின் பெற்றோர் ஆண்டு வருமானம் முறையே ரூ. 12,000 மற்றும் ரூ. 6,000-க்குள்ளாக இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்தப் பாலினர் மற்றும் எந்த படிப்பு பயிலுகின்றனர் என்பதை கணக்கில் கொண்டு, பராமரிப்புதவித் தொகை மாதத்திற்கு முறையே ரூ. 50-லிருந்து ரூ. 120 மற்றும் ரூ. 75-லிருந்து ரூ. 200 வரை தற்போது தரப்படுகின்றது. மாநில திட்டத்தின் கீழ் இவ்வுதவித் தொகை மாதத்திற்கு ரூ. 50-லிருந்து ரு. 75 வரை கொடுக்கப்படுகிறது. மேற்கண்ட இவ்விரு திட்டங்களின் கீழ் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 62,000 ஆதி திராவிட மாணவர்களும் 300 பழங்குடி வகுப்பு மாணவர்களும் பயனடைகிறார்கள். மேற் காணப்பட்ட படிப்பு உதவித் தொகையைத் தவிர காந்தியடிகள் நினைவு பழப்புத் தொகை தகுதி-வருவாய்-பரிசுத் திட்டம் மற்றும் தகுதிக்கென்று வழங்கும் தனி மானியம் போன்ற ஊக்க உதவித் தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. படிப்பு உதவித் தொகை தவிர படிப்புக்கு ஆகும் செலவை சரிக்கப்பட்ட கடன் உதவித் தொகை தேவைப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ளோர்களின் பிள்ளைகள் பயனடையும் வகையில் சிறப்பு உதவித் தொகைகள் தரப் படுகின்றன. இதன் வாயிலாக பயனடைவோர் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 650 மாணவர்கள் ஆவர்.

**மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு புத்தகவங்கி.**

12. இந்தத் திட்டம் 1979-80இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் ஏற்படும் செலவை மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத் திட்டத்தின் கீழ் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும்



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களில் 7 மாணவர்களுக்கு ஒரு ஜதை புத்தகம் என்ற விகிதத்தில் ரூ. 2,300 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டன. அதோடு அலமாரி வாங்குவதற்கு 5 ஜதை புத்தகங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ரூ. 1,000-மும் இதர செலவுக்காக ரூ. 100-ம் வழங்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் இது நான்கு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இன மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5,000 என்று உயர்த்தப்பட்டது. அது மேலும் மூன்று மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5,000 என்று 1985-86-லிருந்து மாற்றப்பட்டது. 1985-86-ல் இதற்காக ரூ. 28.75 இலட்சங்கள் செலவிடப்பட்டன.

**பள்ளிகள் ;**

13. இவ்வரசு நடத்தி வரும் 961 பள்ளிகளில் 2.26 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். அம் மாணவர்களுக்கு பாட நூல் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் வகுப்பு ஒன்று முதல் எட்டு வரை உள்ள வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் பயன் கருதி அரசு 170 உண்டி, உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இப் பள்ளிகளில் 10,795 பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இப் பள்ளிகளில் முதல்வரின் சத்துணவுத் திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

1985-86 ஆம் ஆண்டில் ஆறு அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டுள்ளன.

1986-87 ஆம் ஆண்டில் பத்து புதிய அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட துவக்கப் பள்ளிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட பகுதிகளில் திறக்க உள்ளன. அதோடு மூன்று உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகள் இத் திடம் அல்லாத பகுதிகளில் 1986-87 இல் திறக்க உத்தேசிக்கப் பட்டுள்ளன.

இத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளுக்குத் தேவையான தட்டுமுட்டுப் பொருள்கள், ஆய்வுக்கூட உபகரணங்கள், கரும் பலகை, குடி தண்ணீர் தொட்டி, கல்வி உபகரணங்கள், விளக்கப் படம், படிப்பக புத்தகம், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவை ஒரு கோடி ரூபாய் செலவில் வாங்க உள்ளன. இதற்காக 1986-87க்கு ரூ. 50 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதோடு 17 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக வும் 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாகவும் படிப்படியாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காக ரு. 80·62 இலட்சங்கள் செலவு ஆகும் 1986–87–ல் இதற்காக ரூ. 40 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதோடு 20 முதுநிலை பட்டம் பெற்ற ஆசிரியர்களையும், 45 பி.டி. ஆசிரியர்களையும் ஆதி திராவிடர் பள்ளிகளில் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 500 உயர்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரம் முடிந்தபின் ஒன்றரை மணி நேரம் சிறப்பு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது.

(அ) ஆங்கிலம் ;

(ஆ) கணிதம் ;

(இ) இயற்பியல் ;

(ஈ) இரசாயனம் ;

(உ) விலங்கியல் ;

(ஊ) தாவரவியல் ;

(எ) வணிகவியல் போன்ற பாடங்கள் மேற்படி திட்டத்தில் உள்ளடங்கும்.

**விடுதிகள் :**

14. ஆதிதிராவிட மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில ஆதி திராவிடர்களுக்கு 723 விடுதிகளும், பழங்குடியினர்களுக்கு 22 விடுதிகளும் அரசால் நடத்தப்படுகின்றன. இவ் விடுதிகளில் 51,924 ஆதி திராவிடர் மற்றும் பிற மாணவர்கள் தங்கி தங்கள் கல்வியைத் தொடருகிறார்கள். ஆதிதிராவிடர் மாணவர்கள் ஆதிதிராவிடர் அல்லாத பிறமாணவர்களுடன் கலந்திருக்கும் பொருட்டு முற்பட்டோர் மற்றும் பின்தங்கிய மாணவர்களும் இவ்விடுதிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு விடுதிகளில் தங்கும் மாணவர் ஒருவருக்கு ஆகும் உணவுச் செலவு அவ்விடுதியிருக்கும் பகுதியை பொறுத்தும் மாணவர் பயிலும் படிப்பு பிரிவைப் பொறுத்தும் ரூ, 60 லிருந்து ரு. 95 வரை நிர்ணயிக்கப்படுகிறது. ஆதி திராவிடர் மாணவருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை அளிப்பதற்காக 1986–87 ஆம் அண்டில் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். விடுதிகளை திறப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் 1986–87 இல் ரூ. 574.94 இலட்சங்கள் செலவிடப்படும்.



அரசு நடத்தும் விடுதிகள் தவிர, மேலும் இத்தகைய 45 விடுதிகள், பள்ளிகள் (41 ஆதிதிராவிடர்களுக்கு, 4 பழங்குடியினர்களுக்கு) தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இந்த விடுதிகளுக்கு அரசால் நிதி உதவி கொடுக்கப்பட்டு வருகிறது.

**விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல் :**

15. தங்கி படிப்பவர்களுக்காக எல்லா வசதிகளையும் கொண்ட வடுதிகள் படிப்படியாக கட்டப்படுகின்றன. இதற்காக 1986–87ல் ரூ. 160 இலட்சம் செலவிடப்படும். மேலே குறிப்பிட்டவற்றிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாட்டுக்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பது தெரியவரும். உண்மையிலேயே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல திட்டங்களுக்காக செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடுகளுக்கு மேல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்விக்கென செலவிடப்படுகிறது.

**பொருளாதார மேம்பாடு :**

16. தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள் ஆவர். இவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக பாசனக் கிணறுகள் வெட்டு வதற்காக ரூ. 6,000-ம், உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 600-ம் மானியமாக வழங்கப்படுகின்றன. இதில் மானி யத் தொகை மொத்த செலவில் 1/3 பகுதியாகும். எஞ்சிய 2/3 பகுதியான தொகை நிதி உதவி நிறுவனங்களால் வழங்கப் படும். 1986–87 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் இவர்களில் மதம் மாறிய கிறித்துவ விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 10.12 இலட்சங்கள் செலவிடப்படும். கிராமப்புற கைவினைஞர்கள் யார் உதவியும் எதிர்பாராது தங்கள் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிறு தொழில்கள் தொடங்குவதற்காக நிதி உதவியும் கீழ்க் கண்டவாறு அளிக்கப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| 1. அரசு மான்யம் | .. .. | 25 விழுக்காடு |
| 2. குறியீட்டுத் தொகை | .. | 25 விழுக்காடு. |
| 3, வங்கி மூலம்கடன் | .. .. | 50 விழுக்காடு. |

மானியத் தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கப்படுகிறது. ஆதி
திராவிடர்கள் கறவை மாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவ
தாலும், பாலுக்கு அதிக தேவை இருப்பதாலும் பால் வழங்கு
கூட்டுறவு சங்கங்கள் இவர்களுக்காக நிறுவப்பட்டு வருகின்றன.
ஒவ்வொரு கறவை மாடும் ரூ. 2,500 விலையாகிறது. இதில்
ரூ. 833 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில்
மானியமாக வழங்கப்படுகிறது. எஞ்சிய ரூ. 1,667 தேசிய
மயமாக்கப்பட்ட வங்கிகளால் கடனாக வழங்கப்படுகிறது.
ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு கறவை மாடுகள் வாங்கு
வதற்கு தகுதியுடையவர் ஆவர். இத் திட்டத்தின் கீழ் 1986-87ல்
ரூ. 35.16 இலட்சங்கள் செலவிடப்படும். அதில் 1.38
இலட்சங்கள பணியாளர்களின் செலவு.

## பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு :

17. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும்
தொகுதி 4 பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத ஆதிதிரா
விடர் மற்றும் பழங்குடியினருக்கு சிறப்புப்பயிற்சி அளிக்கப்
படுகிறது. இப்பயிற்சியின் காலம் இரண்டு மாதங்களாகும்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்
இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத விழையும்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின்வெற்றி வாய்ப்பினை
மேம்படச்செய்ய முன்பயிற்சி 1966-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்
படுகிறது. பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற
அறிவு கூர்மையுள்ள ஆதிதிராவிட விண்ணப்பதாரர் அவர்களின்
பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 அல்லது அதற்குக்
குறைவாக இருப்பின் டெல்லியில் உள்ள டாக்டர் ராவின்
கல்வி வட்டாரத்திற்கு குடி முறை அரசு தேர்வுகளில் சிறப்புப்
பயிற்சி பெற அனுப்பப்படுகிறார். வழக்கறிஞர் தொழில்
செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த
சட்ட பட்டதாரிகளுக்கு பதிவு செய்யவும், அறை வாடகை
போன்ற செலவினத்திற்கு கடனாக ஒவ்வொருவருக்கும்
ரூ. 750-ம் சட்ட புத்தகங்கள் மரச் சாமான்கள் முதலியவை
வாங்குவதற்கு ரூ. 750-ம் அரசு மானியமாக வழங்குகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த
சட்ட பட்டதாரிகள் சிறப்பு வாய்ந்த, அனுபவம் பெற்ற வழக்
கறிஞர்களின் கீழ் பயிற்சி பெற முடிவதில்லை. எனவே, அரசு
ஆண்டுதோறும் இவ்வினத்தைச் சார்ந்த 20 சட்ட பட்டதாரி
களுக்கு அனுபவம் பெற்ற சிறப்பு வாய்ந்த வழக்கறிஞர்களிடம்
பல துறைகளிலும் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற ஒரு திட்டம்
வகுத்துள்ளது. இதன் மூலம் இவர்கள் வழக்காடும் பணியில்
சிறந்த அனுபவமும் தனித் தன்மையும் பெறுவர். இக்க





பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 500
உதவி தொகையாகவும், பயிற்சியளிக்கும் வழக்கறிஞர்களுக்கு
ஆண்டுக்கு ரூ. 5,000 கௌரவ ஊதியமும் இத்திட்டத்தின்படி
வழங்கப்படும்.

## வீட்டு வசதி :

18. (1) வீட்டு மனைகள் வழங்கல் :— வசிப்பதற்கென்று சிறி
தளவு நிலம் கூட சொந்தமாக இல்லாத ஆதிதிராவிடர்களின்
நிலை பரிதாபத்திற்குரியது. இக் குறைகளை களைய அவர்
களுக்கு வீட்டு மனைகளை அரசு வெகுகாலமாக வழங்கிவருகிறது.
அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்குமிடத்து அவைகள் வீட்டு
மனைகளாக ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர்களுக்கு மாவட்ட
ஆட்சியர்களால் ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. குடியிருப்பு
சட்டத்தின் கீழும் அவர்களுக்கு நிலங்கள் ஒப்படைப்பு செய்யப்
படுகின்றன. தனியார் நிலங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட்டு,
ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளாக ஒப்படைப்பு செய்யப்
படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர்குடும்பத்திற்கும் 3 சென்ட்
நிலம், வீட்டு மனையாக ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இது
வரை 4,58,568 வீட்டு மனைகளுக்கு நில எடுப்பு செய்யப்பட்டு
உள்ளது. இவற்றை சேர்த்து இதுவரை 10 இலட்சத்திற்கும்
அதிகமான ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்
களின்கீழ் வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1986-87-ல்
ரூ. 100.00 இலட்சம் செலவில் நில எடுப்பு செய்து சுமார் 25,000
ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

(2) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்
பாட்டுக் கழகம் (தாட்கோ) :— தாம் வசிப்பதற்கென தனக்
கென்று ஓரிடமின்றிருக்கும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் இனத்
தவரின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். அவர்களுக்கு
போதுமான வீட்டு வசதி அளிப்பது அரசின் தலையாய பொறுப்
பாகும். இம் மக்கள் பொருளாதாரத்தில் மிக பின்தங்கிய நிலை
யில் இருப்பதால் அவர்கள் தமக்களிக்கப்பட்டுள்ள நிலத்தில் தமக்
கென சொந்தமாக வீடுகளை கட்டிக் கொள்வதை எதிர்பார்க்க
முடியாது. எனவே, அதற்கென மாநில அரசு இம் மக்களுக்கு
வீடுகளை கட்டிக் தருவதற்கு உறுதியளிக்கிறது.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம்
1974-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில்
இக்கழகம்பயன்பெறுபவராகிய ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு
களைக் கட்டித் தருவதற்குரிய பணியை மேற்கொண்டது. 1979ம்
ஆண்டிலிருந்து இம்மக்களுக்கு தம் சொந்த வீட்டை கட்டுவதற்கு
நிதியுதவி மட்டுமே அளிக்கப்பட்டு வருகிறது. 1974-ஆம் ஆண்டில்
வீடு கட்டுவதற்கான செலவு ரூ. 2,400 ஆக இருந்தது. அத்தொகை

படிப்படியாக உயர்த்தப்பட்டுதற்போது வீடொன்றுக்கு ரூ. 6,000 சமவெளிப்பகுதியிலும், ரூ. 9,000 மலைப்பாங்கான பகுதியிலும்என்று உயர்த்தப்பட்டது. இதுவரை இக்கழகத்தின் மூலம் 57,884 வீடுகள் ஆதிதிராவிடருக்காக கட்டப்பட்டுள்ளது.

அண்மையில் நலிந்த பிரிவினருக்கு வீடுகள் அளிக்கும் மாபெரும் திட்டத்தை இவ்வரசு அறிவித்துள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் 10 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கும், அவற்றில் 5 இலட்சம் வீடுகள் ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர் ஆகியோருக்கு அளிப்பதற்கு வகை செய்கிறது.

தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பும் தாட்கோவிடமே விடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தின்படி ஒரு தொழிலுக்குத் தேவைப்படும் மொத்த தொகையில் 25 விழுக்காடு தொடக்கச் செலவு தொகை 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை அரசு மானியமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். மொத்த செலவில் 49 விழுக்காடு மத்திய அரசாலும், எஞ்சிய 51 விழுக்காடு மாநில அரசாலும் பொறுப்பேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 11.02 கோடி தாட்கோவிடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. 1,51,276 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதுவரை ரூ. 662.26 இலட்சம் வழங்கியுள்ளது. 1986-87 இல் இத்திட்டத்திற்காக ரூ. 200.00 இலட்சம் தாட்கோவிற்கு ஒப்படை செய்யப்படும். தொடக்க செலவு வழங்கும் வழி முறைகளை எளிதாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால், இத்திட்டம் துரிதமாக செயல்படுத்த வழிவகுக்கும்.

**அடிப்படை வசதிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் :**

19. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வழங்குவது தலையாய திட்டங்களில் ஒன்றாகும். பொதுவாக கூறுமிடத்து இப்பொழுது அனேகமாக எல்லா குடியிருப்புகளிலும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்" என்ற பிரிவின் கீழ் கிணறு ஒன்று ரூ. 7,500 செலவில் குடிநீர் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ரூ. 13,000 செலவில் தரைமட்ட சென்டிரிபிகல் குழாய்க் கிணறும், ரூ. 15,000 செலவில் ஆழ்குழாய்க் கிணறும், அமைக்கப்படுகிறது. 1986-87இல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக, ரூ. 19.83 இலட்சம் செலவு செய்யப்படும். இது தவிர, எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலும் குடிநீர் வசதி கிடைத்திட ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் நிதியையும் திரட்டப்படும்.





ஆதிதிராவிடர்களின் மயானங்களுக்கும் குடியிருப்புகளுக்கும் பாதைகள் அமைக்க 1986-87இல் ரூ. 20.46 இலட்சம் செலவு செய்யப்படும். சமீபத்தில் சேகரித்த புள்ளி விவரப்படி சுமார் 2,850 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் தேவைப்படுகின்றன. தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டம் மூலம் இக் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்துக் கொடுக்க வகை செய்யப்படும்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் சமூகக் கூடங்கள் கட்ட ஒரு திட்டமும் உள்ளது. 1986-87இல் கூடுதல் நீர்புற சலவைக் கூடங்கள் அமைக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பு :

20. பன்னெடுங்காலமாக நிலவிவரும் தீண்டாமையை ஆதிதிராவிடர்களுக்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களால் மட்டும் ஒழித்துவிட முடியாதென்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, மாநிலத்தில் குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தை, தீவிரமாக செயல்படுத்திக்கொண்டு வருகிறது. 22 நடமாடும் காவல் படைப்பிரிவுகள் இம்மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த காவல் படைப் பிரிவுகள் 1985 டிசம்பர் முடிய 11,531 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,134 வழக்குகள் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன நீதிமன்றப் பணிகளைக் கவனிப்பதற்காக ஏழு தனி வழக்கு தொடர்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவாக பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலி பெட்டிகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபடும் கிராமங்களில் அப்பணியில் சிறந்து விளங்கும் இரு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்புப் பற்றி பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி முடிய தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு அரசு எடுக்கும் முயற்சிக்காக சமூக சேவை செய்யும் தொண்டு நிறுவனங்கள் பெரிய அளவில் ஆதரவு அளிக்கக்கூடும் என்று அரசு கருதுகின்றது. ஆதலால் இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்

களில் ஆதிதிராவிடர்களுக்கு கொடுமை இழைக்கக் கூடிய இடங்களில் 104 கிராமங்களில் தீண்டாமை ஒழிப்பிற்கான பிரச்சாரம் செய்வதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த 104 கிராமங்களிலும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் இன ஒற்றுமைக்காக கிராம அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தி அரசு ஆணைகள் இடப்பட்டுள்ளது. தீண்டாமையின் கொடுமை ஒழிப்பினை பிரச்சாரம் செய்வதற்காக ''தீர்த்த யாத்திரை'' (Pilgtimage) என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங்களில் திரையிட்டு காட்ட ஒரு கூண்டு உந்து வண்டி வாங்கப்பட்டிருக்கிறது.

தீண்டாமை ஒழிக்கும் நடவடிக்கையாகவும், சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்கும் நோக்குடனும் கலப்புமணம் புரிந்த தம்பதியருக்கு தங்கப்பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, இத்தகைய தம்பதியரின் இணைந்த ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்பு பத்திரத்தில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமணச் செலவிற்கென ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம்.பி.,பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்காக 12 இடங்களும், முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும், சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும், நாட்டு முறை மருந்தாக்கப் பட்டய பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன. கலப்பு மணத் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் விரைவில் அவர்களுக்கு போய்ச்சேரும் பொருட்டு 1985-86 ஆம் ஆண்டு முதல் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கு அச் சலுகையினை வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன.

இட ஒதுக்கீடு பற்றிய விதிமுறை :

21. (அ) கல்வி நிலையங்களில் சேர்க்கை :—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி நிலையங்களில் முறையான பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட்பட ஒவ்வொரு கல்வி பிரிவிலும் 18 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள்ளது.

(ஆ) அரசு பணிகளில் நியமனம் :—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மாநில அரசு பணிகளில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணி நியமன அதிகாரிகள் இட ஒதுக்கீட்டு விதி முறைகளை வழுவாமல் பின்பற்றுகிறார்களா என்பதை நிலையாக ஆய்வு செய்யும் பொருட்டு துறைத் தலைவர்களும், தலைமைச் செயலக துறைகளும் ஆண்டு விவர அறிக்கை சமர்ப்பிக்கும்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு பணிகளில் இவ்வொதுக்கீடு தொடர்பாக வரும் முறையீடுகளை ஆய்வு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் தலைவராகவும், ஆதிதிராவிடர் நல அமைச்சரை உப தலைவராகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு இயங்கி வருகிறது. சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அவர்களின் தலைமையில் ஒரு உயர் அதிகார கண்காணிப்புக் குழு இட ஒதுக்கீடு விதிமுறைகளை செயற்படுத்துதல் பற்றி ஆய்வு செய்கிறது.



சிறப்பு உள்ளடக்கத் திட்டம் :

22. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் மேம்பாட்டை துரிதப்படுத்துவதற்காக அரசு 1980–81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு :—

(அ) ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஐம்பது சதவீதத்தினர் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டினைக் கடக்க உதவி செய்தல்.

(ஆ) ஆதி திராவிடர் காலனிகளுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் இதர வசதிகள் செய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு பல முனைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளின் மூலதனங்களை ஒன்றாக்கி, ஆதிதிராவிடர் குடும்பங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களின் மூலம் பயன்பெற்று வறுமைக் கோட்டினைக் கடக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதர பிரிவுகளிலிருந்து குறிப்பாக பயன் பிரித்துக் கூற முடியாத திட்டங்களிலிருந்து பெறும் நன்மையை கணக்கில் கொள்ளாது பயன் பிரித்தறியக் கூடிய திட்டங்களிலிருந்து ஆதி திராவிடர் அடையக் கூடிய நன்மையை மட்டுமே சிறப்பு உள்ளடக்கத் திட்டம் குறிக்கோளாகக் கொள்ளும்.

பொருளாதார முன்னேற்றம் :

23. ஆதி திராவிடர்களின் பின்தங்கிய நிலையை, பொருளாதார மற்றும் சமுகத் திட்டங்கள் மூலம்தான் மேம்படுத்த இயலும். அவ்வாறில்லாவிடில் ஆதி திராவிடர்கள் முழுமையாக வளர்ச்சியடைய இயலாது. ஆதி திராவிடர்கள் பொருளாதார மேம்பாடு அடைய சீரிய பல திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிட விவசாய பெருங்குடி மக்கள்

[1986 ஏப்ரல் 24

வாழ்வு வளம்பெற 25 விழுக்காடு மானிய விலையில் விவசாய
இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் வருமானத்தை
அதிகரிக்கும் முகத்தான் கோழி, ஆடு மற்றும் கறவை மாடு
வளர்த்தல் போன்ற உப தொழில்கள் மேற் கொள்வதற்கும்
ஊக்கமளிக்கப்படுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ்
நிலமில்லாத ஆதி திராவிடர்களுக்கு நிலங்களும் வழங்கப்படு
கின்றன. இந்நிலத்தை பயன்படுத்தி சாகுபடி செய்ய ஒரு ஹெக்
டேருக்கு ரூ. 2,500 நிதி உதவி அளிக்கப்படுகிறது. விவசாய
இடுபொருள்கள் மற்றும் நிலமளித்தல் திட்டத்தினால் ஆதி
திராவிடர்கள் அதிக அளவு பயன் பெறும் வகையில் இத்திட்டங்
கள் விரிவாக்கப் பணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. தேவை
யான இடங்களில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்
கொள்ளப்பட்டுள்ளன. மற்றவர்கள் 25 விழுக்காடு மானியம்
பெறுகையில் ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மானியம் பெறு
கின்றனர். நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கும்
மற்றவர்களுக்கும் கால்நடைப் பராமரிப்புப் பணி, தொழில்
மற்றும் வணிகம் செய்வதற்குய் நிதி உதவி அளிக்கப்படுகிறது.
இவைகளினால் இக்குடும்பங்கள் நிலையான பலனை அடைந்து
வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டு வருவதற்காக முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் ஆதி
திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு
வகிக்கிறது. 1985–86 இல் சுமார் 66,000 ஆதி திராவிடர்
குடும்பங்களுக்கு இத் திட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்பட்
டுள்ளன. ஆதி திராவிடர்கள் தொடர்ந்து பொருளாதார
முன்னேற்றமடைய இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக
இருக்கும். 1986–87 இல் சுமார் 84,000 ஆதி திராவிடர்
குடும்பங்களுக்கு உதவியளிக்கப்பட உள்ளது. குறைந்த பட்ச
ஊதியம் நிர்ணயிக்கப்பட்டதாலும், குறைந்த பட்ச ஊதியச்
சட்டத்தினை செயல்படுத்துவதாலும் ஆதி திராவிடர் விவசாயத்
தொழிலாளர்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய வழிவகை
செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசும், ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்
பாட்டுத் திட்டங்களுக்காக சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்
கீழ் சிறப்பு மத்திய நிதி உதவியினை அளித்து வருகிறது. இந்
நீதியினால் தொழிலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, வேலை வாய்ப்பு
கள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. சுய வேலை வாய்ப்புத் திட்
டத்தின்கீழ் ஆதி திராவிடர் முதலீட்டாளர்க்கு தாராளமாக
நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு
பின் தங்கிய பகுதி அறியப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழே
யுள்ள 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களின் பொருளாதார
முன்னேற்றத்திற்காக உதவியளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை
45 ... வுட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவைகளில் திட்டங்கள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் இளைஞர்கள்



1986 ஏப்ரல் 24]

இராணுவத்தில் சேரும் வகையில், சிறப்புப் பயிற்சி முகாம்கள்
நடத்தப்பட்டன. இத்தகைய முகாம்கள் மேலும் நடத்தப்பட
உள்ளது. நகர்ப்புறங்களில் வசிக்கும் ஆதி திராவிடர் குடும்
பங்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில், 33 விழுக்காடு
வரையில் மானியமாக அளிக்கப்படுகின்றன.

1985–86 ஆம் ஆண்டில் சிறப்பு மத்திய உதவியாக இந்திய
அரசு ரூ. 13.39 கோடி அளித்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டில்
ரூ. 14.00 கோடி மத்திய உதவியாக எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மேலே
விவரிக்கப்பட்டபடி இந் நிதி உதவி பயன்படுத்தப்படும். 1985–86
ஆம் ஆண்டில் 2.00 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு
பொருளாதார மேம்பாட்டிற்காக உதவிகள் நல்கப்பட்டன.
1986–87 ஆம் ஆண்டிலும் சுமார் 2 இலட்சம் ஆதி திராவிடர்
குடும்பங்களுக்கு உதவியளிக்கப்படும். 1986–87 ஆம் ஆண்டிலும்
ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ. 23.31
கோடி செலவிடப்படும்.

சமூக மேம்பாட்டுத் திட்டங்களைப் பொறுத்தமட்டில்
நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்
குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர, தேசிய
ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை
வாய்ப்பு காப்புறுதி திட்டம் போன்ற திட்டங்களின் மூலமும்
எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஏழாம் ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவை
யான எல்லா அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட ஆவன
செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடியினர் :

24. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்ச
மாகும். அவை மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீத
மாகும். பழங்குடியினர் முன்னேற்றத்தை விரைவுபடுத்த அவர்கள்
செறிந்துள்ள பகுதிகளில் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் பழங்
குடியினர் துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பழங்
குடியினர் துணைத் திட்டத்தை செயற்படுத்த, பழங்குடியினர்
அதிகமாக உள்ள 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது
திட்டத்தட்ட 2.10 இலட்சம் தமிழக பழங்குடியினர்
இந்த 9 பகுதிகளில் வசிக்கின்றனர் பழங்குடி துணைத் திட்டத்
தின் கீழ் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களான தோட்டக்
கலை, கால்நடை வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம்
பட்டுப்புழு வளர்ப்பு, சிறுதொழில் தேனீ வளர்த்தல் போன்றவை
செயல்படுகின்றன. மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான

இடுபொருள்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள
சல்ராயன் தவிர (75 சதவீதம் மானியம் தரப்படுகிறது). மற்ற
பகுதிகளில் பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமாக
கொடுக்கப்படுகிறது. 1985-86ல் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய
விதைகள் மற்றும் நாற்றுகள் வினியோகிக்கும் திட்டம் 3,000
ஏக்கர் பரப்புள்ள பழங்குடியினர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டது.
பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் 400 பழங்குடியினர் குடும்பங்
கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில்
1,332 பழங்குடியினர் குடும்பங்களுக்கு கறவை மாடுகள்
வழங்கப்பட்டன. 331-க்கு மேற்பட்ட பழங்குடியினர் குடும்பங்
களுக்கு, தேனீக்கள் வளர்ப்பு கூடுகள் வழங்கப்பட்டன. 4,902
குடும்பங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்
மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டங்கள் யாவும் பழங்குடி
யினர் பண்பாட்டினை பாதிக்காத வகையில் நேர்த்தியாகத்
திட்டப்பட்டுள்ளன. 1985-86 இல் இருபது அம்சத் திட்டத்தின்
கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம்
9,309 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்
கப்பட்டது. ஆனால், இவ்வருடத்தில் குறியீட்டுக்குமேல்
750 குடும்பங்கள் அதிகமாக பயனடைந்துள்ளனர். மாவட்ட
ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், தோட்டக்கலைத் துறை மற்றும்
கால்நடை வளர்ப்புத் துறைகள் மூலம் இக்குடும்பங்கள் அதிக
அளவில் பயன் அடைந்துள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்
களின் வாயிலாக 28,884 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்
டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வாறு 69,869
பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய வழி வகுக்கும். 1986-87
ஆம் ஆண்டில் இக்குறியீடு 6,000 பழங்குடியினர் குடும்பங்களாகும்.
பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்கு பாதிப்பு
உண்டாக்கக் கூடிய இடைத் தரகர்களின் நடவடிக்கைகளைத்
தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பலநோக்கு கூட்டு
றவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்
டுள்ளது. பொதுவாக இப் பகுதிகளில் வசிக்கும் எல்லாப் பழங்
குடியினரும் இக் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாவார்.
இச் சங்கங்கள் பயன்பாட்டுக் கடன்கள் மட்டுமல்லாமல், குறுகிய
காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் தருகின்றது. இது மட்டுமல்
லாமல், நியாயமான அளவில் ஆதாயம் அவர்களுக்கு கிட்டுவ
தற்காக அவர்களுடைய தயாரிப்பு பொருட்களை இச்சங்கங்கள்
விற்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன. இச்சங்கங்களின் வாயிலாக
பழங்குடியினருக்கு அத்தியாவசிய பொருட்கள் நியாய விலையில்
விற்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்
டுத் துணைத் திட்டம் அமுலில் இல்லாத, நீலகிரியில் உள்ள
மசினகுடியில் மற்றொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார்
300 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய செயல்பட்டு வரு





கிறது. இப்பொழுது சோலகர் பழங்குடியினர் நலனுக்குகாகச்
செயல்பட்டு வரும் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தில்
உள்ள விற்பனை கூட்டுறவுச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவு
சங்கமாக மாற்றியமைக்கப்பட்டு இந்த பழங்குடியினர் ஒரே
இடத்தில் எல்லா வசதிகளையும் பெற வாய்ப்பேற்படுத்தப்
பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட குடும்ப வறுமையை ஒழிக்கும்
திட்டங்களை தவிர சாலை அமைத்தல், சுகாதார வசதி செய்
தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், தெருக்கள் காலனி
களில் மின் வசதி செய்தல், குடிநீர் வசதி செய்தல் போன்ற
பகுதி முன்னேற்றத் திட்டங்கள் இப்பழங்குடியினர் திட்டத்தின்
கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் குடும்பத்
தினருக்கு மேலே குறிப்பிடப்பட்ட எல்லாத் திட்டங்களும்
செயல்படுத்துவதுடன், காலனிகளுக்கு எல்லா அடிப்படை
வசதிகளும் செய்து தரப்படும்.

பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படாத
பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனுக்காக வீட்டு வசதி
போன்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்
மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் அவர்களின்
நலன் பாதுகாக்கப்படும்.

வேளாண்மை தொழில் நுட்ப அளவு திறன் பெறாத மற்றும்
எண்ணிக்கையில் குறைந்து கொண்டிருக்கும் பண்டைய பழங்
குடியினர் கண்டு பிடிக்கப்பட்டு, அவர்களுக்காக தனித் திட்டங்
கள் செயல்படுத்தப்படுகின்றன.

1986-87 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பழங்குடியினர்
மேம்பாட்டு திட்டப் பகுதிகளில் வசிக்கக் கூடிய 8,870
பழங்குடியினர் குடும்பத்திற்கு ரூ. 945.77 இலட்சம் செலவழிக்
கப்படும். இவற்றில் பண்டைய பழங்குடியினரும் அடங்குவர்.

இருபது அம்சத் திட்டம் 7 (அ) மற்றும் 7 (ஆ) :

25. இம்மாநிலத்தில் இருபது அம்சத் திட்டமானது தீவிரமாக
செயல்படுத்தப்படுகிறது. இருபது அம்சத் திட்டத்தில் ஏழாவது
அம்சம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற
றத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகை செய்கிறது. 1980-85
ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம்
ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.50 இலட்சம் ஆதிதிராவிடர்
குடும்பங்கள் பொருளாதார முன்னேற்ற திட்டங்களினால்
பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்
தில், 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று

குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், இத்திட்ட காலத்தில் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளாதார திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வகை பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் மூலமாக 10 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களும், 69,869 பழங்குடியினர் குடும்பங்களும் பயன் பெற வகை செய்யப்படும். 1986–87-ல் இதன் குறியீடு 2 இலட்சம் தாழ்த்தப்பட்ட குடும்பங்களும், 6,000 பழங்குடியினர் குடும்பங்களும் ஆகும்.

26. கோரிக்கை எண். 31-ன் கீழ் ரூ. 4,789.44 இலட்சமும் கோரிக்கை எண். 43 (பல்வகை)லிருந்து ரூ. 0.37 இலட்சமும் கோரிக்கை எண். 58 (பல்வகை மூலதனம்)-லிருந்து ரூ. 410.00 இலட்சமும் கோரிக்கை எண். 59 (கடன் மற்றும் முன் பணம்) லிருந்து ரூ. 57.95 இலட்சமும் ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக 1986–87 ஆம் ஆண்டில் செலவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

27. இவ்வாறாக, இம் மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டை உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—1986–87ஆம் ஆண்டு

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு.

இணைப்பு II.

| தொடர் எண்ணும் திட்டத்தின் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள்-மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக்கொண்ட மாநிலத் திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (ரூபாய் ஆயிரத்தில்). | | | | | | | | |
| I. கல்வி. | | | | | | | | | |
| 1 படிப்புதவித் தொகை .. | 36,063<br>684<br>.. | 164<br>..<br>.. | 2,146<br>5,000(க)<br>235(க)* | ..<br>.. | 11,580<br>17,073<br>100(க) | 230<br>.. | 72,881<br>.. | 394<br>.. | 73,275<br>.. |
| 2 மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு புத்தக வங்கி. | 200<br>.. | .. | .. | .. | .. | .. | 200 | .. | 200 |
| 3 பள்ளிகள் .. .. .. | ..<br>.. | ..<br>.. | 800<br>707<br>545 | ..<br>.. | 72,592<br>2,085 | 5,860 | 76,639 | 5,860 | 82,409 |
| 4 முதலமைச்சர் நண்பகல் சத்துணவுத் திட்டம். | .. | .. | 1,942 | .. | 9,321 | .. | 11,263 | .. | 11,263 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் பழுதுபார்த்தல். | .. | .. | 2,715<br>5,000(மூ) | 290 | 1,436 | 383 | 9,151 | 673 | 5,824 |
| 6 சீருடைகள் .. .. .. | .. | .. | 1,926 | 33 | 10,663 | 548 | 12,589 | 581 | 23,170 |
| 7 சாரணப்பயிற்றுனர், சாரண சாரணியருக்குச் சீருடை வழங்கல். | .. | .. | 75 | 10 | .. | .. | 75 | 10 | 85 |
| 8 பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குதல், பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 2,971 | 117 | 4,296 | 467 | 7,267 | 584 | 7,851 |
| 9 ஆசிரியர்களுக்கு இல்லங்கள் | .. | .. | 175 | 200 | 34 | 20 | 209 | 220 | 492 |
| 10 பள்ளிச்சுற்றுலா .. .. | .. | .. | 39 | .. | .. | 8 | 39 | 8 | 67 |
| 11 பரிசுப் பொருட்கள் .. | .. | .. | .. | .. | 64 | .. | 64 | .. | 64 |
| 12 மாணவர் இல்லங்கள் பராமரிப்புச் செலவு | .. | .. | 42,88<br>163 | 742<br>137 | 47,155 | 3,867<br>1,142 | 51,606 | 5,888 | 57,49 |
| 13 மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதலும் பராமரித்தலும். | 10,000(மூ)** | | 5,500<br>(மூ) | 500<br>(மூ) | 747 | 24 | 16,247 | 524 | 16,771 |
| 14 பகுதி நேர சிற்றாசிரியர்கள் | .. | .. | .. | .. | 135 | 15 | 135 | 15 | 150 |
| 15 உணவு மானியம் .. .. | .. | .. | .. | .. | 1,037<br>5 | 108 | 1,042 | 108 | 1,150 |
| 16 ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வழங்கப் படும் மானியம். | .. | .. | 1,490 | .. | .. | .. | 1,490 | .. | 1,490 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 தேர்வுமுன் பயிற்சி நிலையங்கள் | 984** | .. | 200 | .. | .. | .. | 1,184 | .. | 1,84 |
| 18 கல்வி நிலையங்களில் பல் கலைக் கழகங்கள் இழப் பீட்டுத் தொகை. | .. | .. | .. | .. | 275 | .. | 275 | .. | 275 |
| 19 கல்லூரி மாணவர்களுக்கு தனிப்பயிற்சி அளித்தல். | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 20 திறமையான மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை. | .. | .. | 10<br>103* | .. | 413 | 50<br>68 | 526 | 118 | 644 |
| 21 பட்டயக்கணக்கர் தேர்வுகள். | .. | .. | .. | .. | 10 | .. | 10 | .. | 10 |
| 22 தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சி | .. | .. | 486<br>131* | .. | .. | .. | 617 | .. | 617 |
| 23 திறமையான மாணவ மாணவி களுக்கு தனிப்பயிற்சி. | .. | .. | .. | .. | 25 | .. | 25 | .. | 25 |
| 24 ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையைச் சேர்ந்த கல்விப்பிரிவில் கூடுதல் பணி யாளர்கள் நியமித்தல். | .. | .. | 36 | .. | 978 | .. | 1,014 | .. | 10,14 |
| 25 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழிற்பயிற்சி பெறும் ஆதி திராவிடர் பயிற்சியாளர் களுக்குப் பயிற்சி உதவித் தொகை. | .. | .. | 241 | .. | 972 | .. | 1,213 | | 1,213 |
| 26 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவர்களுக்கு தேர்வு ஊக்கத் தொகை வழங்குதல். | .. | .. | 106 | .. | .. | .. | 106 | .. | 106 |
| 27 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவர்களுக்கு இந்திய தொழில் நுட்பக் கல்லூரியில் சேர பயிற்சி அளித்தல். | 1** | .. | .. | .. | .. | .. | 1 | | 1 |
| மொத்தம்—1. கல்வி .. | 47,932 | 164 | 37,130 | 2,029 | 1,89,906 | 12,790 | 2,65,948 | 14,983 | 2,80,951 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **II. வேலை வாய்ப்பு பொருளாதார முன்னேற்றம்.** | | | | | | | | | |
| 8 வேளாண்மை .. | .. | .. | 667<br>154* | 191 | .. | .. | 821 | 191 | 1,012 |
| 9 கூட்டுறவு .. | .. | 40** | 1 | .. | .. | .. | 1 | 40 | 41 |
| 30 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள். | .. | .. | 3,278<br>100* | .. | 138 | .. | 3,516 | .. | 3,516 |
| 31 குடிசைத் தொழில்கள் .. | .. | .. | 1<br>1* | .. | 268 | 24 | 270 | 24 | 294 |
| 32 பயிற்சி-உற்பத்தி நிலையங்கள் | .. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | 50 |
| 33 தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித் தொகை. | .. | .. | 800<br>100* | 100 | .. | .. | 900 | 100 | 1,000 |
| 34 பயிற்சி வேலை வாய்ப்பு பிரிவு | | | 1<br>1* | 1 | .. | .. | 2 | .. | 2 |
| 35 சிறு வணிகக் கடன் .. | .. | .. | 300<br>(க),<br>100 | 50<br>(க) | .. | .. | 400 | 50 | 450 |
| 36 அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெற சிறப்புப் பயிற்சியளித்தல். | .. | .. | (க)*<br>1<br>1* | .. | | | 2 | | |
| 37 முப்படைகளில் கமிஷன் பதவித் தரத்தில் நியமிக்கப் பெற ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கும் தனிப் பயிற்சி அளித்தல். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 38 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மகளிருக்கு வானொலி தொலைக்காட்சி பெட்டிகளை பழுது பார்ப்பதில் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 39 தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன முதலீடு. | 20,000(மு)** | .. | .. | .. | .. | .. | 20.000 | .. | 20,000 |
| 40 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதி திராவிடர்களுக்கு நலம் பயக்கும் தனித் திட்டங்கள் (ஆதி திராவிடர்களுக்கான தனி துணை திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி). | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,000 | .. | 1,10,000 |
| 41 வங்கிப் பணித் தேர்வுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல். | .. | .. | 25 | .. | .. | .. | 25 | .. | 25 |
| மொத்தம்—II. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும். | 20,000 | 40 | 1,15,532 | 391 | 407 | 24 | 1,35,393 | 455 | 1,36,394 |
| **III. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள்.** | | | | | | | | | |
| 42 வீட்டு வசதிகள் .. .. | .. | .. | 1 | 200 | .. | .. | 1 | 200 | 201 |
| 43 வீட்டு மனைகள் .. .. | .. | .. | 1<br>(சா.)<br>112<br>1,000<br>10,000 | .. | .. | .. | 11,112 | .. | 11,113 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 44 இடுகாட்டிற்குச் செல்ல பாதை அமைத்தல், குடி தண்ணீர் மற்றும் சாலை அமைக்க (ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் பங்கீடும் அடங்கும்). | .. | .. | 2,428 | .. | .. | .. | 2,428 | .. | 2,428 |
| 45 குடிநீர்க் கிணறுகள் .. .. | .. | .. | 1,524<br>161* | 298 | .. | .. | 1,685 | 298 | 1,983 |
| 46 மருத்துவம் .. .. .. | .. | .. | .. | 25 | 102 | 362 | 102 | 387 | 489 |
| 47 மின்வசதி .. .. .. | .. | .. | 1 | 1 | 1 | .. | 2 | 1 | 3 |
| 48 சாலைகள் .. .. .. | .. | .. | .. | 215 | .. | .. | .. | 215 | 215 |
| 49 விளம்பரச் செலவுகள் .. | 228** | .. | .. | .. | .. | .. | 228 | .. | 228 |
| 50 தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசுகள். | .. | .. | .. | .. | 26 | .. | 26 | .. | 26 |
| 51 துப்புரவாக வைத்திருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குப் பரிசு. | .. | .. | .. | .. | 79 | .. | 79 | .. | 79 |
| 52 ஆதிதிராவிடர் குடிசைவாழ் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குதல். | 1** | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 53 சமுதாய நிலையங்கள் .. | .. | .. | .. | .. | 650 | .. | 650 | .. | 650 |
| 54 சமுதாயக் கூடங்கள் .. | .. | .. | 500 | .. | .. | .. | 500 | .. | 500 |
| 55 கலப்புத் திருமணங்கள் .. | .. | .. | 826 | .. | .. | .. | 826 | | 826 |
| தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகார மன்றம் | .. | .. | .. | 19 | .. | .. | .. | 10 | 10 |
| 57 நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் கட்டுதல். | .. | .. | 10<br>10<br>(க) | .. | .. | .. | 20 | .. | .. |
| 58 துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுதல். | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 59 துப்புரவாளர்கள் மற்றும் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பணியை மேம்படுத்துதல். | .. | .. | 75 | .. | .. | .. | 75 | .. | 75 |
| 60 பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | .. | 371** | .. | .. | .. | .. | .. | 371 | 371 |
| 61 ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல். | .. | .. | .. | .. | 4,647 | .. | 4,647 | .. | 4,647 |
| 62 ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் திட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்காக புலனாய்வு ஆராய்ச்சிப் பிரிவு. | 148** | .. | .. | .. | .. | .. | 148 | .. | 148 |
| 63 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தும் நிர்வாகம். | 300** | .. | .. | .. | .. | .. | 300 | .. | 300 |
| மொத்தம் III—சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள். | 677 | 371 | 16,650 | 749 | 5,505 | 362 | 22,832 | 1,482 | 24,314 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்—** | | | | | | | | | |
| 64 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத் திட்டம் குறித்த முன்னோடி நடவடிக்கைக்காக ஒருங்கிணைப்பு மேம்பாட்டு திட்ட பணிகளுக்கான வல்லுநர் குழு. | .. | .. | .. | 162 | .. | .. | .. | 102 | 102 |
| 65 பழங்குடியினர் தங்கி பயிலும் வசதியுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும் பராமரித்தலும். | .. | .. | .. | 7,349 | .. | .. | .. | 7,349 | 7,349 |
| 66 பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நீர் வழங்கும் திட்டம் | .. | .. | .. | 4,000 | .. | .. | .. | 4,000 | 4,000 |
| 67 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி திட்டம் | .. | .. | .. | 2,000 | .. | .. | .. | 2,000 | 2,000 |
| 68 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்கீழ் சிறு பாசனத் திட்டம். | .. | .. | .. | 2,700 | .. | .. | .. | 2,700 | 2,700 |
| 69 கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 260 | .. | .. | .. | 260 | 260 |
| 70 பழங்குடியினர் ஆராய்ச்சி வளர்ச்சி | .. | .. | .. | 125 | .. | .. | .. | 125 | 125 |
| 71 தொன்மைப் பழங்குடியினர் கொகுதிகள். | .. | .. | .. | 153 | .. | .. | .. | 153 | 153 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 72 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 73 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் பகுதிகளில் பழங்குடியினருக்கு இல்லம் கட்டுதல். | .. | .. | .. | 300 | .. | .. | .. | 300 | 300 |
| மொத்தம் IV—பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் | .. | .. | .. | 16,990 | .. | .. | .. | 16,990 | 16,990 |
| **V. கொத்தடிமையின் புது வாழ்வுத் திட்டம்.—** | | | | | | | | | |
| 74 கொத்தடிமைகள் புதுவாழ்வு | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 75 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 76 கொத்தடிமைகளுக்கான புது வாழ்வுத் திட்டம். | .. | .. | .. | 35 | .. | .. | .. | 35 | 35 |
| மொத்தம்—V. கொத்தடிமைகள். | .. | .. | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| புது வாழ்வுத் திட்டம். | | | | | | | | | |
| **VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும்—** | | | | | | | | | |
| 77 தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள். | .. | .. | .. | .. | 2 (சா)<br>24,032<br>13,000<br>*** | .. | 24,034<br>13,000<br>*** | .. | 24,034<br>13,000<br>*** |
| **மொத்தம் VI.—நெறிப்படுத்தலும் நிர்வாகமும்.** | .. | .. | .. | .. | 24,034<br>13,000<br>*** | .. | 24,034<br>13,000<br>*** | .. | 24,034<br>13,000<br>*** |

சுருக்கம். (ரூபாய் ஆயிரத்தில்.)

| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப் பேற்கும் திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர் | பழங்குடி யினர். | ஆதி திராவிடர். | பழங்குடி யினர். | ஆதி திராவிடர். | பழங்குடி யினர். | ஆதி திராவிடர். | பழங்குடி யினர். | பெரு மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| I. கல்வி .. .. .. | 47,932 | 164 | 37,130 | 2,029 | 1,80,906 | 12,790 | 2,65,968 | 14,983 | 2,80,951 |
| II. வேலை வாய்ப்பு பொருளாதார மேம்பாடு. | 20,000 | 40 | 1,15,532 | 391 | 407 | 24 | 1,35,939 | 455 | 1,36,394 |
| III. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 677 | 371 | 16,650 | 749 | 5,505 | 362 | 22,832 | 1,482 | 24,314 |
| IV. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 16,990 | .. | .. | .. | 16,990 | 16,990 |
| V. கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும் தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள். | .. | .. | .. | .. | 24,034<br>13,000*** | .. | 24,034<br>13,000*** | .. | 24,034<br>13,000*** |
| மொத்தம் .. | 68,609 | 575 | 1,69,312 | 20,196 | 2,23,852 | 13,176 | 4.61,773 | 33,947 | 4,95,720 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருவாய்— | | | | | | | | | |
| சாட்டியது .. .. .. | .. | .. | 1 | .. | 2 | .. | 3 | .. | 3 |
| அனுமதித்தது .. .. | 38,609 | 575 | 1,53,166 | 19,646 | 2,23,750 | 13,176 | 4,15,525 | 33,397 | 4,48,922 |
| மூலதனம் .. .. .. | 30,000 | .. | 10,500 | 500 | .. | .. | 40,500 | 500 | 41,000 |
| கடன்களும் முன் பணங்களும் | .. | .. | 5,645 | 50 | 100 | .. | 5,745 | 50 | 5,795 |
| பெரு மொத்தம் .. | 68,609 | 575 | 1,69,312 | 20,196 | 2,23,852 | 13,176 | 4,61,773 | 33,947 | 4,95,720 |

* கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்.
** மத்திய மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.
*** அக்கிலைப்படிகளுக்காக ஒருமித்த நிதி ஒதுக்கம்.
சா—சாட்டியது.
மூ.—மூலதனம்.
க.—கடன்களும் முன்பணங்களும்.

[1986 ஏப்ரல் 24

## இணைப்பு 2.

### சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 1986-1987.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | வேளாண்மை-பயிர் பராமரிப்பு .. .. | 705.55 |
| 2 | நிலச் சீர்திருத்தம் .. .. .. | 2.00 |
| 3 | ஊரக வளர்ச்சிக்கான சிறப்பு பகுதித் திட்டம். | 876.00 |
| 4 | நில மற்றும் நீர்வள பாதுகாப்பு .. .. | 24.00 |
| 5 | கால்நடை பராமரிப்பு .. .. .. | 14.40 |
| 6 | பால் பண்ணை .. .. .. .. | 0.05 |
| 7 | வனவளம் (சமுதாயக்காடு) .. .. | 405.60 |
| 8 | சமுதாய மேம்பாடு .. .. .. | 428.84 |
| 9 | கூட்டுறவு .. .. .. .. | 1.30 |
| 10 | மின் அபிவிருத்தி .. .. .. .. | 261.00 |
| 11 | கிராம மற்றும் சிறு தொழில்கள் .. .. | 11.02 |
| 12 | சாலைகள் மற்றும் பாலங்கள் .. .. | 54.70 |
| 13 | கல்வி .. .. .. .. .. | 957.41 |
| 14 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் .. | 216.82 |
| 15 | கழிவுநீர் அகற்றுதல் மற்றும் குடிநீர் வழங்கல். | 1,953.77 |
| 16 | வீட்டு வசதி .. .. .. .. | 984.25 |
| 17 | நகர்ப்புற வசதி .. .. .. | 251.20 |
| 18 | வேலை வாய்ப்பு .. .. .. .. | 83.40 |
| 19 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம். | 1,062.60 |
| 20 | சமூக நலம் .. .. .. .. | 1,906.63 |
| 21 | ஊட்டச்சத்து .. .. .. .. | 2,605.34 |
| | மொத்தம் .. | 12,801.88 |



1986 ஏப்ரல் 24]

## இணைப்பு 3.

### பழங்குடியினர் துணைத் திட்டம், 1986-87.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | மாநிலத் திட்டம். (2) | மைய நிதியுதவி. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1 தோட்டக்கலை .. .. .. | 32.53 | 35.00 |
| 2 மண்வளப் பாதுகாப்பு .. .. | 25.00 | .. |
| 3 கால்நடை பராமரிப்பு .. .. | 22.54 | 20.00 |
| 4 கிராமத் தொழில்கள் .. .. | 30.00 | 10.00 |
| 5 பட்டு உற்பத்தி .. .. | 60.00 | 20.00 |
| 6 சிறு பாசனம் .. .. .. | 11.00 | 10.00 |
| 7 வனம் .. .. .. | 120.90 | 10.00 |
| 8 கூட்டுறவு .. .. .. | 81.26 | 30.00 |
| 9 மின்வசதி .. .. .. | 30.25 | .. |
| 10 சாலை வசதி .. .. .. | 120.00 | .. |
| 11 வீட்டு வசதி .. .. .. | 5.40 | .. |
| 12 மானிடத் திறன் மற்றும் தொழில் வாய்ப்பு. | 3.35 | .. |
| 13 கல்வி வசதி .. .. .. | 92.76 | 6.00 |
| 14 மகளிர் மற்றும் மேம்பாடு .. | 20.40 | .. |
| 15 குடிநீர் வசதி .. .. .. | 27.00 | .. |
| 16 சமுதாய வளர்ச்சி .. .. | 5.06 | .. |
| 17 மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலன். | 45.15 | 10.00 |

[1986 ஏப்ரல் 24

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | மாநிலத் திட்டம். | மைய நிதியுதவி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 18 பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள். | 11.03 | 5.00 |
| 19 ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 8.98 | .. |
| 20 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம் (கல்வி நீங்கலாக). | 10.45 | .. |
| 21 தெறிப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்தல். | 1.80 | .. |
| 22 சிதறி வாழும் பழங்குடியினர் .. | 0.91 | .. |
| 23 பண்டைய பழங்குடியினர் .. | .. | 15.00 |
| மொத்தம் .. | 765.77 | + 180.00 |
| | — 945.77 | |

136478
911.51 N86
25-2